எம். அ. பேர்சிட்ஸ்

# சோவியத் நாட்டில் இந்தியப் புரட்சிவீரர்கள்

முன்னேற்றப் பதிப்பகம்

எம். அ. பேர்சிட்ஸ்

# சோவியத் நாட்டில் இந்தியப் புரட்சிவீரர்கள்

இந்திய கம்யூனிச இயக்கம் உருவாகிக் கொண்டிருந்த கட்டம்

பேராசிரியர் ரோ. அ. உலியனோவ்ஸ்கியின் முன்னுரையுடன்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

# முன்னுரை

அக்டோபர் புரட்சியும் கிழக்கு நாடுகளும் என்ற தலைப்பில் எவ்வளவு அதிகமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருந்தாலும் அது இன்னும் பூர்த்தியடையவில்லை. ஆராய்ச்சிகளின் மூலம் புதிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, புதிய சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இச்சூழலில் ஆசியாவின் மீது அக்டோபர் புரட்சியின் தாக்கம் முதலில் நம்பப்பட்டதைக் காட்டிலும் விரிவானதாக, ஆழமானதாக இருப்பது தெளிவாகியிருக்கிறது. ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் மீது அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் தாக்கத்தைப் பற்றி இதுவரை அறிந்திராத அம்சங்களை எடுத்துக்காட்டுகின்ற புத்தகத்தை ஒருவர் படிக்கும் பொழுது இந்த முடிவுக்கே வருகிறார்.

வாசகர்களின் கைகளில் தவழும் இந்தப் புத்தகமும் இப்படிப்பட்டதுதான்.* இந்தியாவின் ஏகாதிபத்திய-எதிர்ப்பாளர்கள், நாட்டின் விடுதலை மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் நாடு துறந்து சோவியத் ருஷ்யாவுக்குப் புறப்பட்ட இயக்கத்தைப் பற்றி இப்புத்தகம் நுண்ணறிவுடன் எழுதப்பட்டிருக்கிறது. பிரமிப்பைத் தருகின்ற புரட்சிகர உணர்ச்சி, நம்பிக்கை, உற்சாகம் ஆகியவை நிறைந்த அந்த இயக்கத்தை இமய மலையாலோ ஹிந்துகுஷ் மலையாலோ அல்லது எங்கும் நிறைந்த, எல்லாவற்றையும் அறிந்த உளவுத் துறையாலோ அல்லது ஈவிரக்கமற்ற பிரிட்டிஷ் காலனியாதிக்க நிர்வாகத்தாலோ எதனாலும் தடுக்க முடியவில்லை.

ஜாரிஸ்ட் ருஷ்யா தன்னுடைய மத்திய ஆசிய மாகாணங்களுக்குள் இந்தியாவிலிருந்து வந்த வர்த்தகர்களையும்

---

* இந்நூல் 1983ல் வெளிவந்த எம். அ. பேர்சிட்சின் *Revolutionaries of India in Soviet Russia. Mainsprings of the Communist Movement in the East* (Progress Publishers, Moscow) என்ற நூலின் சுருக்கமான மொழிபெயர்ப்பாகும்.

லேவாதேவிக்காரர்களையும்தான் வரவேற்றது. ருஷ்ய அதிகாரிகளின் அனுதாபம் இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்களுக்குக் கிட்டவில்லை. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு இந்தியாவின் விடுதலைக்குப் போராடுவதற்காகப் புரட்சிக்காரர்கள் ருஷ்ய சோவியத் சோஷலிஸ்ட் குடியரசின் உதவியை நாடிய பொழுது அது அவர்களுக்குப் புகலிடம் கொடுத்தது.

இப்புத்தகத்தின் ஆசிரியர் இந்தியாவைத் துறந்து ருஷ்யாவுக்கு வந்த புரட்சிக்காரர்களின் வரலாற்றைக் கூறும் பொழுது, அவர்களுடைய வர்க்கப் பின்னணியையும் நடவடிக்கைகளையும், எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களுடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் ஆராய்கின்ற பொழுது இந்தியாவின் புரட்சிகரச் சிந்தனையின் வரலாற்றிலிருந்து, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்பத் தேடல்களிலிருந்து அதிகம் தெரிந்திராத, சுவாரசியமான பக்கங்களைத் திறந்து காட்டுகிறார்.

சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்களில் சிலர் அரசியல் ரீதியான அமைப்பைக் கொண்டிருந்தார்கள், சிலர் அப்படி இல்லை. மிக முந்திய காலமான 1915இல் காபூல் நகரத்தில் மகேந்திர பிரதாப் நிறுவிய தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்பட்டதின் புரட்சிக்காரர்கள், அந்த ''அரசாங்கத்திலிருந்து'' முறித்துக் கொண்டு வெளியேறி 1920இல் தாஷ்கன்டில் சர்வ தேசப் பிரசாரக் கவுன்சிலின் இந்தியப் பிரிவை அமைத்த கோஷ்டியின் புரட்சிக்காரர்கள், அப்துர் ராப் பார்க் மற்றும் பிரதிவாதி ஆச்சாரியா தலைமை தாங்கிய இந்தியப் புரட்சிச் சங்கத்தின் புரட்சிக்காரர்கள் ஆகியோரின் சித்தாந்த மற்றும் செயல்தந்திரக் கருத்துக்களை இப்புத்தகம் ஆராய்கிறது. அரசியல் ரீதியில் அமைக்கப்பட்டிருந்த இந்தக் கோஷ்டிகள் இந்தியாவின் முழு தேசிய விடுதலையைச் சாதிப்பதற்கும் இந்தியக் கூட்டாட்சிக் குடியரசை அமைப்பதற்கும் அநேகமாக ஒரே மாதிரியான புரட்சிகர-ஜனநாயகத் திட்டங்களை முன்வைத்தன. அவை சமத்துவவாத மற்றும் மார்க்சுக்கு முந்திய சோஷலிசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பூர்விக சமதர்மக் கருத்துக்களைக் கொண்டிருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி

யதற்காக அக்டோபர் புரட்சியை அவை அனைத்தும் வர வேற்றன. அக்டோபர் புரட்சியை அவை இப்படி இனங்கண் டது முற்றிலும் புரிந்து கொள்ளப்படக் கூடியதே. இந்திய தேசிய புரட்சிக்காரர்கள் புரட்சியின் எல்லாக் கருத்துக் களையும்,குறைந்த பட்சம் அதன் செயல்திட்டத்தின் சோஷ லிஸ்ட் சாராம்சத்தை ஏற்றுக்கொள்வதற்கு இன்னும் முன் வரவில்லை.ஆனால் இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத் துக்கும் சோவியத் ருஷ்யாவுக்கும் நெருங்கிய கூட்டணி வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தது குறிப் பிடத் தக்கதாகும். அவர்கள் சோவியத் ருஷ்யாவைத் தமது முக்கியமான பாதுகாவலனாக, விடுதலை செய்வோனாகப் பார்த்தார்கள்.

நாம் மேலே குறிப்பிட்ட நபர்கள், குழுக்களில் சில தம்முடைய சந்தேகத்துக்கிடமில்லாத முற்போக்கான கருத் துக்களுடன் மாபெரும் அளவில் நடைபெறுகின்ற மக்கள் புரட்சியைக் கண்டு அஞ்சினார்கள், சதிக்கும்பல் முறைகளை யும் தனிநபர் பயங்கரவாதத்தையும் பின்பற்றினார்கள், பிரிட்டிஷ் காலனியாட்சியை ஒழிக்க வெளியிலிருந்து ஆயுத மேந்திய தலையீடு உள்பட ஆயுத பலத்தின் மூலம் இந்தியா வை விடுதலை செய்வதை மிகைபட வற்புறுத்தினார்கள்; இத்தகைய பிற்போக்கான கருத்துக்களை இணைத்துக் கொண்டதோடு அவற்றை அழுத்தமாக வலியுறுத்தியதும் கூட வியப்பல்ல.

மற்ற இந்திய தேசியப் புரட்சிக்காரர்களைக் காட்டிலும் தாஷ்கன்டில் நிறுவப்பட்டிருந்த சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் இந்தியப் பிரிவின் பிரச்சாரம் சோஷலிஸ்ட் இலட்சியங்களுக்கும் இந்திய மக்களின் பிரம்மாண்டமான, தீவிரமான போராட்டத்தின் மூலமாகவே இந்திய மக்கள் விடுதலையையும் சுதந்திரத்தையும் அடைய முடியும் என்ற கருத்துக்கும் மிக நெருங்கியிருந்தது. இது இந்தியப் பிரிவின் மிகப் பெரிய சாதனை. ஏனென்றால் இந்தியாவில் பெருந் திரளான மக்கள் இயக்கம் காந்தீய, அஹிம்சை வழி சட்ட மறுப்பு இயக்கம் என்ற அளவில் குறுக்கப்பட்டிருந்தது.

இப்புத்தகம் அரசியல் ரீதியில் அமைக்கப்பட்டிராத இந் தியப் புரட்சிக்காரர்களைச் சித்தரிக்கிறது, சோவியத் ஆட் சியைப் பற்றிய அவர்களுடைய அணுகுமுறையை வர்ணிக் கிறது; மத்திய ஆசியாவில் வெண்படையினர் மற்றும் ஆயுத

மேந்திய கும்பல்களை எதிர்த்து சோஷலிஸ்ட் புரட்சியைப் பாதுகாப்பதற்குப் போராடிய இந்தியப் புரட்சிக்காரர்கள் சிலரை நினைவு கூர்கிறது.

சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்தியர்களில் பெரும்பான்மையானவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்குவதற்கு சோவியத் அரசாங்கத்தின் இராணுவ உதவியையே முக்கியமாகக் கோரினார்கள் என்பதை ஆவணங்களின் மூலம் அறிகிறோம். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு ஒரே வழி ஆயுதப் போராட்டமே—பெருந்திரளான மக்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்க வேண்டும், சோவியத் ருஷ்யாவின் செஞ்சேனையிலிருந்து நேரடியாக இராணுவ உதவி பெற வேண்டும் என்பது அதன் அர்த்தம்—என்று அவர்கள் நம்பினார்கள். இந்த தேசியப் புரட்சிக்காரர்களுக்கு யதார்த்த உணர்வை போதிப்பது சுலபமான காரியமாக இருக்கவில்லை. எனவே அவர்களில் பலர் மார்க்சிய சித்தாந்தம் மற்றும் செயல்முறையை ஏற்றுக்கொள்ளாதது தற்செயலானதல்ல.

ஆனால் இந்தியாவைத் துறந்து வந்த புரட்சிக்காரர்களில் சிலர் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து தங்கள் நாடு விடுதலையடைவதைப் பற்றிய அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பயன்படுத்துவதற்காக மார்க்சியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினார்கள். அவர்களின் எண்ணிக்கை மேன்மேலும் அதிகரித்தது; புரட்சியைப் பற்றிய மார்க்சியத் தத்துவம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியிலிருந்த வீரர்களின் மனங்களைக் கவர்ந்து கொண்டிருந்ததை அது எடுத்துக்காட்டியது. இப்புரட்சிக்காரர்களில் பலர் பிற்காலத்தில் இந்தியாவில் தேசிய விடுதலை, தொழிலாளி வர்க்க, விவசாய மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தொடங்குவதிலும் அமைப்பதிலும் முன்னணிப் பாத்திரத்தை வகித்தார்கள்.

இப்புத்தகம் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தோற்றத்தின் சில அம்சங்களை ஆராய்கிறது. சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் முதல் கம்யூனிஸ்ட் குழுவை அமைத்து அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று அறிவித்தார்கள். எனினும் அது ஒருபோதும் அப்படி இருக்கவில்லை. மாபெரும் அக்டோபர் புரட்சியின் செல்வாக்

காலும் போல்ஷிவிக்குகளின் அரசியல் பணியின் பயனாலும், சீனா, கொரியா, இரான் நாடுகளிலிருந்து வந்தவர்களின் முன்னணிப் பகுதியினரிடையேயும் அப்போது சோவியத் நாட்டிலிருந்த துருக்கிய போர்க் கைதிகளிடையேயும் கம் யூனிச இயக்கம் தோன்றியது. பல ஆசிய நாடுகளின் எதிர் கால கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கு இந்நாடுகளின் உள்ளேயும், இவற்றிற்கு வெளியிலும் (உதா ரணமாக சோவியத் ருஷ்யாவிலும்) நடைபெற்றது, இது மாபெரும் அக்டோபர் புரட்சியால் உந்தப்பட்டு, இறுதி யில் ஒன்றுசேர்ந்த, வரலாற்று ரீதியாக இயல்பான இரட்டை நிகழ்ச்சிப் போக்காக இருந்தது என்பதை நூலாசிரியர் இந் தியாவிலிருந்து நாடு துறந்து வந்து குடியேறியவர்களின் ஸ்தாபனத்தின் உதாரணத்தில் காட்டுகிறார்.

இந்தியாவிலும் அதைப் போன்ற மற்ற நாடுகளிலும் சுதந்திரமான கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றிய பொழுது பல கஷ்டங்களைச் சந்தித்தது. 1920க்களின் ஆரம்பத்தில் இந்த நாடுகளில் மார்க்சிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட உண்மையான பாட்டாளி வர்க்கக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றுகின்ற சாத்தியத்தை வி. இ. லெனின் சந்தே கித்தார் என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியம். இந்தி யாவை விட்டு வெளியேறிய புரட்சிக்காரர்களைக் கொண்ட முதல் கம்யூனிஸ்ட் குழு சோவியத் ருஷ்யாவில் அமைக்கப் பட்டதும் கம்யூனிஸ்ட் கட்சி சரியான முறையில் வளர்ச்சி யடைவதற்கு பல வருடங்களாயிற்று என்பதும் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் ஆரம்பநிலையில் எப்படிப்பட்ட கஷ் டங்களைச் சந்தித்தது என்பதை நிரூபிக்கும்.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்த மற் றும் அரசியல் கருத்துக்களை ஆராய்கின்ற பொழுது ஆசி ரியர் அவர்களுடைய அதிதீவிரப் புரட்சி நிலைகளைக் குறிப் பாக எடுத்துக்காட்டுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால் கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் ''இடது சாரிவாதம்'' என்ற இளம்பருவ நோயினால் பீடிக்கப்பட் டிருந்தார்கள். ருஷ்ய அனுபவத்தை யாந்திரிகமாக, இயக்க வியலுக்கு மாறான முறையில் பின்பற்றுதல், ஆகவே கீழ்த்திசையிலுள்ள மக்களினங்களின் தனிவகையான வர லாற்று நிலைமையையும் தேசியச் சூழ்நிலையையும் புறக் கணித்தல் என்பது அந்த நோயின் சாராம்சமாகும். இடது

சாரி இளம்பிள்ளைவாதம் புறவய ரீதியான புலப்பாடாக இருந்தது; இது தேசியப் புரட்சிக்காரர்கள் மார்க்சியத்தை நோக்கி சித்தாந்த ரீதியாகத் திரும்புவதில் ஒரு கட்டமாக விளங்கியது.

பெரும் முரணில்லாத, தேசபக்த உணர்ச்சி கொண்ட புரட்சிகரமான ஜனநாயகவாதிகள் விஞ்ஞான சோஷலிசத்தை ஏற்றுக்கொண்டது கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றியதற்கு முக்கியமான வரலாற்றுக் காரணிகளில் ஒன்று என்பதை இப்புத்தகம் முறையாக நிறுவுகிறது. நூலாசிரியர் எழுதுகிறார்: ''இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் சாதாரணமாக தொழிலாளர் இயக்கத்தின் மூலம் மார்க்சியத்திற்கு வரவில்லை (அவர்கள் இதனுடன் முற்றிலுமாக தொடர்பு கொண்டிருக்கவில்லை, பெரும்பாலும் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை). அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையுடைய விடுதலைப் போராட்டத்தின் மூலம், உலகின் மிக முக்கிய காலனி எதிர்ப்பு சக்தியாயும் கிழக்கத்திய மக்களின் விடுதலை இயக்கத்தின் உண்மையான அடிப்படையாயும் விளங்கிய சோவியத் ஆட்சியின் மீதான அன்பின், ஆதரவின் மூலம் மார்க்சியத்திற்கு வந்தனர்.'' ''கிழக்கத்திய நாடுகளில் பெரும்பாலும் தேசியப் புரட்சிகர மற்றும் புரட்சிகர ஜனநாயக அறிவுத்துறையினரின் மத்தியிலிருந்துதான் முதல் கம்யூனிஸ்டுகள் தோன்றினர், கம்யூனிச இயக்கம் பிறக்க வழிகோலிய முதல் கம்யூனிஸ்ட் குழுக்கள் உருவாயின'' என்று நூலாசிரியர் தொடர்ந்து எழுதுகிறார். இந்தியக் கம்யூனிச இயக்கம் தன் சொந்த தேசிய சிறப்பியல்புகளால் தோற்றுவிக்கப்பட்டது, காலனியாட்சியாளர்கள் உருவாக்கிய சூழ்நிலைகள் இதில் பெரும் பங்காற்றின என்று காட்ட ஆசிரியரால் முடிந்தது. இவ்வாறாக பொதுவாக கீழைய நாடுகளின், குறிப்பாக ருஷ்யாவிற்கு அருகேயுள்ள நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றிய சூழ்நிலைகளை ஆராய்வதில் பொது முறையியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் இந்நூலில் முன்வைக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

முதல் இந்திய கம்யூனிஸ்டுகளின் இடது குறுங்குழுவாதக் கருத்துக்களின் தோற்றத்தைப் பற்றி ஆசிரியருடைய பகுப்பாய்வும் விமர்சனமும் விஞ்ஞான ரீதியான முக்கியத்துவத்தோடு செய்முறை முக்கியத்துவத்தையும் கொண்

டிருக்கின்றன. முன்பு காலனியாதிக்கத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்றைய நிலைமைகளில் மறுபடியும் எவ்விதத்திலாவது குறுங்குழுவாதத் தத்துவம் மற்றும் செய்முறையில் சிக்குவதைத் தவிர்ப்பதற்கு இவை உதவும்.

இந்நூலின் முடிவுகள் சோவியத் பொது ஆவணக் காப்பகங்களில் இருக்கின்ற ஏராளமான வரலாற்றுச் சான்றுகளையும் பிரதானமாக தேசிய இன உறவுகளையும் காலனியாதிக்கத்தையும் பற்றி லெனின் எழுதிய நூல்களையும் பற்றி முறையான ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் (1920) ஆவணங்கள் இந்த ஆராய்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன.

இன்றைய நிலைமையில், குறிப்பாக வாஷிங்டனில் உள்ள ஏகாதிபத்திய சித்தாந்திகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டிருக்கின்ற கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு இந்த முடிவுகள் மிகவும் அரியவை. இந்நூல் சாராம்சத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தைப் பற்றிய புத்தகமே. மேலும் இன்று மிகவும் அதிகமான காலப் பொருத்தத்தைப் பெற்றிருக்கின்ற இந்தப் பிரச்சினை கிழக்கு நாடுகளில், குறிப்பாக இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றிய காலகட்டத்துக்கு வரலாற்று ஆராய்ச்சிக் கோட்பாடுகளுடன் முழுமையாகப் பொருந்துகின்ற முறையில் ஆராயப்பட்டிருக்கிறது. சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒடுக்கப்பட்ட ஆசியாவின் புரட்சிகர சக்திகளுடன் சோவியத் நாட்டினுடைய கூட்டணியை லெனின் தொலைநோக்குடன் பார்த்தார், அதைப் பற்றி அதிகமான நம்பிக்கையுடன் பேசினார். அக்கூட்டணியின் தோற்றம் இப்புத்தகத்தில் சிறப்பான முறையில் சித்திரிக்கப்படுகிறது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க போர் வலுத்த பொழுது, காலனியாதிக்கப் பேரரசுகள் தகர்ந்து விழுந்த பொழுது இக்கூட்டணி எல்லா சோஷலிஸ்ட் நாடுகளையும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் இணைத்துக் கொண்டு உலக ரீதியாக வளர்ச்சியடைந்தது.

இப்புதிய நாடுகளின் புரட்சிகர சக்திகள் ஏகாதிபத்தி

யத்தை எதிர்த்து, சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம், தம் மக்களின் சமூக முன்னேற்றத்திற்காக நடத்துகின்ற அயரா போராட்டத்திற்கு, சோவியத் அனுபவத்திலிருந்து, இப்போது பழையதாகத் தோன்றும் 20ஆம் ஆண்டுகளின் வரலாற்றிலிருந்து, கம்யூனிச இயக்கம் உருப்பெறுவதற்காக பின்னர் நடந்த போராட்ட வரலாற்றிலிருந்து மிகப் பெரும் ஆதரவைப் பெற்றன, பெற்று வருகின்றன.

பேராசிரியர் ரோ. அ. உலியனோவ்ஸ்கி

அத்தியாயம் ஒன்று

# ஒடுக்கப்பட்ட கிழக்கு நாடுகளின் மீது மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் தாக்கமும் சோவியத் ருஷ்யாவில் இந்தியப் புரட்சிக்காரர்களும்

இந்தியப் புரட்சிக்காரர்கள் தாய் நாட்டை விட்டு வெளியேறி சோவியத் நாட்டுக்கு வருகின்ற இயக்கம் 1918—1922ம் வருடங்களில், அதன் பெரும் பகுதி 1920இல் நடைபெற்றது. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி இந்தியாவின் மீது கொண்டிருந்த தாக்கத்தின் மிகச் சுவாரசியமான, மிகவும் குறிப்பிடத்தக்க வெளியீடுகளில் அது ஒன்றாகும்.

பிரிட்டிஷ் காலனி ஆட்சியை ஒழித்து தேசிய அரசியல் விடுதலையைச் சாதிப்பதற்குரிய வழிகளையும் முறைகளையும் தேடி அதிகமான இந்தியர்கள்—நூற்றுக்கணக்கில் கூட—இந்தியாவிலிருந்து வெளியேறி சோவியத் ருஷ்யாவுக்குள், பிரதானமாக சோவியத் மத்திய ஆசியாவுக்குள் வந்தார்கள். வெளிநாட்டிலிருந்து வந்து நாட்டை அடிமைப்படுத்தியவர்களை மட்டுமின்றி உள்நாட்டிலிருந்து கொண்டு அடிமைப்படுத்தியவர்களையும் வெளியேற்ற வேண்டும் என்று அவர்களில் சிலர் கனவு கண்டார்கள். இந்தியாவைத் துறந்து வந்தவர்களில் சிலர் இந்தியாவின் முஸ்லிம்கள் ஈடுபட்ட கிலாபத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், பலர் தேசிய விடுதலை இயக்கத்தின் இடதுசாரி அணியின் பிரதிநிதிகள், சிலர் ஏற்கெனவே மார்க்சியக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ளவிருந்த இந்தியப் புரட்சிகர ஜனநாயகத்தின் பிரதிநிதிகள்.

இவர்கள் சோவியத் நாட்டில் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் தங்கினார்கள்; சிலர் குடியுரிமையும் பெற்றார்கள். நாடு துறந்து வந்தவர்கள் மத்தியில் பலவிதமான கோஷ்டிகள் இருந்தன. அவர்கள் அரசியல் பிரச்சினைகளைப் பரபரப்புடன் விவாதித்தார்கள். இந்தியாவில் தேசிய விடுதலை மற்றும் சோஷலிஸ்ட் புரட்சிகளின் வளர்ச்சி

மற்றும் உறவு சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளில் அவர்கள் சித்தாந்த ரீதியில் வெவ்வேறு விதமான கருத்துக்களைக் கொண்டிருந்ததை இந்த விவாதங்கள் எடுத்துக் காட்டின. அவர்களுக்கிடையில் தனிப்பட்ட உறவுகள் திருப்தி கரமான முறையில் இல்லை. இந்த விவாதங்களை அவை அதிகப்படுத்தி எரிச்சலூட்டின என்பதும் உண்மையே.

முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழு சோவியத் மத்திய ஆசியாவுக்கு நாடு துறந்து வந்த இந்தியர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. அதன் தலைவர்களில் சிலர் அப்பொழுது கிழக்கு நாடுகளில் தோன்றிக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அதிதீவிர இடதுசாரி கருத்துக்களை வெளியிட்டார்கள்.

இந்தியப் புரட்சிக்காரர்கள் முதல் தடவையாக சோவியத் மண்ணில் காலடி வைப்பதற்கு முன்பு நாடு துறந்த இந்தியர்கள் மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியாவைச் சேர்ந்த பல நாடுகளில் பல வருடங்களாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். இந்தியா விடுதலை அடைவதற்குரிய வழிகளைப் பற்றி அவர்கள் சொந்தமான கருத்துக்களையும் அவற்றின் அடிப்படையில் ஸ்தாபனங்களையும் கொண்டிருந்தார்கள். நாடு துறந்து வெளிநாடுகளில் வசித்த இந்தியர்களில்—சித்தாந்த ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும்—ஒரு சிறு பகுதியினரே சோவியத் குடியரசுக்கு வந்தார்கள்.

1905—1907ம் வருடங்களில் நடைபெற்ற முதல் ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து இந்திய விடுதலை இயக்கம் குமுறியெழுந்த பொழுது அதில் ஏற்பட்ட பிரிவினை மற்றும் ஒற்றுமை நிகழ்வுப் போக்குகளை இந்தியப் புரட்சிக் காரர்களின் நாட்டைத் துறந்து செல்லும் இயக்கமும் பிரதி பலித்தது. 1905—1908ம் வருடங்களில் விடுதலை இயக் கத்தின் எழுச்சியின் விளைவாக அந்த இயக்கத்தின் சீர் திருத்தவாத மற்றும் புரட்சிகரப் பகுதிகள் தனித்தனியாகப் பிரிந்தன. பிரிட்டனுடன் சமரசத்தை நிராகரித்து பிரிட் டிஷ் ஆதிக்கத்தை அகற்றி முழு தேசிய சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்று அறை கூவிய இந்திய தேசியப் புரட் சிக்காரர்களில் பலர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடுமை யான அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டார்கள். எனவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி ஐரோப்பா, அமெ ரிக்கா மற்றும் ஆசியா கண்டங்களில் பல நாடுகளுக்குச்

செல்ல நேரிட்டது. நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மத அடிப்படையில் இந்திய விடுதலை இயக்கத்தில் பிரிவினைகளை எதிர்ப்பதில் உறுதியோடும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒற்றுமையோடும் இருந்தார்கள்.

முதலாவது உலக யுத்தத்துக்கு முன்னரும் யுத்தத்தின் போதும் நாடு துறந்த இந்தியர்கள் உலகத்தின் பல நாடுகளில் போராடும் ஸ்தாபனங்களையும் புரட்சி மையங்களையும் ஏற்படுத்தி தமது புரட்சிகர நடவடிக்கைகளைக் கணிசமான அளவுக்கு அதிகப்படுத்தியிருந்தார்கள். சர்வதேச நெருக்கடி மற்றும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையில் முரண்பாடுகள் தீவிரமடைகின்ற சமயத்தில் பிரிட்டனுக்கு விரோதமான அரசுகளின் உதவியுடன் இந்தியாவின் விடுதலைக்குப் போராடுவது சுலபம் என்று அவர்கள் கருதினார்கள்.

1913இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தலை சிறந்த இந்தியப் புரட்சிக்காரரான ஹர் தயாளின் முன்முயற்சியில் கதர் கட்சி அமைக்கப்பட்டது. அதன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கானடாவிலும் ஏற்கெனவே தோன்றி சிதறிக் கிடந்த இந்தியப் புரட்சிகர மற்றும் தேசபக்த ஸ்தாபனங்களை ஒன்றுபடுத்த முடிந்தது. 1914இல் ஹர் தயாள் கைது செய்யப்பட்ட பிறகு இந்த ஸ்தாபனத்துக்கு பகவான் சிங் தலைமை தாங்கினார். முகம்மது பர்க்கத்துல்லா என்ற பெயருடைய முஸ்லிம் அவருக்கு உதவியாக இருந்தார். இவர் பிற்காலத்தில் சோவியத் ருஷ்யாவில் வசித்த இந்தியர்களின் முக்கியமான தலைவராக இருந்தார். கதர் கட்சி அமெரிக்காவிலும் (அமெரிக்க ஐக்கிய நாடு, கானடா, அர்ஜென்டீனா) ஐரோப்பாவிலும் (பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன்) மற்றும் ஆசியாவிலும் (இந்தியா, சீனா, பர்மா, சியாம், பிலிப்பீன் தீவுகள்) தன் கிளைகளை ஏற்படுத்தியிருந்தது*.

---

* அ. வி. ராய்க்கோவ், இந்தியாவின் எழுச்சி, நவூக்கா பதிப்பகம், மாஸ்கோ, 1968, பக்கங்கள் 76—82 (ருஷ்ய மொழியில்); மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சிக் கல்லூரியின் மத்தியக் கட்சி ஆவணக் காப்பகம் (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.), தொகுப்பு 490, பட்டியல் 1, பத்திரம் 208, தாள் 664.

*1914இல் கதர் கட்சி மற்றும் நாடு துறந்த இந்தியர்களின் மற்ற ஸ்தாபனங்களின் தலைவர்களும் பெர்லின் நகரத்தில் கூடினார்கள். அக்காலத்தில் புரட்சிக்காரர்கள் ஜெர்மனியின் மீது அதிகமான நம்பிக்கை வைத்திருந்தார்கள்; இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்டத்துக்கு ஜெர்மனி நிதி மற்றும் இராணுவ உதவியளிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். பெர்லினில் பல இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் ஒன்று கூடினார்கள். அதன் பிறகு அவர்களில் சிலர் புதிய கோட்பாடுகளின் அடிப்படையில் இந்தியப் புரட்சி மையத்தை ஏற்படுத்துவதற்காக சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்கள். விரேந்திரநாத் சட்டோபாத்யாயா, புபேந்திரநாத் தத்தா, முகம்மது பர்க்கத்துல்லா, மகேந்திர பிரதாப், மண்டயம் திருமலாச்சார்யா, அப்துர் ராப் பார்க், பாண்டுரங் காங்கோஜெ ஆகியோர் இப்படி வந்தனர். இவர்களைத் தவிர செண்பகராமன் பிள்ளை, தாரகநாத் தாஸ், பகவான் சிங் ஆகியோர் பெர்லின் குழுவில் இருந்தனர். 1914 கடைசியில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஹர் தயாள் பெர்லினுக்கு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.*

*பிற்காலத்தில் விரேந்திரநாத் சட்டோபாத்யாயா அந்த நாட்களைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்: ''நான் 1914இல் பெர்லினில் இந்தியப் புரட்சிக் கமிட்டியை அமைத்தேன். அப்பொழுது இந்தியாவுக்கு வெளியில் வசித்த அநேகமாக எல்லா இந்தியப் புரட்சிக்காரர்களுமே அக்கமிட்டியில் இருந்தார்கள்.''* இக்கமிட்டி கதர் கட்சியின் நெருக்கமான ஒத்துழைப்புடன் ஐரோப்பாவில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் நடத்திய இந்திய எதிர்ப்பு இயக்கத்தை எதிர்த்தும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு முக்கியமான போராட்டத்துக்குப் பொது மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும் விரிவாகப் பிரச்சாரம் செய்து வந்தது.*

*இதில் பெரும்பகுதி இந்தியாவிற்குள், குறிப்பாக பஞ்சாபில் மற்றும் இந்தியாவிற்கு வெளியே இருந்த இந்தியத் துருப்புகள் மத்தியில் நடைபெற்றது. தனிப்பட்ட இராணுவப் பிரிவுகளின் நடவடிக்கையின் மூலமாகவே பொதுவான*

---

* மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 490, பட்டியல் 1, பத்திரம் 208, தாள் 664.

வெகுஜன எழுச்சியைத் தொடங்க முடியும் என்றும் பிரிட்டனுக்கு விரோதமான அரசுகள் நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னும் பின்னும் தருகின்ற ஆதரவு அந்த எழுச்சி வெற்றியடைவதை உத்தரவாதப்படுத்தும் என்றும் உறுதியான நம்பிக்கை நிலவியதன் காரணமாகப் புரட்சிகர நடவடிக்கைகள் இத்திசை வழியில் அமைக்கப்பட்டிருந்தன. ஆகவே அவர்கள் புரட்சிக்காரர்களின் சிறு குழுக்களில் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் பிரிவுகளில் சதித் திட்டங்களைத் தீட்டினார்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் விரிவாகப் பிரச்சாரம் செய்வதைப் பற்றி சிறிதளவு கூடச் சிந்திக்கவில்லை. அவர்களைப் புரட்சிகரமானவர்களாக, அரசியல் உணர்வுடையவர்களாகக் கருதவில்லை. இக்குணங்கள் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்குமே உரியவை என்று எண்ணினார்கள்.* 1915 பிப்ரவரியில் பஞ்சாபில் இராணுவ எழுச்சியை ஏற்படுத்தும் தம் முயற்சிகள் தோல்வியுற்ற பின்னரும் கூட அவர்கள் இராணுவ சதி வேலைகளையும், பிரிட்டனுக்கு விரோதமான வல்லரசுகளின் உதவியைப் பெறும் நோக்கத்தையும் கைவிடவில்லை.

1915ம் வருடத்தின் நடுப்பகுதியில் பெர்லின் இந்தியப் புரட்சிக் கமிட்டி ஹேன்டிங்-நிடெர்மாயெர்** தலைமையில் ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற ஜெர்மானியக் குழுவில் மகேந்திர பிரதாப்பையும் முகம்மது பர்க்கத்துல்லாவையும் அனுப்பியது. பிரிட்டனுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கையில் ஜெர்மனியுடன் சேரும்படி ஆப்கானிஸ்தான் எமீரை ஜெர்மனியின் இராஜியவாதிகளும் இந்தியப் புரட்சிக்காரர்களும் கேட்டுக் கொண்டனர். ஆனால் அந்த முயற்சி வெற்றி

---

* இருந்த போதிலும் இந்திய தேசிய காங்கிரசில் இருந்த அதி தீவிர இடதுசாரித் தலைவர்கள் (திலகர், கோஷ்) அந்த ஆண்டுகளிலேயே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் பொது மக்களை ஈடுபடுத்தும் அவசியத்தை நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

** என். அ. பாபஹறத்ஜாயெவ், ''ஹேன்டிங்-நிடெர்மாயெரின் ஆப்கானிய மிஷன்'', **சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழுள்ள கிழக்கத்திய ஆராய்ச்சிக் கல்லூரியின் சுருக்கமான அறிக்கைகள்,** 37வது வெளியீடு, மாஸ்கோ, 1960 (ருஷ்ய மொழியில்).

யடையவில்லை என்றாலும் மகேந்திர பிரதாப்பும் பர்க்கத்துல்லாவும் தமது காபூல் வருகையை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் 1915 டிசம்பர் 1ம் தேதியன்று நாடு துறந்த இந்தியர்களின் புதிய புரட்சிமையத்தை— நாட்டுக்கு வெளியில் இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்பட்டதை—அமைத்தனர். இந்த அரசாங்கத்தில் மகேந்திர பிரதாப் ஜனாதிபதியாகவும் முகம்மது பர்க்கத்துல்லா பிரதம மந்திரியாகவும் பொறுப்பேற்றனர். நாடு துறந்தோரின் தற்காலிக அரசாங்கத்தில் கதர் பிரமுகர்களும், பெர்லின் கமிட்டியின் பிரமுகர்களும் மட்டுமின்றி முஸ்லிம் இயக்கத் தலைவர்களும் இந்திய தேசிய காங்கிரசின் தீவிர இடது பிரிவைச் சேர்ந்தவர்களும் இடம் பெற்றிருந்தனர்.

தற்காலிக அரசாங்கம் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் மற்றும் எல்லைப் பகுதியில் வசித்த சுதந்திரமான புஷ்டூ இனமக்களின் ஆயுத உதவியுடன் இந்தியா பூராவும் எழுச்சியை ஏற்படுத்துவதற்குப் பாடுபட்டது. பிரிட்டனை எதிர்க்கின்ற அரசுகளின் நிதி மற்றும் இராணுவ உதவியைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இவற்றுடன் கூட்டு சேரும் செயல்முறைக்குத் தகுந்தவாறு தற்காலிக அரசாங்கம் ஆப்கானிஸ்தானின் ஆதரவை நம்பியது; அதனுடன் ஒப்பந்தம் கூட செய்து கொண்டது. அது ஜாரிஸ்ட் ருஷ்யாவின் உதவியையும் எதிர்பார்த்தது என்பது பலருக்கு விசித்திரமாகக் கூடத் தோன்றலாம். ஜார் அரசாங்கத்துடனும் பின்னர் ருஷ்யாவின் இடைக்கால அரசாங்கத்துடனும் ஒத்துழைப்பை நிலைநாட்ட மகேந்திர பிரதாப் 1916இலும் 1917இலும் பன்முறை செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை, ஏனெனில் இரண்டு அரசாங்கங்களுமே கிரேட் பிரிட்டனுடனான கூட்டிற்கு விசுவாசமாக இருக்க முயன்றன.

ஆகவே முதலாவது உலக யுத்தத்தின் முடிவின் போது தேசியப் புரட்சிக்காரர்களில் சிலர் தாங்கள் பின்பற்றிய செயல்தந்திரங்கள் தவறானவை என்பதைத் தெளிவாகக் கண்டார்கள். எழுச்சியின் தீர்மானகரமான சக்தியாக இராணுவப் பிரிவுகளைக் கருதுதல், புரட்சிகர வெகுஜன வேலையைக் கைவிடல், உதிரியான பயங்கரவாத நடவடிக்கைகள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு சில ஏகாதிபத்திய அரசுகளின் ஆதரவை நம்பியிருத்தல்

ஆகியவை இத்தவறுகளாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், வெகுஜனங்களின் மத்தியில் நீண்டகால புரட்சிப் பணியை நடத்தாமல் ஆயுத எழுச்சிக்கு ஏற்பாடு செய்யும் திட்டங்களும் முயற்சிகளும் வெற்றி பெறவில்லை.

நாட்டிலிருந்து வெளியேறிய இந்தியப் புரட்சிக்காரர்கள் தாய் நாட்டைக் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை செய்வதற்கு பயன்மிகு வழிகளைத் தேடினார்கள். மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருந்த பொழுது அவர்கள் சோஷலிசக் கருத்துக்களைப் படிக்கத் தொடங்கினார்கள். விரேந்திரநாத் சட்டோபாத்யாயா 1910இல் இந்திய சோஷலிஸ்டும் புரட்சிக்காரருமான திருமதி காமாவுடன் சேர்ந்து பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார், *L'Humanité* பத்திரிகையில் அடிக்கடி கட்டுரைகளை எழுதினார்.* இந்தியர்களுக்கு சோஷலிசக் கருத்துக்களைக் கற்றுக் கொடுப்பதில் மேற்கு நாடுகளைச் சேர்ந்த சோஷலிஸ்டுகளுடன் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகளும் உதவினர். உதாரணமாக, ''தோழர்கள் ஷார்ல் ரப்போபோர்ட்டும் (ருஷ்ய மரபைச் சேர்ந்த பிரெஞ்சு சோஷலிஸ்டு—ஆ-ர்) மிஹயீல் பவ்லோவிச்சும் தனக்கும் தன் சகாக்களுக்கும் அறிமுகமானவர்கள்'' என்று விரேந்திரநாத் சட்டோபாத்யாயா எழுதியிருக்கிறார். கிரில் திரொயனோவ்ஸ்கி என்ற ருஷ்ய சமூக-ஜனநாயகவாதியும் (இவரும் பவ்லோவிச்சும் பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் அகிலத்தில் வேலை செய்தார்கள்) இந்தியர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார். பவ்லோவிச்சைப் போன்றவர்களுடைய தாக்கம் இந்திய தேசியப் புரட்சிக்காரர்களின் சித்தாந்த வளர்ச்சிக்கு மிகவும் உதவியது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் வாழ்க்கையே இத்துறையில் அதிகமான பங்காற்றியது. 1907இல் இரண்டாவது அகிலத்தின் ஷ்டுட்கார்ட் காங்கிரசில் இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் பங்கெடுத்த பொழுது தேசிய இன மற்றும் காலனி உறவுகளைப் பற்றி போல்ஷிவிக் கட்சியின் கொள்கைகளைச் சிறிதளவு தெரிந்து கொண்டார்கள். அது போல்ஷிவிக் கட்சியின் உறுதியான கொள்கை

---

* மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 490, பட்டியல் 1, பத்திரம் 208, தாள் 664.

என்பதை அதற்குப் பிறகு பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அறிய முடிந்தது. ஒடுக்கப்பட்ட எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணயம், சுதந்திரம், தேசிய அரசுரிமை ஆகியவற்றிற்கான உரிமைகளை போல்ஷிவிக்குகள்தான் உறுதியாகக் காத்து நிற்கின்றனர், சீர்திருத்தவாதத்திலும் திருத்தல்வாதத்திலும் விழுந்துவிட்ட ஐரோப்பிய சமூக-ஜனநாயக இயக்கம் அல்ல என்பதை அவர்கள் கால ஓட்டத்தில் கண்டார்கள். மேற்கு நாடுகளின் சோஷலிஸ்டுகளால் கீழ்த்திசை மக்களினங்களின் நலன்களைக் காப்பாற்ற முடியாது என்பதை முதலாவது உலக யுத்தத்தின் போதும் குறிப்பாக அதன் முடிவுக் கட்டத்திலும் இந்தியப் புரட்சிக்காரர்கள் மிகத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. சோஷலிஸ்டுகளின் மீதான நம்பிக்கையை இழந்த சட்டோபாத்யாயா தன் புரட்சிப் பாதையில் ஒரு முக்கிய அடி எடுத்து வைத்தார். ''நான் சோஷலிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறினேன், ஏனெனில் பல முக்கிய ஜீவாதார பிரச்சினைகளில் இதன் மிதவாத நிலையை நான் ஆதரிக்கவில்லை''* என்று அவர் எழுதினார். 1917ம் வருடத்தின் நடுப்பகுதியில் ஜெர்மனியுடன் கூட்டணியினால் எத்தகைய பலனையும் அடையாத—ஆனால் அதை இன்னும் கைவிட முடியாத—இந்தியர்கள் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். இந்தியப் புரட்சிக்காரர்கள் 1917 மே மாதத்தில் ஸ்டாக்ஹோமில் இந்தியப் புரட்சிக் கமிட்டியின் கிளை அலுவலகத்தை அமைத்ததற்கு முக்கியமான காரணம் லெனின் மற்றும் போல்ஷிவிக்குகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அது ஏற்ற இடம்—அந்த சமயத்தில் பெர்லினில் அது சாத்தியமல்ல—என்பதே என்று ஹோர்ஸ்ட் குருகெர் என்ற ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வரலாற்றாசிரியர் பல சான்றுகளைக் காட்டியிருக்கிறார். ஸ்டாக்ஹோமில் அத்தகைய தொடர்புகள் சாத்தியமாக இருந்தன என்பது உண்மையாகி விட்டது. அதன் விளைவாக ருஷ்யாவில் இந்தியப் புரட்சிகர நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று விரேந்திரநாத் சட்டோபாத்யாயா 1917 நவம்பர் முதல் தேதியே பெர்லின் கமிட்டிக்கு ஒரு கடிதத்தை அனுப்

* அதே இடம்.

பினார்*. எனவே இந்தியாவின் விடுதலைப் போராட்டத்துக்கு போல்ஷிவிக்குகள் உதவியும் ஆதரவும் கொடுப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கை அக்டோபர் புரட்சிக்கு முன்பாகவே இந்தியப் புரட்சிக்காரர்களிடம் ஏற்பட்டிருந்ததைப் பார்க்க முடியும். இருபதாம் நூற்றாண்டில் முதல் பத்தாண்டுகளின் போது இந்தியப் புரட்சிக்காரர்கள் ஐரோப்பிய சோஷலிஸ்டுகளுடனும்—ருஷ்யாவின் சமூக-ஜன நாயகவாதிகளுடனும் கூட—நெருங்கிய தோழமை கொண்டிருந்ததில் ''இந்தியாவில் மார்க்சியத்தைப் பரப்புகின்ற நோக்கம் சிறிதுமில்லை. மேற்கு நாடுகளின் சோஷலிஸ்டு அமைப்புகளில் ஏதாவதொரு வழியில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு சில இந்தியர்கள் கூட, தம்முடைய கண்ணோட்டத்தில் தீவிரமான தேசியவாதத்துக்கு அப்பால் சிறிது கூடப் போகவில்லை''** என்ற ஏ. என். கொமரோவின் கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். 1920க்களின் முதல் வருடங்களில் கூட இந்த நிலைமையில் அதிகமான மாற்றமில்லை. இந்தியாவில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கூட அல்லது நாட்டை விட்டு வெளியேறிய இந்தியப் புரட்சிக்காரர்களில் ஒருவர் கூட இன்னும் மார்க்சியத்துக்கு முழு ஆதரவளிக்க முன்வரவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தாய் நாட்டின் விடுதலைக்கு வழிகளைத் தேடிக் கொண்டிருந்த இந்தியாவின் முற்போக்கான அறிவுஜீவிகளில் ஒரு சிலர் மட்டுமே பல விதமான சமத்துவவாத, கற்பனாவாத சோஷலிஸ்ட் கருத்துக்களைக் கூறினார்கள். நாட்டில் ஆரம்பநிலையிலிருந்த முதலாளித்துவ வளர்ச்சி ஆபத்தானது என்று இவர்கள் விமர்சித்ததுடன் சிறு அளவு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பைப் பற்றி நடைமுறையில்

---

* Horst Kruger, "Das Leninische Prinzip des Selbstbestimmungsrechts der Volker und die indische revolutionare Befreiungsbewegung", *Mitteilungen des Instituts fur Orientforschung der Deutschen Akademie der Wissenschaften zu Berlin*, Band XVI, Heft 2, 1970, S. 199; *Documents of the History of the Communist Party of India*, Vol. I, 1917—1922, Delhi, 1971, p. 9.

** ஏ.என். கொமரோவ், ''20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்தியாவில் சமத்துவவாத கருத்தமைப்புகள்'', **நவீன இந்தியாவின் சித்தாந்தப் பிரச்சினைகள்**, மாஸ்கோ, 1970, பக்கம் 156 (ருஷ்ய மொழியில்).

பின்பற்ற முடியாத கருத்துக்களை முன்வைத்தார்கள்.*

உலகத்தை மாற்றியமைப்பதற்கு ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் போராட்ட முறைகள் பயனற்றவை என்பதைக் கண்டதால் நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் அவர்களிடமிருந்து விலகவில்லை; தேசிய மற்றும் காலனியாதிக்கப் பிரச்சினைகளில் ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் உறுதியற்ற, சீர்திருத்தவாதக் கொள்கை இந்தியர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியதே அதற்குக் காரணம்.**

நாட்டைத் துறந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் அக்டோபர் புரட்சியின் தாக்கத்துக்கு அதிகமாக உட்பட்டிருந்தார்கள், அதை உடனடியாக வரவேற்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்திய விடுதலைக்குப் போராடுவதற்காக ஏற்பட்ட அரசியல் ஸ்தாபனங்களில் சோவியத் ருஷ்யாவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட முதல் ஸ்தாபனம் அவர்களுடையதே. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நானும் என்னுடைய சகாக்களும் ''போல்ஷிவிக் செயல் திட்டத்துக்கு எங்களுடைய ஆதரவை பகிரங்கமாக அறிவித்தோம்'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.) என்று வி.சட்டோபாத்யாயா தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பில் சுட்டிக் காட்டுகிறார். எனினும் பிந்திய வருடங்களில் அவர்களுடைய கருத்துக்களுடன் ஒப்புநோக்கும் பொழுது அவர்கள் போல்ஷிவிக்குகளின் தேசிய இனக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள் என்றுதான் கூற முடியும். உலக யுத்தத்தின் முடிவில் இந்தியப் புரட்சிக்காரர்களின் தேசியம் ஜனநாயக உள்ளடக்கத்தைப் பெறத் தொடங்கியது என்பது உண்மையே. ருஷ்ய போல்ஷிவிக்குகள் மற்றும் ஏகாதிபத்திய யுத்தத்தின் சம்பவங்களின் தாக்கம் காரணமாக அவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தை இலட்சியமாகச் சித்தரிப்பதை நிறுத்தி அதை வன்மையாக விமர்சிக்கத் தொடங்கினார்கள், இந்தியாவில் மக்களாட்சியை மேன்மேலும் வலியுறுத்தினார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி கீழ்த்திசை மக்களினங்களின் மீது, குறிப்பாக இந்தியாவின் மீது பிரம்மாண்டமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதை நிரு

---

* அதே நூல், பக்கம் 173, முதலியவை.

** அ. வி. ராய்க்கோவ், இந்தியாவின் எழுச்சி, பக்கம் 133.

பிப்பதற்குப் போதுமான சான்றுகளை சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட நூல்கள் வெளியிட்டிருக்கின்றன.*

மாபெரும் பரிமாணங்களைக் கொண்ட உலக நிகழ்ச்சி என்ற முறையில் அக்டோபர் புரட்சியின் தாக்கம் அதன் சொந்த சக்தியையும் இது ஏற்படுத்திய சமூக மாற்றங்களின் ஆழத்தையும் சார்ந்திருந்தது, இன்னும் சார்ந்திருக்கிறது என்பதுடன் வெளியிலிருக்கின்ற உலகம் அந்த மாற்றத்தின் சாரத்தைப் பார்ப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறது, எந்த அளவுக்கு அதனால் முடியும் என்பதையும் சார்ந்திருக்கிறது.

அக்டோபர் புரட்சிக்கு பிந்தைய முதல் வருடங்களில் இந்தியாவின் புரட்சிகர ஜனநாயக சக்திகளால் கூட அக்டோபர் புரட்சியின் முழுத் திட்டத்தையும் உட்கொள்ள முடியவில்லை; ஏனென்றால் அவை இன்னும் அதற்குத் தயாராக இருக்கவில்லை. தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருந்தது (மொத்த மக்கள் தொகையில் 0.5% கூட இல்லை); பிரதேச, பொருளாதார ரீதியில் அல்லது அறிவு ரீதியில் அது விவசாயிகளிடமிருந்து தன்னை இன்னும் பிரித்துக் கொள்ளவில்லை. மேலும் பாட்டாளி வர்க்கம் பல மொழிகளைப் பேசியது, அதற்கு முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியவில்லை, மத, சாதிக் கருத்துக்களுக்கும் மரபுகளுக்கும் உட்பட்டிருந்தது. ஆகவே உண்மையான கம்யூனிஸ்ட் இலட்சியங்களைக் கூட இன்னும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது. மேற்கூறியவை அனைத்தும் இன்னும் அதிகமான அளவில் விவசாயிகளின் பெரும் பகுதிகளுக்குப் பொருந்தக் கூடியவையே. அவர்கள் திக்கற்றவர்களாக, எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக, மத வெறி பிடித்தவர்களாக, நிலப்பிரபுத்துவச் சுரண்டல் மற்றும் வட்டிக் கொடுமையினால் அழுத்தப்பட்டவர்களாக இருந்தார்கள். அக்டோபர் புரட்சி மற்றும்

---

* *India and Lenin*. A Collection, New Delhi, 1960; Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, Calcutta, 1962; Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, Calcutta, 1968; *Lenin—his Image in India*, by Devendra Kaushik, Leonid Mitrokhin, Delhi, Bombay, Bangalore, 1970; எல். வி. மித்ரோகின், **லெனினைப் பற்றி இந்தியா**, மாஸ்கோ, 1971 (ருஷ்ய மொழியில்).

சோவியத் அரசாங்கத்தின் செய்முறை நடவடிக்கைகளின் தன்மையைப் பற்றி இந்திய சமூகத்தை ஏமாற்றுவதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகள் மிகப் பேரளவிலான முயற்சிகளைச் செய்தனர் என்பதையும் ஒருவர் மறக்கக் கூடாது. எனினும் பெருந்திரளான மக்கள் அரசியல் வாழ்க்கையில் பங்கெடுக்கத் தொடங்கி விட்டார்கள் என்றால் ஆரம்பக் கட்டங்களில் அது அடையக் கூடிய ஒரே வடிவம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான்.

இந்தியாவில் பல வருடங்களாக தேசிய விடுதலைப் போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது; உலக யுத்தத்தின் முடிவில் அது ஒரு புதிய எழுச்சிக் கட்டத்துக்குள் நுழைந்தவுடன் அது இந்தியாவிலிருந்த மற்ற எல்லா சமூக இயக்கங்களையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டு மிகப் பெரும்பான்மையான இந்தியர்களின் விருப்பார்வங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் தேசிய வர்ணத்தைப் பூசியது. அன்று முதல் காலடிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த தொழிலாளி வர்க்க இயக்கம் உண்மையில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது; தானாகவே ஏற்பட்ட விவசாயிகளின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களும் அப்படிப்பட்டவையே. ஏனென்றால் அவை பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் முக்கிய ஆதாரமாக இருந்த நிலப்பிரபுக்களைத் தாக்கின.

எனவே அக்டோபர் புரட்சியின் செயல்திட்டத்தின் உண்மையான கம்யூனிஸ்ட் பகுதியைக் காட்டிலும் அதன் ஜனநாயகப் பகுதியே எல்லாவற்றையும் காட்டிலும் இந்தியாவின் மீது அதிகமான தாக்கத்தைச் செலுத்தியது என்றால் அது இயற்கையே. நாட்டின் மிகவும் வளர்ச்சியடைந்த சக்திகள், நாட்டுக்கு உள்ளேயும் வெளியிலுமிருந்த புரட்சிக்காரர்கள் கூட முதலாவதாகவும் முதன்மையாகவும், அக்டோபர் புரட்சி தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்ததுடன் நிறைவேற்றியதில், ருஷ்யப் பேரரசிலிருந்த காலனி மக்களை ஜாரிஸ்ட் நுகத்தடியிலிருந்து விடுதலை செய்ததில், அதன் மூலம் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மற்ற மக்களினங்களுக்கு தேசிய சுதந்திரப் பாதையைச் சுட்டிக் காட்டியதில் அந்தப் புரட்சியின் மகத்துவத்தைக் கண்டார்கள்.

வங்காளப் புரட்சிக்காரர்கள் மீது அக்டோபர் புரட்சி

ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க, யதார்த்தமான படப்பிடிப்பை திரு. கௌதம் சட்டோபாத்யாயா தலைமையில் இந்திய வரலாற்றாசிரியர்கள் குழு கூட்டாகத் தயாரித்திருக்கிறது. அப்புரட்சிக்காரர்களில் பெரும்பான்மையினர் 1917—1918இல் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் சிறைகளுக்கு உள்ளேயிருந்தும் கூட மகத்தான அக்டோபர் புரட்சியை வரவேற்றார்கள். அவர்கள் படிப்பதற்கு பிரிட்டிஷ் பிற்போக்குவாத தினசரியான *Statesman* பத்திரிகை மட்டுமே அனுமதிக்கப்பட்டது. அது ''நாள்தோறும் சோவியத் ருஷ்யாவை எரிச்சலுடன் கண்டனம் செய்வதை'' அவர்கள் படித்தார்கள். ''உண்மையிலேயே முற்போக்கான ஏதோ ஒன்று அங்கே நடைபெற்றிருக்கிறது'' என்று இது எங்களை நம்பச்செய்தது என்று 77 வயதாகிய சதீஷ் பக்ராஸி என்ற முதிய புரட்சிக்காரர் அப்புத்தகத்தில் நினைவு கூறினார். புரட்சியின் சோஷலிஸ்ட் உள்ளடக்கம் தெளிவாகப் புலப்படவில்லை என்றாலும் அது புரட்சிக்காரர்களை வசீகரித்தது. ''கம்யூனிஸ்ட் இலட்சியம் இன்னும் கூடத் தெளிவில்லாமல்தான் எங்களைக் கவர்ச்சித்தது'' என்று சதீஷ் பக்ராஸி கூறினார். புரட்சிக்காரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் தேசியப் பத்திரிகையான **அம்ரித்தா பஸார் பாத்ரிக்காவைப்** படிக்கின்ற உரிமையைப் பெற்றார்கள். அதன் பிறகு தெளிவற்ற நிலை மறைந்திருக்க வேண்டும், அதன் உதவியுடன் சோஷலிச சாராம்சத்தை அவர்கள் கண்டுபிடித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மறுபடியும் கண்டுபிடித்தது ''போல்ஷிவிக் ருஷ்யாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையே''*.

இந்தியப் புரட்சிக்காரர்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தை எவ்வளவு வன்மையான தேசிய ஒளியில் பார்த்தார்கள் என்பதைக் கற்பனை செய்வது கூடக் கடினமே. உதாரணமாக ''முதலாளிகள் ஒழிக!'' என்ற கோஷம் தங்களுடைய சொந்த, தேசிய முதலாளி வர்க்கம் உள்பட எல்லா முதலாளி வர்க்கத்தையும் ஒழிக்கும்படி கோருகின்ற அறைகூவல் என்று அவர்கள் பார்க்கவில்லை; அந்நிய ஆதிக்கத்தை, இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால்

---

* Gautam Chattopadhyaya, *Communism and Bengal's Freedom Movement*, Vol. 1 (1917—1929), New Delhi, 1970, pp. 17—18.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடக் கோருகின்ற அறைகூவல் என்றுதான் அவர்கள் பார்த்தார்கள். ''எங்களைப் பொறுத்தமட்டில் முதலாளி என்பவன் அந்நியன், இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால் அவன் ஒரு ஆங்கிலேயன்... எனவே முதலாளிகளை எதிர்த்துப் போராடும்படி சோவியத் அரசாங்கத்தின் பிரபலமான அறைகூவல்... எங்களிடம் மாபெரும் மனப்பதிவை ஏற்படுத்தியது'' என்று முகம்மது பர்க்கத்துல்லா **இஸ்வேஸ்தியா** நிருபரிடம் கூறியது மேற்கூறிய அம்சத்தைப் பொருத்தமாக எடுத்துக்காட்டுகிறது. இந்தியர்களைப் பொறுத்தமட்டில் அக்டோபர் புரட்சியின் மிக முக்கியமான அம்சம் எது என்பதைப் பற்றி எத்தகைய சந்தேகமும் ஏற்பட இனியும் இடமளிக்கக் கூடாது என்ற தோரணையில் பர்க்கத்துல்லா பின்வரும் விஷயத்தைச் சுட்டிக் காட்டினார்: ''ஏகாதிபத்திய அரசாங்கங்களால் திணிக்கப்பட்ட எல்லா இரகசிய ஒப்பந்தங்களையும் ருஷ்யா ரத்துச் செய்ததும் மக்களினங்களுக்குச் சுதந்திரமான, சுய நிர்ணய உரிமையைப் பிரகடனம் செய்ததும் இன்னும் அதிகமான மனப்பதிவை ஏற்படுத்தியது''. அந்தச் செயல் ''ஆசியாவின் சுரண்டப்படுகின்ற எல்லா மக்களினங்களையும், எல்லாக் கட்சிகளையும்—சோஷலிசத்துக்கு வெகு தொலைவிலிருக்கின்றவற்றையும் கூட—ருஷ்யாவைச் சுற்றிக்கொண்டு வந்து நிறுத்தியது''* என்று பர்க்கத்துல்லா மேலும் கூறினார்.

நாட்டைத் துறந்து சோவியத் குடியரசுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் சிறப்புமிக்க தலைவர்களில் ஒருவரான அப்துர் ராப் பார்க் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கு 1921 மே 8ந் தேதியன்று எழுதிய கடிதத்தில் ''இந்திய மக்கள் சோவியத் அரசாங்கத்தை நேசிக்கிறார்கள்; ஏனென்றால் அது பிரிட்டனுடைய எதிரியாக இருக்கிறது, சுய நிர்ணயக் கோட்பாட்டை ஆதரிக்கிறது'' என்று எழுதினார்.

போல்ஷிவிக்குகளின் சமூகத் துறைச் செயல்திட்டத்தைப் பொறுத்தமட்டில் அது முற்றிலும் சமத்துவத் தன்மை கொண்டிருக்கிறது என்று படித்தவர்கள் கருதி

---

* இஸ்வேஸ்தியா, மே 6, 1919.

னார்கள். 1923இல் ஜுகாந்தார் என்ற புரட்சிகரக் குட்டி முதலாளி வர்க்கக் கட்சியின் தலைவரான அமுல்ய சரன் அதிகாரி போல்ஷிவிக்குகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: அவர்கள் ''ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்கள்· அதன் காரணமாகவே பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் இதர ஏகாதிபத்தியவாதிகள் புதிதாகப் பிறந்திருக்கும் இந்த அரசை ஒழிப்பதற்குப் பாடுபடுகிறார்கள். ஆனால் கடவுள் சித்தம் வேறு விதமாக இருக்கிறது. லெனினால் தலைமை தாங்கப்படுகின்ற போல்ஷிவிக்குகள் வெற்றியடைந்து... சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உலகம் முழுவதிலும் பரப்பி வருகிறார்கள்''*.

அக்டோபர் புரட்சியின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தாக்கத்தின் வெற்றிக்கான காரணத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் நன்றாக அறிந்திருந்தது. எனவே எல்லாவற்றுக்கும் மேலாக இன மற்றும் காலனியாதிக்க உறவுகள் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய போல்ஷிவிக் கோட்பாடுகளையும் அவற்றை அமுல் நடத்துவதற்கு சோவியத் அரசாங்கத்தின் முயற்சிகளையும் பற்றி ஒரு சிறு செய்தி கூட இந்தியாவை எட்டிவிடாதபடி பார்த்துக் கொண்டது. சோவியத் நடவடிக்கைகளுக்கு லண்டன் எவ்வளவு விரைவாக பதில் நடவடிக்கைகளைச் செய்தது என்பது ஆச்சரியமே.

1917 டிசம்பர் 3ந் தேதியன்று மக்கள் கமிசார்களின் கவுன்சில் ருஷ்யா மற்றும் கிழக்கு நாடுகளிலுள்ள உழைக்கும் முஸ்லிம்கள் அனைவருக்கும் என்ற வேண்டுகோளை வெளியிட்டது. அதிலிருந்த ஒவ்வொரு சொல்லும் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் மனங்களிலும் அறிவிலும் உத்வேகமூட்டியது, அடிமை நுகத்தடியைத் தூக்கியெறியும்படி மக்களை அறைகூவியது.

இந்த ஆவணம் வெளியிடப்பட்டு சில நாட்களுக்குப் பிறகு, 1917 டிசம்பர் 6ந் தேதியன்று பிரிட்டனில் இருந்த இந்தியக் காரியதரிசி வைசிராய்க்கு அனுப்பிய தந்தியில் போல்ஷிவிக்குகள் ருஷ்யாவிலும் கிழக்கு நாடுகளிலும் உள்ள உழைக்கின்ற முஸ்லிம்கள் அனைவருக்கும் மிகவும் உணர்ச்சியூட்டுகின்ற பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

---

* Gautam Chattopadhyaya, "Impact of Lenin", *Mainstream*, November 18, 1967, p. 23.

அதன் வாசகம் தந்தி வழியாக அனுப்பப்பட்ட பொழுது பிரிட்டிஷ் அதிகாரிகள் அதைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்று தெரிவித்தார். இந்தப் பிரகடனம் இயன்றவரை அதிக நாட்கள் பிரசுரமாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வைசிராய்க்கு ஆணையிட்டார்.* ''அந்தத் தந்தியை நிறுத்தி வைப்பதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் செய்யுங்கள்'' என்று லண்டனிலிருந்து டிசம்பர் 13ந் தேதியன்று மறுபடியும் உத்தரவு வந்தது. ஒரு வேளை அது இயலாமற் போகலாம் என்று கருதிய இந்தியக் காரியதரிசி அதற்கு எதிராக நாட்டில் பிரசார இயக்கத்தை நடத்தும்படி வைசிராயைக் கேட்டுக் கொண்டார்.**

1917 நவம்பரில் இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவுக்கு சுயாட்சி வேண்டும் என்பதைக் காட்டிலும் அதிகமான கோரிக்கையை முன்வைக்காத காலத்தில் ருஷ்யப் புரட்சியின் அதிகரிக்கின்ற தாக்கத்தை உணர்ந்த பிரிட்டிஷ் ஆளும் வட்டாரங்கள் அந்தக் கோரிக்கை எதற்கு இட்டுச் செல்லும் என்பதை ஏற்கெனவே உணர்ந்திருந்தன. எனவே இந்திய தேசிய முதலாளி வர்க்கத்தை பயமுறுத்துவதற்காக ருஷ்யாவில் குழப்பம், அராஜகம் என்று மிகப் பெரிய பிரச்சாரஇயக்கத்தைப் பத்திரிகைகளில் நடத்தின. நிர்வாகம் நடத்துகின்ற அளவுக்கு முதிர்ச்சி அடையாத நாட்டுக்கு சுயநிர்வாகம் கொடுக்கப்படும் பொழுது இந்த நிலை ஏற்படுவது நிச்சயம் என்று அவை கூறின. *The Pioneer* தினசரி 1917 நவம்பர் 19ந் தேதிய இதழில் பின்வருமாறு எழுதியது: ''பிரதிநிதித்துவ சபைகள் இயங்குவதற்குரிய தகுதியை இன்னும் அடையாதிருக்கின்ற நாட்டுக்கு அவற்றை முன்கூட்டியே கொடுப்பதனால் விளையக் கூடிய ஆபத்துக்களை ருஷ்யா உலகத்துக்கு எடுத்துக்காட்டி வருகிறது. ருஷ்யாவில் சுயாட்சி என்பது உண்மையில் ஒரு ஆட்சியும் இல்லாததையே குறிக்கிறது... இதன் படிப்பினை வெளிப்படையானதே. இந்த நாட்டிலுள்ள அவசரக்கார அரசியல்வாதிகள் அனைவரும் அப்படிப்பினையை கிரகித்துக் கொள்ள வேண்டும். சுயாட்சி... என்பது மெதுவாக வள

---

* எல். வி. மித்ரோகின், லெனினைப் பற்றி இந்தியா, பக்கம் 29 (ருஷ்ய மொழியில்).

** அதே இடம்.

ரும் செடி. உரிய காலத்துக்கு முன்னதாக அதைத் திணிக்கச் செய்கின்ற முயற்சி ஒழுங்கின்மை, குழப்பம், அராஜகம் ஆகியவற்றையே ஏற்படுத்தும்''*.

இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகக் குறைவான விளைவுகளையே ஏற்படுத்தின. எனினும் அக்டோபர் புரட்சி வெற்றியடைந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, 1918 ஏப்ரல் 22ந் தேதியன்று பிரிட்டனிலிருந்த இந்தியக் காரியதரிசி ஏட்வின் சாமுவேல் மான்டேகுவும் இந்திய வைசிராயாக இருந்த லார்ட் செம்ஸ்போர்டும் இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பற்றிய அறிக்கையில் கையெழுத்திட்ட பொழுது ருஷ்யப் புரட்சி இந்தியாவின் பெருந்திரளான மக்களின் அரசியல் உணர்வை ஏற்கெனவே பாதித்திருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. ''ருஷ்யப் புரட்சி, கொடுங்கோன்மைக்கு எதிரான வெற்றி என்று ஆரம்பம் முதலே இந்தியாவில் கருதப்பட்டது... அது இந்தியர்களின் அரசியல் விருப்பார்வங்களைத் தூண்டியிருக்கிறது''** என்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அது உண்மையே. எனினும் காலப்போக்கில் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியாவில் போல்ஷிவிசத்தின் உண்மையான ஆபத்து என்று சொல்லப்படுவதைப் பற்றி அதிகார பூர்வமான அறிக்கைகளிலும் சொற்பொழிவுகளிலும் எழுதுவதற்கும் பேசுவதற்கும் அதிகமான விருப்பம் காட்டினார்கள் என்பதை சுட்டிக் காட்டுவது அவசியம். இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பேரெழுச்சியைக் கண்ட பிரிட்டிஷ் அதிகாரிகள் எந்த பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கையையும் மாஸ்கோவின் சூழ்ச்சி (பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் சூழ்ச்சி) என்றும் தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்ட தேசியப் புரட்சிக்காரரர் அநேகமாக ஒவ்வொருவரையும் போல்ஷிவிக் என்றும் கூறினார்கள்.

இந்தியப் புரட்சிக்காரரர் பாரத் தாஸ் 1918இல் பின்

---

* Zafar Imam, *Colonialism in East-West Relations. A Study of Soviet Policy Towards India and Anglo-Soviet Relations, 1917—1947*, New Delhi, 1969, p. 57.

** M. R. Masani, *The Communist Party of India. A Short History*, London, 1954, p. 11.

வருமாறு எழுதினார்: ''கடந்த பத்து வருடங்களாக இந்தியப் புரட்சிக்காரர்கள் 'அராஜகவாதிகள்' என்று வேட்டையாடப்பட்டார்கள். ஆனால், இன்று... அவர்கள் 'இந்திய போல்ஷிவிக்குகள்' என்று சொல்லப்படுகிறார்கள்''*. 1919ம் வருட வசந்த காலத்தின் போது காலனியாதிக்க அதிகாரிகள் கொடுமையான ரௌலட் சட்டத்தை நிறைவேற்றிய பொழுது அது ஆவேசமான கண்டனத்தைத் தூண்டியது, தேசிய விடுதலைப் போராட்டம் ஓங்கியது. ''இந்தியாவில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு போல்ஷிவிக் திட்டங்களில்'' ஒரு பகுதிதான் இவை என்று *The Times* பத்திரிகை 1919 மார்ச் 20ந் தேதிய இதழில் எழுதியது. இந்திய முஸ்லிம்கள் பெருந்திரளாகப் பக்கத்திலுள்ள முஸ்லிம் நாடுகளில் குடியேறியது கிலாபத் இயக்கத்தின் முக்கியமான அம்சமாகும். அதுகூட போல்ஷிவிக் பிரச்சாரத்தின் விளைவு என்று எடுத்துக்காட்டுவதற்கு பிரிட்டிஷ் பத்திரிகைகள் முயற்சி செய்தன. உதாரணமாக, **அவுத்** பத்திரிகை 1922 ஜூன் 17ந் தேதிய இதழில் **இந்தியாவில் போல்ஷிவிக் சூழ்ச்சிகள்** என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியது: ''முற்றிலும் மதத் தன்மை கொண்டிருப்பதாகக் கருதப்பட்ட ஹெஜிரா இயக்கம் கூட அரசியலாக மாறிவிட்டது... ஹெஜிரா இயக்கம் மதக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை; அது ருஷ்யப் பிரச்சாரத்தினால் ஏற்பட்டிருக்கிறது...''** பீகார், மத்திய மாகாணங்கள் மற்றும் வங்காளத்தில் நடைபெற்ற விவசாயிகளின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கிளர்ச்சிகள் ''தெளிவாக போல்ஷிவிக் ரகத்தைச் சேர்ந்தவை''*** என்று பிரிட்டிஷ் நிர்வாகம் அறிவித்தது. தொழிற்சங்க மாதிரியில் தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களை அமைப்பதற்குச் செய்யப்பட்ட ஆரம்பகால முயற்சிகளும் போல்ஷிவிக்குகளின் வேலை என்று அறிவிக்கப்பட்டன. 1920ம் வருடத்தின் ஆரம்பத்தில் வட மேற்கு ரயில்வே பிரிவில் நடைபெற்ற

---

* அ. வி. ராய்க்கோவ், **இந்தியாவின் எழுச்சி**, பக்கம் 130 (ருஷ்ய மொழியில்).

** பத்திரிகையின் பெயரும் மேற்கோளும் காபூலிலிருந்த சோவியத் தூதுக் குழுவின் செய்தி அறிக்கையிலிருந்து.

*** எல். வி. மித்ரோகின், **லெனினைப் பற்றி இந்தியா**, பக்கம் 41 (ருஷ்ய மொழியில்).

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ''திட்டவட்டமாக போல்ஷிவிக் தன்மையைக் கொண்டிருப்பதாக'' பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதியதை காபூலிலிருந்த சோவியத் தூதுக் குழு அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் துருக்கிஸ் தான் கமிஷனுக்கு 1922 மே 22ந் தேதியில் அனுப்பிய அறிக் கையில் தெரிவித்தது. நாட்டில் சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய மெய்யான முன்நிபந்தனைகள் இன்னும் ஏற்படவில்லை, இந்தியப் புரட்சிக்காரர்களில் மிகப் பெரும்பான்மையினர் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துக்களை இன்னும் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை என்றாலும் பிரிட்டிஷ் காலனி யாதிக்க அதிகாரிகள் போல்ஷிவிக்குகளினால் இந்தியாவுக்கு ஆபத்தேற்பட்டிருப்பது உண்மை என்று எடுத்துக்காட்டு வதற்கு அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அக்டோபர் புரட்சியின் கருத்துக்கள் இந்திய சமூகத் தின் மீது உண்மையிலேயே சக்தி வாய்ந்த தாக்கத்தைக் கொண்டிருந்தது மட்டும் இதற்குக் காரணமல்ல; எங்கு மிருக்கின்ற, எல்லாவற்றையும் அறிந்த காலனியாதிக்க ஐ. சி. எஸ். நிர்வாகத்துக்கு மற்றொரு நேரடியான அக்கறை யும் இருந்தது. ஐ.சி.எஸ். அதிகாரிகளால் இந்தியாவை அடக்க முடியாதிருப்பதைப் பற்றி லண்டன் அதிகாரிகள் தமது அதிருப்தியைத் தெரிவிக்கின்ற பொழுது அவர்கள் எப்படியாவது சமாளிக்க வேண்டுமே. மேலும், கம்யூ னிஸ்ட் இயக்கம் மட்டுமல்லாமல் இந்தியாவில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீவிரமான வடிவங்களும் வெளிநாட்டிலிருந்து தூண்டப்பட்டவை என்று கூறுவதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் லண்டனுக்கும் அது வாய்ப்புத் தந்தது.

அதே வாதத்தை முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர் கள் இன்னும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். நவீன இந்தியாவில் பிற்போக்கான, வலதுசாரிக் கட்சியான சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த எம். ஆர். மசானி அக்காலத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருப் பது மிகைப்படுத்திக் கூறுவதே: ''1920க்களின் தொடக் கத்தில் இந்தியாவிலிருந்த அறிவு சார்ந்த மற்றும் உணர்ச்சிச் சூழல் கம்யூனிஸ்ட் கருத்துக்கள் நுழைவதற்குச் சாதக மாக இருந்தது''*. சாதகமான நிலைமை என்பது உண்

* M. R. Masani, *The Communist Party of India..*, p. 20.

மையே, ஆனால் போல்ஷிவிக்குகளுடைய எந்தக் கருத்துக் களுக்கு? எல்லாவற்றுக்கும் மேலாக போல்ஷிவிக்குகள் அமுலாக்கத் தொடங்கியிருந்த தேசிய இனங்களின் சுய நிர்ணயம் அல்லது பிரிந்து போவதற்கு உரிமை என்ற கோஷத்திலடங்கிய கருத்துக்களுக்கே.

அக்டோபர் புரட்சியின் கருத்துக்கள் இந்தியாவின் மீது கொண்டிருந்த தாக்கத்தைக் குறைவாக மதிப்பிடுவதற்கு நான் சிறிதும் விரும்ப மாட்டேன். அது இயற்கையே. ருஷ்யப் புரட்சியை அடுத்து வந்த முதல் அல்லது இரண்டா வது வருடங்களில் இந்திய சமூகத்தின் தேசிய விடுதலைப் போக்குகளைத் தீவிரப்படுத்துவதில் அதன் தாக்கம் குறிப் பாக வெளிப்பட்டது, அதற்குப் பிறகே கம்யூனிஸ்ட் போக்கு கள்—அதன் சரியான அர்த்தத்தில்—வெளிப்படுவதற்குத் தொடங்கின என்பதைக் கூற விரும்புகிறேன். இந்தியப் புரட்சிகர ஜனநாயகத்தின் மிகவும் வளர்ச்சியடைந்த பிரதிநிதிகள் கூட கம்யூனிஸ்ட் கருத்துக்களை—அவற்றின் ஆதிக்கால வடிவத்தில்—கிரகிப்பதற்கு சிறிது காலமா யிற்று; ஆனால் ''தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை'' என்னும் லெனினிய கோஷத்தின் சாரம் இந்தியாவில் நெடுங்காலமாகத் தயாரிக்கப்பட்டிருந்த நிலத்தில் விழுந் தது. இந்தியப் புரட்சிக்காரர்கள் அமைப்பு ரீதியாகவும் அமைப்பு இல்லாமலும் சோவியத் நாட்டிற்கு வந்த இயக் கத்தில் அதைத் தெளிவாகப் பார்க்க முடியும்.

இந்தியப் புரட்சிக்காரர்கள் அக்டோபர் புரட்சியின் சமூகக் கூறுகளையும் சோஷலிஸ்ட் உள்ளடக்கத்தையும் கவ னிப்பதற்கு முற்றிலும் தவறினார்கள் என்பது இதன் அர்த்த மல்ல. சமத்துவமும் சமூக நீதியும் சர்வதேச ஒருமைப் பாடும்—பெருந்திரளான மக்களை ஸ்தாபன ரீதியாக அமைப்பதும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு விவசாயப் புரட்சி யும் கூட—தனிப்பட்ட புரட்சிக்காரர்களுக்குப் புதியவை அல்ல. அவர்களில் சிலர் இக்கருத்துக்களை ஆதரித்தார் கள், ஆனால் அவற்றைத் தமக்கே உரிய கற்பனாவாத, குட்டி முதலாளி வர்க்க, புரட்சிகர தேசியவாத வழியில் விளக்கினார்கள். ஆகவே அவர்கள் அக்டோபர் புரட்சி யின் கருத்துக்களையும் அதன் சாதனைகளையும் இந்தி யாவின் யதார்த்த நிலைமைகள், பிரிட்டிஷ் ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கு அவசியமான முன்நிபந்தனைகள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தார்கள்.

* * *

நூற்றுக்கணக்கான இந்தியப் புரட்சிக்காரர்கள் நாட்டைத் துறந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இயக்கம் அக்டோபர் புரட்சி இந்தியாவின் மீது ஏற்படுத்திய பிரம்மாண்டமான தாக்கத்தின் மிகவும் அப்பட்டமான வெளியீடாகும்.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் பிரதிநிதிகள் சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்கள். அக்டோபர் புரட்சியை நிறைவேற்றி, தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை என்ற மகத்தான கருத்தை அமுலாக்கி, கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் நடத்துகின்ற போராட்டத்துக்கு உதவியளிக்கின்ற சோவியத் ருஷ்யாவை நேரில் பார்ப்பதற்கு அவர்கள் விரும்பினார்கள்; அதன் புரட்சிகரச் சாதனைகளை ஆராய்வதற்கும் காலனியாதிக்கம் என்ற கொள்ளை நோயிலிருந்து தமது மக்களைக் காப்பாற்றுவதற்கு அதை உபயோகிப்பதற்கும் அவர்கள் விரும்பினார்கள்.

## இந்தியாவைத் துறந்து அமைப்பு ரீதியாக சோவியத் ருஷ்யாவுக்கு வந்த புரட்சிக்காரர்கள்

அக்டோபர் புரட்சியின் செய்தி வெகுதூரத்திலிருந்த இந்தியாவுக்குள் வேகமாகப் பரவியது; அதன் விளைவாக நாட்டைத் துறந்து சோவியத் ருஷ்யாவுக்கு இந்தியப் புரட்சிக்காரர்கள் வருகின்ற இயக்கம் தொடங்கியது. 1918 முதல் 1920ம் வருடத்தின் ஆரம்பம் வரையிலும் பிரிட்டிஷ் ஒடுக்குமுறையிலிருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தினால் உந்தப்பட்டு இந்தியப் புரட்சிக்காரர்கள் சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்கள். அவர்கள் புரட்சி செய்வது எப்படி என்ற கேள்விக்கு சோவியத் ஆட்சியமைப்பிடம் பதிலைத் தேடினார்கள், புரட்சி செய்வதற்கு அவர்கள் செய்முறை உதவியளிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இதற்குப் பிந்திய மாதங்களிலும்—வருடங்களிலும் கூட—இப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஆனால்

இந்தியாவின் தேசியப் புரட்சிகர ஜனநாயகவாதிகள்—அவர்களில் சிலர் மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருந்தார்கள்—1920ம் வருடத்தின் நடுப்பகுதிக்குப் பிறகே சோவியத் ருஷ்யாவுக்கு வரத் தொடங்கினார்கள்.

சமூகப் பிரச்சினைகளைப் புரட்சிகரமான வழியில் தீர்ப்பதற்கு ஒரு சிறந்த உதாரணத்தை ஏற்படுத்திய மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் மிகப் புரட்சிகரமான சக்திகள் விரும்பியதை சோவியத் ருஷ்யாவுக்கு இந்தியர்கள் வந்த இயக்கம் எடுத்துக்காட்டியது. ''சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய் நமது சோவியத் குடியரசு நடத்தும் புரட்சிகரப் போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு மட்டும் தான் கீழ்த்திசை மக்களின் புரட்சிகரமான இந்த இயக்கம் இப்பொழுது பயனுள்ள முறையில் வளர முடியும்...''* என்று வி. இ. லெனின் கூறினார். இந்தியப் புரட்சிக்காரர்கள் தமக்கே உரிய பிரத்யேகமான வழிகளில்—சில சமயங்களில் திட்டமிட்டும் சில சமயங்களில் தன்னியல்பாகவும்—இம்முடிவுக்கு வேகமாக வந்து கொண்டிருந்தார்கள்.

இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற அரசாங்கம் காபூலில் நிறுவப்பட்டதை முன்னர் குறிப்பிட்டோம். ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட அரசியல் முறையில் அமைக்கப்பட்ட இந்திய தேசியப் புரட்சிக்காரர்களின் முதல் குழு இதுவே. இந்த அரசாங்கத்தின் தலைவரான மகேந்திர பிரதாப் 1917 நவம்பர் 29ந் தேதியே ஆப்கானிஸ்தான்-சோவியத் எல்லைக்கு வந்து ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு உதவி செய்யும்படி துருக்கிஸ்தான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். ருஷ்ய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதற்குத் தான் இரண்டு தடவைகளில் முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை என்று அவர் தம்முடைய செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 84.

ஆனால் தற்பொழுது அக்டோபர் புரட்சி வெற்றியடைந்துவிட்டபடியால் ''கடைசித் தடை அகற்றப்பட்டுவிட்டது. ருஷ்யாவின் மேன்மை மிக்க புத்திரர்கள் இப்பொழுது ருஷ்ய அரசாங்கத்தை நடத்துகிறார்கள் என்பதை சமீபத்தில் இந்தியப் பத்திரிகைகளின் மூலம் அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆங்கிலேயர்கள் அவர்களை தேச விரோதிகள் என்று சித்தரிக்கிறார்கள், ஆனால் அவர்கள் மனித குலத்தின் மெய்யான நண்பர்கள் என்பதே உண்மை...'' ''ருஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருக்கமான நட்புறவுகள் ஏற்படுவதில் நான் அக்கறை கொண்டிருக்கிறேன். ஏனென்றால் **ருஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மட்டுமே இந்தியாவின் உண்மையான விடுதலையையும்** பிரபஞ்சத்தில் சமாதானத்தையும் சாத்தியமாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்...''* (அழுத்தம் என்னுடையது.—ஆ-ர்.)

சோவியத் ருஷ்யா இந்தியப் புரட்சிக்காரர்களைச் சிறப்பான முறையில் வரவேற்றது. மகேந்திர பிரதாப், 1918 பிப்ரவரியிலேயே துர்க்கிஸ்தான் அதிகாரிகளின் அழைப்பின் பேரில் தாஷ்கன்டுக்கு வந்த பிறகு பெத்ரோகிராதுக்குப் புறப்பட்டு சென்றதாகவும் அங்கே சோவியத் அரசாங்கத்தின் உயர் பிரதிநிதிகளால் வரவேற்கப்பட்டதாகவும் பிற்காலத்தில் (1921 டிசம்பரில்) எழுதினார்.** அப்பொழுது முதல் மற்றும் 1919, 1920, 1921ம் வருடங்கள் முழுவதிலும் இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சோவியத் ருஷ்யாவின் பற்பல நகரங்களிலும் பிரதேசங்களிலும், பிரதானமாக தாஷ்கன்ட், புஹாரா, மாஸ்கோ ஆகிய நகரங்களிலும் சில சமயங்களில் காஸானிலும் நெடுங்காலம் தங்கி வேலை செய்தார்கள்.

இந்தியப் புரட்சிக்காரர்கள் ஆப்கானிஸ்தானின் தலைநகரத்தில் பல வருடங்கள் தங்கியிருப்பதற்கு ஆப்கானிஸ்தானின் எமீர் அனுமதி கொடுத்திருந்தார். எனவே அவர்கள் தமக்கும் எமீருக்குமுள்ள தொடர்புகளின் மூலம்

---

* மத்திய அரசு இராணுவ-வரலாற்று ஆவணக் காப்பகம், தொகுப்பு 1396, பட்டியல் 6, பத்திரம் 234, தாள்கள் 131, 132.

** மகேந்திர பிரதாப் பெத்ரோகிராதுக்குச் சென்ற பின்னர் பெர்லினுக்குப் புறப்பட்டார்.

ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் நட்புறவை நிறுவுவதில் தொடக்ககால சோவியத் இராஜியவாதிகளுக்கு உதவி செய்தார்கள். இந்தியாவை விடுவிப்பதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு சோவியத்-ஆப்கானிஸ்தான் கூட்டணியை ஏற்படுத்த வேண்டும் என்ற அவர்களுடைய திட்டங்களுடன் அது நன்கு பொருந்தியிருந்தது. 1919ம் வருடத்தின் ஆரம்பத்தில் காபூலிலிருந்து தாஷ்கன்டுக்கு வந்த முகம்மது பர்க்கத்துல்லாவும் மகேந்திர பிரதாப்பும் இத்துறையில் மிகவும் சுறுசுறுப்புடன் பாடுபட்டார்கள்.

முகம்மது பர்க்கத்துல்லா முஸ்லிம் லீக் மற்றும் இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினர், தத்துவஞான, இலக்கியப் பேராசிரியர், கதர் கட்சியின் முன்னாள் தலைவர், அன்று வரை பெர்லின் இந்தியப் புரட்சிகரக் கமிட்டியில் உறுப்பினர், நாட்டுக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த இந்தியத் தற்காலிக அரசாங்கத்தின் பிரதம மந்திரி, ஆப்கானிஸ்தானின் அதிகார பூர்வமற்ற பிரதிநிதி என்ற முறையிலும் சோவியத் ருஷ்யாவில் தங்கியிருந்தார். வி. இ. லெனின் 1919 மே 7ந் தேதியன்று அவரைச் சந்தித்தார். ஆப்கானிஸ்தான் ருஷ்யக் குடியரசுடன் தற்காப்பு மற்றும் போர் ஒப்பந்தம் செய்வதற்குத் தயாராக இருக்கிறதென்று பர்க்கத்துல்லா சில நாட்களுக்குப் பிறகு அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகத்துக்கு அளித்த ஒரு விசேஷக் குறிப்பில் தெரிவித்தார்.*

அந்த சமயத்தில், அதாவது 1919 மே மாதத்தில் மகேந்திர பிரதாப் ஜெர்மனியில் இருந்தார். அதற்குச் சிறிது காலத்துக்கு முன்பாக அவர் பெத்ரோகிராதிலிருந்து வந்திருந்தார். ஆங்கில-ஆப்கான் யுத்தம் மே 3ந் தேதியன்று ஆரம்பமாகிவிட்டதை அறிந்ததும் அவர் மாஸ்கோவுக்குப் போய்விட்டு ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல முடிவு செய்தார். ''...நெடுங்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் வசிக்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு நான் நல்ல

---

* அ. என். ஹேய்ஃபிட்ஸ், ''லெனினிய வெளிநாட்டுக் கொள்கையும் தேசிய விடுதலை இயக்கமும்'', **ஆசிய, ஆப்பிரிக்க மக்களினங்கள்**, *1970, №2, பக்கம் 51 (ருஷ்யனில்).*

சேவை செய்யக்கூடும்''* என்று தன் முடிவை விளக்கி அவர் எழுதினார்.

ஜூலை** மாதத்தில் மகேந்திர பிரதாப் அப்துர் ராப் பார்க் மற்றும் திருமலாச்சார்யாவுடன் மறுபடியும் மாஸ்கோவுக்கு வந்தார். ''மாஸ்கோவில் நண்பர் முகம்மது பர்க்கத்துல்லா எங்களை வரவேற்றார், அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகம் எங்களை மிகவும் நன்றாக கவனித்துக் கொண்டது, மாபெரும் தலைவரான தோழர் லெனின் எங்களுடன் அன்பாக கலந்துரையாடினார்''*** என்று அவர் தெரிவித்தார்.

---

* 1921 டிசம்பரில் மகேந்திர பிரதாப், ருஷ்ய சமஷ்டிக் குடியரசின் அரசாங்கத்திற்கு எழுதிய **சோவியத் ருஷ்யா மற்றும் இந்தியாவின் நலன்களுக்காக எழுதப்பட்ட ஒரு சில வார்த்தைகள்** என்ற கடிதத்தைப் பார்க்க.

** அநேகமாக 1919 ஜூலை மாத ஆரம்பமாக இருக்க வேண்டும். 1921 டிசம்பரில் எழுதிய அதே கடிதத்தில் 1919 கோடைகாலத்தில் மாஸ்கோவுக்குத்தான் வந்ததாக மகேந்திர பிரதாப் குறிப்பிட்டார். 1921 டிசம்பரில் பர்க்கத்துல்லா எழுதிய குறிப்பிலும் மகேந்திர பிரதாப் வந்த தேதியைக் குறிப்பிட்டிருந்தார். மகேந்திர பிரதாப், அப்துர் ராப் பார்க், திருமலாச்சார்யா ஆகியோர் மாஸ்கோவுக்கு வந்து கொண்டிருந்த பொழுது தலீப் சிங் கில் என்ற நான்காவது இந்தியப் புரட்சிக்காரர் அவர்களை முந்திக் கொண்டு மாஸ்கோவுக்கு வந்து சேர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். தலீப் சிங் கில் சோவியத் தலைநகரத்துக்கு ஜூன் மாதத்தில் வந்தார்; மகேந்திர பிரதாப்பும் அவருடைய சகாக்களும் அதற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குப் பிறகு அங்கே வந்து சேர்ந்தனர்.

*** லெனின் இந்தியப் பிரதிநிதிகளைச் சந்தித்த தேதி சரியாகத் தெரியவில்லை என்பது துரதிர்ஷ்டமே. மகேந்திர பிரதாப்பின் தலைமையில் அப்துர் ராப் பார்க், திருமலாச்சார்யா, தலீப் சிங் கில், முகம்மது பர்க்கத்துல்லா, இப்ரகீம் எனும் பஞ்சாப் விவசாயி ஆகியோரடங்கிய தூதுக் குழுவை லெனின் மகேந்திர பிரதாப் மாஸ்கோவுக்குத் திரும்பிய பிறகு, அதாவது ஜூலை மாதத்தில் சந்தித்திருக்க வேண்டும்.

அச்சந்திப்பு மே 7ந் தேதியன்று நடைபெற்றதாக சில புத்தகங்களில்—குறிப்பாக இந்நூலின் ஆசிரியர் எழுதிய *The Comintern and the East* (Progress Publishers, Moscow, 1981, p. 55) என்ற புத்தகத்தில் — எழுதப்பட்டிருக்கிறது.

மகேந்திர பிரதாப் மாஸ்கோவுக்கு வந்த பொழுது இந்தியாவை விடுவிப்பதற்கு சோவியத்-ஆப்கானிஸ்தான் இராணுவப் படையெடுப்பை அமைப்பதில்தான் முதன்மையான அக்கறை காட்டியிருக்க வேண்டும். ''ஜெர்மானியர்கள் செய்யாததை சோவியத் ருஷ்யாவும் புதிய ஆப்கானிஸ்தானும் (அது சுதந்திரத்தை அறிவித்திருந்தது—ஆ-ர்) செய்யும் என்று நான் நினைத்தேன். மனிதகுலத்தின் ஐந்திலொரு பகுதியின் விடுதலை மிகவும் நெருங்கிவிட்டதாகத் தோன்றியது.''

மகேந்திர பிரதாப் மாஸ்கோ பேச்சுவார்த்தைகளின் போது காபூலில் நிறுவப்பட்டிருந்த தற்காலிக இந்திய அரசாங்கத்துக்கு அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்தார். இந்தியக் குடியரசின் தலைவர் என்ற முறையில் தன்னை வரவேற்பார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் சோவியத் அதிகாரிகளால் காபூலில் அமைக்கப் பட்டிருந்த அரசாங்கத்தை அங்கீகரிக்க இயலவில்லை, இந்தியாவின் புரட்சிகர சக்திகளின் ஒரே தலைமையாக அதைக் கருத முடியவில்லை என்பது இயற்கையே.

அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகம் தன்னுடைய நிலையை மகேந்திர பிரதாபிடம் விளக்கியது. முதலாவதாக, அந்த அரசாங்கம் இந்தியப் பிரதேசத்தில் அமைக்கப்படவில்லை, இயங்கவில்லை. இரண்டாவதாக, அதன் அமைப்பு அதிகார பூர்வமாகப் பிரகடனம் செய்யப்படவில்லை. மூன்றாவதாக, அது புரட்சிகர இயக்கத்தின் சுமாரான பெரும் பகுதியின் ஆதரவைப் பெறவில்லை. இந்தியப் புரட்சிக்காரர்கள்... இந்தியப் பிரதேசத்தில் நிறுவுகின்ற தற்காலிக அரசாங்கத்தைச் சட்டபூர்வமானதென்று அங்கீகரிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் அது புரட்சிகர சக்திகளின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும், அதன் அமைப்பு பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை முக்கியம் என்று அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகம் தந்த பதிலை இப்படிப் புரிந்து கொள்வது அவசியம். மகேந்திர பிரதாப்பின் அரசாங்கத்தை

---

லெனின் அத்தேதியில் பர்க்கத்துல்லாவைச் சந்தித்திருக்க வேண்டும். ஏனென்றால் அப்பொழுது மாஸ்கோவில் வேறு இந்தியர்கள் யாரும் இருக்கவில்லை.

மாஸ்கோ அங்கீகரிப்பது இந்தியாவிலும் அதன் எல்லைகளுக்கு வெளியிலுமுள்ள மற்ற பல புரட்சிக் குழுக்களைப் பொறுத்த மட்டில் துரோகமாக இருக்கும்; ஏனென்றால் அவற்றில் ஒன்று கூட காபூல் மையத்தை தம் பிரதிநிதித்துவ உறுப்பாகத் தேர்ந்தெடுக்கவில்லை.*

காபூல் மையத்திலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் இன்னும் சதித்திட்டக் கோட்பாடுகளையே பின்பற்றினார்கள், பெருந்திரளான மக்கள் மத்தியில் புரட்சிகரப் பணியைப் புறக்கணித்தார்கள், பக்கத்திலிருந்த நாடுகளின் இராணுவங்கள் இந்தியா மீது படையெடுப்பதே பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுதலை செய்வதற்கு முக்கியமான வழி என்று கருதினார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. இத்தகைய அணுகுமுறையை சோவியத் அரசாங்கம் ஆதரிக்க முடியாது. பெருந்திரளான மக்கள் முழு அளவிலும் தற்பலியுணர்வுடனும் ஈடுபடுகின்ற தேசியப் புரட்சியே வெற்றியடைய முடியும் என்று லெனின் வற்புறுத்தினார். எனினும் காபூல் மையம் சோவியத் அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் கடுமையான முயற்சிகளைச் செய்தது.

முகம்மது அலி (உள்நாட்டிலாகா துணை அமைச்சர்), முகம்மது ஷாபிக் (அதே இலாகாவின் காரியதரிசி) ஆகியோரைக் கொண்ட தற்காலிக அரசாங்கத்தின் விசேஷ தூதுக் குழு 1920 மார்ச் 31ந் தேதியன்று** தாஷ்கன்டுக்கு வந்தது. பின்னர் இப்ரகீம் மஜீதும் அப்துல் மஜீதும் இத்தூதுக் குழுவில் சேர்ந்து கொண்டனர். பர்க்கத்துல்லாவின் தலைமையிலிருந்த இக்குழு தற்காலிக அரசாங்க தூதுக் குழு என்று வழக்கமாகக் குறிப்பிடப்பட்டது.

அலியும் ஷாபிக்கும் சோவியத் அரசாங்கத்தின் பல்

---

* இந்தியப் புரட்சிக்குத் தலைமை தாங்குகின்ற முழு உரிமை தனக்கிருப்பதாக நிரூபிப்பதற்கு இந்தியத் தற்காலிக அரசாங்கம் முயற்சிக்கிறது என்று ஆப்கானிஸ்தானில் சோவியத் தூதரான யா. ஸி. சுரித்ஸ் 1920 பிப்ரவரி 11இல் தாஷ்கன்டிலுள்ள துருக்கிஸ்தான் கமிஷனுக்கு எழுதினார்.

** *Introduction* (மாஸ்கோவிலிருந்த சோவியத் அரசாங்கத்திற்குத் தற்காலிக இந்திய அரசாங்கத்தின் ''அதிகாரப் பூர்வமான அனுப்பும் செய்தி''), 1920, ஜூலை 18.

வேறு உறுப்புகளுக்குச் செய்திகளையும் அறிக்கைகளையும் அனுப்பினார்கள். இவற்றில் காபூல் மையம் நிறுவப்பட்ட வரலாற்றை விவரித்து அதன் அமைப்பையும் பணிகளை யும் விளக்கினார்கள், அதன் முடிவான இலட்சியத்தை வரையறுத்தார்கள். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி யின் துருக்கிஸ்தான் கமிஷனுக்கு 1920 ஏப்ரல் மாதத் தின் நடுப்பகுதியில் அனுப்பிய கடிதத்தில் முகம்மது அலி இரண்டு வேண்டுகோள்களைத் தெரிவித்தார்: ஒன்று, ''இந் தியாவைக் கூட்டாக விடுவிப்பதில் எங்களுடைய ஒத் துழைப்பை ஏற்றுக்கொள்ளுதல்''(வெளியிலிருந்து இந்தியா விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் அவர்களுடைய நம்பிக்கையை எடுத்துக்காட்டக் கூடிய வேண்டுகோள்), இரண்டு, ''எங்களுடைய தற்காலிக அரசாங்கத்தைத் துருக் கிஸ்தான் கமிஷன் அங்கீகரிக்க வேண்டும்'' (மா.-லெ.ஆ. க.ம.க.ஆ.கா.).

இவை தவிர, வினா, விடைகளின் வடிவத்தில் எழுதப் பட்டிருக்கின்ற அறிக்கையும் இருந்தது. இந்தியப் புரட்சிக் காரர்களைக் கொண்ட இந்தக் குழு 1920ம் வருடத்தின் ஆரம்பத்தில் கொண்டிருந்த கருத்துக்களின் சாரத்தைப் பற்றி இந்த அறிக்கை முழுமையான வர்ணனையைத் தரு கின்றது. எனவே இது மிகவும் அதிகமான அக்கறையைத் தூண்டுகின்ற ஆவணங்களில் ஒன்றாகும். ஆப்கானிஸ்தா னில் சோவியத் தூதராக இருந்த யா. ஸி. சுரித்ஸ் காபூலி லேயே பல கேள்விகளைக் கேட்டதாக இன்னொரு ஆவ ணத்தில் அலியும் ஷாபிக்கும் தெரிவித்தார்கள்.* 1920 ஏப்ரல் 10ந் தேதியில் எழுதப்பட்ட இந்த ஆவணம் துருக் கிஸ்தான் கமிஷனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. ''தற் காலிக அரசாங்கத்தின் நோக்கம் என்ன?'' என்ற சோவியத் தூதரின் கேள்விக்கு பின்வருமாறு பதிலளிக்கப்பட்டது: ''இன்றுள்ள அந்நிய அரசாங்கத்துக்கு பதிலாக சுதேசி அரசாங்கத்தை ஏற்படுத்துவது எங்களுடைய நோக்கம். இந்த சுதேசி அரசாங்கம், இந்தியாவிலுள்ள இரண்டு பிரபல ஸ்தாபனங்களான இந்திய தேசிய காங்கிரஸ் மற்

---

* அக்டோபர் புரட்சியைப் பற்றிய மத்திய அரசு ஆவணக் காப்பகம் (அ. பு. ப. ம. அ. ஆ. கா.), தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 486, தாள் 4.

றும் அகில இந்திய முஸ்லிம் லீக்கினால் உருவாக்கப்படும் கொள்கையைக் கடைப்பிடிக்கும்.''

இக்குறிக்கோளை அடைவதற்கு எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படும் என்பதை அலியும் ஷாபிக்கும் விரிவாகக் கூறுகிறார்கள்: ''இக்குறிக்கோளை அடைவதற்கு நாங்கள் பின்வரும் செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்:

''1. அந்நிய அடிமைத்தனத்திலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கு அந்நிய அரசாங்கங்களின் அனுதாபத்தையும் தார்மிக ஆதரவையும் பெறுதல்;

''2. கீழ்க்கண்டவர்கள் மத்தியில் புரட்சிப் பிரச்சாரம் செய்தல்: அ) இந்திய சமஸ்தான அரசர்கள் மற்றும் ஆட்சியில் உள்ள மேல்மட்டத்தினர் மத்தியில் (அவர்களை நம் இலட்சியத்தில் பங்கு கொள்ளும்படி அழைத்தல்), ஆ) பொதுமக்கள் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் மத்தியில், இ) இந்திய இராணுவ வீரர்கள் மத்தியில் (அவர்களிடம் அந்நிய அரசுகளுக்கு எதிராகப் போர் புரியாதபடி கேட்டுக் கொள்ளுதல்);

''3. புரட்சிகர சக்திகள் ஆயுதந்தரிப்பதற்காக ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் வாங்கி, முக்கியமான சமயத்தில், அதாவது சுதந்திரப் போரில் உபயோகிப்பதற்காக அவற்றைச் சேம இருப்பில் வைத்திருத்தல்''*.

இந்தியப் புரட்சிக்காரர்கள் புரட்சிகரப் பிரச்சாரம் செய்ய வேண்டிய சமூகப் பிரிவினரைக் குறிப்பிடுகின்ற பொழுது தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் இன்னும் விலக்கப்பட்டிருந்தனர் என்பது முக்கியமாகும்; ஆகவே அவர்கள் விடுதலைப் போராட்டத்தின் தலைமை சக்தியாகக் கருதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆவணத்தில் வெகுஜன எழுச்சி அல்லது புரட்சி பற்றி —''முக்கியமான சமயத்தில், அதாவது சுதந்திரப் போரில்'' என்பதைத் தவிர—எதுவுமே சொல்லப்படவில்லை என்ற உண்மையை எவரும் ஒதுக்க முடியாது. இது தற்செயலாக ஏற்படவில்லை. ஏற்கெனவே சுட்டிக் காட்டியதைப் போல அந்நிய இராணுவப் படையெடுப்பின் மீதுதான் அதிக

---

* *A Short Account of the History of the Indian Revolutionary Committee* (அ. பு. ப. ம. அ. ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 486, தாள்கள் 1-2).

மான நம்பிக்கை வைக்கப்பட்டது. அதனால்தான் இரண் டாவது 'இ' ஷரத்து, இந்தியாவின் மீது படையெடுத்து நாட்டை விடுவிக்கின்ற சேவையில் ஈடுபடுகின்ற எந்த அந் நிய அரசுக்கும் எதிராகப் போர் புரியாதபடி இந்தியப் படையினரைக் கேட்டுக்கொள்கிறது. விடுதலை செய்கின்ற அந்நிய அரசு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை விரட்டி யடித்த பிறகு ஒரு தற்காலிக அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைக்கும். எனினும் அரசாங்கம் சுலபமான முறையில் நாட்டை நிர்வாகம் செய்வதற்கு பிரிட்டிஷ் காலனியா திக்க நிர்வாகத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த இந்திய சமூ கத்தின் மேல்தட்டினரை அந்தக் கட்டத்திலேயே புரட்சிகர சக்திகளின் தரப்புக்குத் திருப்புவது அவசியமாக இருந்தது.

இந்தியப் புரட்சிக்காரர்களின் காபூல் குழு எந்த அந் நிய சக்தியின் மீது நம்பிக்கை வைத்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு நாம் மேலே தந்த சில வரிகளே போதும். ஆவணத்தின் மற்ற பகுதிகள் அதை நிரூபிக் கின்றன. ''தற்காலிக அரசாங்கம் சோவியத் ருஷ்யாவுடன் எத்தகைய உறவுகளைக் கொண்டிருக்கும்?'' என்ற கேள்விக்கு அலியும் ஷாபிக்கும் பின்வருமாறு பதிலளித்தார்கள்: ''அன் டான்டு நாடுகளுடன் தெனீக்கின் மற்றும் கல்ச்சாக்கின் அரசாங்கங்கள் கொண்டிருக்கின்ற அதே உறவுகளைத் தற் காலிக அரசாங்கம் சோவியத் ருஷ்யாவுடன் வைத்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறது; அதாவது இந் தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்துத் தற்காலிக அர சாங்கம் யுத்தம் செய்வதற்கு சோவியத் ருஷ்யா அதற்கு உதவியளிக்கும் என்று எதிர்பார்க்கிறது''. சோவியத் ருஷ்ய ஆட்சியதிகாரத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு சாராம்சத்தை தன் விருப்பப்படி புரிந்து கொண்டு ''சோவியத் ருஷ்யா வின் செயல்திட்டத்தில் இந்தியாவின் விடுதலை பற்றிய ஷரத்தை நிறைவேற்றும் வகையில் அதனுடன் ஒத்துழைப் பதற்குத் தற்காலிக அரசாங்கம் தயாராக இருக்கிறது''* என்று அவர்கள் மேலும் விளக்கமளித்தனர்.

காபூலிலிருந்த புரட்சிக்காரர்கள் பின்வரும் முறையில் இம்முடிவுக்கு வந்திருக்க வேண்டும். சோவியத் அரசாங் கம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையைப் பிரக

---

* அதே இடம்.

டனம் செய்திருப்பதுடன் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் போராட்டத்துக்கு நேரடியாக உதவியளித்தபடியால் இந்தியாவில் வெகுஜனப் புரட்சி அவசியமல்ல, இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை இராணுவ ரீதியில் விரட்டியடிக்கின்ற முழுச் சுமையையுமே சோவியத் ருஷ்யா மேற்கொள்ளும் என்று கருதினர். தற்காலிக அரசாங்கம் பின்னால் ஒரு சமயத்தில் தனக்கென்று இராணுவத்தை* அமைத்துக் கொள்ளும் என்று ஆவணத்தின் கடைசிப் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டது. எனினும் நாட்டை உடனடியாக விடுவிப்பதில் அந்த இராணுவம் கேந்திரமான பாத்திரத்தை வகிக்குமென்று தற்காலிக அரசாங்கம் கருதவில்லை.

தற்காலிக அரசாங்கத்தின் மற்ற பிரதிநிதிகளின் உரைகளில் இதற்கு சான்றுகள் பலவற்றைக் காண முடியும். உதாரணமாக, 1920 மே 11இல் சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் பேரவைக் கூட்டத்தில் பேசிய முகம்மது ஷாபிக் ''பாரசீகர்கள், புஹாரானியர்கள், ருஷ்யர்கள், துருக்கியர்கள், ஆப்கானியர்கள் ஆகிய கிழக்கு நாடுகளின் புதல்வர்கள் அனைவரும் பிரிட்டிஷ் நுகத்தடியிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கு ஒன்றுபடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இந்தியாவில் வெகுஜன எழுச்சிக்கு உதவி செய்வதை அவர் குறிப்பிடவில்லை, இந்தியாவை விடுவிப்பதற்கு வெளியிலிருந்து இராணுவத்தை அனுப்புவதையே குறிப்பிட்டார். பர்க்கத்துல்லாவும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். முந்திய துருக்கிய யுத்தக் கைதிகளிடம் ''சோவியத் அதிகாரிகள் அமைத்திருக்கும் சுதேசி (அதாவது, கிழக்கு.—ஆ-ர்.) படைப்பிரிவுகள் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து ஆப்கானிஸ்தான், இந்தியா மற்றும் துருக்கியை விடுவிப்பதற்குப்... புனித யுத்தம் நடத்துவதற்கென்று... அமைக்கப்பட்டவை''** என்று அவர் சொற்பொழிவுகளில் கூறி வந்தார். துருக்கியின் முதல் கம்யூனிஸ்டுகளின் தலைவரான முஸ்தபா சுபி இதற்காக அவரைக் கடிந்து கொண்டார்.

---

* அதே இடம்.

** மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 17, பட்டியல் 65, பத்திரம் 399, தாள் 12.

எனினும் மேலே எழுதப்பட்டவை அனைத்தும் காபூலிலிருந்து செயலாற்றிய இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்களின் அரசியல் கண்ணோட்டத்தை முழுமையாக விளக்கவில்லை. சோவியத் ருஷ்யாவில் பேராசிரியர் பர்க்கத்துல்லாவின் சிறந்த பிரச்சார வேலையின் காரணமாக இக்கண்ணோட்டத்தை நெருக்கமாகப் புரிந்து கொள்ள உதவுகின்ற ஏராளமான விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

சோவியத் ருஷ்யாவில் அப்பொழுது நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் வெற்றி அல்லது தோல்வி தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்தியா உள்பட கிழக்கு நாடுகளின் பல மக்களினங்களின் வெற்றி அல்லது தோல்விக்கு அடிப்படையானது என்பதை பர்க்கத்துல்லா தெளிவாக உணர்ந்தார். எனவே உண்மையான புரட்சிக்காரர் என்ற முறையில் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் முஸ்லிம் மக்களிடமும் சோவியத் பிரதேசத்தில் இருந்த முந்திய துருக்கி யுத்தக் கைதிகளிடமும் பேச்சிலும் எழுத்திலும் பிரச்சாரம் செய்யத் தயாராக இருப்பதாக அவர் சோவியத் அரசாங்கத்திடம் தெரிவித்தார். அவருடைய முன்மொழிவு நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகத்தில் மத்திய கிழக்கு பிரிவின் பொறுப்பாளராக இருந்த நரிமன் நரிமானவ்* 1919 நவம்பரில் பின்வருமாறு கூறினார்: ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எழுச்சியை ஏற்படுத்துவதற்காக... பர்க்கத்துல்லா இஸ்மாய்லவ் என்ற அனுபவம் நிறைந்த ஊழியருடன் வோல்கா பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கிழக்கு நாடுகளில் நிலவிய நிலைமையைப் பெருந்திரளான முஸ்லிம் மக்களிடம் விளக்குவது... அதன் நோக்கம்.... ஒன்றுபட்ட நடவடிக்

---

* நரிமன் நரிமானவ் (1870—1925) முக்கியமான சோவியத் அரசுத் தலைவராகவும் கட்சிப் பிரமுகராகவும் இருந்தவர். கிழக்கு நாடுகளைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலம் மற்றும் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் கொள்கையைச் சுறுசுறுப்புடன் நிறைவேற்றியவர்களில் ஒருவர்.

கைக்கு முஸ்லிம்களைக் கிளர்ந்தெழச் செய்வது அவசிய மாக இருந்தது''*.

1919 செப்டெம்பர் கடைசியில் அல்லது அக்டோபர் ஆரம்பத்தில் பர்க்கத்துல்லா வோல்கா பிரதேசத்துக்குப் புறப்பட்டார். அங்கே பல நகரங்களில் பிரச்சாரம் செய்து விட்டு அவர் 1920 ஜனவரி ஆரம்பத்தில்தான் மாஸ் கோவுக்குத் திரும்பினார்.** அவர் காஸான், உஃபா, சமாரா, ஸ்டெர்லிட்டாமாக் மற்றும் பல இடங்களுக்குச் சென்றார். 1920ம் வருடத்தின் பிற்பாதியில் அவர் டிரான்ஸ்-காஸ்பியப் பிரதேசத்தில் இதே மாதிரியான பயணத்தை மேற்கொண்டார்.*** அவர் அன்டான்டு நாடு களின் குறிப்பாக,பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக் காரக் கொள்கையை அம்பலப்படுத்தி மாநாடுகளிலும் கூட்டங்களிலும் மசூதிகளிலும் உணர்ச்சிகரமாகப் பேசி னார்; உள்நாட்டு யுத்தத்தில் சோவியத் தரப்பில் போர் புரியும்படி முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டார். அவர் காஸானில் 1919 அக்டோபர் 20இல் கைதிகளாக உள்ள என்னுடைய துருக்கிய சகோதரர்களுக்கு என்ற தலைப் பில் பின்வருமாறு பேசினார்: ''யுத்தத்தின் வீரர்களே, புனித இஸ்லாம் மதத்தின் பாதுகாவலர்களே, என் மதச் சகோதரர்களே, துருக்கிய சோதரர்களே!... இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளும்படி துருக்கி அரசாங் கம் நிர்ப்பந்திக்கப்பட்டு பத்து மாதங்கள் முடிந்து விட் டன. நியாயத்தையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்ட சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று இஸ் லாமின் எதிரிகள் வாக்குறுதி அளித்தார்கள்... ஆனால் டார்டனெல்ஸைப் பிடித்த பிறகு... அவர்கள் துருக்கியை ஆக்கிரமித்து அதைக் கூறு போடுவதற்குத் தொடங்கினார் கள்.'' ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதற்காக அனட்டோ லியாவில் தோன்றிய கெமால் விடுதலை இயக்கத்தை

---

* மா.-லெ. ஆ. க. ம. க. ஆ.கா., தொகுப்பு 583, பட்டியல் 1, பத்திரம் 5, தாள் 81.

** அதே ஆவணக் காப்பகம், தொகுப்பு 17, பட்டியல் 65, பத்திரம் 487, தாள் 42.

*** அதே ஆவணக் காப்பகம், தொகுப்பு 17, பட்டியல் 65, பத்திரம் 400, தாள் 6.

வர்ணித்த பிறகு அவர் மேலும் கூறினார்: ''ருஷ்யாவின் சோவியத் ஆட்சி இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் போர் புரிந்து கொண்டிருக்கிறது; அது வெற்றியடையும் பொருட்டு துருக்கிய தேசிய இனத்துடன் ஒன்று சேர... விரும்பு கிறது... கொள்ளையர்களின் கரங்களிலிருந்து ருஷ்யாவை யும் துருக்கியையும் காப்பாற்றுவதற்கு சோவியத் ஆட்சி விரும்புகிறது... துருக்கிய சோதரர்களே! நீங்கள் தற்பலி உணர்ச்சியுடன் நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் எதிர் பார்க்கிறோம். வாரீர், ஒன்று கூடுவீர்! அனைத்துத் துருக் கியப் பிரிவுகளையும் திரட்டுவீர்... உங்களுடைய சுதந் திரத்தையும் தொழிலையும் காலின் கீழே போட்டு மிதித்து நசுக்கிய கொள்ளைக்கார எதிரிகளின் மீது படையெடுத்து விரட்டுவீர்...''*

சோவியத் ருஷ்யாவின் முஸ்லிம் மக்களிடம் பேசுகின்ற பொழுது பர்க்கத்துல்லா வேறு விதமான நடையைப் பயன் படுத்தினார்: ''தோழர்களே! ஆங்கில, பிரெஞ்சு மற்றும் அமெரிக்க முதலாளிகள் முஸ்லிம் உலகத்தின் தலைநகர மான கான்ஸ்டான்டிநோபிளைத் தம் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்திருக்கின்றனர். அவர்களுடைய துப்பாக்கிகள் புனித நகரங்களான மெக்காவையும் மெதீனாவையும் அழித்து விட்டன. அவர்கள் ருஷ்ய எதிர்ப்புரட்சிக் காரர்களுக்குப் பணமும் ஆயுதங்களும் கொடுத்து உதவி செய்கிறார்கள்; சோவியத் ருஷ்யாவில் உயிருள்ள அனைத் தையும் முற்றுகையின் மூலம் ஒழிக்க விரும்புகிறார்கள். முஸ்லிம் தோழர்களே! சோவியத் அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து பாடுபடுவது உங்களுடைய தார்மிகக் கடமை என்பதை நினைவிலிறுத்துங்கள். ஏனென்றால் அவர் கள் தோல்வியடைந்தால் கிழக்கு நாடுகளையும் உலகம் முழுவதையும் விடுவிப்பதற்குரிய கடைசி நம்பிக்கையை நீங் கள் இழந்து விடுவீர்கள். உங்கள் விடுதலைக்கும் உங்கள் நலன்களுக்கும் போராடுகின்ற செஞ்சேனையில் சேருங் கள்''**.

பர்க்கத்துல்லாவின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், பேட்டிகள் ஆகியவை பெத்ரோகிராத், அல்மா-ஆத்தா,

---

* அதே ஆவணக் காப்பகம், தொகுப்பு 17, பட்டி யல் 65, பத்திரம் 399, தாள் 13.

** இஸ்வேஸ்தியா, தாஷ்கன்ட், பிப்ரவரி 12, 1920.

காஸான், சமாரா, தாஷ்கன்ட் மற்றும் சில இடங்களில் முஸ்லிம்களுக்காக வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் வெளி யிடப்பட்டன. அவர் எழுதிய லெனினை எதிர்த்து வில்சன்*, போல்ஷிவிக் கருத்துக்களும் இஸ்லாமியக் குடியரசும்**, ஆசியாவின் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும்***, கீழ்த் திசைக் கொள்கை**** மற்றும் போல்ஷிவிசமும் இஸ்லாமும் என்ற பிரசுரமும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கடைசி யாகக் குறிப்பிடப்பட்ட பிரசுரம் இந்தியாவிலும் பரவி பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளுக்கு பீதியைக் கொடுத் தது.*****

கம்யூனிசத்தின், இஸ்லாம் மற்றும் இதர மதக் கோட் பாடுகளின் முக்கியமான கருதுகோள்கள் ஒரே மாதிரி யானவை, எல்லா மனிதர்களின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பற்றிய கருத்துக்களை அவை வெளியிடு கின்றன என்று நிரூபிப்பதற்கு உறுதியான முஸ்லிமாகிய பர்க்கத்துல்லா முயற்சி செய்தார். ''ஏழைகளையும் இல் லாதவர்களையும் காப்பாற்றுவதற்கு, எல்லா மனிதர்களுக் கும் நம்பிக்கை ஊட்டி மக்களினங்களை ஒன்றுக்கொன்று உறவு நிலையில் வைப்பதற்குக்'' கடவுள் மார்க்சியத்தை யும் எல்லா மதங்களையும் நமக்கு அருளியிருக்கிறார் என்று அவர் போல்ஷிவிக் கருத்துக்களும் இஸ்லாமியக் குடியரசும் என்ற கட்டுரையில் எழுதினார். இக்கருத்துக்களை சோவியத் அரசாங்கம் நிறைவேற்றியிருப்பதை அவர் கண்டார். ''இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பிளாட் டோவின் புனிதமான கனவாக இருந்த சோஷலிசக் கருத் துக்கள் திருவாளர் உலியானவ்-லெனினது முயற்சிகளினால் நடைமுறையில் அமுலாக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் ருஷ்யாவிலும் துருக்கிஸ்தானிலும் ஆட்சியதிகாரம் தொழி லாளர்கள், விவசாயிகள் மற்றும் படைவீரர்கள் கரங் களுக்கு மாறி விட்டது. மதக் கலவரங்களும் தேசியக் கல

---

* இஸ்வேஸ்தியா, அல்மா-ஆத்தா, மார்ச் 25, ஏப்ரல் 1, ஏப்ரல் 8, 1920.

** இஷ்டிரக்கியூன், தாஷ்கன்ட், ஏப்ரல் 16, 1919.

*** அதே பத்திரிகை, நவம்பர் 11, 1919.

**** அதே பத்திரிகை, நவம்பர் 4, 1919.

***** எல். வி. மித்ரோகின், லெனினைப் பற்றி இந்தியா, பக்கங்கள் 79—80 (ருஷ்ய மொழியில்).

வரங்களும் ஒழிக்கப்பட்டு விட்டன. எல்லோரும் சுதந்திரம் அடைந்து விட்டார்கள், சமம் என்று அறிவிக்கப்பட்டு விட்டார்கள்.''* ஆசியாவின் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் என்ற வேண்டுகோளில் அவர் பின்வருமாறு சுட்டிக் காட்டினார்:''மனிதர்கள் அனைவரும் சமம் என்ற போல்ஷிவிக் கொள்கையிலிருந்து படிப்பினை பெறாத ஒரு அரசு கூட இன்று பூமியில் இருக்க முடியாது''**.

ருஷ்யாவில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் படைவீரர்களின் ஆட்சியதிகாரம் நிறுவப்படுவதற்கு முன்னர் நடைபெற்ற உக்கிரமான வர்க்கப் போராட்டத்தைப் பற்றி பர்க்கத்துல்லாவுக்கு முழுமையாகத் தெரியாதபடியால் உள்நாட்டு யுத்தத்தை அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் கொடிய ஆங்கிலேயர்களுக்கும் மற்ற ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான போராட்டம் என்ற முறையில் மட்டுமே பார்த்தார். அதன் மொத்த அர்த்தமுமே அவ்வளவு தான் என்று நினைத்தார். எனவே ''சோஷலிசம் உங்களுக்கு நல்லது'', நீங்கள் ''அதைக் காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டும்... போல்ஷிவிக் படைகளுடன் சேர்ந்து ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்க வேண்டும்''*** என்று கிழக்கு நாடுகளின் மக்களினங்களைக் கேட்டுக் கொண்டார்.

அக்டோபர் புரட்சி பழைய ''கிழக்குப் பிரச்சினையின்'' சாராம்சத்தை மாற்றி விட்டது, ஆசியாவிலுள்ள நாடுகளைக் கூறு போடுதல், கொள்ளையடித்தலைப் பற்றிய பிரச்சினையை அவற்றின் முழு விடுதலை என்ற பிரச்சினையாக மாற்றி விட்டது என்ற சுவாரசியமான கருத்தை பர்க்கத்துல்லா கூறினார். கீழ்த்திசைக் கொள்கை என்ற கட்டுரையில் அவர் பின்வருமாறு எழுதினார்: ''ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் புரட்சி கிழக்கு நாடுகளின் விடுதலைப் பிரச்சினையை முக்கியமான, சுதந்திரமான பிரச்சினையாக நமக்கு முன்னால் வைத்திருக்கிறது. அந்தப் புரட்சி ஆசியாவின் மக்களினங்களுக்கு வேறு ஒன்றையுமே செய்யா விட்டாலும் இப்பிரச்சினையைப் புதிய முறையில் முன்வைத்தது மட்டுமே ஒடுக்கப்பட்ட கிழக்கு நாடுகளின் மக்களி

---

* இஷ்டிரக்கியூன், ஏப்ரல் 16, 1919.

** அதே பத்திரிகை, நவம்பர் 11, 1919.

*** அதே பத்திரிகை, ஏப்ரல் 16, 1919.

னங்களுக்கு மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது''*.

பர்க்கத்துல்லா சோஷலிசத்தை வெறும் சமத்துவவாதக் கோட்பாடாகக் கருதி தனியுடைமை ''பூமியில் எல்லாத் தீமைக்கும் காரணமாக இருப்பதால்'' அதை ஒழிக்க வேண்டும் என்றார். நிலம், வீடுகள், தொழிற்சாலைகள் தேசியப் பொதுவுடைமை ஆக்கப்படுகின்ற பொழுது ''ஒவ்வொரு நபராலும் செய்யப்படுகின்ற எல்லாப் பொருள்களும் பொதுச் செல்வமாக இருக்க வேண்டும்'', ஒவ்வொருவரும் ''தனக்குத் தேவையான எப்பொருளையும் பொதுக் கிட்டங்கியிலிருந்து பெற்றுக் கொள்ள முடிய வேண்டும்'' என்று அவர் கருதினார். விற்பதும் வாங்குவதும் பொதுவாக மறுக்கப்பட்டது. ''இப்படி நடைபெறுகின்ற பொழுது மனிதர்கள் வறுமையையும் பசியையும் ஒழிப்பார்கள், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சுபிட்சத்தை அடைவார்கள்''** என்று அவர் முடிவு செய்தார்.

இத்தகைய சமூக அமைப்பைக் கற்பனை செய்கின்ற பொழுது அதை உருவாக்குவதற்கு எந்த வழிமுறைகளையும் பர்க்கத்துல்லா கூறவில்லை, அதாவது கற்பனைக்கு மேலே அவர் முன்னேறவில்லை. எப்படியிருப்பினும் அவர் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களைக் கூறவில்லை. ஆனாலும் அவர் தன்னுடைய அரசியல் கருத்தை மறைக்கவில்லை, ஏகாதிபத்தியத்தையும் கிழக்கு நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற ஐரோப்பிய முதலாளித்துவத்தையும் எதிர்த்து சோவியத் அரசாங்கத்தின் போராட்டத்தைத் தான் ஆதரிப்பதாக அவர் ஒளிவு மறைவின்றிக் கூறினார். அவர் உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லிம்களைப் பார்த்து ''சோவியத் அரசாங்கத்தைச் சுற்றித் திரளுங்கள், ஏனென்றால், ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களினங்கள் விடுதலையடைவது சோவியத் அரசாங்கத்தை மட்டுமே பொறுத்திருக்கிறது''*** என்றார்.

இஸ்வேஸ்தியா பத்திரிகைக்குப் பேட்டியளித்த பொழுது பர்க்கத்துல்லா பின்வருமாறு கூறினார்: ''நான் கம்யூனிஸ்ட்

* அதே பத்திரிகை, நவம்பர் 4, 1919.

** அதே பத்திரிகை, ஏப்ரல் 16, 1919.

*** ரபோச்சயா காஸேத்தா மோலட், பாக்கூ, ஆகஸ்ட் 14, 1919.

அல்ல, சோஷலிஸ்டும் அல்ல... ஆசியாவிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்டுவதுதான் தற்போது என்னுடைய அரசியல் திட்டம். ஆசியாவில் ஐரோப்பிய முதலாளித்துவத்தின்—எல்லாவற்றுக்கும் மேலாக ஆங்கிலேயர்களே அதைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்—சமரசத்துக்கு இடமளிக்காத எதிரி நான். இந்த அர்த்தத்தில் நான் கம்யூனிஸ்டுகளுக்கு நெருக்கமானவன், இதில் நாங்கள் உங்களுடைய இயற்கையான சகாக்கள்''* (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்).

பர்க்கத்துல்லா தன்னுடைய கட்டுரைகளில் பூர்ஷ்வா-ஜனநாயக அமைப்பைக் கூர்மையாக விமர்சனம் செய்தார். பெரும்பான்மையான இந்தியப் புரட்சிக்காரர்கள் அதுவே தாங்கள் அடைய வேண்டிய இலட்சியம் என்று சமீப காலம் வரை கருதி வந்தார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ''குழந்தைகளின் பொம்மையைப் போன்றது, மக்களை ஏமாற்றுவதற்குத் தயாரிக்கப்படுவது'', அங்கே உண்மையில் சொத்துடைமை வர்க்கத்தினருக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்ற உரிமை இருக்கிறது, ''உழைப்பாளிகளும் தொழிலாளர்களும் அறுநூறு வருடங்களாகத் தம்முடைய உரிமைகளுக்குப் போராடி வருகிறார்கள், ஆனால் அவர்களால் ஒடுக்குமுறையை அகற்ற முடியவில்லை''** என்று அவர் எழுதினார்.

அக்டோபர் புரட்சியின் தாக்கத்தில் காபூலிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் கருத்துக்கள் கணிசமாக மாற்றமடைந்தன. முதலாவதாக, இந்தியப் புரட்சிக்காரர்கள் அதைப் பற்றிப் பெரு மகிழ்ச்சி அடையத் தொடங்கினார்கள், அது முதல் தடவையாகக் கிழக்கு நாடுகளின் விடுதலைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறது, அதைத் தன் பிரதேசத்தில் தீர்த்திருக்கிறது, அதை சர்வதேச ரீதியில் தீர்க்கின்ற சாத்தியத்தை இன்னும் அருகில் கொண்டு வந்திருக்கிறது என்பதில் அதன் அர்த்தத்தையும் பொருளையும் கண்டார்கள். அக்டோபர் புரட்சியின் சமூக உள்ளடக்கத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் மிகவும் அரைகுறையாக அதைப் புரிந்து கொண்டார்கள், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஏற்பட்டிருப்பது சோஷலிஸ்ட்

---

* இஸ்வேஸ்தியா, மே 6, 1919.

** இஷ்டிரக்கியூன், ஏப்ரல் 16, 1919.

மாற்றத்தின் சாரம் என்று கருதினார்கள். இரண்டாவதாக, கிழக்கு நாடுகளின் விடுதலைக்கு தேசிய விடுதலை இயக்கம் சோவியத் ருஷ்யாவுடன் நெருங்கிய கூட்டணி அமைப்பது அவசியம் என்பதை உணர்ந்தார்கள். மூன்றாவதாக, பூர்ஷ்வா ஜனநாயக அமைப்பின் தீமைகளை அதிகமான தீவிரத்துடன் எடுத்துக் கூறினார்கள், மத அடிப்படையில் சமத்துவவாத சோஷலிசத்தை போதிப்பதை அதிகப்படுத்தினார்கள்.

காபூலிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் கருத்துக்களில் இத்தகைய ஆக்கபூர்வமான மாற்றங்களுடன், அவர்கள் அதற்கு முன்பு வைத்திருந்த கருத்தமைப்புகளின் முக்கிய அம்சங்கள் சிலவும் நீடித்தன, அவை அழுத்தமாகக் கூடச் சொல்லப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, சதித் திட்ட நடவடிக்கைகளின் மீது அதிகமான நம்பிக்கை வைக்கப்பட்டது, வெகுஜனப் புரட்சிக்குத் தயாரிப்புச் செய்தல் புறக்கணிக்கப்பட்டது. தற்காலிக அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்த குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிக்காரர்கள் இன்னும் பெருந்திரளான மக்களிடமிருந்து, குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்திடமிருந்து தனித்து நின்றார்கள். இந்தியாவின் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் அதிகரித்துக் கொண்டிருந்த எழுச்சி அவர்களை அனேகமாக பயமுறுத்தியிருக்கக் கூடும். வெகுஜன நடவடிக்கை இல்லாமல், பொதுமக்கள் கிளர்ந்தெழுகின்ற புரட்சி இல்லாமல், ஆனால் சோவியத் ருஷ்யாவின் விடுதலைச் சேனைகளின் உதவியுடன் இந்தியாவின் சுதந்திரத்தைச் சாதிப்பதற்கு வாய்ப்பைத் தந்திருக்கின்ற சம்பவம் என்ற முறையில் அவர்கள் அக்டோபர் புரட்சியை வரவேற்றார்கள்.

தாஷ்கன்டிலிருந்த பர்க்கத்துல்லாவின் குழு இடதுசாரித் திசையில் வளர்ச்சியடைந்தது. ருஷ்யப் புரட்சிகர யதார்த்தம் மற்றும் துருக்கிஸ்தானில் ஆயிரக்கணக்கான பாரசீகர்கள், துருக்கியர்கள், சீனர்கள் மற்றும் ஹிந்துகுஷ் மலையைத் தாண்டி வந்த குறைவான எண்ணிக்கையிலுள்ள இந்தியர்கள் மத்தியில் சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சில் (ச.பி.க.) செய்த கம்யூனிசப் பிரச்சார வேலையின் தாக்கம் இதற்குக் காரணம்.*

---

* கீழைய நாடுகளைச் சேர்ந்தவர்களிடையே போல்ஷிவிக்குகளின் பணியைப் பற்றி இரண்டாவது அத்தியாயத்தில் விரிவாகப் பார்க்க.

ச.பி.க. தாஷ்கன்டுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் மீது அதிகமான கவனத்தைச் செலுத்தியது. 1919 டிசம்பர் 30ந் தேதியன்று அதன் தொடக்கக் கூட்டம் நடைபெற்ற பொழுது காபூலில் சோவியத் தூதராக இருந்த என். எஸ். பிராவின் அனுப்பிய செய்தியை விவாதித்தது. ''இந்தியாவில் புரட்சிகர எழுச்சியை ஏற்படுத்துவதற்கும் ஆங்கில அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை அடைவதற்கும் (துருக்கிஸ்தானில்) வேலை செய்ய விருப்பம் தெரிவித்துள்ள''* ஐந்து இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் தாஷ்கன்டுக்கு வந்து கொண்டிருப்பதாக அச்செய்தி தெரிவித்தது. ச.பி.க. இந்த நபர்களைப் பற்றி பர்க்கத்துல்லாவின் கருத்தைக் கேட்டது. 1920 பிப்ரவரி மாதக் கடைசியில் ஐந்து நபர்கள் (ஹோஜா சுலைமான், அப்துல் பஸீல் கான், குலாம் முகம்மது கான், பைஸி—ஐந்தாவது நபருடைய பெயர் தெரிவிக்கப்படவில்லை) ஏற்கெனவே தாஷ்கன்டுக்கு வந்துவிட்டார்கள்.** தற்காலிக அரசாங்கக் குழு (முகம்மது அலி மற்றும் முகம்மது ஷாபிக்) மார்ச் 31இல் அங்கே வந்தார்கள். அப்துல் மஜீதும் பர்க்கத்துல்லாவுடன் மாஸ்கோவுக்குச் சென்ற இப்ரகீமும் சிறிது காலத்துக்குப் பிறகு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

ச.பி.க.வின் நிர்வாக காரியாலயத்தின் கூட்டம் ஏப்ரல் 5இல் ''இந்தியக் கம்யூனிஸ்ட் பிரிவை'' அமைப்பதற்கு முடிவு செய்தது.*** ச.பி.க.வின் வழிகாட்டுதலில் ஐந்து தேசியப் பிரிவுகள் (பாரசீக, துருக்கிய, புஹாரா, ஹிவா மற்றும் சீனப் பிரிவுகள்) ஏற்கெனவே இயங்கி கொண்டிருந்தன. அவற்றுடன் கூடுதலாக ஒரு சில இந்தியப் புரட்சிக்காரர்களைக் கொண்டு இந்தியப் பிரிவும் அமைக்கப்பட்டது. ச.பி.க.வின் ஏப்ரல் 23 அல்லது 27ந் தேதிக் கூட்டத்தில் அது அதிகார பூர்வமான ஒப்புதலைப்

---

* உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசின் மத்திய அரசு ஆவணக் காப்பகம் (உ. சோ. சோ. கு. ம. அ. ஆ. கா.), தொகுப்பு 17, பட்டியல் 1, பத்திரம் 1219, தாள் 159; மா.-லெ. ஆ.க.ம.க.ஆ. கா., தொகுப்பு 544, பட்டியல் 1, பத்திரம் 1, தாள் 1.

** மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 544, பட்டியல் 1, பத்திரம் 2.

*** அதே பத்திரம்.

பெற்றது.* அந்தப் பிரிவு கம்யூனிஸ்ட் ஸ்தாபனமாக ஒரு போதும் இருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் அப்பிரிவு இத்திசையில் சில நடவடிக்கைகளைச் செய்தது.

ச.பி.க.வின் பிரிவாக அமைக்கப்பட்ட பிறகு, அதாவது அதன் தலைமையை ஏற்றுக்கொண்ட பிறகு இந்தியப் பிரிவு ஏப்ரல் 20இலேயே முகம்மது அலியும் முகம்மது ஷாபிக்கும் கையெழுத்திட்ட ஒரு புதிய கொள்கை ஆவணத்தை சமர்ப்பித்தது.** அது இன்னும் முதிர்ச்சியில்லாத, கதம்பவாத ஆவணம் என்ற போதிலும் சுவாரசியமானதே. அதில் பழைய சதித்திட்ட செயல்முறைகள், தனிப்பட்ட பயங்கரவாதம் சற்றுக் குறைவான அழுத்தத்துடன் இடம் பெற்றிருந்தன; அவற்றின் மீது கம்யூனிசத்தைப் பற்றியும் விவசாயிகள் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்வதைப் பற்றியும் இந்தியாவில் சோவியத் மாதிரி அரசாங்கத்தை அமைப்பதைப் பற்றியும் புதிய, ஆனால் நன்கு புரிந்து கொள்ளப்படாத கருத்துக்கள் இடம் பெற்றிருந்தன.

இந்தக் கொள்கை ஆவணத்திற்குத் தலைப்புக் கொடுக்கப்படவில்லை என்றாலும் **இந்தியப் பிரிவின் திட்டமும் செயல்திட்டமும்** என்று நாம் தலைப்புக் கொடுப்போம்.

---

* அதே பட்டியல், பத்திரம் 1, தாள் 19. ச.பி.க.வுக்கு 1920 ஜூலை 22இல் அப்துல் மஜீது எழுதிய கடிதத்தில் இந்தப் பிரிவில் ஏழு நபர்கள் இருந்ததாகக் கூறுகிறார். ச.பி.க.வின் பொறுப்பாளரான பிரதிநிதி எம். ஷூல்மன் 1920 டிசம்பர் 1ந் தேதிய அறிக்கையில் ''நான்கு புரட்சிக்காரர்களைக் கொண்டு இந்தியப் பிரிவு அமைக்கப்பட்டிருப்பதாக'' எழுதினார். ஒருவேளை ஷூல்மன் அந்தப் பிரிவின் ஆரம்பக்கால உட்கருவைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

** இந்தியப் பிரிவின் தலைவர் யார் என்பது தெரியவில்லை. ச.பி.க.வின் நிர்வாக காரியாலயத்தின் 1920 ஏப்ரல் 5 கூட்டத்தின் பதிவேட்டில் அமைக்கப்படவிருக்கின்ற பிரிவின் தலைவராக அப்துல் பஸீலின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 544, பட்டியல் 1, பத்திரம் 2). ச.பி.க.வுக்கு 1920 ஜூலை 22இல் அப்துல் மஜீது அனுப்பிய அறிக்கையில் தன்னைத் தலைவர் என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்பிரிவுக்கு முகம்மது அலி தலைவராக இருந்ததாக ஜி. எல். திமித்ரியேவ் கூறுகிறார் (ஜி. எல். திமித்ரியெவ், **மத்திய ஆசியாவில் இந்தியப் புரட்சிகர அமைப்புக்களின் வரலாற்றிலிருந்து**, தாஷ்கன்ட் அரசு பல்கலைக்கழக விஞ்ஞான நூல்கள், வெளியீடு 314, தாஷ்கன்ட், 1967, பக்கம் 54, ருஷ்யனில்).

அதன் ஆரம்பப் பகுதியில் 1919இல் இந்திய மக்களின் புரட்சிகர எழுச்சிகள் தோல்வியடைந்தது ஏன் என்று விளக்குவதற்கும் அத்தோல்வியிலிருந்து உரிய படிப்பினைகளைப் பெறுவதற்கும் முயற்சி செய்யப்பட்டிருந்தது. ''சமீபத்திய போராட்டம் தோல்வியடைந்ததற்கு இந்தியப் படைவீரர்களில் மிகக் குறைவான பகுதியினர் மட்டுமே அதில் பங்கெடுத்தது காரணமாகும். எனவே இந்தியப் புரட்சிக்காரர்கள் இராணுவ அணிகள் மத்தியில் தேசியப் பிரச்சாரம் செய்வதில் கவனத்தைக் குவித்து வருகிறார்கள்'' என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது.

பிரதானமாக இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் பிரச்சாரம் செய்வதே போதும் என்று முன்பு கருதப்பட்டது, ஆனால் தற்பொழுது முதலாவதாகவும் முதன்மையாகவும் சாதாரணப் படைவீரர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசப்பட்டது. இது நிச்சயமாக முன்னேற்றமே. மேலும் இக்கொள்கை ஆவணத்தின் ஆசிரியர்கள் கம்யூனிசத்தைப் பிரச்சாரம் செய்வதைப் பற்றியும் எழுதினார்கள், ஆனால் சாராம்சத்தில் தேசிய விடுதலையை அடைவதற்கு அது ஒரு வழி என்ற முறையில்தான் அவர்கள் பார்த்தார்கள். ''கம்யூனிசம் அல்லது போல்ஷிவிசத்தை... வெளிநாடுகளிலுள்ள இந்தியப் புரட்சிக் குழுக்கள் முறைப்படியாகப் பிரச்சாரம் செய்தால் இந்தியாவின் படைவீரர்களும் தொழிலாளர்களும் பிரிட்டிஷ் சுரண்டல்காரர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள்.'' அடுத்து இன்னும் திட்டவட்டமாக கூறப்பட்டது: ''இந்தியாவின் படைவீரர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் பிரச்சாரம் செய்யுங்கள், அவர்கள் அந்நிய அடிமைத்தனத்துக்கு உட்பட்டிருப்பதை விளக்கிக் கூறுங்கள்... அந்நிய எசமானர்களின் விலங்குகளைத் தூக்கியெறிந்து உங்களுக்குச் சொந்தமான, ஆனந்தமயமான தாய்நாட்டில் உங்களுடைய உழைப்பின் பலனை சுதந்திரமாக அனுபவியுங்கள் என்று நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.'' இந்த ஆவணத்தில் ''தொழிலாளர்கள்'' மற்றும் ''விவசாயிகளைக்'' குறிப்பிட்டிருந்தாலும் படைவீரர்களைப் பற்றியே அழுத்திச் சொல்லப்பட்டதும், புரட்சியின் முக்கியமான சக்தியாக அவர்கள் கருதப்பட்டதும் முற்றிலும் இயற்கையே.

தொழிலாளர்களுக்கு முன்புள்ள கடமைகளை விரித்துரைக்கின்ற பொழுது ஆவணத்தின் ஆசிரியர்கள் தம்முடைய முந்திய தனிநபர் பயங்கரவாதக் கருத்துக்களை கைவிடவில்லை: ''பிரிட்டிஷ் சர்வாதிகாரிகளை பயமுறுத்துவதற்கும் அவர்களுடைய செல்வாக்கை ஒழிப்பதற்கும் புரட்சியை இன்னும் தீவிரமாக்குவதற்கும் தொழிலாளர்கள் பணத்தையும் இலக்கியத்தையும் தவிர ஆயுதங்களையும் குண்டுகளையும் சேகரிக்க வேண்டும்.'' அடுத்தபடியாக ஆவணத்தில் பின்வரும் பகுதி இடம் பெற்றிருக்கிறது: ''நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் இந்தியப் புரட்சியைத் தீவிரப்படுத்துவதற்கும் 'இந்திய ஜனநாயகவாதிகள்' என்ற பெயரில் ஒரு கமிட்டியை நாம் தாஷ்கன்டில் அமைக்கவிருக்கின்றோம்.''

**கோட்பாடுகள்** என்ற அத்தியாயத்தில் ''எல்லா உறுப்பினர்களும்... கம்யூனிசக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்'' என்று இக்கமிட்டியின் சார்பில் அறிவிக்கப்படுகிறது. **செயல்திட்டம்** என்ற கடைசி அத்தியாயம் புரட்சியின் முக்கியமான மூன்று இலட்சியங்களை அறிவிக்கிறது: 1) அந்நிய ஆட்சியை ஒழித்தல்; 2) ''மக்களை நசுக்குகின்ற சில இந்திய சர்வாதிகாரிகள்'', பெரும் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளைத் ''தூக்கியெறிதல்''; 3) ''இந்தியாவில் சோவியத் குடியரசை நிறுவுதல்''.

இக்குழுவின் கம்யூனிச பிரகடனங்களைப் பற்றி நாம் மிகவும் கவனத்தோடிருப்பது அவசியம். ஏப்ரல் 10இல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் துருக்கிஸ்தான் கமிஷனுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் இதே முகம்மது அலியும் முகம்மது ஷாபிக்கும் தற்காலிக அரசாங்கத்தின் தேசியவாதப் புரட்சிக் கருத்துக்களைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்கள். எனவே அவர்கள் பத்து நாட்கள் முடிவதற்குள் கம்யூனிசக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதை நம்புவது கடினமே.

இந்தியப் புரட்சிக்காரர்களுடன் நெடுங் காலம் ஒத்துழைத்த ச.பி.க. பிரதிநிதியான எம். ஷூல்மன் 1920 டிசம்பர் 1இல் எழுதிய கடிதத்தில் முகம்மது அலியையும் முகம்மது ஷாபிக்கையும் பற்றிப் பின்வருமாறு கூறினார்: ''இவர்கள் இருவருக்கும் இந்தியாவின் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றி கொஞ்சமே தெரியும், மேலும் அவர்கள்

அதன் மீது அக்கறை காட்டுவதும் கிடையாது. அவர்களுடைய ஒரே ஆசை எதிரிகளை, அதாவது ஆங்கிலேயர்களைத் தோற்கடிக்க வேண்டும்... சோவியத் ஆட்சி மற்றும் கம்யூனிசக் கோட்பாடுகள் அவர்களுடைய பொதுவான உலகக் கண்ணோட்டத்துடன் மோதின என்பதில் சந்தேகமில்லை.'' அந்த சமயத்தில் அநேகமாக இதுவே நடைபெற்றிருக்க வேண்டும். இந்தியப் புரட்சிக்காரர்களால் கம்யூனிசக் கருத்துக்களை முழுமையாகச் செறிக்க முடியவில்லை. இவர்கள் சோவியத் துருக்கிஸ்தானில் தங்கியிருந்த சில நாட்களுக்குள் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைப் புரிந்து கொண்டிருந்தால் அதுதான் வியப்பைத் தரும்.

பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்குரிய பொதுவான ஜனநாயகப் போராட்டத்தைப் பற்றி முன்னெப்போதும் இல்லாத அதிகத் தீவிரமான கருத்துக்களை ஆவணத்தின் ஆசிரியர்கள் கொண்டிருந்ததை அது எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவின் முழு தேசிய விடுதலையை மட்டுமின்றி சுதந்திர நாட்டில் மிகப் பெரிய முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அவர்களுடைய கருத்துக்கள் முன்னூகித்தன. நாட்டின் விடுதலை, உழைக்கும் மக்களின் சமூகக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுடன் இணைந்திருப்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பதை ஆவணம் காட்டியது. முதலாளித்துவத்துக்கு முந்திய கிழக்கு நாடுகளின் சூழ்நிலைகளில் சோவியத்துகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உறுப்புகளாக இருக்க முடியாதென்றாலும் அவை சாத்தியமானவையே என்ற லெனின் கருத்து சரியானது என்பதை ஆவணம் நிரூபித்தது. ஆசிய நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் மத்தியில் அக்கருத்து அதிகமான வரவேற்பைப் பெற்றது.

இந்த ஆவணத்தைத் தயாரித்த தேசியப் புரட்சிக்காரர்கள் கம்யூனிசத்தைப் புரிந்து கொள்வதற்கும் அதை நெருங்கி வருவதற்கும் மனப்பூர்வமான விருப்பம் கொண்டிருந்தார்கள் என்று நாம் அனுமானிக்கலாம். இக்குழுவைச் சேர்ந்த சில உறுப்பினர்கள், குறிப்பாக முகம்மது அலி*, பிற்காலத்தில் கம்யூனிஸ்டுகளாக மாறியதும் இந்தி

* வெளிநாட்டிலும் இந்தியாவிலும் முகம்மது அலி இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியமான அமைப்பாளராக இருந்தார். 1922 முதல் அவர் பல வருடங்கள் இந்

யாவில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதில் அரிய சேவை களைச் செய்ததும் தற்செயலானதல்ல. விவசாயியான இப்ர கீம் சோஷலிசம் மற்றும் இந்திய விடுதலைக் கருத்துக் களின் மீது காட்டிய முனைப்பார்வத்தை ச.பி.க.வின் பொறுப்பாளர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

இந்திய தேசியப் புரட்சிக்காரர்களைக் கொண்ட இக் குழுவுக்குப் பெருமையைத் தருகின்ற அம்சம் ஒன்றுண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அவதூறுகளுக்கு எதிராக சோவியத் ஆட்சியை அவர்கள் மனப்பூர்வமாக ஆதரித் தனர் என்பதே அது. ''துருக்கிஸ்தானில் போல்ஷிவிக் கொடுமைகளைச் செய்ததாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி களின் பொய்ப் பிரச்சாரத்தை, இந்தியாவுக்கு சிவப்பு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, போல்ஷிவிக்குகள் நாகரிகம் மற்றும் மதத்தின் எல்லா வடிவங்களையும் அழித்துவிட் டார்கள் என்ற அவதூறுகளை மறுப்பது... நமது கடமை'' என்று அவர்கள் திட்டமும் செயல்திட்டமும் என்னும் ஆவணத்தில் அறிவித்தார்கள்.

தாஷ்கன்டில் இந்தியர்களின் கமிட்டியை நிறுவுவதற்கு அனுமதியளித்ததற்காகவும் இந்திய விடுதலை சம்பந்தமான அதன் நடவடிக்கைகளுக்கு உதவி செய்வதற்காகவும் சோவியத் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்தியர்கள் குறிப்பிட்ட சில பணிகளைச் செய்தது உண்மையே. அவர்கள் பாக்கூவிலும் இரானிலும் பிரிட்டிஷ்- இந்தியத் துருப்புகள் மத்தியிலும் பாமீரில் ஸ்தல மக்கள் மத்தியிலும் வேலை செய்வதற்குக் கிளர்ச்சிப் பிரச்சாரகர் களை அனுப்பினார்கள். சோவியத் ஆட்சியதிகாரம் எப்படிப்

---

தியக் கம்யூனிஸ்டுகளின் ஐரோப்பிய பீரோவின் பொறுப் பாளராக இருந்தார். 1925இல் *The Masses* என்ற இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகைக்கு நிர்வாக ஆசிரி யராக இருந்தார். பிறகு அவர் தலைமறைவான புரட்சிகர வேலையில் ஈடுபட்டார். அவர் கைது செய்யப்பட்டு 1929 முதல் 1933 வரை நடைபெற்ற கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மற்றும் தொழிலாளர் எதிர்ப்பு மீரத் சதி வழக்கில் தண்டிக் கப்பட்டார். தண்டனைக் காலம் முடிந்து விடுதலையடைந்த வுடன் அவர் பிரான்சுக்குச் சென்றார், இரண்டாவது உலக யுத்தத்தின் போது நாஜிகளால் சுட்டுக்கொல்லப் பட்டார் ( Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p.82).

பட்டது (பிரசுரம்), இந்திய சகோதரர்களுக்கு (வேண்டு கோள்), குடியரசும் இஸ்லாமும் (''சோவியத் குடியரசும் இஸ்லாமும்'' அல்லது ''போல்ஷிவிசமும் இஸ்லாமும்'' என்ற தலைப்பில் பார்க்கத்துல்லா எழுதிய பிரசுரமாக இது இருக்கக் கூடும்) முதலிய பிரச்சார வெளியீடுகளைத் தயாரித்தனர். மேலும் இப்பிரிவு ஜமீன்தார் என்ற பெயரில் ஒரு வார இதழை வெளியிடுவதென்று முடிவு செய்தது. ஏப்ரல் 23இல் ச.பி.க. இந்தியப் பிரிவின் வேலை அறிக்கையை விவாதித்த பிறகு ''இந்தியப் புரட்சிகரப் பத்திரிகை ஒன்றைத் தற்காலிக அடிப்படையில் வெளியிடுவதற்கு அனுமதியளிப்பதற்கு'' முடிவு செய்தது. இப்பத்திரிகை 1920 மே முதல் தேதியில் உருது, பாரசீக ஆகிய இரண்டு மொழிகளில் வெளியிடப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அடுத்த இதழ்கள் வெளிவரவில்லை. முகம்மது ஷாபிக் எழுதிய தலையங்கக் கட்டுரை பத்திரிகையின் முக்கிய நோக்கங்களை விளக்கியது. இந்தியப் பிரச்சினையைப் பற்றி சோவியத் குடியரசின் கவனத்தை ஈர்ப்பதென்றும், அதன் மாபெரும் முக்கியத்துவத்தை முறைப்படியாக விளக்குவதென்றும் அடிமைப்பட்ட தேசிய இனங்கள் அனைத்தும் விடுதலை அடைய வேண்டுமென்றால் முதலில் இந்தியாவில் காலனியாதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்று நிரூபிப்பதென்றும் திட்டமிடப்பட்டது. ஆசியாவின் பல்வேறு புரட்சிகர சக்திகளை ஒரே மையத்தைச் சுற்றி, ஒரு பொதுத் திட்டத்தின் அடிப்படையில் திரட்டுதல், அக்டோபர் புரட்சியின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் பரப்புதல், இந்தியப் பாட்டாளி வர்க்கம் தன் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்குத் தயாரித்தல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை மறுத்தல் ஆகியவை பத்திரிகையின் நோக்கங்கள்.* இத்திட்டத்தின் சில பகுதிகள் தேசியவாத மிகைப்படுத்தலை தெளிவாக எடுத்துக்காட்டின. இந்தியப் புரட்சிச் சங்கத்தைச் சேர்ந்த இன்னொரு புரட்சிக்காரர்கள் குழுவின் ஆவணங்களில் இது இன்னும் வெளிப்படையாகத் தெரிந்தது.

இருபத்தெட்டு இந்தியப் புரட்சிக்காரர்கள் 1920

* சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலுக்கு 1920 ஜூலை 22ந் தேதியன்று அப்துல் மஜீது எழுதிய கடிதத்தைப் பார்க்க.

ஜூலை 2ந் தேதியன்று காபூலிலிருந்து தாஷ்கன்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இது ஒருவருக்கொருவர் அதிகம் சம்பந்தமில்லாதவர்களைக் கொண்ட கோஷ்டி அல்ல; இந்தியப் புரட்சிச் சங்கம் என்ற பெயரில் நிறுவப்பட்டிருந்த அமைப்பின் ஒரு பகுதி இது.*

இக்குழுவினரை நகர உழைக்கும் மக்களின் பிரதிநிதிகளும் சோவியத் அதிகாரிகளும் சமூக நிறுவனங்கள் மற்றும் செஞ்சேனையின் பிரதிநிதிகளும் சிறப்பான முறையில் வரவேற்றனர். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் துருக்கிஸ்தான் கமிஷனின் துணைத் தலைவர் வலேரியான் கூய்பிஷெவ் மற்றும் துருக்கிஸ்தான் போர்முனைத் தளகர்த்தர் மிஹயீல் ஃப்ரூன்ஸே ஆகியோர் வரவேற்று சொற்பொழிவாற்றினார்கள். இந்தியப் புரட்சிச் சங்கத்தின் தலைவரான அப்துர் ராப் பார்க்** பதிலுரையாற்றினார். ''தானும் தன்னுடைய சகாக்களும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகச் சிறப்பான வரவேற்பு அளித்ததற்கு அவர் நன்றி தெரிவித்தார்.''***

அப்துர் ராப் பார்க்கும் திருமலாச்சார்யாவும் 1919 டிசம்பர் கடைசியில் அல்லது 1920 ஜனவரியில்—அவர்களும் மகேந்திர பிரதாபும் மாஸ்கோவிலிருந்து யா. எஸ். சுரித்ஸ் தலைமையிலுள்ள முதல் சோவியத் தூதுக் குழுவுடன் ஆப்கான் தலைநகரத்துக்கு வந்த பிறகு—காபூலில் இந்தியப் புரட்சிச் சங்கத்தை அமைத்தார்கள். இந்தியாவைத் துறந்து காபூலுக்கு வந்திருந்த புரட்சிக்காரர்கள் மத்தியில் இச்சங்கம் ஐந்து மாத காலமாக செயலாற்றி வந்தது. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 150ஆக அதிகரித்தது. இவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் தாஷ்கன்டுக்கு வந்தனர். அக்காலத்தில் பிரயாணம் செய்வதிலிருந்த கஷ்டங்களைக் கருதுகின்ற பொழுது இது குறைந்த எண்ணிக்கையல்ல. வேலைத்திட்டத்தை விவாதிப்பதற்கும் சங்கத் தலைமையைத் தேர்ந்தெடுப்பதற்கும்

---

* இஸ்வேஸ்தியா, தாஷ்கன்ட், ஜூலை 4, 1920.

** *Documents of the History of the Communist Party of India*, Vol. 1, p. 17; Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, p. 56; Devendra Kaushik, "Indian Revolutionaries in Soviet Asia", *Link*, January 26, 1966 ஆகியவற்றைப் பார்க்க.

*** இஸ்வேஸ்தியா, தாஷ்கன்ட், ஜூலை 4, 1920.

காபூலில் நான்கு அல்லது ஐந்து மகாசபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்தன. அப்துர் ராப் பார்க் தலைவராகவும் திருமலாச்சார்யா துணைத் தலைவராகவும் அமீன் ஃபரூக் மற்றும் பஷில் அல் காதிர் செயலாளர்களாகவும் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தனர். இச்சங்கத்தின் நோக்கங்களையும் அமைப்புக் கோட்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்ற அமைப்பு விதி முறைகள் காபூலிலேயே நிறைவேற்றப்பட் டிருந்தன.

இச்சங்கம் லெனினுக்கு அனுப்பிய பிரபலமான வாழ்த்துச் செய்தி பிப்ரவரி 17இல் நடைபெற்ற அதன் இரண்டாவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். அது ஒடுக்கப் பட்ட நாடுகளின், குறிப்பாக இந்தியாவின் விடுதலைக்குப் போராடி வருவதற்காக சோவியத் ருஷ்யாவுக்கு நன்றி தெரிவித்தது.* தொழிலாளர், விவசாயிகளின் குடியரசு பிரகடனம் செய்த... ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலை யும் சுயநிர்ணயமும் என்ற கொள்கைகள்... முற்போக்கான இந்தியர்கள் மத்தியில் உடனடியான ஆதரவை அதிகமான அளவுக்குப் பெற்றன''** என்பதைக் குறித்து மகிழ்ச்சி யடைவதாக லெனின் பதில் எழுதினார்.

இந்தியப் புரட்சிச் சங்கம் ஆப்கானிஸ்தானில் தங்கியி ருந்து வேலையைத் தொடர்வதற்கு விரும்பியது. ஆனால் 1920 மே மாதத்தில் எமீர் இந்தியர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருந்ததை ரத்துச் செய்து விட்டார். இச்சமயத் தில்தான் இச்சங்கத்தின் மிகச் சுறுசுறுப்பான பகுதியினர் சோவியத் அரசாங்கத்தின் விருந்தோம்பலை உபயோகித்துக் கொள்ள முடிவு செய்தனர். இந்தியர்களுக்கும் எமீருக்கும் மன முறிவு ஏற்படுவதற்கு முன்பே அவர்கள் சோவியத் ருஷ்யாவுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள உத்தேசித்திருந்தனர். ''பிரிட்டிஷ் ஆட்சியில் இந் தியாவின் நிலைமையைப் பற்றி ஐரோப்பிய, குறிப்பாக ருஷ்யப் பொது மக்களுக்கு சரியான தகவல்களைக் கொடுப் பதற்கு தாஷ்கன்டில் அலுவலகம் அமைப்பதென்று'' சங்கத் தின் விதிமுறைகளில் எழுதப்பட்டிருந்தது.

---

* அதே பத்திரிகை, ஏப்ரல் 17, 1920.

** வி. இ. லெனின், ''இந்தியப் புரட்சிச் சங்கத் துக்கு'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 419.

இச்சங்கத்தின் உறுப்பினர்கள் கலாசார, அரசியல் வளர்ச்சி, சமூகப் பின்னணி ஆகிய இரண்டிலும் குறிப் பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்ட நபர்கள். ஆனால் தாய் நாட்டை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்ற பொது விருப்பத்தில் ஒன்றுபட் டிருந்தனர்.

ச.பி.க.வைச் சேர்ந்தவரும் பிற்காலத்தில் கம்யூ னிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் கமிஷனின் ஸ்தாபனப் பிரிவின் தலைவருமான அலெக்சாந்தர் டிவெல் இச்சங்கத் தைப் பற்றி எழுதிய அறிக்கையில், தாஷ்கன்டுக்கு வந் தவர்களில் சுமார் ஒரு டஜன் நபர்கள் பிரிட்டிஷ் இராணுவத் திலிருந்து ஓடிவந்தவர்கள், ''இப்படிப்பட்டவர்கள் பெரும் பாலும் புரட்சிக்காரர்களாக மாறும் வாய்ப்புடையவர்கள் தான்; எனினும் ஆங்கிலேயர்களை அவர்கள் வன்மையாக வெறுக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார் (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.), இக்குழுவில் ''சிறு வியாபாரிகளும் கைவினைஞர்களும்'' அதே எண்ணிக்கையில் (சுமார் ஒரு டஜன் நபர்கள்) இருக்கிறார்கள் என்று எழுதினார்.

இத்தகைய வகைப்படுத்தலின் அர்த்தம் என்ன? இராணு வத்திலிருந்து ஓடி வந்தவர்கள் பெரும்பாலும் விவசாயி கள். அங்கே வந்தவர்களில் நசீர் கான் என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இவர்கள் சுதந்திரமான பலூச்சி இனக்குழுவின் தலைவர்கள். 1917—1918ம் வரு டங்களில் அவர்கள் 10,000 நபர்களைக் கொண்ட கலகச் சேனைக்குத் தலைமை தாங்கினார்கள். அவர்களிடமிருந்து வெடிமருந்து தீர்ந்து விட்ட காரணத்தால்தான் பிரிட்டிஷ் இராணுவம் அவர்களுடைய எதிர்ப்பை நசுக்க முடிந்தது.

திருமலாச்சார்யாவைத் தவிர இச்சங்கத்தின் உறுப்பினர் கள் அனைவரும் முஸ்லிம்கள், அவர்களில் பலருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அப்துர் ராப் பார்க், திரு மலாச்சார்யாவைப் போன்ற சிலர் உயர்ந்த கல்வித் தகுதி உடையவர்கள்; அமீன் ஃபரூக், பஸில் அல் காதிரைப் போன்ற சிலர் மாணவர்கள். அதிகமாகப் படித்திருந்த போதிலும் அப்துர் ராப் பார்க் ''உலகத்தைக் காப்பதற்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இஸ்லாமைத் தவிர வேறு வழியில்லை'' என்று கூறியது உண்மையே. அப்படித் தான் முகம்மது ஷாபிக் அவரைப் பற்றி பிற்காலத்தில் எழுதி

னார். இச்சங்கத்தில் ஏற்பட்டிருந்த நடைமுறை ஜன நாயக விரோதமானது, அதற்குத் தலைவருடைய குறை களே காரணம் என்று இந்தியர்களுடன் பழகிய சோவியத் மக்கள் அனைவருமே கூறினார்கள்; அப்துர் ராப் பார்க் சர்வாதிகாரப் போக்குடையவர் என்று கூட சிலர் பேசி னார்கள்.

இந்தியப் புரட்சிச் சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டம் அப்துர் ராப் பார்க்கின் கையெழுத்துடன் 1920 ஆகஸ்ட் 13இல் வெளியிடப்பட்டது. இந்த ஆவணத்துடன் இன்னும் சிலவற்றையும் பயன்படுத்தி இக்குழுவின ருடைய கருத்துக்களை நாம் இனம் கண்டு கொள்ள முடியும். இந்த ஆவணம் சங்கத்தின் தலைமையான நோக் கத்தை சந்தேகத்திற்கிடமில்லாத படியும் தெளிவாகவும் வரையறுத்தது: ''வேதனையளிக்கின்ற அந்நிய அடிமைத் தனத்தை ஒழித்து அதனிடத்தில் சுதந்திரமான, சுய அர சாங்கத்தை நிறுவுதல்.'' சுதந்திர இந்தியாவில் முடியாட்சி இருக்காதென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது. தக்க தரு ணத்தில், நாட்டிலிருக்கும் நிலைமைகளுக்கு அது பொருத்த மாக இருக்குமானால் சோவியத் கூட்டாட்சிக் குடியரசு நிறுவப்படும். இந்நோக்கம் நிறைவேறுவதற்காக ''இன்றுள்ள கொடுங்கோன்மையான அந்நிய ஆதிக்கத்தை ஒழிப் பதற்கு இட்டுச் செல்லக்கூடிய, இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியிலும் உள்ள அனைத்து சக்திகளையும் சேகரிப்பதற் கும் பயன்படுத்துவதற்கும் இச்சங்கம் முயற்சி செய்யும்''.

இந்தியாவுக்கு உள்ளும் வெளியிலுமுள்ள விடுதலை சக்தி களைப் பற்றிய வாதத்தை விரித்துரைக்கின்ற பொழுது ஆவணத்தின் ஆசிரியர்கள் தங்களுடைய தேசியவாதத்தை யும் உலகத்தில் இந்தியாவின் பாத்திரம் மற்றும் முக்கியத்து வத்தைப் பற்றித் தங்களுடைய மிகைப்படுத்தப்பட்ட கருத் தையும் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள். ''இந்தியப் பிரச்சினை ஒரு நாட்டைப் பற்றிய பிரச்சினை அல்ல, அது பிரம்மாண்டமான முக்கியத்துவத்தைக் கொண்ட சர்வதேசப் பிரச்சினை...'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.).

இந்திய விடுதலையின் மாபெரும் சர்வதேச முக்கியத்து வத்தைச் சரியாக வலியுறுத்திய பிறகு ஆசிரியர்கள் அது ஒரு நாட்டைப் பற்றிய பிரச்சினையே அல்ல, அது உலக

ரீதியான, சர்வதேசப் பிரச்சினை என்று மிகைப்படுத்திக் கூறினார்கள்.

ச.பி.க.வுக்கு 1920 ஆகஸ்ட் 22இல் எழுதிய கொள்கை விளக்கக் கடிதத்தில் அப்துர் ராப் பார்க் பின்வருமாறு கூறினார்: ''உலகத்தின் முதல் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்துக்கு இந்தியா—இந்தியா மட்டுமே—தூணாக, முக்கிய ஆதாரமாக இருக்கிறது. சாம்ராஜ்யத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற அந்தத் தூணை அகற்றி விட்டால் மொத்த அமைப்பும் காகித வீட்டைப் போலக் கீழே விழுந்து சிதறிப் போகும்.''

கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரஸ் பாக்கூவில் நடைபெற்ற பொழுது இந்தியப் புரட்சிச் சங்கம் அங்கே வெளியிட்ட பிரகடனத்திலும் இந்தியாவின் உலக ரீதியான முக்கியத்துவம் என்ற கருத்து மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தது. ''உலக முழுவதிலும் உள்ள கலவரத்துக்கும் குழப்பத்துக்கும் இந்தியா—இந்தியா மட்டுமே—உண்மையான காரணம். இந்தியாவின் சுதந்திரம் உலக முழுவதின் சுதந்திரம், எதிர்காலத்தில் எல்லா யுத்தங்களுக்கும் முடிவு என்பதை நிரூபிப்பதற்கு வரலாறு போதுமான சான்றுகளைக் கொடுத்திருக்கிறது.''* இக்காங்கிரசில் பங்கெடுத்த இந்தியப் புரட்சிச் சங்கத்தின் 7 பிரதிநிதிகள் (மொத்தம் 14 இந்தியர்களில்)** ''காங்கிரசில் எந்தப் பிரச்சினைகளை எழுப்பப் போகிறீர்கள்?'' என்று பதிவுப் பத்திரத்திலிருந்த கேள்விக்கு ஒரே மாதிரியாக பதில் எழுதினார்கள்: ''உலகத்தின் சுதந்திரம் இந்தியா சுதந்திரமடைவதைப் பொறுத்திருக்கிறது என்று நிரூபித்துப் பேசுவதுடன் என்னுடைய நாட்டின் விடுதலையைக் கோருகின்ற தீர்மானத்தை முன் மொழிவதற்கு உத்தேசிக்கிறேன்.''*** ச.பி.க.வுக்கு அப்துர் ராப் பார்க் எழுதிய கடிதத்தில் இதைத் தொகுத்துக் கூறுவதைப் போல இந்திய மக்களின் விடுதலைப் போராட்டம் அனைத்து மனித குலத்தின்

---

* **கம்முனிஸ்ட்**, பாக்கூ, செப்டெம்பர் 9, 1920.

** **இஸ்வேஸ்தியா**, தாஷ்கன்ட், செப்டெம்பர் 14, 1920; **கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரஸ்**, சுருக்கெழுத்துப் பதிவு, பெத்ரோகிராத், 1920, பக்கம் 5.

*** மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 544, பட்டியல் 2, பத்திரங்கள் 40, 42.

போராட்டம் என்று சுட்டிக் காட்டினார். ''மொத்த உலகத்திலேயே வறுமையிலும் உரிமையற்ற நிலைமையிலும் இந்தியா தனியொரு உதாரணமாக இருக்கிறது''; அனைத்து மனித குலத்துக்கு எதிரியான பிரிட்டிஷ் அரசாங்கம் ''மனித வளத்தின் வற்றாத ஊற்றாகிய கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட இந்தியாவை'' அடிமைப்படுத்தி வைத்திருப்பதனால்தான் ''மற்ற நாடுகளைப் பிடிப்பதற்குத் திட்டம் போடுகிறது''* என்று இந்தியப் பிரதிநிதிகள் பேசிய பொழுது இந்த வாதத்தை நியாயப்படுத்துவதற்கு முயற்சி செய்தார்கள்.

இச்சங்கம் இந்தியாவின் சர்வதேச முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறும் பொழுது இந்தியாவின் விடுதலை உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களும் போராட வேண்டிய இலட்சியம் என்று நிரூபிப்பதற்கு முயற்சி செய்தது. ''இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அக்கறை காட்டுவதற்கும் அதில் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கும்படி தூண்டுவதற்கும்—அடிமை நாடாக இருந்தாலும் அல்லது சுதந்திர நாடாக இருந்தாலும்—உலகத்தின் எல்லா நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுப்பது இச்சங்கத்தின் கடமை. அப்படிச் செய்வதன் மூலம் இந்நாடுகள் தம்முடைய சொந்த நலனுக்குச் சேவை செய்வது மட்டுமல்லாமல் பரந்த மனித குலத்துக்குச் செய்கின்ற மாபெரும் சேவையாகவும் இருக்கும்'' என்று ''அரசியல் வேலைத்திட்டத்தில்'' எழுதப்பட்டிருந்தது.

எல்லைப் பகுதிகளில் வசிக்கின்ற சுயேச்சையான இனக்குழு மக்களின் உதவியுடன் சோவியத் ருஷ்யா இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்று இச்சங்கத்தினர்களும் வேறு சில இந்தியப் புரட்சிக்காரர்களும் கருதினார்கள். கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரசில் பங்கெடுத்த ஒரு இந்தியப் பிரதிநிதி (துரதிர்ஷ்டவசமாக அவருடைய பெயர் பிரசுரிக்கப்படவில்லை) **கம்முனிஸ்ட்** பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்: ''இந்த இனக்குழு மக்களுடன் சோவியத் ருஷ்யா தொடர்பு கொண்டால், மலைகளில் யுத்தம் செய்வதில் அனுபவமுடைய, வீரமான,

* **கம்முனிஸ்ட்,** பாக்கூ, செப்டெம்பர் 9, 1920.

சுதந்திரத்தை நேசிக்கின்ற இம்மலை வாழ் மக்களின் உறுதியான ஆதரவு இந்தியப் புரட்சிக்குக் கிடைக்கும்''*.

வெளிநாட்டு அரசு ஆயுதங்களை உபயோகித்து இந்தியாவை விடுதலை செய்கின்ற ஒன்றையே இந்தியப் புரட்சிச் சங்கம் நம்பியிருந்த படியால் அது பெருந்திரளான மக்கள் மத்தியில் பிரச்சாரம் மற்றும் ஸ்தாபனப் பணிகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளத் தவறியது. இச்சங்கத்தின் இரண்டு செயலாளர்களில் ஒருவரான அமீன் ஃபரூக், ''சங்கம் பிரச்சாரத்தில் நம்பிக்கை வைக்கவில்லை, சுறுசுறுப்பான வேலை ஒன்று மட்டுமே போதும் என்று கருதியது'', இதை சோவியத் அரசாங்கம் ஆதரிக்கவில்லை என்று பிற்காலத்தில் (1921 ஜூன் 22இல்) கூறினார் (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.).

பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத இராணுவப் படையெடுப்பு (இது இந்தியாவில் புரட்சிக்குப் பதிலாக இருந்திருக்க வேண்டும்) என்ற கருத்தை சோவியத் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை. வெளிநாட்டுச் சக்தியின் உதவியுடன் தங்கள் நாட்டை விடுவிப்பதைப் பற்றிக் கனவு கண்ட இச்சங்க உறுப்பினர்கள் இந்தியாவில் நாத்திகக் கம்யூனிசக் கருத்துக்களைப் பரப்புவதைத் தடுக்க விரும்பினார்கள். கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த பிரகடனத்தில் ''ருஷ்யாவின் உதவியைக் கோர வேண்டுமென்று இந்தியப் புரட்சிக்காரர்கள் அனைவரும் ஏகமனதாக விரும்புகிறார்கள், ஆனால் அது தேசிய விருப்பார்வங்களுடன் பொருந்தியிருக்க வேண்டும்'', ''மத விவகாரங்களில் எவ்விதமான தலையீடும் இல்லாதிருக்க வேண்டும்''** என்று இச்சங்கம் கூறியது இதே காரணத்திற்காக இருக்கலாம்.

இந்தியாவை விடுவிப்பதற்கு வெளிநாட்டு உதவியை நம்பும் பொழுது இச்சங்கம் பின்வரும் உறுதியான, கண்ணியமான ஒதுக்கீட்டையும் விதிமுறைகளில் சேர்த்திருந்தது: ''விடுதலையடைந்த இந்தியாவில் விடுதலைக்கு உதவி செய்யும் அரசுகளின் கொள்கையை அது பின்பற்றும் என்று இச்சங்கம் உத்தரவாதமளிக்கவில்லை. எந்த உதவியையும்

---

* **கம்முனிஸ்ட்**, பாக்கூ, செப்டெம்பர் 2, 1920.
** **கம்முனிஸ்ட்**, பாக்கூ, செப்டெம்பர் 9, 1920.

கடனாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதை இலவச அன்பளிப்பாக மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்.''

''இந்தியப் புரட்சிச் சங்கத்தின் அரசியல் வேலைத் திட்டம்'' சோஷலிசத்தைப் பற்றி மேலோட்டமாக பேசுகிறது: ''கலப்பற்ற, உண்மையான சோஷலிசத்தின் மூலமாக மட்டுமே இந்தியாவை விடுவிக்க முடியும்.'' ஆகவே சங்கம் ''இந்தியாவுக்கும் உலகத்துக்கும் ஒரே கடைத்தேற்றம் என்ற முறையில் சோஷலிசத்தை ஏற்றுக்கொள்ளும்படி இந்தியப் பொது மக்களிடம் அறிவுறுத்துவதற்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் முயற்சி செய்யும்.''

ஆனால் வேலைத்திட்டத்தின் ஆசிரியர்கள் சோஷலிசம் என்பது ''இந்தியாவின் பழைய சோஷலிஸ்ட் அமைப்புக்களுக்குப்'' புத்துயிரளிப்பதைத் தவிர வேறு புதியதல்ல என்று கருதினார்கள். ஒப்பீட்டளவில் சமீப வரலாற்றுக் காலத்திலேயே ''இந்தியா ஒரு தூய சோஷலிஸ்ட் நாடாக இருந்தது''. இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புகள், குறிப்பாக பஞ்சாயத்துகள், கலைஞர் மற்றும் கைவினைஞர் குழுக்கள் இருந்தன. இவை தவிர சுயாட்சி அதிகாரமுடைய ஸ்தலக் கவுன்சில்களும் இருந்தன. காலனியாதிக்கத்துக்கு முந்திய இந்தியாவின் மேற்கட்டுமானத்தின் சோஷலிஸ்ட் தன்மையை இவை நிரூபிக்கும் என்று கருதப்பட்டது.

அடுத்தபடியாக, பொருளாதார அடிப்படையிலும் இந்தியாவில் சோஷலிசம் இருந்தது என்று வேலைத்திட்டம் எடுத்துக் கூறியது. இந்தியாவிலும் பலூச்சிஸ்தானிலும் எல்லைப் பகுதிகளில் வசிக்கின்ற இனக்குழு மக்களின் உதாரணம் எடுத்துக்காட்டப்பட்டது. அங்கே ''நிலம் தனியுடைமையாக இருக்கவில்லை.அது அந்த இனக்குழுவின் கூட்டுச் சொத்து. இனக்குழுவின் நிலத்தில் இளைய தலைமுறையினருக்குப் பங்கு தருவதற்காக ஏழு அல்லது பத்து வருடங்களுக்கு ஒரு முறை நிலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வரிகள் கிடையாது, கட்டணங்கள் இல்லை, சொத்துடைமை இல்லை.'' ''இந்த அமைப்புக்கும் கம்யூனிசத்துக்கும் இடையில் ஒரே ஒரு படிதான் இருக்கிறது'' என்று வேலைத்திட்டத்தின் ஆசிரியர்கள் கருதினார்கள். ''ஒவ்வொரு நபரும் நேரடியாகத் தானே உழைத்து அறுவடை செய்கிறார்''; எனவே இனக்குழுவின் கவுன்சில் அறுவடையான தானியத்

தைப் பெற்று அதை இனக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில் சமமாகப் பகிர்ந்தளித்து விட்டால்'' இந்த அமைப்பு கம்யூனிசமாகி விடும். ''சமத்துவத்தைப் பின் பற்றுவதும் சகோதரத்துவத்தை போதிப்பதும் ஒவ்வொரு வருடைய கடமை'' என்று வேலைத்திட்டம் அறிவித்தது. மொத்தத்தில் இந்தியாவின் சோஷலிச மாற்றம் மிகவும் கஷ்டமானதாகக் கருதப்படவில்லை. ஏனென்றால் ''பூர்விக வடிவத்திலுள்ள சோஷலிசம் எல்லா இந்திய அமைப்பு களுக்கும் அடிப்படையாக இருக்கிறது''.

அப்துர் ராப் பார்க் தாஷ்கன்டுக்கு வந்த முதல் நாளில், வரவேற்பளித்த ருஷ்ய மக்களிடம் பேசுகின்ற பொழுது ''கிராமத்தில் இன்றும் கூட கூட்டு வாழ்க்கை முறையில் வசிக்கின்ற இந்தியனின் இதயத்துக்குக் கம்யூனிசக் கருத் துக்கள் நெடுங்காலமாகவே மிகவும் நெருக்கமாக இருந்து வந்திருக்கின்றன''* என்று கூறினார். எனினும் சங்கம் ''சோஷலிஸ்ட் கருத்துக்களை—அவை இன்று புரிந்து கொள்ளப்படுகின்ற முறையில்—தன் முழு பலத்தோடு பிரச் சாரம் செய்வதுடன் அவற்றை அறிவு பூர்வமான, விஞ்ஞான முறையில் ஆதரித்துப் பாடுபடும்'' என்று வேலைத்திட்டம் சுட்டிக் காட்டியது.

இந்தியப் புரட்சிச் சங்கத்தின் ''சோஷலிஸ்ட்'' கட் டமைப்புகளின் சாரம் புரட்சிகரக்-கூட்டு வாழ்க்கை அல் லது குலமரபு-இனக்குழு ரகத்தைச் சேர்ந்த பூர்விக சோஷ லிசத்துடன் ஒட்டியது. பலூச்சிஸ்தான் மக்கள் மற்றும் டூராண்டு எல்லைக் கோட்டின்** நெடுகிலும் வசித்து வந்த இனக்குழு மக்களின் குறியடையாளமாக நிலவிய தொடக்க நிலை வர்க்க உறவுகளை மெய்யான சோஷலிஸ்ட் உறவு கள் என்று இப்பிரதேசங்களிலிருந்து வந்த புரட்சிக்காரர் கள் கருதினார்கள். கிராம சமூகத்தின் கூட்டு வாழ்க்கை அமைப்பை நொறுக்கப் போகின்ற சக்திகள் ஏற்கெனவே அதற்குள் ஆழமாகத் தோன்றிச் செயல்பட்டுக் கொண்

* இஸ்வேஸ்தியா, தாஷ்கன்ட், ஜூலை 4, 1920.

** ஆப்கானிஸ்தானுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இடையிலுள்ள எல்லைக்கோடு. ஆப்கன் அரசாங்கத்துக்கும் இந்தியாவின் காலனி அரசாங்கத்தின் வெளிவிவகார இலாகா வின் காரியதரிசியான ஜி. எம். டூராண்டுக்கும் இடையில் 1893இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக டூராண்டு எல்லைக்கோடு நிறுவப்பட்டது.

டிருப்பதை இவர்கள் பார்க்கவில்லை. தங்களுடைய இனக்குழு மக்களின் அன்றாட வாழ்க்கையில் சோஷலிசம் ஆதிக்கம் செலுத்தியதால் மார்க்ஸ், லெனினுடைய சோஷலிசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று அவர்கள் கருதினார்கள். அவர்கள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் ஸ்தல இந்திய முதலாளிகளையும் துணிவோடு எதிர்த்தார்கள்; ஸ்தல, இந்திய முதலாளித்துவம் இனக்குழு மக்களின் மரபு வழிப்பட்ட வாழ்க்கை முறைக்கு அந்நியமானதாகக் கருதினார்கள். கூட்டு வாழ்க்கை, இனக்குழு உற்பத்தி முறை மற்றும் விநியோகத்தை, தொன்மையான இந்திய வாழ்க்கை முறையை, ''இந்தியாவின் பொற்காலத்தை'' மறுபடியும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். முதலாளித்துவ வளர்ச்சியின் நாசகரமான விளைவுகளிலிருந்து அதுவே நாட்டைக் காப்பாற்றும் என்று நம்பினார்கள்.

இந்தியாவில் நடத்தப்படவிருக்கும் புரட்சியின் பிரச்சினைகள், அதன் தன்மை, அதன் இயக்கு சக்திகள் மற்றும் வளர்ச்சிக் கட்டங்கள் இச்சங்கத்தின் அரசியல் வேலைத் திட்டத்தில் மிகக் குறைவான இடத்தையே பெற்றிருந்தன. சமூகப் புரட்சியும் அரசியல் புரட்சியும் ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும், ''சமூக மற்றும் அரசியல் புரட்சியின் முடிவான இலட்சியத்தை சாதிப்பதற்கு இன்றே பாதையைச் செப்பனிட வேண்டும், தளத்தைத் தயாரிக்க வேண்டும் என்று சங்கம் உறுதி கொண்டிருக்கிறது'' என்ற வாசகம் மட்டுமே அதில் இடம் பெற்றிருந்தது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் பின்வரும் கருத்துக்களைக் கொண்டிருந்திருக்கக் கூடும் என்று நாம் அனுமானிக்கலாம்: இந்தியாவில் ஏக காலத்தில் சமூக மற்றும் அரசியல் புரட்சி நடைபெறுவதன் விளைவாக நாட்டின் தொன்மையான கூட்டு வாழ்க்கை அமைப்புக்கள் புத்துயிர் பெற்று மறுபடியும் நிறுவப்படும்; அதன் பலனாக ''உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற, விவசாயிகளை ஆதரிக்கின்ற சுதந்திரமான கூட்டாட்சிக் குடியரசு நிறுவப்படும்''. உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் விவசாயிகளுக்கு உதவுவதையும் ''நிலப்பிரபுக்கள் மற்றும் அரசர்களுக்குச் சொந்தமான நிலத்தை நாட்டுடைமையாக்குவதையும்'' பற்றி இத்திட்டத்தில் எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவரான மகாத்மா காந்தி நிலப்பிரபுக்களும் அரசர்களும் தந்தையைப் போல விவசாயிகளை ஆதரிக்க வேண்டும் என்று எழுதியும் பேசியும் வந்த சூழ்நிலையில் சங்கம் மேற்கூறிய நோக்கங்களைக் கூறியது அதன் உறுப்பினர்களின் அரசியல் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாகும். உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதைப் பற்றிய மிக முக்கியமான ஷரத்து சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டத்தில் இடம் பெறவில்லை, அவை சற்றுப் பிந்திய காலத்தில் தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். எப்படியிருந்தாலும், கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரசில் பங்கெடுத்த இச்சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவரான நஸீர் என்பவரால் 1920 ஆகஸ்டில் அவை வேலைத்திட்டத்தின் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டது* முற்றிலும் நிச்சயமாகும்.

இந்தியா சுதந்திரமடைந்ததும் உடனடியாக சோஷலிசத்துக்கு மாற வேண்டும் என்பது சங்கத்தின் உறுப்பினர்களுடைய கருத்து எனலாம். ''ஐரோப்பா கற்றுக்கொள்ள வேண்டியிருந்த ஜனநாயகம் என்ற கசப்பான பாடத்தை இந்தியா கற்றுக்கொள்வது அவசியமல்ல, இப்பக்கங்களைப் படிக்காமல் விட்டுவிடுவது இந்தியாவுக்கு நல்லது... என்று சங்கம் உறுதியாக நம்புகிறது. ஐரோப்பாவின் ஜனநாயகம் என்று சொல்லப்படுவதை எதிர்த்து முறையான போராட்டம் நடத்துவதற்கு சங்கம் உறுதி கொண்டிருக்கிறது.''

வேலைத்திட்டத்தின் மேற்கூறிய அம்சங்கள் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி லெனின் கூறிய கருத்துக்களில் சிலவற்றைப் பிரதிபலிக்கும் உத்தேசத்தை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ள இயலும் என்ற லெனினுடைய கருதுகோளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இக்கருத்துக்கள் விரித்துரைக்கப்படாமலேயே நின்று விட்டன. ஆகவே ''இந்தியப் புரட்சிச் சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டத்தின்'' சோஷலிஸ்ட் கருதுகோள்களின் மொத்த அமைப்புக்கும் அடிப்படை இல்லாமற் போய் விட்டது.

* கம்முனிஸ்ட், பாக்கூ, ஆகஸ்ட் 27, 1920.

* * *

அக்டோபர் புரட்சிக்கு பிறகு நாடு துறந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்திய தேசியப் புரட்சிக்காரர்களின் மூன்று அரசியல் ரீதியான குழுக்களைப் பற்றி நீங்கள் ஓரளவுக்குத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். முதலாவதாக, இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்பட்ட குழு, அடுத்த படியாக, சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் இந்தியப் பிரிவு, கடைசியாக, இந்தியப் புரட்சிச் சங்கம் ஆகியவை இம்மூன்று குழுக்களாகும்.

முதலில் தனி அமைப்பாக இருந்த இந்தியப் பிரிவு பின்னர் இந்தியப் புரட்சிச் சங்கத்துடன் இணைந்ததென்று சிலர் கருதுகிறார்கள். 1919 டிசம்பர் முதல் 1920 ஜூலை வரை ச.பி.க.வின் வேலை அறிக்கையில் இப்படிக் கூறப் பட்டிருப்பதால் இக்கருத்துக்கு ஆதாரமுண்டு. ''இப்பிரிவுக்கு இந்தியச் சங்கம் என்று மறு பெயரிடப்படுகிறது''* என்று அந்த அறிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அப்துர் ராப் பார்க் தன் குழுவினருடன் தாஷ்கன்டுக்கு வந்தவுடன், அதாவது ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் இந்த அறிக்கை எழுதப்பட்டிருக்கிறது. ச.பி.க. அப்படி உத்தேசித்ததை அது வெளியிடுகிறது என்றுதான் கருத வேண்டும். உண்மையில் இரண்டு குழுவினருக்கும் இடையில் அரசியல் மற்றும் தனிப்பட்ட சச்சரவுகளின் காரணமாக அத்தகைய இணைப்பு ஏற்படவில்லை.

எம். ஷூல்மன் 1920 ஜூன் 15இல், அதாவது இ.பு.ச. குழு துருக்கிஸ்தானுக்கு வருவதற்கு முன்பு வேலை நிமித்தமாக ஓஷுக்குச் சென்றிருந்தார். அவர் ஆகஸ்ட் கடைசியில் தாஷ்கன்டுக்குத் திரும்பிய பொழுது''அங்கே அப்துர் ராப் பார்க்கையும் அவர் குழுவினரையும் சந்தித்தார்'' என்றும் ''ஒரு பக்கத்தில் இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கும் மறு பக்கத்தில் இந்தியப் பிரிவுக்கும் இடையில் தகராறுகள் வெடித்திருக்கின்றன'', ''இவை முற்றிலும் தனிப்பட்ட காரணங்களினால் ஏற்பட்டிருக்கின்றன'' என்றும் அவர் எழுதினார். தற்காலிக அரசாங்கத்தை ஆதரித்த இந்தியப் பிரிவின் உறுப்பினர்கள் அப்துர் ராப் பார்க்குடன் சண்டை போட்டுக்

* மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா., தொகுப்பு 122, பட்டியல் 1, பத்திரம் 29, தாள் 266.

கொண்டிருக்கிறார்கள், இது காபூலில் தொடங்கிய சண்டை என்று அவர் சுட்டிக் காட்டினார். இச்சச்சரவுகளின் போது அப்துர் ராப் பார்க்கின் குழுவைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இந்தியப் பிரிவின் தரப்புக்குக் கட்சி மாறினார்கள்.

''இரண்டு குழுவினருக்கும் இடையில் சச்சரவுகள் மிகவும் தீவிரமடைந்து ச.பி.க.வின் நடவடிக்கைகளை பாதிக்கத் தொடங்கின'' என்று ஷூல்மன் நினைவு கூறுகிறார். நிர்வாகக் கமிட்டி பீரோவின் எல்லாக் கூட்டங்களிலும்... இரண்டு இந்திய ஸ்தாபனங்களையும் பற்றிய பிரச்சினை நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுவது வாடிக்கையாகி விட்டது. கடைசியில் இந்தியப் பிரிவின் உறுப்பினர்களை, குறிப்பாக பிளவை ஏற்படுத்திய அப்துல் மஜீதை பாக்கூவுக்கு அனுப்பி வைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இந்தியப் பிரிவின் எல்லா உறுப்பினர்களும் பாக்கூவுக்குப் போகவில்லை. ஆனால் இந்தியப் பிரிவு ''இந்தியப் புரட்சிச் சங்கம் என்று சொல்லப்படுகின்ற ஸ்தாபனத்துடன் சச்சரவுகளினால் அரசியல் தன்மை அனைத்தையும் முற்றிலும் இழந்து விட்டது'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.) என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் ஆவணம் தெரிவித்தது.

இரண்டு அமைப்புகளும் ஒருபோதும் இணையவில்லை.

இச்சச்சரவுகளுக்குத் தனிப்பட்ட வேறுபாடுகள்தான் காரணம் என்பது வெளிப்படையானதே. நாடு துறந்து வந்திருக்கின்ற இந்தியர்களுக்குத் தானே தலைவராக இருக்க வேண்டுமென்று அப்துர் ராப் பார்க் உறுதியோடிருந்தார். அதே சமயத்தில் பர்க்கத்துல்லா தன்னுடைய குழு மற்றும் அதனுடன் தொடர்புடைய இந்தியப் பிரிவை ஆதாரமாக வைத்து சுதந்திரத்தைக் கோரினார். சோவியத் ருஷ்யாவின் அதிகார பூர்வமான அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தற்காலிக அரசாங்கம் செய்த முயற்சிகள் இதை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டின.

''தனிப்பட்ட'' காரணத்தைத் தவிர அரசியல் காரணமும் இருந்தது. இந்தியப் பிரிவு திட்டவட்டமாக இடதுசாரித் திசையில் வளர்ச்சியடைந்தது. முகம்மது ஷாபிக் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இந்தியப் பிரிவின் பிரதிநிதியாகப் பங்கெடுத்தவர்), முகம்மது அலி, அப்துல் மஜீது ஆகியோரைப் போன்ற உறுப்பினர்கள்

தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று அழைக்கத் தொடங்கி யிருந்தார்கள்.

மேலும் இந்தியப் பிரிவின் உறுப்பினர்கள் புரட்சியின் முக்கியமான பிரச்சினைகளில் சிலவற்றைப் பற்றி ஒரு தெளிவுக்கு வரத் தொடங்கியிருந்தார்கள். இந்தியா சுதந் திரமடைவது பெருந்திரளான மக்களின், குறிப்பாக உழைக் கும் மக்களின் முழு அளவான போராட்டத்தின் மூலமாக மட்டுமே சாத்தியம் என்று அவர்கள் உணரத் தொடங்கி யிருந்தார்கள். இந்திய சகோதரர்களுக்கு என்ற தலைப் பில் இந்தியாவிலும் ருஷ்யாவிலுமுள்ள இந்தியர்களுக்காக இந்தியப் பிரிவினால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது: ''இம்மக்களும் (படைவீரர் களும் விவசாயிகளும்—ஆ-ர்) எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளர்களும் மட்டுமே இங்கிலாந்தின் ஏகாதி பத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் அழிக்க முடியும்.'' இந்தியாவை விடுவிப்பதில் சோவியத் ருஷ்யாவின் பாத் திரத்தைப் பற்றி இப்பிரிவு வேறு விதமான அணுகுமுறை யைப் பின்பற்றியது. சோவியத் ருஷ்யா ஆயுதங்களுடன் படையெடுக்க வேண்டும் என்று இப்பிரசுரத்தின் ஆசிரியர் கள் கோரவில்லை, சுதந்திரத்துக்காகப் போராடுகின்ற இந் திய மக்களுக்கு சோவியத் ருஷ்யா தார்மிக மற்றும் பொரு ளாயத உதவி அளிக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்த் தார்கள். ''இம்மக்களை (படைவீரர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள்—ஆ-ர்) கிளர்ந்தெழச் செய்யுங்கள், அவர்களிடம் செங்கொடியைக் கொடுங்கள். நீங்கள் செங் கொடியை உயர்த்துவதற்கு உங்களுடைய புதிய சகாவான சோவியத் ருஷ்யா இறுதி வரை உதவி செய்யும். தார்மிக அல்லது பொருளாயத ரீதியான எந்த உதவியும் உங்களுக்கு மாபெரும் பலனைக் கொடுக்கும்'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.).

புரட்சிகரப் பிரச்சாரம் முதன்மையாக உழைக்கும் மக் கள் மத்தியிலேயே நடைபெற வேண்டும், அது புதிய சோவியத் வாழ்க்கை முறையின் மீது மையம் கொண்டிருக்க வேண்டும் என்று நாடு துறந்து வந்த இந்தியப் புரட்சிக்கா ரர்களில் முதலில் அறிவித்தவர்கள் இந்தியப் பிரிவின் உறுப் பினர்களே. ''இப்புதிய வாழ்க்கையைப் பற்றி அனைத்துத் தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்களிடமும் தெரிவி

யுங்கள். இந்திய சுதந்திரம் நீடு வாழ்க! உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை நீடு வாழ்க!'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.).

இந்திய விடுதலையின் இயக்கு சக்தியாக இருக்க வேண்டியது எது, அதற்குப் பாடுபடுவது எப்படி, புரட்சியில் உழைக்கும் மக்களின் பாத்திரம் என்ன ஆகியவற்றைப் பற்றி இந்தியப் புரட்சிச் சங்கம் வேறு கருத்தைக் கொண்டிருந்தது. இந்த வேறுபாடுகளும் நாட்டைத் துறந்து வந்திருக்கின்ற இந்தியர்கள் மத்தியில் தலைமையைப் பெறுவதற்கு நடைபெற்ற தனிப்பட்ட போராட்டங்களும் சங்கத்துக்கும் ச.பி.க.வின் இந்தியப் பிரிவுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த வேறுபாடுகளுக்கு அடிப்படையாக இருந்தன.

நாடு துறந்து வந்த இந்தியர்கள் அரசியல் ரீதியில் அமைத்திருந்த குழுக்களின் கருத்துக்களை நாம் விவரித்தோம். இவை இந்தியாவின் விடுதலைக்கான பல்வேறு தீவிர தேசிய ஜனநாயகப் புரட்சிகரச் செயல்திட்டங்களை வெளியிட்டன. இவை அனைத்துமே அக்டோபர் புரட்சியின் தனி முத்திரையைத் தாங்கியிருக்கின்றன, முக்கியமான சோஷலிஸ்ட் போக்குகளை வெளியிடுகின்றன.

இந்திய தேசியப் புரட்சிக்காரர்களின் விருப்பார்வங்கள் இந்திய தேசிய விடுதலைக் கோரிக்கையுடன் இனி ஒரு போதும் முடிந்து விடவில்லை, அதற்கு மேலே சென்று விவசாயப் புரட்சியையும் பெருந்திரளான உழைக்கும் மக்களின் நன்மைக்காக நகரங்களிலுள்ள சுரண்டும் வர்க்கத்தினரின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற மற்ற நடவடிக்கைகளைப் பற்றியும் பேசின. ஆனால் அவர்களுடைய கொள்கை ஆவணத்தில் இப்பகுதி மிகவும் குறைவாக விரித்துரைக்கப்பட்டிருந்தது என்பது உண்மையே.

இந்தியப் புரட்சிக்காரர்களின் அரசியல் சிந்தனையின் வளர்ச்சியில் மிகப் பெரிய முன்னேற்றம், ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் தாக்கத்தின் விளைவாக அவர்கள் தேசிய விடுதலையை தீவிரமான ஜனநாயக மாற்றத்தின் அவசியத்துடன் இணைப்பதற்குத் தொடங்கியிருந்ததே. அப்துர் ராப் பார்க் 1920 ஜூலை 2இல் தாஷ்கன்டில் நிகழ்த்திய சொற்பொழிவில் இக்கருத்தைப் பொருத்தமான முறையில் வெளியிட்டார்: ''இந்தியப் புரட்சிக்காரர்களின் முன்புள்ள கடமைகள் இப்பொழுது தெளிவாகி விட்டன

—இந்தியப் பாட்டாளி மற்றும் விவசாயியின் உழைப்பை விடுவித்தல், அதைச் சாதிப்பதற்கு ஒரே ஒரு வழியே உண்டு—அது ஆங்கில நுகத்தடியிலிருந்து விடுதலை அடைவதே.''*

சோஷலிஸ்ட் கருத்து இப்பொழுது இந்தியப் புரட்சிக்காரர்களின் கண்ணோட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகியிருந்தது. ஆனால் அது பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் இன்னும் சமத்துவவாதத்தையும் பண்டைக்கால இந்தியாவின் கூட்டு வாழ்க்கை அமைப்புகளுக்குப் புத்துயிரளிப்பதையும் போதிப்பதாகவே இருந்தது.

ருஷ்யாவில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்த பிறகு பல கிழக்கு நாடுகளைச் சேர்ந்த தேசியப் புரட்சிக்காரர்கள் போல்ஷிவிச சித்தாந்தத்துடன் உடன்பாட்டைக் காட்டுவதற்காக தமது தேசியவாத செயல்திட்டங்களில் தீவிரவாத அம்சங்கள் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டார்கள். தம்முடைய புரட்சிகரப் பணியைத் தொடர்வதற்கு கம்யூனிஸ்ட் அகிலம் மற்றும் சோவியத் ருஷ்யாவின் பொருளாயத உதவியைப் பெறுவதற்கு இது உதவியாக இருக்கும் என்று சிலர் நம்பினார்கள். முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த இந்தியப் புரட்சிக்காரர்களில் ஒரு சிலர் இஸ்லாமுக்கும் கம்யூனிசத்துக்கும் அடிப்படையான கோட்பாடுகளில் உள்ள ஒற்றுமையைப் பற்றியும் காலனியாதிக்கத்துக்கு முந்திய இந்தியாவின் சமூக-பொருளாதார அமைப்புகளின் சோஷலிஸ்ட் தன்மையைப் பற்றியும் குறிப்பிட்ட பொழுது மார்க்சிய-லெனினிய போதனையைப் பின்பற்றுபவர்களை நெருங்கி வருகின்ற மனப்பூர்வமான விருப்பத்தை வெளியிட்டார்கள். இந்தியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சியும் நெடுங்கால நோக்கில் அதை ஒட்டியிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் அரசியல் முதிர்ச்சியும் எப்பொழுதுமே உயர்ந்த மட்டத்தில் இல்லாததால் அவர்கள் விஞ்ஞான கம்யூனிசத்துக்கும் குட்டி முதலாளித்துவ விவசாயி சோஷலிசத்தின் சமத்துவவாத மற்றும் கற்பனாவாதக் கருத்துக்களுக்கும் வேறுபாடு காண முடியவில்லை என்பது அவர்களுடைய குறை அல்ல. அவர்கள் முரணில்லாத ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக இருக்கின்ற பொழுதே

---

* **இஸ்வேஸ்தியா,** தாஷ்கன்ட், ஜூலை 4, 1920.

இத்திசையில் முதல் முயற்சிகளைச் செய்து கொண்டிருந் தார்கள். தமக்கும் விஞ்ஞான சோஷலிசத்துக்கும் இடை யிலுள்ள மொத்த தூரத்தை அவர்களால் கடக்க முடிய வில்லை என்றாலும் அதற்கு மனப்பூர்வமாக முயற்சி செய் தார்கள்.

அதே சமயத்தில் நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர் களில் கணிசமான பகுதியினர் இந்தியாவை வெளியிலிருந்து தான் விடுவிக்க முடியும் என்று தொடர்ந்து நம்பியது மட்டு மல்லாமல், அதுவே சரியானது என்று முன்னெப்போதை யும் காட்டிலும் அதிகமான உறுதியுடன் கருதினார்கள். சோவியத் அரசு நிறுவப்பட்ட பிறகு இக்கருத்தை நடை முறையில் நிறைவேற்றக்கூடிய சக்தி முதல் தடவையாகத் தோன்றி விட்டது என்று அவர்கள் நம்பினார்கள்.

## தனித்தனியாக இருந்த நாடு துறந்த இந்தியர்கள்

அரசியல் ரீதியில் அமைக்கப்பட்ட இந்தியப் புரட்சிக் காரர்களின் குழுக்களைத் தவிர தனிப்பட்ட இந்திய தேச பக்தர்கள் நூற்றுக் கணக்கில் சோவியத் ருஷ்யாவுக்கு வந் தார்கள். ஆப்கானிஸ்தானை (ஹிந்துகுஷ்) கடந்து பஸ்மாச் (குண்டர்) கும்பல்கள் செயல்பட்ட பொழுது, உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது சோவியத் பிரதேசத்துக்குள் நுழைவது மிகவும் ஆபத்தாக இருந்த படியால் அதைச் சமாளிப்பதற்காகப் புரட்சிக்காரர்கள் கூட்டம் கூட்டமாகப் பிரயாணம் செய்தார்கள்.* சோவியத்

---

* Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 27. இந்தப் புத்தகத்தில் ஆப்கா னிஸ்தான் வழியாக சோவியத் துருக்கிஸ்தானுக்கு (1920 செப்டெம்பர் மற்றும் அக்டோபரில்) சென்ற 80 இந்தி யர்களின் பிரயாண அனுபவங்களைப் பற்றி ரபீக் அகமது **மறக்க முடியாத பிரயாணம்** என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. தாஷ்கன்டுக்குப் போ கின்ற வழியில் சார்ஜோவில்தான் அந்தக் குழுவின் உறுப் பினர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து கொண் டார்கள். ''அடுத்த நபர் எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி அது வரை எங்களுக்கு எதுவும் தெரியாது'' என்று ரபீக் அகமது எழுதினார்.

ருஷ்யாவுக்கு (பிரதானமாக, சோவியத் துருக்கிஸ்தானுக்கு) வந்த இந்தியர்களில் மிகவும் அதிகமானவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தின் முஸ்லிம் அணியின், அதாவது கிலாபத் இயக்கத்தின் பிரதிநிதிகள். அதிகமான இந்தியர்கள் சோவியத் ருஷ்யாவுக்குப் பயணத்தை மேற்கொண்ட காரணங்களை பர்க்கத்துல்லா பிற்காலத்தில் (1921 டிசம்பரில்) பின்வருமாறு விளக்கினார்: ''அவர்களில் பலருக்கு சோஷலிசம் அல்லது கம்யூனிசத்துக்கு என்ன அர்த்தம் என்பதே தெரியா விட்டாலும் ருஷ்யா துருக்கிக்கும் இந்தியாவுக்கும் நண்பன் என்று அறிந்திருந்த படியால் உற்சாகத்தினாலும் ருஷ்யாவை நேசித்ததனாலும் வந்தார்கள்'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.).

டில்லியில் ஒரு செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த ஜப்பார், சத்தார் காய்ரி என்னும் பெயர்களைக் கொண்ட சகோதரர்கள், இந்திய முஸ்லிம் தலைவர்கள் 1918 நவம்பரில் மாஸ்கோவுக்கு வந்தார்கள். யுத்தத்தின் போது கான்ஸ்டான்டிநோபிளில் இந்திய முஸ்லிம்களின் கமிட்டி அமைக்கப்பட்டிருந்தபடியால் அவர்கள் அங்கேயிருந்து மாஸ்கோவுக்கு வந்திருக்கக் கூடும். மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளின் வழியாக வந்த பொழுது அவர்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இந்தியாவில் பிரிட்டிஷ் கொடுங்கோன்மையைக் கண்டித்து டென்மார்க் இடதுசாரி சோஷலிஸ்டுகளின் பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் பெர்லினுக்கு வந்த பிறகு ஜெர்மனியில் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் தூதராக இருந்த அ. அ. யோஃபேயின் தீவிரமான உதவியினால் சோவியத் எல்லைக்குப் போவதற்கு அனுமதி பெற்றார்கள். அவர்கள் எல்லைப் பகுதியை நடந்து கடந்தார்கள். சோவியத் பூமிக்கு வந்ததும் செஞ்சேனையின் சோதனைச் சாவடிக்குச் சென்றார்கள். ''தோழர்,'' ''போல்ஷிவிக்'' என்ற இரண்டு ருஷ்ய மொழிச் சொற்கள்தான் அவர்களுக்குத் தெரியும். அவை அவர்களுக்கு நுழைவு அனுமதிச் சொல்லாகப் பயன்பட்டன. செஞ்சேனை வீரர்கள் அவர்களை அருகிலிருந்த ரயில்வே நிலையத்துக்கு அனுப்பினார்கள். அதன் தலைவர் கோசரோகின் அவர்களை சிறப்பாக வரவேற்று மாஸ்கோவுக்கு

அனுப்பி வைத்தார். அவர் அயல் நாட்டு விவகாரத் துறை மக்கள் கமிசாரகத்துக்கு அனுப்பிய தந்தி சேருவதற்குக் காலதாமதமானபடியால் காயிரி சகோதரர்கள் மாஸ்கோவை அடைந்த பொழுது அவர்களை வரவேற்பதற்கு யாரு மில்லை. எனினும் பின்னர் அவர்கள் அன்புடனும் பாசத் துடனும் வரவேற்கப்பட்டனர்; விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த தூதர்களின் விடாப்பிடியான முயற்சி கௌரவிக்கப்பட்டது. ஐப்பாரும் சத்தாரும் முஸ்லிம் லீகின் இடது அணியைச் சேர்ந்தவர்கள்; பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு சோவியத் ருஷ்யா எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இந்த விருப் பம் அந்த சமயத்தில் இந்தியப் புரட்சிக்காரர்களிடம் பரவலாக இருந்தது. 1917ம் வருடத்தின் கடைசியில் டில் லியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் நகலையும் அவர்கள் கொண்டு வந் திருந்தார்கள். அது மிகவும் குறிப்பிடத்தக்க ஆவணம்; மாபெரும் அக்டோபர் புரட்சிக்கு இந்தியாவில் ஏற்பட்ட முதல் எதிரொலியில் இதுவும் ஒன்று என்று கூறலாம். புரட்சியின் வெற்றியைப் பற்றி மகிழ்ச்சி கலந்த வியப்பும் அதன் எதிர்காலத்தைப் பற்றி அக்கறையும் அத்தீர்மானத் தில் நிறைந்திருந்தன. ‘‘உங்கள் வெற்றி நீடித்திருக்க வேண்டு மென இந்தியா விரும்புகிறது... இங்கிலாந்துடன் நட்புக் கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறோம். நீங்கள் பிரகடனம் செய்திருக்கின்ற கோட்பாடுகளின் மீது நிறுவப்படுகின்ற ஜனநாயக ருஷ்யா தன்னுடைய மாபெரும் காலனிகளுக்குப் பக்கத்தில் இருப்பதை இங்கிலாந்து சகித்துக் கொள்ளாது.’’ அடுத்தபடியாக ருஷ்யக் குடியரசின் தலைவர்களுக்குச் சில அறிவுரைகள் கூறப்பட்டன. இவை அக்காலத்தில் இந்தியப் புரட்சிக்காரர்களின் குணாம்சமாக இருந்த தேசிய ஆணவப் போக்கைப் பிரதிபலித்தன. ‘‘நீங் கள் வெற்றியடைய வேண்டுமென்றால் சமரசம் செய்யக் கூடாது. இந்தியாவின் சுதந்திரம் உங்களுடைய செயல்திட் டத்தின் பகுதியாக, முக்கியமான பகுதியாகக் கூட இருக்க வேண்டும்... இந்தியா விடுதலை அடையாமல் உலகத்தில் ஜனநாயக ஆட்சி என்பது சாத்தியமல்ல; இந்தியாவின் முழு விடுதலை என்பதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிப்ப

தென்றுதான் அர்த்தம்.''* 1918 நவம்பர் 23ந் தேதியன்று லெனின் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். நவம்பர் 25ந் தேதியன்று பேராசிரியர் ஜப்பார் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் உணர்ச்சிகரமாகச் சொற்பொழிவாற்றினார். பிரதிநிதிகள் எழுந்து நின்று அவர்களை ஆரவாரத்தோடு வரவேற்றார்கள். ருஷ்யப் புரட்சியை ''இந்திய மக்கள் மற்றும் எழுபது மில்லியன் இந்திய முஸ்லிம்களின் சார்பில்'' வரவேற்பதாக ஜப்பார் கூறினார். போல்ஷிவிக்குகளின் தேசிய இனக் கொள்கையை இந்திய தேசபக்தர்கள் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவருடைய சொற்பொழிவு எடுத்துக்காட்டியது. இந்தியாவின் மீது அக்டோபர் புரட்சியின் மிக முக்கியமான தாக்கத்தை—அரசியல் போராட்டங்களிலிருந்து முன்பு ஒதுங்கியிருந்த பல பகுதியினர், குறிப்பாக முஸ்லிம் விவசாயிகள் அரசியல் வாழ்க்கையில் பங்கெடுக்கவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதற்கும் முன்வருதல்—அவர் சுட்டிக் காட்டினார்.

''ருஷ்யப் புரட்சி இந்திய மக்களிடம் மிக வன்மையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தேசிய இனங்களுக்குச் சுய நிர்ணயம் என்ற கோஷம் இங்கிலாந்தின் எல்லா முயற்சிகளையும் மீறி இந்தியாவை அடைந்து விட்டது... தங்கள் சமூகத்தின் கலாச்சார வளர்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்திய இந்திய முஸ்லிம்கள்... தங்களுடைய ஆற்றலை அரசியலுக்குத் திருப்பி புதிய காலடியை முன்னால் எடுத்து வைத்திருக்கிறார்கள்... அந்நிய ஆட்சியாளர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதில் மற்ற இந்திய மதச் சமூகங்களும் எங்களுடன் ஒத்துழைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று பேராசிரியர் ஜப்பார் கூறினார். ''மாபெரும் சுதந்திர நாடாகிய ருஷ்யாவின் சகோதரர்கள்'' ''இந்திய விடுதலை என்னும் இலட்சியத்துக்காக'' இந்தியர்களை நோக்கிக் ''கரம் நீட்டுவார்கள்''** என்று நம்புவதாகக் கூறி அவர் உரையை முடித்தார். அதன் பிறகு

---

* பெத்ரகிராத்ஸ்காயா பிராவ்தா, நவம்பர் 20, 1918.

** சவேத்ஸ்கயெ வஸ்தோக்கவேதினியெ, 1959, №2, பக்கங்கள் 10, 12; இஸ்வேஸ்தியா, நவம்பர் 24, 1918.

இந்தியர்கள் யா. ஸ்வெர்த்லோவிடம் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்தார்கள். இந்திய முஸ்லிம்களின் தூதுக்குழுவின் அறிக்கை என்னும் அந்த ஆவணம் இந்தியாவில் பிரிட்டனுடைய ஒடுக்குமுறை, கொள்ளை மற்றும் கொடுமையான கொள்கைகளை எண்ணற்ற விவரங்களுடன் விளக்கிக் கூறி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இந்திய மக்களின் பரிதாபகரமான நிலையை வர்ணித்தது. ''இந்திய மக்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர் செய்வதற்குத் துடிக்கிறார்கள்'', ''அவர்கள் அந்நிய ஒடுக்குமுறைக்குப் பணிந்துவிடவில்லை'', ''அவர்கள் இந்தியாவின் முழு சுதந்திரத்தைக் கோருகிறார்கள்'' என்று அறிக்கை பிரகடனம் செய்தது. இந்திய மக்கள், சோவியத் உதவியுடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை நாட்டிலிருந்து வெளியேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அறிக்கை முடிவடைந்தது. இந்த ஆவணம் குறிப்பாக இந்திய மக்களை அறைகூவுகின்ற பிரகடனமாக இருந்தது. எனவே இந்தியாவுக்குள் அதைப் பரப்புவது முக்கியமாயிற்று.

டிசம்பர் மாத ஆரம்பத்தில் இந்த அறிக்கை துருக்கிஸ்தான் சோவியத் குடியரசுக்கு தந்தி மூலம் அனுப்பப்பட்டது. அங்கே அது சில கீழ்த்திசை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு ஸ்தல மக்களிடம் விரிவாக வினியோகிக்கப்பட்டது. இந்த அறிக்கை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு இந்திய தேசபக்தர்களால் இந்தியாவுக்குள் கொண்டு வரப்பட்டது இயற்கையே.

இந்திய தேசபக்தர்கள் சோவியத் துருக்கிஸ்தானுக்குள் வருகின்ற இயக்கம் 1920இல் அதிகரித்தது. ''இந்தியப் புரட்சிக்காரர்களைக் கொண்ட குழுக்கள் துருக்கிஸ்தானுக்குள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன'' என்று துருக்கிஸ்தான் இஸ்வேஸ்தியா 1920 ஏப்ரல் 6இல் எழுதியது. ஒரு மாதத்துக்குப் பிறகு (மே 7இல்) ''இந்திய இனக் குழு மக்களின் பிரதிநிதிகள்'' முடிவில்லாமல் வந்து கொண்டிருப்பதாக அதே பத்திரிகை எழுதியது. இவை இந்தியர்களைக் கொண்ட சிறு குழுக்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள் தாஷ்கன்டிலும் துருக்கிஸ்தானின் சிறு நகரங்களிலும் குறிப்பாக அன்டிஜானிலும் ஓஷிலும் குடியேறினார்கள்.

செஞ்சேனை இதற்குள்ளாக உள்நாட்டு யுத்தப் போர்

முனைகளில் தீர்மானகரமான வெற்றிகளைப் பெற்றிருந் தது. 1919 செப்டெம்பர் நடுப் பகுதிக்குள் அது கல்ச்சாக்கின் படைகளை முற்றிலும் நசுக்கிவிட்டது, துருக்கிஸ்தானைச் சுற்றியிருந்த எதிரி வளையத்தை நொறுக்கி மத்திய ருஷ்யாவுடன் அதை இணைத்திருந்தது. ஆனால் பஸ்மாச் கோஷ்டிகள் இன்னும் சுற்றிக் கொண்டிருந்தபடியால் துருக் கிஸ்தான் பிரதேசத்தில் நடமாட்டம் இன்னும் ஆபத் தாகவே இருந்தபோதிலும் அது முன்னைக் காட்டிலும் குறைவே. இந்தியாவில் கிலாபத் இயக்கத்தின் வீச்சும் சக்தி யும் கணிசமாக அதிகரித்திருந்தன. இதை இந்திய தேசிய புரட்சிகர சக்திகள் சோவியத் குடியரசிற்கு செல்வதற்காகப் பரவலாகப் பயன்படுத்தின. இளம் தேசபக்தர்கள் இந்தி யாவை விட்டு வெளியேறுவதன் மூலம் பிரிட்டிஷ் கொடுங் கோன்மைக்குத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார் கள்.

ஸெவ்ர் உடன்படிக்கையின்படி அன்டான்டு அரசுகள் இஸ்லாமியத் துருக்கியைப் பங்கு போட்டுக் கொண்டிருந் தன; துருக்கி சுல்தான்—மதப்பற்றுடையவர்களின் காலிஃப்—நடைமுறையில் சிறைவைக்கப்பட்டிருந்தார். இந்த உடன் படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற முறையில் நாட்டி லிருந்து வெளியேறிச் செல்வது என்று டில்லியில் நடைபெற்ற கிலாபத் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அங்குதான் 1920 ஏப்ரல் 18ந் தேதியன்று முஜாகிர்களை (காலிஃபுக்கு விசுவாசமாக இந்தியாவிலிருந்து வெளியேறுபவர்கள்) ஆப் கானிஸ்தானுக்குள் வரவேற்பதாக எமீர் அமானுல்லா அனுப்பிய செய்தி வாசிக்கப்பட்டது. அரசியல் அடைக் கலம் தருவதுடன் எல்லா உதவிகளும் செய்வதாக அவர் வாக்குறுதியளித்தார். காபூல் அரசாங்கம் அப்படிச் செய் வது முக்கியமான பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாகும். மேலும் அதன் மூலம் ஆப்கன் மக்களின் விடுதலைப் போராட்டம் மேலும் தீவிரமடையக் கூடும். இந்த இயக்கத்தில் சுமார் 36,000 மக்கள் பங்கெடுத்தார் கள். இவர்களிடையே முஸ்லிம்கள் மட்டுமின்றி இந்துக் களும் இருந்தனர்.*

---

* *Documents of the History of the Communist Party of India*, Vol.1, pp. 36—37.

கிலாபத் கிளர்ச்சியின் போது இந்தியாவிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேறிச் சென்றதற்கு முக்கியக் காரணம் மதம் சம்பந்தப்பட்டது என்று பல பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். எனினும் இந்தியாவை விட்டு வெளியேறுகின்ற இயக்கம் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திடமிருந்து நாட்டை விடுவிப்பதற்கு மக்கள், குறிப்பாக குட்டி முதலாளித்துவ முஸ்லிம்கள் நடத்திய தீவிரமான அரசியல் நடவடிக்கை என்பது நன்கு புலப்படும். மேலும் அவர்கள் நாட்டை விடுவிப்பதற்கு ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு கிலாபத் பிரச்சினை ஒரு சந்தர்ப்பமாக அமைந்ததே தவிர, அது உண்மையான காரணமல்ல. 1919—1922ம் வருடங்களின் போது கிலாபத் இயக்கத்தின் முன்னணிச் சித்தாந்தியாகவும் தலைவராகவும் இருந்த முகம்மது அலி இக்கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

1920 செப்டெம்பரில் ஸெவ்ர் உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஒரு கிலாபத் தூதுக் குழு அன்டான்டு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தது. இந்த தூதுக் குழுவின் தலைவராக இருந்த முகம்மது அலி சுற்றுப் பயணத்துக்குப் பிறகு ''கிலாபத்திற்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதிகளைப் பற்றிய பிரச்சினையைக் காட்டிலும் இந்தியாவின் விடுதலை எனக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இந்திய முஸ்லிம்களின் புண்படுத்தப்பட்ட மத உணர்ச்சி இந்தியா இந்தியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற பொழுதுதான் குணமடையும்''* என்று கூறினார். பெருந்திரளான முஸ்லிம் மக்கள் நாடு துறந்து வெளியேறிய இயக்கத்தின் பிரிட்டிஷ் எதிர்ப்பு, விடுதலைக் குணாம்சத்தின் காரணமாக முஸ்லிம் அல்லாத இளம் தேசபக்தர்கள் அதில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டார்கள். இந்த இயக்கத்தில் பங்கெடுத்தவரும் பிற்காலத்தில் இந்தியாவில் முக்கியமான கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவராக இருந்தவருமான ஷௌகத் உஸ்மானி பின்வருமாறு எழுதினார்: ''பெருந்திரளான மக்கள் நாட்டைத் துறந்து ஆப்கானிஸ்தானுக்குச் செல்கின்ற இயக்கம் 1920 மே

---

* *Civil and Military Gazette*, October 9, 1920.

மாதத்தில் ஆரம்பமாயிற்று. அதில் பங்கெடுத்தவர்கள் முஸ்லிம்கள் மட்டுமில்லை. ஏராளமான இந்து இளைஞர்கள் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து முஸ்லிம் பெயர்களை வைத்துக் கொண்டு ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து சோவியத் யூனியனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.''* நாடு துறந்து செல்கின்ற இயக்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக, அதைத் தீவிரப்படுத்தி தீர்மானகரமான ஆயுதமேந்திய நடவடிக்கையாக மாற்றும் திட்டமாக இருந்தது. ''இந்தியர்கள் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றது அந்த நாட்டிலிருந்து இராணுவ உதவியையும் ஆயுதங்களையும் பெற்று'' பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ''ஒருவிதமான கொரில்லா யுத்தத்தை ஆரம்பிப்பதற்காகவே''** என்று ஷௌகத் உஸ்மானி மேலும் எழுதுகிறார்.

ஆகவே முஜாகிர்கள் காபூலுக்கு வர ஆரம்பித்தார்கள். ஆப்கானிஸ்தானிலிருந்த இந்தியர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துக் கொண்டிருந்தது. இந்தியாவின் முழு விடுதலைக்குப் போராடியவர்கள் அனைவரும் அக்டோபர் புரட்சியின் தாக்கத்தில் ஒடுக்குமுறையை எதிர்த்து அங்கே நடைபெற்றிருக்கின்ற வெற்றிகரமான போராட்டத்தின் அனுபவத்தை ஆராய்வதற்கு அங்கே போக வேண்டும், இந்தியாவின் விடுதலைக்கு அதன் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நெடுங்காலமாகவே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சாதகமான நிலைமைகளை இந்த இயக்கம் ஏற்படுத்தியது. போல்ஷிவிக்குகள் புரட்சிகர இயக்கங்களை ஆதரிக்கிறார்கள் என்று 1919இல் படித்தவுடனே ருஷ்யாவுக்குப் போவதற்கு ஒரு வழியைத் தேடினேன், அப்படி முயன்றது நான் ஒருவன் மட்டுமல்ல என்று இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஷௌகத் உஸ்மானி தன்னைப் பற்றி எழுதுகின்ற பொழுது குறிப்பிட்டார். எல்லையைத் தாண்டி சோவியத் ருஷ்யாவுக்குள்ளே போக வேண்டும் என்று விரும்பிய முஜாகிர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது. அக்டோபர் புரட்சியைப் பற்றி அதிகமான தகவல்கள் இந்தியாவைக் காட்டிலும்

---

* Shaukat Usmani, "Russian Revolution and India", *Mainstream*, July 1, 1967, p. 14.

** Ibid.

ஆப்கானிஸ்தானில் இந்தியர்களுக்குக் கிடைத்தன. காபூலிலிருந்த சோவியத் தூதரகம் அக்கறை கொண்டவர்களுக்கு எல்லா விவரங்களையும் தெரிவிக்கத் தயாராக இருந்தது. மேலும் சோவியத் யூனியனுக்கு ஏற்கெனவே சென்று திரும்பிய இந்தியப் புரட்சிக்காரர்கள், லெனினுடன் உரையாடியவர்கள், தங்கள் நாட்டவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது தங்கள் கடமை என்று கருதியவர்கள் சிலர் அங்கே இருந்தார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களின் பலனாக இந்தியப் புரட்சிக்காரர்கள் சோவியத் குடியரசுக்குப் போவது அதிகரித்தது. உதாரணமாக, ரபீக் அகமது—இவர் ஷௌகத் உஸ்மானியைப் போல இந்தியர்களின் முதல் குழுவுடன் தாஷ்கண்டுக்கு நடந்து சென்றவர்—1919 டிசம்பரில் மாஸ்கோவிலிருந்து திரும்பிய திருமலாச்சார்யாவும் அப்துர் ராப் பார்க்கும் காபூலில் இளம் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் மத்தியில் விளக்கச் சொற்பொழிவுகளில் அதிக நேரத்தைக் கழித்ததாகக் கூறினார். ''ருஷ்யாவில் புரட்சி நடைபெற்றிருக்கிறது, நாங்கள் அங்கே சென்றால் பல விஷயங்களைப் பார்க்க முடியும், கற்றுக் கொள்ள முடியும். அங்கே போவது அவசியம் என்று நாங்கள் உடனடியாக ஒத்துக்கொண்டோம். அந்த நேரத்திலிருந்து நாங்கள் புரட்சி செய்த நாட்டுக்குப் போகக்கூடிய வழிகளைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தோம்''* என்று ரபீக் அகமது எழுதினார்.

கிலாபத் இயக்கம் அடிப்படையாகவே ஒரு புதிய அம்சத்தை ஏற்படுத்தியது. நூற்றுக்கணக்கான இந்தியப் புரட்சிக்காரர்கள் நாட்டைத் துறந்து அக்டோபர் புரட்சியின் பூமிக்குச் செல்கின்ற, இந்தியாவின் விடுதலையை சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி என்ற கருத்துடன் இணைக்கின்ற உணர்வு பூர்வமான இயக்கமே அந்த அம்சமாகும். அவர்கள் சோவியத் ருஷ்யாவின் உழைக்கும் மக்களிடம் காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்திற்கு உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்தார்கள்; சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர்களுடைய வெற்றிகரமான

---

* Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 16.

அனுபவத்தை அறிந்து கொள்ள விரும்பினார்கள். ''ஆப் கானிஸ்தானுக்கு வந்திருப்பவர்களில் மிகவும் அதிகமான பெரும்பான்மையினர் தம் வீடுகளை விட்டுப் புறப்படு வதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே சோவியத் ருஷ்யாவின் மீது நம்பிக்கைகளைக் குவித்திருந்தார்கள் என்று சொன் னால் அது மிகையானதல்ல''* என்று ஷௌகத் உஸ்மானி எழுதினார்.

எனினும் கிலாபத் இயக்கத்தில் மிகவும் உறுதியான முஸ்லிம்களில் கணிசமான எண்ணிக்கையினர் பிரிட்டன் மற்றும் அன்டான்டு நாடுகளுக்கு எதிரான யுத்தத்தில் கமால் ஆதரவாளர்களுடன் சேருவதற்காக அனட்டோலியாவுக்குள் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். துல்லிய மாக இதே சமயத்தில் கிலாபத் இயக்கத்தின் தலைவர்கள் பிரிட்டனை எதிர்த்து காந்திய அகிம்சை வழிகளைக் கடைப்பிடிப்பதை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தலைவர்கள் எதை விரும்பிய போதிலும் அந்த இயக்கத் தில் ஈடுபட்டிருந்த மக்கள் திரளினர் பிரிட்டிஷ் ஏகாதிபத் தியத்தை எதிர்த்து முழு அளவிலான போராட்டத்தை நடத்த விரும்பினார்கள், வெறும் அகிம்சை வழி எதிர்ப்பு முறைகளைப் பற்றி அதிருப்தியடைந்தார்கள், சோவியத் ருஷ்யாவுக்கும் அனட்டோலியாவுக்கும் அணிவகுத்துச் செல் கின்ற உத்தேசத்தை அறிவித்ததன் மூலம் தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். ஷௌகத் உஸ்மானி யின் நினைவுக் குறிப்புகள் **பெஷாவரிலிருந்து மாஸ்கோ வரை** என்ற தலைப்பில் 1927இல் வெளியிடப்பட்டன. அப்புத்தகத்தில் அவர் பின்வருமாறு எழுதியிருந்தார்: ''1920இல் இந்தியாவின் அரசியல் கடலில் பொங்கி யெழுந்த ஹிஜ்ராத் அலை பஞ்சாபின் நிலமில்லாத விவசாயி களையும் பெட்டிக்கடைக்காரர்களையும் மட்டுமின்றி சுதந் திரத்தைப் பற்றி தெளிவான கருத்துக்களைக் கொண்டிருந்த அறிவுப் பகுதியினரில் சிலரையும் வெகு தூரத்திலுள்ள நாடுகளுக்கு இழுத்துச் சென்றது. இந்த அறிவுப் பகுதியினர் இந்திய தேசிய இயக்கத்தின் இடதுசாரி அணியின் பகுதி யாக இருந்தவர்கள், அகிம்சை பூர்வமான ஒத்துழையாமை

---

* Shaukat Usmani, "Russian Revolution and India", *Mainstream*, July 1, 1967, p. 14.

இயக்கச் செயல்திட்டத்தை ஏற்க அவர்களால் இயல வில்லை''*.

ஆனால் முஜாகிர்களின் முதல் மற்றும் இரண்டாவது குழுவினர் முதன்மையாக சோவியத் துருக்கிஸ்தானுக்குள் நுழைய உத்தேசித்தார்கள். முதல் குழு அங்கே தங்கியிருப் பதற்கு விரும்பியது. இரண்டாவது குழு சோவியத் பிரதே சத்தின் வழியாகச் சென்று போராடிக் கொண்டிருக்கும் துருக்கியை அடைய விரும்பியது. அதாவது துருக்கிக்குப் போவதற்கு சோவியத் அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்த்தது. சோவியத் அதிகாரிகள் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இரயில் வழியாக இலவசப் பயணச் சலுகையளித்ததுடன் உணவு, உடைகள், இதரவற் றையும் கொடுத்து இயன்ற உதவி அனைத்தையும் செய் தார்கள்.

வடக்கு எல்லையைக் கடப்பதற்கு அனுமதி அளிக்கும் படி இந்தியர்கள் ஆப்கானிஸ்தானின் அதிகாரிகளிடம் இரண்டு தடவை அதிகார பூர்வமாகக் கேட்டுக் கொண் டார்கள். ஆனால் இங்கிலாந்துடன் உறவுகள் பாதிக்கப் படும் என்ற அச்சத்தில் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் தயங்கியது. சில இந்தியர்கள் ''சோவியத் நாட்டுக்குப் புறப்பட முடியுமா என்று கவலையடைந்தார்கள்''** என்று ரபீக் அகமது கூறினார். இந்தியர்கள் மூன்றாவது தடவை யாக இறுதி விண்ணப்பம் சமர்ப்பித்தார்கள்; அனுமதி கொடுக்காவிட்டாலும் நாங்கள் புறப்படுவோம் என்ற எச் சரிக்கைக் குறிப்பு அதில் தொனித்தது.***

கடைசியில் அவர்களுக்கு அனுமதி கிடைத்தது. இந் தியப் புரட்சிச் சங்கத்தின் முதல் குழுவைத் தொடர்ந்து 89 இளம் இந்தியர்களைக் கொண்ட இரண்டாவது குழு தெர்மேசுக்குப் புறப்பட்டது. முகம்மது அக்பர் கான் அதற்குத் தலைமை தாங்கினார். மஸார்-இ-ஷரீப் என்ற ஆப்கானிஸ்தான் நகரத்திலிருந்த சோவியத் கான்ஸல் அலு வலகம் அவருக்கு 1920 ஆகஸ்ட் 28இல் பின்வரும் அடை யாளச் சான்றிதழை அளித்தது: ''ருஷ்ய சோவியத் சமஷ்டி

---

* *Documents of the History of the Communist Party of India*, Vol. 1, p. 36.

** Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 17.

*** Ibid.

சோஷலிசக் குடியரசு வழியாக தாஷ்கன்டுக்குப் போகின்ற 89 நபர்களைக் கொண்ட இக்குழு தடங்கலின்றிப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.'' இதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு இதைப் போன்ற ஒரு பெரிய குழு சோவியத் துருக்கிஸ்தானுக்குப் புறப்பட்டுச் சென்றது*. சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலிடமிருந்து அதிகாரபூர்வமான செய்தி நவம்பர் 10இல் மாஸ்கோவுக்கு வந்து சேர்ந்தது: ''இங்கே (தாஷ்கன்டில்—ஆ-ர்) சுமார் 100 இந்தியப் புரட்சிக்காரர்கள் இருக்கிறார்கள்; இன்னும் 600 நபர்கள் தெர்மேசில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.). உத்தேசமாக ஒரு மாதத்துக்குப் பிறகு, 1920 டிசம்பர் 15 வாக்கில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோ கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியிடம் பின்வருமாறு தெரிவித்தது: ''ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆறு வாரங்களில் சுமார் 200 நபர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் கிலாபத் இயக்கத்தை ஒட்டி இந்தியாவிலிருந்து வெளியேறியவர்கள்.'' இவர்கள் குடியமர்த்தப்பட்டிருந்த நகரங்களின் பெயர்கள் தெரிவிக்கப்படவில்லை.

புஹாரா நகரம் எமீரின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு ஏராளமான இந்தியர்கள் இங்கே சென்றார்கள். ''பழைய புஹாரா நகரத்தில் சுமார் 150 இந்திய முஸ்லிம்களும் 20 வங்காளிகளும் இருக்கிறார்கள்'' என்று 1921 மார்ச்சில் புஹாராவில் சோவியத் தூதரக காரியாலயத்தின் செய்தி இலாகா தலைவர் ஃபிராட்கின் ச.பி.க.வுக்குத் தெரிவித்தார். 1920 கடைசியில் தாஷ்கன்டில் சுமார் 100—110 நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் இருந்தார்கள் எனலாம். பல இந்தியர்கள் அன்டிஜானில் வசித்துவந்தார்கள்.**

* Ibid., pp. 17, 19.

** தற்காலிக அகில இந்தியப் புரட்சிகரக் கமிட்டியின் அறிக்கையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: ''10—15 வருடங்களுக்கு முன்னர் ருஷ்யாவுக்கு வந்த இந்தியர்களைக் கொண்ட சிறு காலனி அன்டிஜானில் இருந்தது. இவர்கள் சிறு அளவில் வர்த்தகம் மற்றும் வியாபாரம் செய்தார்கள்... அவர்களிடம் பிரச்சாரம் செய்யப்பட்டது.'' அதன் பலனாக சுமார் 25 இளைஞர்கள் இந்தியப் புரட்சிக்காரர்களுடன் சேர்ந்து வேலை செய்ய ஒத்துக்கொண்டார்கள்.

செஞ்சேனை பாக்கூவை விடுவித்த பிறகு இந்தியர் களைக் கொண்ட பெரிய குழு ஒன்று அங்கே கூடியது. அந்தக் குழுவில் பெரும்பான்மையினர் துருக்கி, இரான் மற்றும் இராக்கில் இருந்த பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு படையி லிருந்து ஓடி வந்தவர்களே. மேலும் எவ்விதத்திலாவது அனட்டோலியாவுக்குச் சென்று கமால் ஆதரவாளர்களுடன் சேருவதற்குப் பாடுபட்ட இந்தியர்களும் இருந்தார்கள்; இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்தும் இரானிலிருந்தும் வந்த வர்கள். அஸர்பைஜான் மத்திய செய்தி ஏஜன்சியின் சார்பில் ஒரு இந்தியப் பிரிவு 1920 ஜுன் 1இல் பாக்கூவில் அமைக்கப்பட்டது. அவர்கள் சோவியத் பிரச்சார வெளி யீடுகளை உருது, ஹிந்தி, புஷ்டூ, அராபிக் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுகின்ற வேலையைச் செய்து வந்தார்கள். அவர்கள் ஆஜாத் ஹிந்துஸ்தான் (''சுதந்திர இந்தியா'') என்ற பெயரில் மாதமிருமுறைப் பத்திரிகை யையும் உருது மொழியில் வெளியிட்டார்கள். அப்பத்தி ரிகை இஸ்லாமியக் கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் மற்றும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தது, சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணிக்கும் நட்புறவுக்கும் பாடுபட்டது. ஆஜாத் ஹிந் துஸ்தான் பத்திரிகையின் 1920 அக்டோபர் இதழில் கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் முதல் காங்கிரசைப் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன.*

அக்டோபர் புரட்சியின் தாக்கத்துக்கு முஸ்லிம்கள்தான் உட்பட்டிருந்தார்கள், அவர்கள்தான் சோவியத் ருஷ்யா வுக்குச் சென்றார்கள் என்று இந்திய முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர் ஜி. பாந்த்யோபாத்யாயா கூறுகிறார். ஆனால் அவரே தன் சொந்தக் கருத்துகளையே மறுப்பது போல் ஷிப்நாத் பானர்ஜி என்ற இந்துவைப் பற்றி பயன் மிக்க தகவல்களை எழுதியிருக்கிறார். ஷிப்நாத் பொறி யியல் பயிற்சி பெறுவதற்கு ஜெர்மனிக்குப் போவதற்காக காபூலுக்குச் சென்றார். ஆனால் அவர் காபூலில் கம்யூ னிஸ்ட் புத்தகங்களைப் படித்த பிறகு தன் முடிவை மாற்றிக் கொண்டார். 1922இல் ஒரு இந்தியர் குழுவில் சேர்ந்து சோவியத் ருஷ்யாவுக்குச் சென்றார். அங்கே கீழை நாடு

* அ. பு. ப. ம. அ. ஆ. கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 44, தாள் 6.

களின் உழைக்கும் மக்கள் பல்கலைக்கழகத்தில் படித்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரவில்லை என்ற போதிலும் மார்க்சியவாதியாக இருந்தார்.* இந்தியாவிலிருந்து வந்த முஸ்லிம்களுக்கு ஆப்கானிஸ்தான் அரசாங்கம் அடைக்கலம் தர மறுத்தபடியால் அவர்கள் சோவியத் ருஷ்யாவுக்குச் சென்றார்கள் என்று பாந்த்யோபாத்யாயா கூறுகிறார்.** ஆனால் அது உண்மையல்ல. ஷிப்நாத் உள்பட அந்தக் குழுவினர் அனைவரும் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டது. அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பியிருந்தால் எத்தகைய ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. ஆனால் அவர்கள் சோவியத் ருஷ்யாவுக்குச் சென்றார்கள். அதன் மூலம் அவர்கள்—பிரிட்டிஷ் அதிகாரிகளின் கருத்துப்படி—குற்றவாளிகளானார்கள். ஷிப்நாத் ஜெர்மனியில் பொறியியல் பயிற்சி பெற வேண்டும் என்ற நெடுங்காலக் கனவைக் கைவிட்டார். அவர் சோவியத் ருஷ்யாவில் இரண்டு வருடங்கள் தங்கியிருந்து 1925ல் இந்தியாவுக்குத் திரும்பினார். பிற்காலத்தில் பிரபலமான தொழிற்சங்கத் தலைவராக வளர்ச்சியடைந்தார். அக்டோபர் புரட்சி சாதாரண இந்தியர்களின் சிந்தனையை எப்படி பாதித்தது, அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைப் பணியை எப்படி மாற்றியது என்பதை ஷிப்நாத் பானர்ஜியின் வாழ்க்கை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்துக்கு ஆப்கானிஸ்தான் அரசாங்கம் பணிந்து இந்தியாவிலிருந்து வருகின்றவர்களுக்கு தடை விதிக்காமலிருந்திருந்தால் அவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும். ''பஞ்சாப் மற்றும் பெஷாவரிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளின் முதல் குழுவான அறுநூறு நபர்களில் எண்பத்தைந்து பேர்கள் தாஷ்கன்டுக்கு விரைவில் வந்து சேருவார்கள்''*** என்று துருக்கிஸ்தான் மத்திய நிர்வாகக் கமிட்டியின் வெளி விவகார இலாகா மாஸ்கோவிலுள்ள அயல் நாட்டு விவ

* J. Bandyopadhyaya, *Indian Nationalism versus International Communism*, Calcutta, 1966, p. 131.

** Ibid., p. 132.

*** சோவியத் இராணுவ மத்திய அரசு ஆவணக் காப்பகம் (சோ. இ. ம. அ. ஆ. கா.), தொகுப்பு 110, பட்டியல் 1, பத்திரம் 96, தாள் 50.

காரத் துறை துணைக் கமிசார் எல். எம். கரஹானுக்கு 1920 ஆகஸ்ட் 13இல் தெரிவித்தது. இத்தகவலுக்கு ஒரே ஒரு அர்த்தமே உண்டு. 600 நபர்கள் புறப்படுவதற்குத் தயாராக இருந்திருக்க வேண்டும், ஆனால் அவர்களில் 85 அல்லது (மற்ற செய்திகளின்படி) 89 நபர்கள் மட்டுமே பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். ''ருஷ்யாவுக்குப் போய்க் கொண்டிருந்த 500 இந்தியர்களை ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் மஸார்-இ-ஷரீபில் கைது செய்து விட்டார்கள்'' என்று இந்தியப் புரட்சிக்காரரான முகம்மது சாதிக் 1921 ஏப்ரல் 27இல் சார்ஜோவிலிருந்து செய்தி அனுப்பினார். ''1921 ஏப்ரல் கடைசியில் இந்தியாவிலிருந்து 36 இந்தியர்கள் யார்க்கண்ட் மற்றும் கஷ்காரியா வழியாக ருஷ்யாவுக்கு வந்து கொண்டிருந்த பொழுது பிரிட்டிஷ் தூதருடைய உத்தரவின்படி இந்தியாவுக்குத் திருப்பிக் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்கள் நம் நாட்டுக்கு வந்து கொண்டிருந்ததாகக் கருதப்படுகிறது'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.) என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் பிரதிநிதியாக அன்டிஜானிலிருந்த ஷ்கோல்னிக் 1921 மே 18இல் தாஷ்கன்டுக்குத் தகவல் அனுப்பினார்.

ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் அந்த நாட்டை விட்டுப் போகின்ற குழுக்களின் அமைப்பிலும் கூடத் தலையிட்டார்கள் என்று கருதுவதற்கு இடமுண்டு. இக்குழுக்களில் சோவியத் ருஷ்யாவைக் காட்டிலும் துருக்கிக்குச் செல்ல விரும்புபவர்களே மிக அதிகமாக இருக்கின்ற வகையில் அவர்கள் தங்களாலியன்ற எல்லாவற்றையும் செய்தார்கள். மேலும் துருக்கிஸ்தானில் ஏற்கெனவே வசித்துக் கொண்டிருந்த இந்தியர்கள் விரைவாக இந்தியாவுக்குப் போக தாஷ்கன்டிலிருந்த ஆப்கானிஸ்தான் கான்ஸல் அலுவலகம் எல்லா முயற்சிகளையும் செய்தது. உதாரணமாக இந்தியப் புரட்சிக் கமிட்டியின் சார்பில் எம். என். ராய் கையெழுத்திட்ட அறிக்கையில் பின்வரும் விவரம் இடம் பெற்றிருக்கிறது: ''தாஷ்கன்டிலிருந்த இந்தியர்கள் ருஷ்யப் பரப்பில் செயல்படுவதற்கு தடை செய்ய முயலும் முகமாக இவர்கள் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பும்படி செய்வதற்கு ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் எல்லா முயற்சிகளையும் செய்தார்கள்... அவர்கள் இந்தியர்களுக்குப் பணமும் குதிரை

களும் பாஸ்போர்ட்டுகளும் கொடுத்தார்கள்; இராணுவப் பயிற்சி நிலையத்தின் மாணவர்களைக் கூட தாஷ்கன்டி லிருந்து போகும்படி செய்வதற்குப் பாடுபட்டார்கள்.''* சோவியத் ருஷ்யாவுக்கு எப்படியாவது போய்விட வேண் டும் என்று பல இந்தியர்கள் தீவிரமான உறுதி கொண் டிருந்ததையும் அவர்களில் சுமாராக எவ்வளவு பேர்களால் சோவியத் குடியரசுக்குள் நுழைய முடிந்தது, அங்கே சில காலம் வசிக்க முடிந்தது என்பதையும் மேற்கூறிய விவரங் கள் ஓரளவுக்காவது எடுத்துக்காட்டுகின்றன.

நாடு துறந்த இந்தியர்களில் சுமார் பாதி நபர்கள் இயன்ற வரை சீக்கிரமாக துருக்கிக்குப் போக விரும்பி னார்கள். எனவே இந்தியர்கள் சோவியத் மத்திய ஆசியா விலிருந்து காக்கசசுக்கு, பாக்கூவுக்குத் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருந்ததைப் போலவே எதிர்த்திசையிலும் —தாஷ்கன்ட் வழியாக ஆப்கானிஸ்தானுக்கும் தொடர்ச்சி யாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லா இந்தியர்களுமே துருக்கிக்குள் போக முடியாமல் பாக்கூ வுக்குத் திரும்பி வந்தார்கள். ஏனென்றால் துருக்கி அதி காரிகள் இந்தியர்களை நாட்டுக்குள் அனுமதிக்க மறுத்தார் கள்.**

---

* அ. பு. ப. ம. அ. ஆ. கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 4.

** அஸர்பைஜானிலிருந்த துருக்கிய கான்ஸல் அலுவல கம் 33 நாடு துறந்த இந்தியர்களை ''அனட்டோலியாவுக் குள் அனுப்புவதற்கு உதவி செய்ய இயலாது என்று கரு தியது, அவர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கிழக்கில் பிரச்சாரம் மற்றும் நடவடிக்கைக்குரிய பாக்கூ கவுன்சில் 1921 பிப்ரவரி 9இல் தாஷ்கன்டுக்குத் தெரிவித்தது. இது போன்று இன் னும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அனட்டோலியாவின் அதிகாரிகள் பல காரணங்களால் இப்படி நடந்து கொண் டிருக்கலாம்.

அனேகமாக கமால் ஆதரவாளர்களுக்கு நிறைய ஆள் பலம் தேவைப்படவில்லை போலும். கிலாபத் இயக்கத் தைச் சேர்ந்தவர்களின் அரசியல் உறுதியைப் பற்றி அவர் கள் சந்தேகப்பட்டிருக்கலாம். ஏனென்றால் அன்டான்டு அரசுகளை மட்டும் கமால் புரட்சி எதிர்க்கவில்லை, கிலாபத் இயக்கத்தின் இலட்சியச் சின்னமான சுல்தானையும் அது எதிர்த்தது. மேலும் சோவியத் ருஷ்யாவின் வழியாகப்

ஆனால் சோவியத் குடியரசில் நுழைந்த இந்தியர்கள் முற்றிலும் வேறு முறையில் வரவேற்கப்பட்டார்கள். துருக்கிஸ்தானிலும் பாக்கூவிலும் மற்ற இடங்களிலும் இராணுவ மற்றும் சிவில் இலாகா அதிகாரிகள் அவர்களுக்கு ஆரவாரமான, மனந்திறந்த வரவேற்பளித்தார்கள். உள்நாட்டில் புரட்சியைச் செய்தவர்கள், இந்தியர்களைத் தம்முடைய சக தோழர்களாகக் காண விரும்பியவர்கள், அவர்களுக்கு உடனே உதவி செய்யத்துடித்தவர்கள் இத்தகைய வரவேற்பளித்தது முற்றிலும் இயற்கைதானே. இந்தியர்களடங்கிய குழு தெர்மேஸ் கோட்டையை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது அக்கோட்டையிலிருந்த செஞ்சேனை வீரர்களும் அதிகாரிகளும் வாத்தியங்கள் முழங்கத் தங்களைச் சிறப்பான முறையில் வரவேற்றுக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றதாக ரபீக் அகமது பிற்காலத்தில் எழுதியிருக்கிறார்.*

சோவியத் ருஷ்யாவுக்கு வருவதற்கு இவ்வளவு நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியிருந்த சூழ்நிலையில் இந்தியர்கள் வந்தது சோவியத் ருஷ்யாவின் ஈர்ப்பு சக்தி மிகவும் அதிகமாக இருந்ததைத்தான் உண்மையாகவே எடுத்துக் காட்டுகிறது. முகம்மது அக்பர் கான் தலைமையில் வந்த ஒரு குழுவின் அனுபவங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இந்தியர்கள் தெர்மேசிலிருந்து அமுதார்யா ஆற்றின் வழியாகப் புறப்பட்ட பொழுது கெர்க்கி கோட்டைப் பிரதேசத்தில் ஒரு ப்ஸ்மாச் கும்பல் அவர்களைச் சிறைப் பிடித்து அவர்களிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டது. அவர்கள் இருபத்தைந்து நாட்கள் சிறைவைக்கப்பட்டு, அடி, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்களில் பதினொரு நபர்கள் மிருகத்தனமான முறையில் கொல்லப்பட்டார்கள். சில முஜாகிர்கள் ஆப்கானிஸ்தானுக்குத் தப்பியோடினார்கள். கொள்ளைக்காரர்கள் எஞ்சியிருந்த இந்தியர்களைச் சுட்டுக் கொல்வதற்கு முயற்சித்த

---

பிரயாணம் செய்து வந்திருக்கின்ற இந்தியர்கள் துருக்கிய மக்களிடம் போல்ஷிவிக் செல்வாக்குப் பரவுவதற்கு மற்றொரு தோற்றுவாயாக இருப்பார்கள் என்று கமால் ஆதரவாளர்கள் அஞ்சினார்கள்.

* Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 19.

பொழுது செஞ்சேனையின் படை அங்கே வந்தபடியால் கொள்ளைக்காரர்கள் இந்தியர்களை விட்டுவிட்டுத் தப்பியோடினார்கள். இந்தியர்கள் அன்புடன் வரவேற்கப்பட்டு கெர்க்கி கோட்டைக்குள் கூட்டிச் செல்லப்பட்டார்கள்.* இந்தியர்களின் துன்பங்கள் இத்துடன் முடிந்துவிடவில்லை. வெகு விரைவில் எண்ணற்ற பஸ்மாச் கும்பல்கள் கெர்க்கி கோட்டையைத் தாக்கின. இந்தியர்களில் சிலர் செஞ்சேனை வீரர்களுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சிக்காரர்களை எதிர்த்துத் தாக்கினார்கள். அமுதார்யாவை ஒட்டிய பிரதேசத்தைக் காப்பதற்கு ஏழு நாட்கள் நடைபெற்ற சண்டையில் பங்கெடுத்தார்கள்.** ''கோட்டையைக் காப்பாற்றுகின்ற வரை நாங்கள் தொடர்ந்து சண்டையிட்டோம்'' என்று ஷௌகத் உஸ்மானி 1922இல் எம். என். ராய்க்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்தார் (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.). எதிரியின் தாக்குதல்களை முறியடித்த பிறகு கோட்டையில் குறைவான எண்ணிக்கையிலிருந்த வீரர்கள் எதிர்த்தாக்குதலைத் தொடங்கினார்கள். பின்வாங்கி ஓடிய எதிரிகளை விரட்டிச் செல்வதில் ரபீக் அகமது***, ஷௌகத் உஸ்மானி, மஸூத் அலி ஷா என்னும் பெயர்களைக் கொண்ட மூன்று இந்தியர்களும் பங்கெடுத்தார்கள். முதலில் சொல்லப்பட்ட இருவரும் பிற்காலத்தில் கம்யூனிஸ்டுகளானார்கள்.

முகம்மது அக்பர் கான் தலைமையிலிருந்த குழு பல உறுப்பினர்களை இழந்த நிலையில் அக்டோபர் 22இல் சார்ஜோவுக்கு வந்து சேர்ந்தது. ''73 இந்தியப் புரட்சிக்காரர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். இன்று பின்னேரத்தில் அவர்களை தாஷ்கன்டுக்கு அனுப்ப உத்தேசிக்கிறேன்'' என்று சார்ஜோ மற்றும் கெர்க்கி பிரதேசங்களில் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் பிரதிநிதியாக

---

* Ibid., pp. 21—25.

** Ibid., pp. 26, 27.

*** மேற்கூறிய புத்தகம். 1967இல் சோவியத் ஆட்சியின் 50வது ஆண்டு விழாவின் போது முதியவரான ரபீக் அகமது மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சிக்காரர்களுக்கு எதிராக செஞ்சேனை நடத்திய சண்டைகளில் பங்கெடுத்ததற்காக அவருக்கு கௌரவப் பதக்கம் அளிக்கப்பட்டது (*Documents of the History of the Communist Party of India*, Vol. 1, p. 229).

இருந்த ஸ்கோரிக்கவ் 1920 அக்டோபர் 22இல் தந்தி அனுப்பினார். (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.). ஆனால் அவர்களில் 36 நபர்கள் தாஷ்கன்டுக்குப் போக மறுத்து விட்டார்கள், ''உயிரே போவதாக இருந்தாலும்'' கமாலைத் தவிர வேறு எவரிடமும் போக மாட்டோம் என்று கூறினார்கள். நாம் வர்ணித்த சம்பவங்கள் பல அம்சங்களில் குறிப்பிடத்தக்கவையாகும். அவற்றையும் அதே போன்ற பிறவற்றையும் பாராட்டுவதற்கு நாட்டைத் துறந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த நூற்றுக் கணக்கான இந்தியர்களின் சமூக, அரசியல் பின்னணியை நாம் முதலில் இனம் கண்டு கொள்வது அவசியம்.

## நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் சமூக மற்றும் அரசியல் தன்மை

இந்தியர்கள் சோவியத் ருஷ்யாவுக்குள் வந்தவுடன் ஒரு நமூனாவைப் பூர்த்தி செய்தார்கள். அவர்களுடைய சமூகக் கட்டமைப்பை ஓரளவு புரிந்து கொள்வதற்கு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உதவுகின்றன. 1920 கடைசியிலும் 1921 தொடக்கத்திலும் தாஷ்கன்டில் குடியேறிய இந்தியர்கள் பூர்த்தி செய்த 84 நமூனாக்களைக் கொண்ட ஒரு கோப்பு அதிர்ஷ்டவசமாகக் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு தாளிலும் 20 கேள்விகள் இருந்தன.

''உமது பெற்றோர்களுடைய சமூக அந்தஸ்து என்ன?'' என்ற கேள்விக்குப் புரட்சிக்காரர்கள் அளித்த பதில் அவர்களுடைய சமூகப் பிறப்பை எடுத்துக்காட்டுகிறது. அவற்றிலடங்கிய பதில்கள் நாடு துறந்தவர்களின் தோற்றம் பற்றிய பல்வேறான விவரங்களைத் தருகின்றன:

| | |
|---|---|
| பயிர் செய்யும் விவசாயிகள் | 17 |
| நிலவுடைமையாளர்கள் | 14 |
| விவசாயிகள் | 2 |
| ஜமீன்தார்கள் | 11 |
| ஜாகிர்தார்கள் | 4 |
| நம்பர்தார்கள் | 1 |
| சர்தார்கள் | 2 |
| லேன்ட்லார்டுகள் | 3 |

| | |
|---|---|
| அலுவலகச் சிப்பந்திகள் . . . . . . . | 9 |
| வர்த்தகர்கள் . . . . . . . . . . | 14 |
| தொழிலாளர்கள் . . . . . . . . . . | 2 |
| கான்ட்ராக்டர்கள் . . . . . . . . . | 2 |
| அறிவுஜீவிகள் . . . . . . . . . . . | 3 |

மேலே தரப்பட்ட பிரிவுகளின் அர்த்தத்தை விளக்கிக் கூறுவது அவசியம். ஏனென்றால் இந்தியாவின் பிரத்யேக மான நிலைமைகளில் பயிர் செய்யும் விவசாயிக்கும் நில வுடைமையாளருக்கும் அல்லது அவர்கள் இருவருக்கும் விவசாயிக்கும் இடையில் என்ன வேறுபாடு என்பது எப் பொழுதுமே தெளிவாகத் தெரியவில்லை. ஜமீன்தார் என்ற சொல் யாரைக் குறிக்கிறது என்பதும் தெரியவில்லை. ஏனென்றால் இச்சொல் இந்தியாவின் வெவ்வேறு பகுதி களில் வெவ்வேறு சமூகப் பகுதியினரைக் குறிக்கிறது. பஞ் சாப் மற்றும் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தில் ஜமீன்தார் என்ற சொல் விவசாயியைத்தான் குறிக்கிறது, ஆனால் இந்தியாவின் மற்ற பகுதிகளில் அது நிலக்கிழா ரைக் குறிக்கிறது. இந்தியாவை விட்டு வெளியேறி வந்த வர்களில் இந்த மாகாணங்களைச் சேர்ந்தவர்களே மிகவும் அதிகமாக இருந்தபடியால், இங்கே இச்சொல் நிலம் வைத் திருக்கின்ற விவசாயிகளைக் குறிக்குமே தவிர, நிலக்கிழார் களை அல்ல. ''உங்களுக்குச் சொத்துக்கள் உண்டா?'' என்ற கேள்விக்குத் தந்திருக்கும் பதிலிலிருந்து நமக்கு அவசியமான தகவலை நேரடியாகப் பெற முடியும். ''கல்வி'' என்ற கேள்விக்குக் கொடுத்திருக்கும் பதிலில் அப்படிப்பட்ட தகவலை மறைமுகமாகப் பெற முடியும். இக்கேள்விக்குத் தரப்பட்டிருக்கும் பதிலைப் பயன்படுத்திக் கொள்வது தவறல்ல. ஏனென்றால் பொதுவாக ஒரு நபருடைய சமூக நிலை அவருக்கு ஏட்டுக் கல்வி கிடைத்திருக்கின்ற அளவை நிர்ணயிக்கிறது. இந்தத் தொடர்பு தலைகீழானதாயும் இருக்கலாம், இதை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

நிலவுடைமையாளர்கள், பயிர் செய்கின்ற விவசாயிகள், விவசாயிகள் மற்றும் ஜமீன்தார்களின் சொத்துடைமை அந் தஸ்து அநேகமாக ஒரே மாதிரியாக இருப்பதையும் இப் பெயர்கள் அனைத்துமே நிலம் வைத்திருக்கின்ற விவசாயி களையே குறிப்பதையும் மேற்கண்ட கேள்விகளுக்குத் தரப்

பட்டிருக்கின்ற பதில்கள் எடுத்துக்காட்டுகின்றன. பயிர் செய்கின்ற விவசாயிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 17 நபர்களில் ஒருவர் மட்டுமே தனக்குச் சொத்து இல்லை என்று தெரிவித்தார்; நிலவுடைமையாளர் குடும்பங்களைச் சேர்ந்த 14 நபர்களில் மூன்று நபர்களுக்குச் சொத்து இல்லை; ஜமீன்தார்களில் ஆறு நபர்களுக்குச் சொத்து இல்லை. இரண்டு விவசாயிகளில் ஒருவருக்கு ''நிலமும் வீடுகளும்'' இருந்தன, அடுத்த நபருக்கு எந்தச் சொத்தும் கிடையாது. மேலே குறிப்பிடப்பட்ட சொத்து இல்லாத நபர்கள் அனைவரும் ஒரு காலத்தில் சொத்து வைத்திருந்து பின்னர் அழிந்து போனவர்களாக இருக்கலாம். மேற்கூறிய மூன்று பிரிவுகளில் எஞ்சியிருந்தவர்களிடம் சொத்து இருந்தது; அவர்கள் அதைப் பற்றி ஒரே விதமாகவே எழுதியிருந்தார்கள். உதாரணமாக, ''எனக்குச் சிறிது நிலமும் ஒரு வீடும் உண்டு'' அல்லது ''நிலம்'' மட்டும் அல்லது ''வீடு'' மட்டும் அல்லது ''வீடுகள்'' உண்டு என்று தெரிவித்திருந்தார்கள். பயிர் செய்கின்ற விவசாயிகளில் இருவர்தான் ''நிலம்—120 ஜரீப்'' அல்லது ''நிலம்—25 ஜரீப்'' (1 ஜரீப் 4,000 சதுரமீட்டர்) என்று எழுதியிருந்தார்கள். ''கல்வி'' பற்றி எழுதப்பட்டிருந்த தகவல்களும் நம் முடிவை நிரூபிக்கின்றன: பயிர் செய்கின்ற விவசாயிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 17 நபர்களில் ஒருவர் கல்லூரிக் கல்வியைப் பூர்த்தி செய்யவில்லை; இருவர் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் இருவர் தொடக்க நிலைக் கல்வியும் கற்றவர்கள். இப்பிரிவின் பெரும்பான்மையினர் (12 நபர்கள்) கல்லாதவர்கள்.

நிலவுடைமையாளர்கள் மற்றும் ஜமீன்தார்களைக் கொண்ட பிரிவுகள் ஓரளவுக்கு வேறுவிதமாக இருந்தன. அவர்களுடைய கல்வித் தகுதிகள் உயர்வாகவே இருந்தன. நிலவுடைமையாளர்களில் ஒருவர் கல்லூரிக் கல்வியை முடித்தவர், மூவர் கல்லூரிக் கல்வியை அரைகுறையாக முடித்தவர்கள், ஒருவர் உயர்நிலைப் பள்ளி கல்வியும் மூவர் தொடக்க நிலைக் கல்வியும் கற்றவர்கள், இருவர் ராணுவப் பயிற்சி பெற்றதோடு கல்வியும் கற்றவர்கள், மூவர் கல்லாதவர்கள். ஜமீன்தார்களில் மூவர் அரைகுறையான கல்லூரிக் கல்வியும், நால்வர் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், இருவர் தொடக்க நிலைக் கல்வியும் கற்றவர்

கள், இருவர் கல்லாதவர்கள். இக்குழுவில் ஓரளவுக்கு வசதி யான விவசாயிகள் இருந்திருக்க வேண்டும்.

மேற்கூறியவற்றை மிகைப்படுத்திப் பார்க்கக் கூடாது. ஏனென்றால் விவசாயிகள் என்று தம்மைக் கூறிக் கொண்ட இரு நபர்களில் கூட ஒருவர் கல்லூரியில் படித்திருக்கிறார், அடுத்தவர் கல்லாதவர். கிலாபத்வாதிகளில் நன்றாகப் படித்தவர்களே நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றார்கள் என்பதை நினைக்கின்ற பொழுது ''நிலவுடைமையாளர்கள்'' பிரிவைச் சேர்ந்தவர்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் கல்வி கற்றிருந்தாலும் அவர்கள் உண்மையில் நிலம் வைத்திருக் கின்ற விவசாயிகளே என்று முடிவு செய்வது தவறல்ல.

14 வர்த்தகர்களைக் கொண்ட குழு இரண்டாவது பெரிய பிரிவாக இருந்தது. இவர்கள் பிறப்பினால் வர்த் தகர்கள்; அவர்களில் 6 நபர்கள் கடைக்காரர்களின் குழந் தைகள். இவர்கள் பெற்றோர்களிடமிருந்து எவ்விதமான சொத்தும் மரபுரிமையாகப் பெறாதவர்கள். பெரிய வியா பாரியின் மகனாகப் பிறந்தவரும் தானே வியாபாரியாக இருந்தவருமான ஒருவரிடம் மட்டுமே மூன்று வீடுகள், ஆறு கடைகள் மற்றும் ஒரு கிட்டங்கி ஆகியவை இருந்தன. மற்ற வர்கள் தம்முடைய சொத்துக்களைப் பற்றி ''வீடும் நில மும்'' அல்லது ''கடையும் வீடும்'' என்றுதான் குறிப்பிட்டி ருந்தார்கள். இப்பிரிவில் சாதாரணமான கடைக்காரர்களே அதிகமாக இருந்தார்கள் என்பதை அவர்களுடைய கல்வித் தகுதிகள் எடுத்துக்காட்டின. இப்பிரிவில் நால்வர் கல்லாத வர்கள், மூவர் தொடக்க நிலைக் கல்வியும் இருவர் உயர் நிலைக் கல்வியும் கற்றவர்கள்; மூவர் அரைகுறையான கல் லூரிக் கல்வியும் இருவர் முழுமையான கல்லூரிக் கல்வியும் கற்றவர்கள்.

இக்குழுவிலிருந்த ஜாகிர்தார் மற்றும் சர்தார்களின் புதல்வர்கள் நிலக்கிழார் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள்.

ஜாகிர்தார்கள் சொத்தைப் பற்றிய கேள்விக்குத் திட்ட வட்டமான பதிலைத் தரவில்லை. பெரும்பாலும் ''ஆம்'' என்ற சுருக்கமான பதிலுடன் முடித்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் ''ஆமாம்—பெரிய சொத்து'' என்று மேலும் விவரமாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் ஜாகிர்தார் பிரிவு மிகச் சிறியது (நால்வர் மட்டுமே),

சர்தார் பிரிவு அதைக் காட்டிலும் சிறியது (இருவர் மட்டுமே). லேன்ட்லார்டுகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் நிலப்பிரபுத்துவ சிற்றரசுக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ராஜா மகேந்திர பிரதாப் இப்படிப்பட்டவர். நாட்டைத் துறந்து சோவியத் ஆசியாவுக்கு வந்த இந்தியர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ள தேவேந்திரா கௌசிக் என்ற வரலாற்றாசிரியர் அவர்களில் ''நிலப்பிரபுத்துவச் சிற்றரசர்களும்''* இருந்தார்கள் என்று கூறுகிறார். அவர்கள் மிகச் சிலர்தான் என்பது உண்மை. இப்பட்டியலின்படி அவர்கள் 3.5 சதவிகிதமே. நாடு துறந்த இந்தியர்களில் கணிசமான சதவிகிதத்தினர் குமாஸ்தா வேலை செய்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், இவர்கள் வழக்கமாக காலனியாதிக்க நிர்வாகத்துக்கு ஊழியர்களாக இருப்பவர்கள் என்பது கவனத்துக்குரியதாகும். அறிவு ஜீவிகளையும் இப்பிரிவில் சேர்க்க வேண்டும். அப்பொழுது குமாஸ்தா பிரிவு 12ஆக அதிகரிக்கும்.

நாட்டை விட்டு வெளியேறிய இந்தியப் புரட்சிக்காரர்களின் சமூக நிலையை—நம் குழு எண்ணிக்கையின் உதாரணத்தின் அடிப்படையில்—பின்வருமாறு எடுத்துரைக்கலாம்:

| | |
|---|---|
| விவசாயிகள் (நிலம் வைத்திருப்பவர்கள் மற்றும் குத்தகைக்காரர்கள்) | 44 |
| தொழிலாளர்கள் | 2 |
| நிலக்கிழார்கள் | 6 |
| நிலப்பிரபுத்துவச் சிற்றரசர்கள் | 3 |
| வர்த்தகர்கள் | 14 |
| ஊழியர்கள் | 12 |
| இதரர்கள் | 2 |

இக்குழுவில் விவசாயிகளின் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் மிக அதிகம்—சுமார் 53 சதவிகிதம். நகரங்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ வர்க்கப் பகுதியினர்—வியாபாரிகளின் புதல்வர்கள், குமாஸ்தாக்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள் அடுத்த இடத்திலிருந்தார்கள்—சுமார் 36 சதவிகிதம். நிலக்கிழார் குடும்பங்களைச்

* D. Kaushik, *Indian Revolutionaries in Soviet Asia*, p. 76.

சேர்ந்தவர்கள் சுமார் 6 சதவிகிதம்; நிலப்பிரபுத்துவச் சிற்றரசர்களின் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் 4 சத விகிதத்துக்குச் சிறிது குறைவாக இருந்தார்கள். தொழி லாளர்களின் விகிதாச்சாரம் மிகவும் சொற்பம்—சுமார் 2.5 சதவிகிதம். இக்குழுவின் அமைப்பு அக்காலத்திய இந் திய சமூகக் கட்டமைப்பை ஓரளவுக்கு ஒத்திருந்ததென்று கூறலாம்.

புரட்சிகர நடவடிக்கையில் சேர்ந்த பிறகு இவர்கள் எல்லோருடைய சமூக நிலையும் பிறப்பால் அவர்களுடைய நிலையிலிருந்து முற்றிலும் வேறுவிதமாக இருந்தது (''புரட்சிகர நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்பு உங்களுடைய தொழில் என்ன?'' என்று நமூனாவில் ஒரு கேள்வி இருந்தது). நிலவுடைமை விவசாயிகளின் குடும் பங்களிலிருந்து வந்த புரட்சிக்காரர்கள் அநேகமாக எல் லோருமே விவசாயத்துடன் நேரடியான தொடர்பை ஏற் கெனவே இழந்து விட்டிருந்தார்கள். இங்கே நாம் எடுத்துக் காட்டாகக் கொண்டிருக்கும் குழுவில் பயிர் செய்கின்ற விவசாயிகள் ஐந்து நபர்கள் மட்டுமே இருந்தார்கள். ''நிலவுடைமையாளர்'', ''விவசாயி'' போன்ற வார்த்தைகள் அறவே இல்லை. ''ஜமீன்தார்'' என்ற சொல்லும் இல்லை. இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த பலர் ''படைவீரர்கள்'' மற்றும் ''இராணுவ ஊழியர்களாக'' மாறினார்கள். அப்படி 12 நபர்கள் இருந்தார்கள். அலுவலக ஊழியர்களின் எண் ணிக்கை 18ஆக அதிகரித்தது. மாணவர்கள் என்ற புதிய பிரிவு தோன்றியது. இப்பிரிவில் 27 நபர்கள் (பல்கலைக்கழக மாணவர்கள் 20 நபர்கள் உள்பட) இருந்தார்கள். நிலவுடைமையாளர்கள் மற்றும் வசதியான சமூகப் பிரிவு களை (வர்த்தகர்கள், அலுவலக எழுத்தர்கள், இதரர்கள்) சேர்ந்தவர்கள் இப்பிரிவுக்குள் வந்துவிட்டார்கள்.

இந்தியக் குழுவினரில் பெரும்பான்மையினர் பிறப்பால் நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகள் அல்லது குத்தகை விவ சாயிகள்; ஆனால் அந்தஸ்தில் அநேகமாக எல்லோருமே அலுவலக ஊழியர்கள், வியாபாரிகள், மாணவர்கள் அல்லது இராணுவத்தினரைக் கொண்டிருந்த நகரக் குட்டி முதலாளி வர்க்கத்தினராக இருந்தார்கள்.

நாடு துறந்த இந்தியப் புரட்சிக்காரர்களுடன் வேலை செய்த சமகாலத்தவர்கள் அல்லது இந்தியர்கள் எழுதியிருப்

பவை அவர்களுடைய சமூக நிலையைத் தீர்மானிப்பதற்குரிய கூடுதலான தகவல்களைத் தருகின்றன. கம்யூனிஸ்ட் அகிலத்தின் துர்க்கிஸ்தான் பீரோவின் அதிகாரியான பெர்க்குத் கமால் ஆதரவாளர்களைச் சேருவதற்காக அனட்டோலியாவுக்குள் செல்ல முயற்சி செய்து தோல்வியடைந்து 1921 மார்ச் மாதத்தில் தாஷ்கன்டுக்குத் திரும்பிய இந்தியர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: ''இந்த 34 நபர்களில் ஆங்கிலம் பேசத் தெரிந்த பத்து அறிவு ஜீவிகள் இருந்தார்கள். இவர்கள் இந்தியாவில் புரட்சிகர இயக்கத்தில் பங்கெடுத்தவர்கள். அவர்களில் (10 நபர்களில்—ஆ-ர்) பெரும்பான்மையினர் சமூக நிலையில் குட்டி நிலவுடைமையாளர்கள் (ஜமீன்தார்கள்) அல்லது மாணவர்கள் (ஜமீன்தார்களின் புதல்வர்கள்), ஆங்கிலப் பள்ளிக்கூட மாணவர்கள், இரண்டு டாக்டர்கள்; எஞ்சியவர்கள் (24 நபர்கள்) அடித்தளத்தில் அமுக்கப்பட்டிருந்தவர்கள், முற்றிலும் கல்லாதவர்கள், நாளொன்றுக்கு ஐந்து முறைகள் தொழுகை செய்வதைத் தவிர தாமாகவே எதுவும் செய்ய இயலாதவர்கள். எல்லோரும் முஸ்லிம்கள்; டில்லி, லாகூர், பெஷாவர், அமிர்தசரஸ் ஆகிய நகரங்களைச் சேர்ந்தவர்கள்'' (மா.-லெ. ஆ. க. ம. க. ஆ. கா.). எல்லோரும் நகரவாசிகள் என்பதைக் கடைசி வாக்கியத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

ஷௌகத் உஸ்மானி எம். என். ராய்க்கு எழுதிய கடிதத்தில் 36 நபர்களைக் கொண்ட குழுவினருடன் தாஷ்கன்டுக்கு வந்திருப்பதாகவும் அவர்களில் ''எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஒரு சிலரே'' என்றும் தெரிவித்தார். இந்தியப் புரட்சிச் சங்கத்தின் சாதாரண உறுப்பினர்களைப் பற்றி எழுதுகின்ற பொழுது ''அவர்கள் எல்லோரும் கல்லாதவர்கள், சொந்தமான அபிப்பிராயம் இல்லாதவர்கள், மத வெறி பிடித்தவர்கள்'' என்று கூறினார்.

மேற்கூறிய இருவரும் வந்தவர்கள் மத்தியில் கல்லாதவர்கள் மிக அதிகமாக இருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மேலே தரப்பட்ட உதாரணத்தில் கல்லாதவர்கள்—23 நபர்கள், குறைவான கல்வி (தொடக்க நிலைக் கல்வி) கற்றவர்கள்—15 நபர்கள். இந்த இரு பிரிவுகளும் குழுவின் எண்ணிக்கையில் சுமார் 45 சதவிகிதத்தைக் கொண்டிருந்தன. மற்ற குழுக்களில், குறிப்பாக துருக்கிக்குச் சென்ற

குழுக்களில் கல்லாதவர்கள் இன்னும் அதிகமான சதவிகிதத்தில் இருப்பது சாத்தியமே.

ஆனால் மற்றொரு அம்சமும் நமது கவனத்தை ஈர்க்கிறது. அரைகுறையான கல்லூரிக் கல்வி கற்றவர்கள் (18), கல்லூரிக் கல்வியை முடித்தவர்கள் (12) ஆகிய இரு பிரிவினரும் இக்குழுவில் 30 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தவர்களையும் (16) இவர்களுடன் சேர்த்துக் கொண்டால் இது 50 சதவிகிதத்துக்கும் அதிகம். அவர்களுடைய அறிவுத் தகுதியை மதிப்பிடுகின்ற அளவுகோல் ஓரளவுக்கு ஒப்பீடாக இருப்பது உண்மையே. நாடு துறந்து வந்த புரட்சிக்காரர்களில் மிகப் பெரும்பான்மையினர் 20—27க்கு* இடைப்பட்ட வயதுடைய இளைஞர்கள்; எனவே அவர்களில் முறையாகப் படித்தவர்கள் கூட எதிர்காலத்தில்தான் அறிவுஜீவிகளாகக் கூடியவர்கள். எப்படி இருந்தாலும் இந்திய மக்களில் கலாச்சார ரீதியிலும் கல்வி ரீதியிலும் வளர்ச்சியடைந்த பகுதியினரே முழு நேரப் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது தெளிவு. இந்தியாவைத் துறந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த புரட்சிக்காரர்களின் இயக்கத்தை இப்பிரிவில்தான் நிச்சயமாக வைக்க வேண்டும்.

இவர்களுடைய மதமும் சுவாரசியமான மற்றொரு அம்சமாகும். பெரும்பான்மையினர் முஸ்லிம்கள் என்பதை ஷௌகத் உஸ்மானியும் பெர்க்குத்தும் சுட்டிக் காட்டினார்கள். எனினும் ''சோவியத் ஆசியாவில் தீவிரமாகப் பாடுபட்டுக் கொண்டிருந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் மத்தியில் முஜாகிர்களே (கிலாபத் இயக்கத்தினால் நாட்டைத் துறந்து வெளியேறிய இந்திய முஸ்லிம்கள்) மிகவும் அதிகமாக இருந்தார்கள் என்று கருதுவது தவறு''** என்று தேவேந்திரா கௌசிக் கூறுகிறார். இந்தியாவுக்கு வெளி

---

* ஷௌகத் உஸ்மானியும் ரபீக் அகமதும் முதலில் சேர்ந்திருந்த 89 நபர்களைக் கொண்ட குழுவில் முப்பதுக்கு அதிகமான வயதுடையவர்கள் ஒருவருமில்லை. அவர்களில் பெரும்பான்மையினர் இருபத்தேழுக்குக் குறைவான வயதுடையவர்களே. சிலர் இருபதுக்கும் குறைவான வயதுடையவர்கள்.

** Devendra Kaushik, *Indian Revolutionaries in Soviet Asia*, p. 66.

யில் (ஐரோப்பாவில், அமெரிக்காவில், சோவியத் துருக்கிஸ் தானிலேயே கூட) இயங்கிக் கொண்டிருந்த இந்தியப் புரட்சி ஸ்தாபனங்களை சோவியத் ருஷ்யாவில் பிரதிநிதித்துவம் செய்த முன்னணித் தலைவர்களைப் பற்றிப் பேசும் பொழுது இது சரியானதே. ஆனால் சாதாரண உறுப்பினர்கள், அதாவது நாட்டைத் துறந்த புரட்சிக்காரர்களில் பெரும்பான்மையினர், தாஷ்கன்ட், புஹாரா, பாக்கூ, சார்ஜோ, அன்டிஜான் மற்றும் இதர நகரங்களில் வசித்தவர்களில்—குறிப்பாக, துருக்கிக்குப் போய்க் கொண்டிருந்த இந்தியர்கள்—பெரும்பான்மையினர் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் முஸ்லிம் அணியின் பிரதிநிதிகளே. சோவியத் குடியரசில் இருந்த இந்தியர்களில் உத்தேசமாக அரைப் பங்கினர் அனட்டோலியாவுக்குப் போவதற்கு சோவியத் அரசின் உதவியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர்களே என்று கருத முடியும்.

இந்தியக் குடியேறிகளில் மறு பாதியினர் மற்ற இடங்களைக் காட்டிலும் சோவியத் குடியரசுக்குத்தான்போகவேண்டும் என்று விரும்பினார்கள். ஹிஜ்ராத்தில் பங்கெடுத்தால் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருக்கிஸ்தானுக்குப் போவது சுலபம் என்ற காரணத்தால் அவர்கள் அதில் பங்கெடுத்தார்கள். ஆனால் இந்தப் பிரிவிலும் முஸ்லிம்களே அதிக எண்ணிக்கையில் இருந்திருக்கிறார்கள்; மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினர்தான். இதைப் பற்றி வியப்படைவது அவசியமல்ல; முஸ்லிம்கள் இயற்கையாகவே சோஷலிசத்தை ஆதரித்தார்கள் என்ற கற்பனையான வாதத்தை இதன் மூலம் நிரூபிக்க முயல்வதும் அவசியமல்ல. முக்கியமான காரணம் என்னவென்றால் இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகமாக வசித்த பிரதேசங்கள்தான் சோவியத் எல்லைகளுக்குப் பக்கத்தில் இருந்தன. எனவே ருஷ்யப் புரட்சியின் தாக்கம் மற்றவர்களைக் காட்டிலும் அவர்களிடம்தான் அதிகமாக இருந்தது. அடுத்தபடியாக சோவியத் குடியரசுக்குள் நுழைவது இந்தியாவின் மற்ற மாகாணங்களில் வசிப்பவர்களைக் காட்டிலும் இவர்களுக்கு ஒப்பீட்டளவில் சுலபமாக இருந்தது.

சோவியத் மதித்ய ஆசியாவுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் மதத்தைப் பற்றி நாம் மேலே எழுதியிருப்பதை நிரூபிப்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன.

அவர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாம் மதத்தைப் பின் பற்றியவர்கள் என்பதை ஆரம்பகால இந்திய கம்யூனிஸ்டு களும் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றிய சில சோவியத் அதிகாரிகளும் வருத்தத்துடன் எழுதியிருக்கிறார்கள். ''வருத் தத்துடன்'' என்று நாம் எழுதுவதற்குக் காரணம் என்ன வென்றால் ஆரம்பகால இந்திய கம்யூனிஸ்டுகள் தேசிய விடுதலையைக் காட்டிலும் கூடுதலான இலட்சியத்துக்காகப் போராடாதவர்களைப் புரட்சிக்காரர்கள் என்று கருத வில்லை. சோஷலிஸ்ட் இலட்சியங்களுக்குப் போராடுபவர் கள்தான் உண்மையான புரட்சிக்காரர்கள் என்று அவர்கள் கருதினார்கள்.

1920 கடைசியில் தாஷ்கன்டிலும் புஹாராவிலும் குழு மியிருந்த இந்தியர்களைப் பற்றி எம். ஷுல்மன் பின்வரு மாறு எழுதினார்: இக்குடியேறிகள் ''அனுபவமில்லாத, அரசியல் ரீதியில் பயிற்றுவிக்கப்படாத சக்தியினர். புரட்சி மற்றும் அரசியல் பணிக்கு இவர்களைத் தயாரிப்பதற்கு மிக அதிகமான நேரம், திறமை, பொறுமை அவசியப் படும்...'' இவர்கள் ''மதச் சார்புடைய புரட்சிக்காரர்கள்'', ''எல்லோரும் எக்கணத்திலும் மதத்துக்காகத் தங்கள் உயிர் களை தியாகம் செய்யக்கூடிய முஸ்லிம்கள்'' என்று அவர் மேலும் எழுதினார் (மா.-லெ. ஆ.க.ம.க.ஆ.கா.).

இந்தியாவிலிருந்து வந்தவர்களைப் புறவயமாக வர்ணிப் பதற்கு மேலே காட்டிய சான்றுகள் அதிகமாக உதவிய போதிலும் அவை எல்லா அம்சங்களிலும் சரியென்று சொல்ல முடியாது. இந்தியர்களுடைய மதப்பற்றை அடிப்ப டையாக வைத்து அவர்கள் ''அனுபவமில்லாதவர்கள்'', அரசியல் முதிர்ச்சி இல்லாதவர்கள், மந்தமானவர்கள் என்று செய்யப்பட்டிருக்கும் முடிவை அப்படியே ஒத்துக்கொள்ள இயலாது. ஏனென்றால் கிலாபத்வாதிகள்கூட—அவர்களில் சிலர் கல்லாதவர்கள்—தங்கள் நாட்டை அடிமைப்படுத்திய வர்களை எதிர்த்துப் போர் புரிவதற்குக் கமால் ஆதரவா ளர்களைச் சேருவதற்காக மிகவும் கடினமான ஒரு பிரயா ணத்தை (அந்தப் பிரயாணமே அருஞ்சாதனையாகும்) மேற்கொள்கின்ற அளவுக்குப் போதுமான தேசிய அரசியல் உணர்ச்சியைக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய மத உணர்ச்சியும் இஸ்லாமியப் பற்றும் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய முஸ்லிம் ஒற்றுமை என்ற கருத்தை அவர்

களுக்குத் தந்தது. எனவே துருக்கியை ஆதரிக்கின்ற பொழுதே இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிக்க வேண்டும் என்பது அவர்களுடைய முக்கியமான அக்கறையாக, தீவிரமான விருப்பமாக இருந்தது.

இந்தியாவைத் துறந்து வந்த புரட்சிக்காரர்களின் மற்றொரு பகுதியினர் சோவியத் குடியரசுக்குள் நுழைய வேண்டும் என்ற ஒரே விருப்பத்தைக் கொண்டிருந்தனர். ''நீங்கள் ருஷ்யாவுக்கு வந்திருப்பது ஏன்?'' என்று அந்த நமூனாவில் ஒரு கேள்வி இருந்தது.

''இந்தியப் புரட்சிக்கு சேவை செய்வதற்காக'' அல்லது ''இந்தியாவை விடுவிப்பதற்காக'' என்று மிகப் பெரும்பான்மையினரான 45 நபர்கள் பதிலளித்தார்கள். ''ருஷ்யாவிலிருந்து உதவி பெறுவதற்காக'' என்று 17 நபர்கள் பதிலளித்தார்கள். ஏழு நபர்கள் ''புரட்சியில் சேருவதற்கு'' அல்லது 20 வயதான ஷௌகத் உஸ்மானியைப் போல ''புரட்சிகர இயக்கத்தில் சேருவதற்கு'' வந்திருப்பதாக பதிலளித்தார்கள். ''இராணுவப் பயிற்சி பெறுவதற்கும் பிரச்சார வேலையைக் கற்றுக் கொள்வதற்கும்'' என்பது போல எட்டு நபர்கள் பதிலளித்தார்கள். ''போல்ஷிசத்தைப் படிப்பதற்கு'' அல்லது ''புரட்சி செய்யக் கற்றுக்கொள்வதற்கு'' என்றோ அல்லது 42 வயதான சர்தார் கானைப் போல, ருஷ்யப் புரட்சியை ஆராய்ந்து இந்தியப் புரட்சிக்கு வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதற்காக என்றோ 5 நபர்கள் பதில் எழுதினார்கள். அப்துர் ராப் பார்க் 1921 ஜூலை 29இல் ஜி.வி.சிச்சேரினுக்கு எழுதிய கடிதத்தில் ''ருஷ்யா இந்தியப் புரட்சிக்காரர்களை ஈர்ப்பதற்கு அதன் புரட்சி உத்வேகம், அது இந்தியாவின் அண்டை நாடாக இருப்பது, இளம் புரட்சிக்காரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு அங்கேயுள்ள புரட்சிப் பள்ளிகள் ஆகியவை காரணம்'' என்று எழுதினார்.

ஆக சோவியத் குடியரசுக்கு வந்த இந்தியர்கள் மிகவும் உயர்ந்த தேசிய உணர்ச்சியைக் கொண்டிருந்தார்கள், தேசிய விடுதலை என்ற இலட்சியம் அவர்களுக்கு உத்வேகமளித்தது, சோவியத் குடியரசுக்கு வருவதன் மூலம், சோவியத் உதவியைப் பெறுவதன் மூலமே தாங்கள் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்துக்கு அதிகமான சேவை செய்ய முடியும் என்று கருதினார்கள்.

அதே சமயத்தில் அவர்களில் 80 சதவிகிதத்தினர் சோவியத் ஆட்சி எவ்விதத்தில் உதவியளிக்க வேண்டும், தாய் நாட்டைத் தாங்கள் எப்படி விடுவிக்க வேண்டும் என்பதைப் பற்றி சரிவர அறிந்திருக்கவில்லை என்பதை நமூனாக்களிலிருந்து அறிகிறோம். 1920 டிசம்பர் கடைசியில் தாஷ்கன்டில் இந்தியர்களின் கூட்டத்தில் எம். என். ராய் பின்வருமாறு கூறினார்:''ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடுவது ஒன்றே உங்களுக்கு முக்கியம். ஆனால் எப்படிப் போராட வேண்டும் என்று உங்களில் பலருக்குத் தெரியாது. ஆகவே உங்களுடைய எதிர்கால இயக்கத்தைப் பற்றி உங்களுக்குத் தெளிவு கிடையாது.''* இக் கூற்று சரியானதே. எனினும் இப்புரட்சிக்காரர்களில் சிலர் சோவியத் பூமியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மற்றவர்களைக் காட்டிலும் நன்றாகப் புரிந்து கொண்டு அவற்றின் முக்கிய விவரங்களை கிரகித்தார்கள். இப்படிப்பட்டவர்கள் இக்குழுவில் 10 சதவிகிதம் இருந்தார்கள். பெருந்திரளான மக்கள் மத்தியில் ஸ்தாபன, விளக்க, பிரச்சார வேலை புரட்சிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். புரட்சியை ஆயுதமேந்தி பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை அவர்கள் தம்முடைய சொந்த அனுபவத்தின் மூலம் உணர்ந்திருந்தார்கள். எனவே அவர்கள் நமூனாவில் பின்வருமாறு எழுதினார்கள்: ''நாங்கள் இராணுவப் பயிற்சி பெறுவதற்கு, பிரச்சார வேலையைக் கற்றுக்கொள்வதற்கு விரும்புகிறோம்.''

முடிவாக, இக்குழுவினரில் மிகவும் சிறிய—ஆனால் மிகவும் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்ட பகுதி—புரட்சியை நிறைவேற்றுவது எப்படி என்று கற்றுக்கொள்வதற்கு, தம்முடைய புரட்சிகரப் பணியில் பயன்படுத்திக் கொள்ளத் தக்க படிப்பினைகளைப் பெறுவதற்குத்தான் சோவியத் குடியரசுக்கு வந்திருப்பதாகக் கருதியது. இப்படிப்பட்டவர்கள் இக்குழுவில் 6 சதவிகிதத்துக்கு அதிகமல்ல.இவர்கள் சதிப் போராட்டங்களில் நம்பிக்கையை இழந்தவர்கள், புரட்சிகர இயக்கத்தில் நெடுங்கால அனுபவம்

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 6.

உடையவர்கள் அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எப்படிப் போராடுவது என்ற கேள்விக்கு பதிலைத் தேடிய இளம் புரட்சிக்காரர்கள்.

இந்திய மக்களின் பரந்த பகுதியினரது பிரதிநிதிகள் சோவியத் ருஷ்யாவுக்கு அல்லது சோவியத் ருஷ்யாவின் வழியாகத் துருக்கிக்குச் சென்றதற்கு மிகப் பொதுவான காரணம் என்ன? சோவியத் குடியரசு ஒடுக்கப்படுபவர்களைப் பாதுகாக்கின்ற, அவர்களுக்கு அடைக்கலம் தருகின்ற நாடு, மற்ற மக்களினங்களின் விடுதலைக்குப் போராடுபவர்களுக்கு உதவி செய்யக் கூடிய, உதவிசெய்ய விரும்புகின்ற சுதந்திரமான நாடு என்று அவர்கள் கருதியதே காரணம்.

அப்துல் கரீம் முகம்மது ஜான் என்பவர் 25 வயது நிரம்பிய இந்திய விவசாயி. அவருடைய அனுபவத்தை ஒரு உதாரணமாகக் கூறலாம். அப்துல் கரீம் பின்வருமாறு கூறினார்: ''எட்டு மாதங்களுக்கு முன்பு (1921 ஜூன் 3ந் தேதியன்று இது எழுதப்பட்டது—ஆ-ர்) நான் இந்தியாவிலிருந்து புறப்பட்டேன். ஆங்கிலேயர்கள் இந்தியர்களை ஒடுக்கிக்கொண்டிருப்பதால் நான் ஆப்கானிஸ்தானுக்குப் போக முடிவு செய்து இந்தியாவிலிருந்து புறப்பட்டேன். மேலும் நான் பிரிட்டிஷ் ராணுவத்தில் கட்டாயமாக சேர்க்கப்படுவதைத் தவிர்க்க விரும்பினேன்... சோவியத் ருஷ்யா ஏழைகளுக்கும் புரட்சிக்காரர்களுக்கும்—அவர்கள் அந்நிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட—உதவி செய்கிறது, பொதுவாக எல்லா புரட்சிக்காரர்களுக்கும் அடைக்கலம் தருகிறது என்று ஆப்கானிஸ்தானில் கேள்விப்பட்டேன். இந்திய மக்களை ஆங்கிலேயர்கள் ஒடுக்கிக்கொண்டிருப்பதால் மற்றவர்களுடன் சேர்ந்து என்னுடைய நாட்டை விட்டு ருஷ்யாவுக்குப் போவதற்கு முடிவு செய்தேன்'' (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.).

இது சோவியத் ருஷ்யாவைப் பற்றிப் பரவலாக எல்லோரிடமும் இருந்த கருத்து. ''ஆம், நாங்கள் சுதந்திர நாட்டில் இருக்கிறோம். இங்கே யாரும் எங்களை அடிமைப்படுத்த முடியாது. ஆங்கிலேயர்களால் எங்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் போதும்'' என்று இந்தியக் குடியேறி

கள் அடிக்கடி கூறுவதுண்டு என்று எம். ஷூல்மன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

1920ம் வருடத்தின் கோடை காலத்தில் ரோஸ்டா என்னும் ருஷ்ய செய்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதி பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்து ஓடி வந்து சோவியத் துருக்கிஸ்தானுக்குள் நுழைந்த இரண்டு இந்தியப் படைவீரர்களைப் பேட்டி கண்டார். ''நீங்கள் இராணுவத்தை விட்டு ஓடி வந்தது ஏன்?'' என்று நிருபர் கேட்டார். ''லாகூர் எழுச்சியின் போது ஆங்கிலேயர்கள் என்னுடைய சகோதரனைக் கொன்று விட்டார்கள்'' என்று ஒருவர் பதிலளித்தார். ''இந்து மற்றும் முஸ்லிம் சகோதரர்களை எதிர்த்து நான் சண்டை போட வேண்டுமென்று'' என் படை அதிகாரிகள் விரும்புகிறார்கள். அதைச் செய்ய விரும்பாததனால் ஓடி வந்ததாக அடுத்தவர் விளக்கினார்.*

துருக்கிக்குப் போகின்ற நோக்கத்துடன் பாக்கூ அல்லது தாஷ்கன்டுக்கு வந்த இந்தியர்கள் கூட சோவியத் ருஷ்யாவை ஒடுக்கப்பட்டிருக்கின்ற கிழக்கு நாடுகள் அனைத்துக்கும் உதவிசெய்கின்ற மாபெரும் நண்பனாகக் கருதினார்கள்.

1920ம் வருடத்தின் கடைசியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் பிரச்சாரம் மற்றும் நடவடிக்கைக்கான பாக்கூ கவுன்சிலினுடைய வேலைகளைப் பற்றி மிஹயீல் பவ்லோவிச் அறிக்கை சமர்ப்பித்தார். ''பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்து ஓடிவந்த இந்தியப் படைவீரர்கள் கவுன்சில் தலைமைக் குழுவை சந்தித்தார்கள்; மெசப்பொடேமியாவில் இருக்கின்ற பிரிட்டிஷ் இராணுவத்தினரை எதிர்த்துச் சண்டை போடுவதற்குத் தங்களைத் துருக்கியப் போர்முனைக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.'' அவர் அந்த அறிக்கையில் பின்வரும் தகவலைத் தெரிவித்தார்: ''இப்படைவீரர்கள்... கல்வித் துறைப் பயிற்சிகளைப் பற்றி அதிகமான அக்கறை காட்டினார்கள். (கிழக்கு நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்களுக்காக நடத்தப்படுகின்ற—ஆ-ர்) குறுகிய காலப் பயிற்சியின் போது எதைக் கற்பிக்கிறீர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். ''பாரசீகம், துருக்கி, பிரான்ஸ் ஆகிய

* இஸ்வேஸ்தியா, தாஷ்கன்ட், ஜூலை 15, 1920.

நாடுகளில் பிரிட்டிஷ் தரப்பில் சண்டை போடுவதில் பல வருடங்களைச் செலவிட்டிருக்கிறோம். ஆனால் நமக்கு எழுதப் படிக்கக் கூடக் கற்பிக்கவில்லை. சோவியத் ருஷ்யா நம்முடைய நண்பன். எல்லா இந்தியர்களும் பாரசீகர் களும் துருக்கியர்களும் கல்வியறிவு பெற வேண்டும், தம் முடைய நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அந்த நாடு விரும்புகிறது. கிழக்கு நாடுகள் அனைத்தும் ருஷ்யாவைப் பாதுகாக்கும்''* என்று படைவீரர்களில் ஒரு வர் ஆத்திரத்தோடு கூறினார். கிலாபத்வாதிகள் ருஷ்யப் பிரதேசத்தின் வழியாக (பாரசீகம் வழியாக அபூர்வமாகக் கூடப் போகவில்லை) துருக்கிக்குப் பிரயாணம் செய்தது தற்செயலாக அல்ல. ருஷ்யா அக்டோபர் புரட்சி நடை பெற்ற பூமியாக, சோவியத் குடியரசாக இருந்ததே அதற்குக் காரணம்.

இந்தியாவிலிருந்து வந்தவர்கள் பூர்த்தி செய்த 84 நமூனாக்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவையாகும். நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளின் புதல்வர்களான முகம்மது இஸ்மாயில், முகம்மது கான் என்ற இருவர் இவற்றைப் பூர்த்தி செய்தனர். இருவரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேவை செய்தவர்கள்; முதலாவது உலக யுத்தம் மூண்ட பொழுது அவர்கள் இந்தியாவிலிருந்து தப்பி இரானுக்குச் சென்றார்கள் என்று தெரிகிறது. 1919இல் அவர்கள் சோவியத் பிரதேசத்துக்குள் நுழைந்தார்கள். அங்கே செஞ் சேனையில் சேர்ந்து தெனீக்கினை எதிர்த்து சில மாதங் கள் சண்டை போட்டார்கள். அவர்களுடைய புரட்சிகர நடவடிக்கைகள் எப்பொழுது தொடங்கின என்ற கேள் விக்கு பதிலளிக்கும் பொழுது இந்தியாவிலிருந்து தப்பிய தேதியைக் குறிப்பிடாமல் செஞ்சேனையில் சேர்ந்த தேதியைக் குறிப்பிட்டிருப்பது முக்கியத்துவமுடையதாகும்.

நாட்டைத் துறந்து வந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் புஹாராவில் குடியேறிய கதை இதே அர்த்தத்தில் சுவார சியமானதாகும். புஹாராவில் சோவியத் கான்ஸல் அலு வலகச் செய்தி இலாகாவின் தலைவராக இருந்த ஃபிராட் கின் புஹாராவில் சமீபத்தில் ஏற்பட்டிருந்த, இன்னும் பல

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 63, தாள் 3.

வீனமாக இருந்த மக்கள் ஜனநாயக அமைப்பை பலப் படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் அவர்கள் அதிகமான சுறு சுறுப்புடன் ஈடுபட்டார்கள் என்று எழுதியிருக்கிறார். ''அக்குழுவைச் சேர்ந்த அதிகமான நபர்களைக் கொண்ட பகுதி'' ''மக்கள் சேனையின் இயந்திரத் துப்பாக்கிப் பிரி வின் செம்படையினராக புஹாரா அரசாங்கத்துக்குச் சேவை செய்தனர்''. அக்பர் ஜான், அப்துல் அஸீஸ் மற்றும் அப்துல் அஜான் அக்குழுவுக்குத் தலைமை தாங்கி னார்கள். 70 இந்தியர்கள் மக்கள் சேனையில் மட்டுமின்றி இராணுவத்திலும் சேவை செய்தார்கள் என்று மற்றொரு ஆவணம் எடுத்துக்காட்டுகிறது.* பஸில் காதிர் (இ.பு.ச.வின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்) கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் காங்கிரசில் கலந்து கொள்வதற்காக தாஷ்கன்டிலிருந்து பாக்கூவுக்கு வந்த பொழுது 1920 ஆகஸ்ட் 24இல் கூட்டத்தில் பின்வருமாறு சொற்பொ ழிவாற்றினார்: ''சோவியத் ருஷ்யாவிலிருந்து உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்திய முஸ்லிம்களின் இதயங்களில் சுடர் விடுகிறது... உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் செய்யக் கூடிய ஒரேயொரு சரியான காரியம் சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி வகுப்பதே என்று அவர்கள் கருதுகிறார்கள்.'' நஸீர் என்னும் மற்றொரு இந்தியப் பிரதிநிதி ''ருஷ்ய உதவிதான் நமக்கு மீட்சியளிக்கும்''** என்று தன்னுடைய உரையின் முடிவில் கூறினார்.

அக்டோபர் புரட்சியும் சோவியத் யதார்த்தங்களுமே இந்திய மக்களின் பிரதிநிதிகளாக வந்த நூற்றுக்கணக் கான இந்தியர்களிடம் ''...சுயேச்சையான அரசியல் சிந் தனையிலும் சுயேச்சையான அரசியல் செயலிலும் ஈடுபடு வதற்கான ஊக்கத்தை''*** ஏற்படுத்தின என்பதை சோவி

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் அதிகாரி இ.குத்தூஸவ் 1920 டிசம்பர் 30இல் புஹாரா வைச் சேர்ந்த எனிக்கேயெவ் மற்றும் தொம்பாஸவுக்கு எழுதிய கடிதம்.

** **கம்முனிஸ்ட்**, பாக்கூ, ஆகஸ்ட் 26, 1920.

*** வி.இ. லெனின், ''கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண் டாவது காங்கிரஸ், 1920 ஜூலை 19—ஆகஸ்ட் 7'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 441.

யத் ருஷ்யாவில் இந்தியப் புரட்சிக்காரர்களுடைய வாழ்க்கை முறையும் நடவடிக்கைகளும் தெளிவாக எடுத்துக்காட்டின. சுயேச்சையான அரசியல் சிந்தனை வேட்கை இந்தியக் குடியேறிகளை நேரடியான புரட்சிகர நடவடிக்கையில், சோவியத் ஆட்சியின் எதிரிகளை எதிர்த்து ஆயுதமேந்திய சண்டைகளில் பங்கெடுக்கும்படி செய்தது; சோவியத்துகளை ஆதரிப்பது கிழக்கு நாடுகளின் விடுதலைக்குப் போராடுவது என்னும் ஓரளவுக்குத் தெளிவான முடிவை ஏற்படுத்தியது.

எனினும் சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்தியக் குடியேறிகள் அனைவரும் அல்லது அவர்களில் அதிகமானவர்கள் அக்டோபர் புரட்சியில் மற்றும் உள்நாட்டு யுத்தத்தில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டு தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஆட்சியை நிறுவுவதற்கு உறுதியாக முடிவெடுத்தவர்கள் என்றோ அல்லது அதற்காகப் போராடுவதற்குத் தயாராக இருந்தவர்கள் என்றோ எவ்விதத்திலும் கருத முடியாது. இந்தியர்கள் மத்தியில் அப்படிப்பட்ட நபர்கள் இருந்தார்கள்; அவர்களுடைய எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருந்தது, ஆனால் அவர்கள் ஒருபோதும் பெரும்பான்மையினராக இருக்கவில்லை.

முன்னர் வர்ணிக்கப்பட்ட கெர்க்கி சம்பவம் இந்த அம்சத்தை விளக்கும். ரபீக் அகமது மற்றும் ஷௌகத் உஸ்மானி எழுதியுள்ள நினைவுக் குறிப்புகளிலிருந்து 89 இந்தியர்களில் தற்காப்புச் சண்டைகளில் பங்கெடுத்தவர்கள் 25—30க்கு அதிகமல்ல, முன்னேறித் தாக்குகின்ற சண்டைகளில் ஈடுபட்டவர்கள் மூவர்தான் என்று அறிகிறோம்.

புஹாராவில் மிலீஷியாவில் சேர்ந்திருந்த இந்தியர்களைப் பற்றி சில கருத்துக்களைக் கூறுவது அவசியம். புஹாரா அரசாங்கத்தை மாஸ்கோ ஆதரிக்கிறது என்பது மிலீஷியாவிலிருந்த இந்தியர்களில் மிகக் குறைவானவர்களுக்கே முக்கியமானதாக இருந்தது. பெரும்பான்மையினருடைய கருத்தை புஹாரா இந்தியர்களின் தலைவரான அக்பர் ஜான் கூறினார்: ‘‘புஹாரா அரசாங்கம் இஸ்லாமிய அரசாங்கம்’’. அவருடைய கருத்தின்படி கம்யூனிஸ்டு

களுடன் அதற்கு சம்பந்தமில்லை, ஆனால் அது இந்தியர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருந்தது.*

இந்தியக் குடியேறிகளில் சிறுபான்மையினர் சோவியத் ஆட்சியின் சோஷலிஸ்ட் தன்மையையும் அதன் செயல் திட்டத்தின் கம்யூனிஸ்ட் சாரத்தையும் ஏற்றுக்கொண்டு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் பெரும்பான்மையினரால் சோஷலிஸ்ட் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பின்தங்கிய காலனிச் சமூகம் ஏற்படுத்துகின்ற சிறு சொத்துடைமைக் கருத்துக்கள் அவர்களிடம் வேரூன்றியிருந்தன. அவர்களால் அவற்றைக் கைவிட முடியவில்லை. உதாரணமாக, இந்தியப் புரட்சிச் சங்கத்தின் முதல் செயலாளரான அமீன் ஃபரூக் 1921ம் வருடத்தின் ஆரம்பத்தில் மாஸ்கோவுக்கு வந்த போது சோவியத் தலைநகரத்தில் அவர் பார்த்தவை அவருக்கு உற்சாகத்தைத் தரவில்லை. ''மாஸ்கோ வாழ்க்கை ஓரளவுக்கு பயங்கரமே. சந்தை கிடையாது, கடைகள் இல்லை, எல்லாம் அரசுக்குச் சொந்தம், தனிச்சொத்து இல்லை, அதற்கு எவருக்கும் உரிமை இல்லை'' (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.).

பல நூற்றாண்டுகளாக வேரூன்றிய ஜாதிய அமைப்பு மற்றும் தீவிரமான மத ஈடுபாட்டின் எல்லாவிதமான தப்பெண்ணங்களையும் இந்தியக் குடியேறிகள் தம்முடன் கொண்டு வந்திருந்தார்கள். அது இயற்கையே. அவர்களில் சிலர் உயர்ந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தாஷ்கன்ட் குழு பயன்மிகு வேலையில் ஈடுபடுவதற்கு ஒரேயடியாக மறுத்ததற்கு ஓரளவு காரணமாகும்.** அந்த சமயத்தில் (1920 டிசம்பர்) தாஷ்கன்டிலிருந்த இந்தியர்கள் மத்தியில் எம்.என்.ராய் சொற்பொழிவாற்றிய பொழுது ''ருஷ்யாவைப் புனரமைப்பதற்குப் பாடுபடுவது என்பதற்கு உலகப் புரட்சிக்குப் பாடுபடுவதென்று அர்த்தம். இதைப் புரிந்து கொள்கின்ற அளவுக்கு உங்களுடைய புரட்

---

* வி.பெரெல்மான் 1921 மார்ச் 12இல் தாஷ்கன்டிலிருந்த இந்தியப் புரட்சிக் கமிட்டிக்கு அனுப்பிய அறிக்கை.

** ''பலரால் (பயன்மிகு) வேலை செய்வதற்கு முடியவில்லை. அதற்குப் பலவிதமான வர்க்க மற்றும் தொழில் முறைத் தப்பெண்ணங்களே காரணம்'' என்று திருமலாச்சார்யா பிற்காலத்தில் (1921 ஜூலை 22இல்) எழுதினார்.

சிகர உணர்வு ஆழமாக இருக்கவில்லை''* என்று கூறியது சரியானதே.

''மதம் என்ற பழம்பொருட் சேமிப்பறையிலிருந்து தப்பி வருவது கடினமானதே. ஏனென்றால் கிழக்கு நாடுகளின் தேசிய இயக்கங்கள் அனைத்தும் அங்குதான் கருவுற்று அடைகாக்கப்பட்டன'' என்று இந்தியப் புரட்சிக்காரர்களில் தலைசிறந்தவரான மன்மத நாத் குப்தா கூறினார். இந்தியப் புரட்சிக்காரர்கள் ''ருஷ்யப் புரட்சியையும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்தையும் வியந்து பாராட்டினார்கள். ஆனால் அவர்கள் ருஷ்யப் புரட்சியின் மூல ஊற்றாகிய மார்க்சியத் தத்துவஞானத்தைத் தொடுவதற்கு மறுத்தார்கள்''.**

இந்தியக் குடியேறிகளில் மிகப் பெரும்பான்மையினருடைய (ஸ்தாபன ரீதியாக ஒன்றுசேர்ந்திருந்த மற்றும் தனித்தனியாக இருந்தவர்களின்) புரட்சிகர உறுதிப்பாடு தேசிய குணாம்சத்துடன் தவிர்க்க முடியாத முறையில் தேசிய சுயநலம், குறுகிய மனப்பாங்கு ஆகியவற்றையும் கொண்டிருந்தது. ஆனால் நாம் மேலே விமர்சனம் செய்த அனைத்துமே காலனி இந்தியச் சமூகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி மட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டன. இதைப் பற்றி லெனின் பின்வருமாறு கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது: ''...எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஒரு நாடு பிற்பட்ட நிலையில் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மீது சிறு விவசாய உற்பத்தி முறையின், தந்தையாதிக்க முறையின், தனித்தொதுங்கி வாழும் நிலையின் பிடிப்பு பலமாயிருக்கிறது; இவை மிகமிக ஆழ்ந்த குட்டி முதலாளி வர்க்க விருப்பு வெறுப்புகளுக்கு, அதாவது தேசியச் சுயநல உணர்வுக்கும் தேசியக் குறுகிய மனப்பான்மைக்கும் தவிர்க்க முடியாதவாறு குறிப்பான வலுவையும் உறுதியையும் தருகின்றன.''*** ''இந்த விருப்பு வெறுப்புகள் மிகவும் மெதுவாகத்தான் மறைந்து தீரும்''**** என்றும் லெனின் எச்சரித்தார்.

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 7.

** M. Gupta, "Glorious October Revolution through Revolutionaries Eyes", *New Age*, October 8, 1967, p. 11.

*** வி.இ.லெனின், ''தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள் (கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்காக)'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம். மாஸ்கோ, 1984 பார்க்க.

**** **அதே இடம்.**

## அத்தியாயம் இரண்டு

# இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் மார்க்சியக் கல்வியில் லெனினின் பங்கும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் பாத்திரமும்

சோவியத் நாட்டிலிருந்த பல இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு தேசிய மட்டுப்பாடு மற்றும் தேசிய தப்பெண்ணங்களிலிருந்து விடுபடும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு, இவர்கள் புரட்சிகர மக்களுடன் நேரடியாக கலந்து பழகியதாலும் சோவியத் கம்யூனிஸ்டுகளுடன் மனம் விட்டுப் பழகியதாலும் துரிதமடைந்தது. பல இந்தியக் குடியேறிகள் மார்க்சியத்திற்கு மாறியது, அன்று சோவியத் ருஷ்யாவிலிருந்த கிழக்கத்திய நாட்டவரின் மத்தியில் வளர்ந்த கம்யூனிஸ்டு இயக்கத்தில் இவர்கள் பங்கேற்றது ஆகியவை மேற்கூறிய நிகழ்ச்சிப் போக்கிற்கான தெட்டத் தெளிவான அடையாளமாகும்.

### இந்தியப் புரட்சிக்காரர்கள் மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக்கொள்ளுதல்

ருஷ்யப் புரட்சியின் சாராம்சத்தைப் புரிந்து கொண்டு, கம்யூனிஸ்ட் இலட்சியங்களை ஏற்றுக்கொண்ட தேசியப் புரட்சிக்காரர்கள் சிலர் 1920ம் வருடத்தின் பிற்பாதியில் சோவியத் குடியரசுக்கு வருவதற்குத் தொடங்கினார்கள்.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று சரியான முறையில் கருதப்படுகின்ற மனவேந்திர நாத் ராய் (1889—1954) 1920 மே அல்லது ஜூன் மாதத்தில் மாஸ்கோவுக்கு வந்தார்.* அவருடைய தீவிரமான முயற்சியினால் 1919இல் அமைக்கப்பட்டிருந்த மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு அவரைப் பிரதிநிதியாக அனுப்பியது.

---

* S. G. Sardesai, *India and the Russian Revolution*, New Delhi, 1967, p. 43.

சமீபகாலம் வரை, தீவிர தேசியவாதப் புரட்சிக்கார ராக இருந்த (இவரே இப்படி பின்னால் எழுதினார்) ராய் இளமையிலேயே—முதல் உலக யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பே—இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார். வங்காளத்தில் ''அனுஷிலன் சமிதி'' என்ற பெயருடைய ரகசிய புரட்சிகர பயங்கரவாத ஸ்தாபனத்தில் அவர் சேர்ந்திருந்தார். 1915இல் அந்த ஸ்தாபனம் வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்காக அவரைப் பசிபிக் கடல் நாடுகளுக்கு அனுப்பியது. பிரிட்டனுக்கு எதிராக இந்திய-ஜெர்மன் கூட்டு நடவடிக்கைக்கு இந்தியப் புரட்சிக்காரர்கள் செய்து கொண்டிருந்த தயாரிப்புகளில் அது ஒரு பகுதியாகும். ராய் ஜாவா, கொரியா, ஜப்பான், சீனா முதலிய நாடுகளுக்குச் சென்றார். அவர் 1916ம் வருடத்தின் கோடைகாலத்தில் ''புரட்சிகர தேசியத்தின் தூதராக'' அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு வந்தார். அங்கே அவர் மார்க்ஸ் எழுதிய நூல்களைப் படிக்கத் தொடங்கினார். அதன் பலனாக ''பொருள்முதல் வாதத் தத்துவஞானத்தைத் தவிர்த்து சோஷலிசத்தை''* ஏற்றுக்கொண்டதாக அவர் பிற்காலத்தில் எழுதினார். அமெரிக்கப் போலீசிடமிருந்து தப்புவதற்காக அவர் நரேந்திர நாத் பட்டாச்சார்யா என்ற இயற்பெயரை மாற்றி மனவேந்திர நாத் ராய் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். பிறகு அவர் மெக்சிகோவுக்குச் சென்றார். மாபெரும் அக்டோபர் புரட்சியைப் பற்றி அங்கே தெரிந்து கொண்டார். இப்புரட்சி மெக்சிகோவின் இடதுசாரி சோஷலிஸ்டுகள் மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எம். என். ராய் தன்னுடைய சித்தாந்த வளர்ச்சியில் அடுத்த காலடி எடுத்து வைத்தார். அவர் கம்யூனிஸ்டானார்.

மெக்சிகோவிலிருந்த இடதுசாரி சோஷலிஸ்டுகள் அனைவரும் உடனே கம்யூனிஸ்டுகளாக மாறுவதென்று முடிவு செய்தார்கள், அவர்கள் உணர்ச்சிப் பரவசமான நிலையில் இருந்தார்கள், மாபெரும் எதிர்பார்ப்புகளின் சூழலில் வசித்தார்கள் என்று அவர் எழுதினார். ராய் இந்த உத்வேகத்தில் ''தீவிரமான தேசியத்திலிருந்து கம்யூனிசத்துக்கு தாவிக்குதித்தார்''. தேசிய இனங்களைப்

---

* *M. N. Roy's Memoirs*, Bombay, 1964, pp. 22, 28—29.

*அத்தியாயம் இரண்டு*

# இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் மார்க்சியக் கல்வியில் லெனினின் பங்கும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் பாத்திரமும்

சோவியத் நாட்டிலிருந்த பல இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு தேசிய மட்டுப்பாடு மற்றும் தேசிய தப்பெண்ணங்களிலிருந்து விடுபடும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு, இவர்கள் புரட்சிகர மக்களுடன் நேரடியாக கலந்து பழகியதாலும் சோவியத் கம்யூனிஸ்டுகளுடன் மனம் விட்டுப் பழகியதாலும் துரிதமடைந்தது. பல இந்தியக் குடியேறிகள் மார்க்சியத்திற்கு மாறியது, அன்று சோவியத் ருஷ்யாவிலிருந்த கிழக்கத்திய நாட்டவரின் மத்தியில் வளர்ந்த கம்யூனிஸ்டு இயக்கத்தில் இவர்கள் பங்கேற்றது ஆகியவை மேற்கூறிய நிகழ்ச்சிப் போக்கிற்கான தெட்டத் தெளிவான அடையாளமாகும்.

## இந்தியப் புரட்சிக்காரர்கள் மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக்கொள்ளுதல்

ருஷ்யப் புரட்சியின் சாராம்சத்தைப் புரிந்து கொண்டு, கம்யூனிஸ்ட் இலட்சியங்களை ஏற்றுக்கொண்ட தேசியப் புரட்சிக்காரர்கள் சிலர் 1920ம் வருடத்தின் பிற்பாதியில் சோவியத் குடியரசுக்கு வருவதற்குத் தொடங்கினார்கள்.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று சரியான முறையில் கருதப்படுகின்ற மனவேந்திர நாத் ராய் (1889—1954) 1920 மே அல்லது ஜூன் மாதத்தில் மாஸ்கோவுக்கு வந்தார்.* அவருடைய தீவிரமான முயற்சியினால் 1919இல் அமைக்கப்பட்டிருந்த மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு அவரைப் பிரதிநிதியாக அனுப்பியது.

---

* S. G. Sardesai, *India and the Russian Revolution*, New Delhi, 1967, p. 43.

சமீபகாலம் வரை, தீவிர தேசியவாதப் புரட்சிக்கார ராக இருந்த (இவரே இப்படி பின்னால் எழுதினார்) ராய் இளமையிலேயே—முதல் உலக யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பே—இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார். வங்காளத்தில் ''அனுஷிலன் சமிதி'' என்ற பெயருடைய ரகசிய புரட்சிகர பயங்கரவாத ஸ்தாபனத் தில் அவர் சேர்ந்திருந்தார். 1915இல் அந்த ஸ்தாபனம் வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்காக அவரைப் பசிபிக் கடல் நாடுகளுக்கு அனுப்பியது. பிரிட்டனுக்கு எதிராக இந்திய-ஜெர்மன் கூட்டு நடவடிக்கைக்கு இந் தியப் புரட்சிக்காரர்கள் செய்து கொண்டிருந்த தயாரிப்பு களில் அது ஒரு பகுதியாகும். ராய் ஜாவா, கொரியா, ஜப்பான், சீனா முதலிய நாடுகளுக்குச் சென்றார். அவர் 1916ம் வருடத்தின் கோடைகாலத்தில் ''புரட்சிகர தேசி யத்தின் தூதராக'' அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு வந் தார். அங்கே அவர் மார்க்ஸ் எழுதிய நூல்களைப் படிக்கத் தொடங்கினார். அதன் பலனாக ''பொருள்முதல் வாதத் தத்துவஞானத்தைத் தவிர்த்து சோஷலிசத்தை''* ஏற்றுக்கொண்டதாக அவர் பிற்காலத்தில் எழுதினார். அமெரிக்கப் போலீசிடமிருந்து தப்புவதற்காக அவர் நரேந்திர நாத் பட்டாச்சார்யா என்ற இயற்பெயரை மாற்றி மனவேந்திர நாத் ராய் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். பிறகு அவர் மெக்சிகோவுக்குச் சென்றார். மாபெரும் அக்டோபர் புரட்சியைப் பற்றி அங்கே தெரிந்து கொண்டார். இப்புரட்சி மெக்சிகோவின் இடதுசாரி சோஷ லிஸ்டுகள் மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எம். என். ராய் தன்னுடைய சித்தாந்த வளர்ச்சியில் அடுத்த காலடி எடுத்து வைத்தார். அவர் கம்யூனிஸ்டானார்.

மெக்சிகோவிலிருந்த இடதுசாரி சோஷலிஸ்டுகள் அனைவரும் உடனே கம்யூனிஸ்டுகளாக மாறுவதென்று முடிவு செய்தார்கள், அவர்கள் உணர்ச்சிப் பரவசமான நிலையில் இருந்தார்கள், மாபெரும் எதிர்பார்ப்புகளின் சூழலில் வசித்தார்கள் என்று அவர் எழுதினார். ராய் இந்த உத்வேகத்தில் ''தீவிரமான தேசியத்திலிருந்து கம்யூனிசத்துக்கு தாவிக்குதித்தார்''. தேசிய இனங்களைப்

---

* *M. N. Roy's Memoirs*, Bombay, 1964, pp. 22, 28—29.

பற்றி போல்ஷிவிக்குகளின் கொள்கையே இவ்வளவு விரைவாகவும் சுலபமாகவும் தான் மாறியதற்குக் காரணம் என்று ராய் விளக்கினார். ''சோஷலிசத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சாரம் என்னை வசீகரித்தது'' என்று அவர் சுட்டிக் காட்டினார். அக்காரணத்தால் ''புரட்சிகர ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியத்திலிருந்து கம்யூனிசத்திற்கான பாதை சிறிது நேரத்தில் கடக்கக் கூடியதாயிற்று''.*

இது மிகவும் முக்கியமான, சுவாரசியமான விளக்கமாகத் தோன்றுகிறது. ஏனென்றால் எம். என். ராய் மட்டுமின்றி இன்னும் ஏராளமானவர்களுடைய உண்மை நிலையை அது பிரதிபலிக்கிறது. இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்கள் பொதுவாகத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து மார்க்சியத்துக்கு முன்னேறவில்லை. அவர்களுக்கு அந்த இயக்கத்துடன் எத்தகைய சம்பந்தமும் இல்லை; அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இன்னும் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்குத் தவறினார்கள். அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலமாக, உலகத்தின் முக்கியமான காலனியாதிக்க எதிர்ப்பு சக்தியாகவும் கிழக்கு நாடுகளின் மக்களினங்களின் விடுதலையை உண்மையில் ஆதரிக்கின்ற சக்தியாகவும் இருந்த சோவியத் ஆட்சியின் மீதிருந்த அன்பின் மூலமாக மார்க்சியத்துக்கு முன்னேறினார்கள். அவர்கள் வேகமாக மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டார்கள், கம்யூனிஸ்ட் கட்சியில் கூடச் சேர்ந்தார்கள். ஆனால் பல வருடங்களாக சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தேசியப் புரட்சிக்காரர்களால் தம்முடைய சித்தாந்த, அரசியல் கருத்துக்களை அதே அளவு வேகமாகவும் முழுமையாகவும் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

அதனால்தான் இந்தியப் புரட்சிக்காரர்கள் பலர் தம்மைக் கம்யூனிஸ்டுகள் என்று அறிவித்துக் கொண்டாலும் இன்னும் குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிவாதத்தின் முற்காலக் கருதுகோள்களையும் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் உணர்வுபூர்வமான அரசியல் நடவடிக்கைக்குத் தகுதியுடையவர்கள் என்ற நம்பிக்கை இல்லாதிருத்தல், பெருந்திரளான மக்கள் மத்தியில் வேலை செய்வதை

---

* Ibid., pp. 59—60.

முற்றிலும் கைவிடுதல், சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாரிப்புச் செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் இராணுவக் காரணியின் பாத்திரத்தை மிகைப்படுத்துதல் ஆகிய அதன் பகுதிகளையும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

கம்யூனிஸ்ட் நிலைகளுக்கு வேகமாக மாறிவிட்ட பிறகும்கூட ''கலாச்சார ரீதியில்... இன்னும் தேசியவாதியாகவே இருந்தேன்; கலாச்சார தேசியம் என்ற தப்பெண்ணம் அழிவது மிகக் கடினமே'' என்று எம்.என்.ராய் தன்னுடைய நினைவுக் குறிப்புகளில் எழுதியிருக்கிறார். ''என்னுடைய வேகமான மாற்றம் ஓரளவுக்கு மேலோட்டமானதே என்பதைப் பின்னர் உணர்ந்தேன். இந்த உளவியல் மாற்றத்துக்கு நான் மட்டும் ஆளாகவில்லை. இன்னும் பலர் இந்த அதிசயமான மாற்றத்துக்கு உள்ளானார்கள். அதன் காரணமாக கம்யூனிசத்தை திரித்தார்கள்''* என்று ராய் சரியாகவே எழுதியிருக்கிறார். ஆரம்பகால இந்திய கம்யூனிஸ்டுகளில் மிகவும் அதிகமாக மார்க்சியத்தைப் பயின்றவர் என்று எம்.என். ராயைப் பற்றிச் சொல்லப்பட்டாலும் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் சாராம்சத்தை அவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் '' 'இடதுவாதம்' என்ற இளம் பருவக் கோளாறின்'' மிகவும் தனித்தன்மையான விளக்குநராக அவர் பிற்காலத்தில் மாறினார்; இடது குறுங்குழுவாத வாதங்கள் அனைத்தையும் ஒரே அமைப்பாகத் தயாரித்தார்.

எம். என். ராய் அபனி முக்கர்ஜியுடன் (1891—1937) மாஸ்கோவுக்கு வந்தார். அபனி முக்கர்ஜி சோவியத் யூனியனில் தங்கி கம்யூனிஸ்ட் அகிலத்தில் பணியாற்றினார், படித்தார், ஆராய்ச்சியாளரானார். ராயைப் போலவே அபனி முக்கர்ஜியும் தேசியப் புரட்சிக்காரராக, வங்காளத்தின் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவராகத் தன் புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடங்கினார். 1916இல் பிரிட்டிஷ் அதிகாரிகள் அவரைக் கைது செய்து சிங்கப்பூரில் சிறையிலடைத்தார்கள். 1917ம் வருடத்தின் இலையுதிர் காலத்தின் போது அவர் சிறையிலிருந்து தப்பி ஒரு படகில்

---

* Ibid., p. 60.

இந்தோனேஷியாவுக்கு (முதலில் சுமத்திராவுக்கும் பிறகு ஜாவாவுக்கும்) சென்றார். அங்கே 1919 கடைசி வரை மறைவாக இருந்த அவர் அக்டோபர் புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டதுடன் ஹாலந்தைச் சேர்ந்த ஸ்தலப் புரட்சிக்காரர்களைச் சந்தித்தார். அவர்களில் சிலர் ஏற்கெனவே மார்க்சிய நிலைகளை ஆதரிப்பவர்கள். அவர்கள் உதவியைக் கொண்டு 1920 ஆரம்பத்தில் அவர் ஹாலந்துக்கும் (ரோட்டர்டாம்), பிறகு ஜெர்மனிக்கும் (பெர்லின்) சென்றார். அவர் தன்னைக் கம்யூனிஸ்ட் என்று அறிவித்துக் கொண்டு கம்யூனிஸ்ட் அகிலத்தின் மேற்கு ஐரோப்பிய பீரோவுடன் தொடர்பு கொண்டார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் காங்கிரசில் பங்கெடுப்பதற்காக அவர் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டார்.*

ம. திருமலாச்சார்யா இந்தியப் புரட்சிச் சங்கத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவினருடன் 1920 ஜூலை முதல் தேதியன்று காபூலிலிருந்து தாஷ்கன்டுக்கு வந்தார். இச்சங்கத்தின் தலைவர் அப்துர் ராப் பார்க். அவருக்கு அடுத்த நிலையில்தான் திருமலாச்சார்யா இருந்தார். ஆனால் அவர் தாஷ்கன்டுக்கு வருவதற்கு முன்பே, 1920ம் வருடத்தின் ஆரம்பத்திலேயே, காபூலில் தன்னைக் கம்யூனிஸ்ட் என்று அறிவித்திருந்தார்.

அவர் 1907—1908இல் இங்கிலாந்தில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடங்கினார். முதல் உலக யுத்தத்தின் முடிவில் அவர் பெர்லினிலிருந்த இந்தியப் புரட்சிக் கமிட்டியுடன் ஒத்துழைத்தார்.** அவர் 1917 ஜூனில் தான் இங்கிலாந்திலேயே சந்தித்த வி. சட்டோபாத்யாயாவுடன் ஸ்டாக்ஹோமுக்குச் சென்றார். அங்கே அவர்கள் இந்தியாவில் புரட்சிப் பிரச்சாரம் செய்வதற்குரிய இந்திய பீரோவை அமைத்தார்கள். அவர் ஸ்வீடனில் அக்டோபர் புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டார்; அதை பகிரங்கமாக வர

---

* P. Unnikrishnan, “Indian Revolutionaries in the Soviet Union”, *Link*, August 30, 1964, pp. 33—34; Gautam Chattopadhyaya, *Abani Mukherji. A Dauntless Revolutionary and Pioneering Communist*, New Delhi, 1976, pp. III, 11, 12, 15.

** *Documents of the History of she Communist Party of India*, Vol. 1, pp. 17—18.

வேற்றார். அவருடைய சித்தாந்த மற்றும் அரசியல் வளர்ச்சிக்கு ருஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்டு வெளிநாடுகளில் வசித்துக் கொண்டிருந்த புரட்சிக்காரர்களுடன் அவருக்கு ஏற்பட்டிருந்த தனிப்பட்ட தொடர்பு பேருதவியளித்தது. அப்படிப்பட்டவர்களில் 1917இல் ஸ்டாக்ஹோமில் வசித்த—பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் அதிகாரியாகப் பணியாற்றிய—கிரில் திரொயனோவ்ஸ்கியைக் குறிப்பிடுவது அவசியம்.

திருமலாச்சார்யா 1919 ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் (மகேந்திர பிரதாப் மற்றும் அப்துர் ராப் பார்க்குடன்) மாஸ்கோவுக்கு வந்தார். லெனின் அவர்களைச் சந்தித்தார். மாஸ்கோ வருகையும் லெனினுடன் உரையாடியதும் அவருடைய வாழ்க்கையில் முக்கியமான சம்பவங்களாக இருந்தன. அவர் யா.ஸி. சுரித்ஸ், இ.எம். ரேய்ஸ்னர் என்ற இரண்டு சோவியத் இராஜியவாதிகளுடன் காபூலுக்குச் சென்றார். அங்கே அவர்கள் தங்கியிருந்த காலத்தில் நெருங்கிப் பழகியது அவருடைய சித்தாந்த வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. எப்படி இருந்த போதிலும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் தகுதித் தணிக்கைக் குழுவுக்கு 1921 ஜூன் 24இல் அவர் எழுதிய கடிதத்தில் தன்னை ''உறுதியான கம்யூனிஸ்ட்'' என்று குறிப்பிட்டார்; யா.ஸி. சுரித்ஸ் மற்றும் இ.எம். ரேய்ஸ்னர் ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராவதற்கு சிபாரிசு செய்வதாக வாக்குறுதியளித்திருப்பதாகவும் கூறினார்.

காபூலிலிருந்து சோவியத் துருக்கிஸ்தானுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர்களில் இன்னும் சிலர் சோவியத் ஆட்சியின் கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை ஆக்கபூர்வமானவையாக கருதினார்கள். நான் ஆராய்ந்த 84 நமூனாக்களில் மூன்று அல்லது நான்கில் கம்யூனிஸ்ட் அனுதாபம் இருக்கிறது. உதாரணமாக 23 வயதாகிய அப்துல் மஜீது ''கம்யூனிஸ்ட் செயல்திட்டத்தை முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதாக'' எழுதியிருந்தார். அவர் காஷ்மீரில் ஒரு வியாபாரியின் குடும்பத்தைச் சேர்ந்தவர், அரைகுறையான கல்லூரிக் கல்வி கற்றவர், சமூக அந்தஸ்தில் அலுவலக ஊழியர், 1915 முதல் புரட்சிகர வேலைகளில் ஈடுபட்டவர் என்பவை சுவாரசியமளிக்கின்ற தகவல்களாகும்.

பெஷாவரிலிருந்து வந்த 23 வயதாகிய நிஸார் முகம்மது ''கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை நேர்மையோடு நிறைவேற்றினால் உலக முழுவதும் விடுதலை பெறும்'' என்று எழுதினார். அவருடைய தகப்பனார் நிலவுடைமையாளர், அவர் உயர்நிலைக் கல்வி கற்றவர்; படித்துக் கொண்டிருந்த காலத்தில் 1916இல் புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்தார். அவர் சோவியத் ருஷ்யாவுக்கு வந்த பிறகு கம்யூனிஸ்ட் ஆனதுடன் பிற்காலத்தில் அங்கேயே தங்கி கட்சிச் சேவையிலும் சோவியத்துகளின் பணியிலும் அதிகமாக ஈடுபட்டார். தாஜிக் சோவியத் குடியரசில் அவர் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார், பிற்காலத்தில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டார்.*

இந்தியப் புரட்சிக்காரர்கள் சோவியத் ஆட்சியிடம் காட்டிய அன்பு வளர்ச்சியடைந்து அவர்களில் சிலர் சோஷலிஸ்ட் கோட்பாடுகளைப் படிப்படியாக ஏற்றுக் கொண்டதற்கு குலாம் அகமது என்ற இந்தியரை (அவர் முன்பு முஜாகிராக இருந்திருக்க வேண்டும்) உதாரணமாகக் கொள்ளலாம். அவரைப் பற்றி பிரிட்டிஷ் உளவு இலாகாவில் நெடுங்காலமாகப் பணியாற்றிய அடானாஸ் இயோவானவிச் என்ற ஸெர்பியர் எழுதிய அறிக்கை நமக்குக் கிடைத்திருக்கிறது. இயோவானவிச் ஜார் காலத்திலிருந்தே துருக்கிஸ்தானில் பிரிட்டனுக்கு உளவாளியாக இருந்ததுடன் அவ்வப்பொழுது இரானுக்குள்ளேயும் போவதுண்டு.** ருஷ்யாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்புகின்ற வழியில் நோய்வாய்ப்பட்டபடியால் குலாம் அகமது மெஷ்ஹெட்டிலிருந்த பிரிட்டிஷ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். 1922 ஏப்ரல் 22இல் இயோவானவிச் அவரைச் சந்தித்துப் பேசினான். '' 'ருஷ்யாவின் செஞ்சேனை மிகச் சிறப்பானது, உலகத்திலேயே அதிக பலமுடையது', 'ருஷ்யா சுதந்திரமான நாடு' என்று அவர் கூறியதைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன்'' என்று இயோவானவிச் எழுதினான். தாஷ்கன்டிலும் மாஸ்கோவிலும் தான் பிரச்சார வகுப்புகளில் கலந்து கொண்டதாக

* P. Unnikrishnan, "Indian Revolutionaries in the Soviet Union", *Link*, September 27, 1964, p. 33.

** சோ. இ.ம.அ.ஆ.கா., தொகுப்பு 110, பட்டியல் 3, பத்திரம் 925, தாள் 1.

வும் ருஷ்யாவில் இருக்கின்ற சுதந்திரம் தன்னைப் பரவ சப்படுத்தியதாகவும் குலாம் அகமது கூறினார். உளவாளி, அர்த்தமுள்ள கேள்வி ஒன்றைக் கேட்டான்: ''ருஷ்யாவில் இருப்பதைப் போன்ற சுதந்திரம் இந்தியாவில் ஏற்படு வதை நீங்கள் விரும்பவில்லை அல்லவா?'' ''ஆங்கிலே யர்கள் இல்லை என்றால் நாங்கள் ஆனந்தமாக இருப் போம்...'' என்று குலாம் அகமது ஜாக்கிரதையாக பதில ளித்தார். ஒரு நிமிடம் சிந்தித்த பிறகு அவர் மேலும் தொடர்ந்தார்: ''அதற்குப் பிறகு நான் ருஷ்யாவுக்குப் போய்விடுவேன், ஏனென்றால் ருஷ்யா வசிப்பதற்கு நல்ல நாடு...'' அகமது தன் பெயருடன் ''கான்'' என்ற சொல்லை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்று உளவாளி கேட் டான். ''நான் சோவியத் பாணியில் வாழ்க்கை நடத்து கிறேன். எந்த இராஜாவையும் கானையும் நான் அங்கீகரிக்க வில்லை'' என்று குலாம் அகமது பதிலளித்தார்.*

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த 22 வயது மாணவனாகிய அப்துல் கையூம் (அவருடைய தகப்பனார் ரயில்பாதை இன்ஸ்பெக்டர்) ''ருஷ்ய கம்யூ னிஸ்ட் செயல்திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக'' எழுதி னார். அப்துல் கையூம் கம்யூனிசத்துக்கு வந்து சேர்ந்த பாதை தேசியப் பற்றுடைய இளைஞர்கள் மீது அக்டோ பர் புரட்சி திடீரென்று ஏற்படுத்திய தாக்கத்துக்கு மிகவும் சிறந்த உதாரணமாகும். அவர் பல்கலைக்கழகத்தில் சோஷ லிசத்தின் சில கருத்துகளைப் பற்றி அறிந்திருக்க வேண் டும் இக்கருத்துக்கள் அவரை மிகவும் கவர்ந்தன. நாட்டு விடுதலைக்கு ஏதாவதொரு வழியைக் கண்டுபிடிக்க வேண் டும் என்னும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. அவர் 1919இல் கதர் கட்சியில் சேருவதற்காக அமெரிக்காவுக்குப் புறப் படுவதற்கு முடிவு செய்தார். ஆனால் அவரால் போக முடியவில்லை. அந்த வருடக் கடைசியில் அவர் கிலாபத் இயக்கத்தில் சேர்ந்தார். 1920 மார்ச்சில் பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக அவர் குறுகிய காலத்துக்குச் சிறை

---

* National Archives of India. Foreign and Political Department, File 359-M, 1923, Mid-Asia, Secret, No. 146, pp. 22—23. எல். வி. மித்ரோகின் இந்திய ஆவணக் காப்பகத்தில் இந்த ஆவணத்தை கண்டுபிடித்துப் பிரதி செய்து என்னிடம் தந்தார். அவருக்கு நன்றி.—ஆ-ர்.

யில் அடைக்கப்பட்டார். அதற்குப் பிறகு ''கிலாபத் புரட்சிக் கவுன்சிலினுடைய கட்டளையின்படி'' அவர் 1920 மே 13இல் நாட்டை விட்டு வெளியேறினார். சோவியத் ருஷ்யாவுக்குப் போக வேண்டும் என்னும் அவருடைய இரகசியமான, உணர்ச்சிகரமான ஆசையுடன் கிலாபத் புரட்சிக் கவுன்சிலின் கட்டளை பொருந்தியது. அவர் மற்ற முஜாகிர்களுடன் காபூலை அடைந்தார். அங்கிருந்து ஷௌகத் உஸ்மானி மற்றும் ரபீக் அகமது ஆகியோரைக்கொண்ட குழுவில் சேர்ந்து சோவியத் துருக்கிஸ்தானுக்குச் சென்றார். இங்கே நடைபெற்ற ஒரு சம்பவம் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியப் புரட்சிக்காரர்கள் சோவியத் பூமிக்கு வந்தவுடன் சோஷலிசத்தைப் பற்றிய விவாதங்களில் மோதிக் கொண்டு சிறு குழுக்களாகப் பிரிந்து விடுவதுண்டு. 1920 ஆகஸ்டில் தெர்மேஸில் இதுவே நடந்தது. விவாதத்தின் போது ''பெரிய சண்டை'' ஏற்பட்டது என்று சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் அதிகாரி ஒருவர் எழுதினார். அதன் விளைவாக இந்தியர்கள் இரண்டு கோஷ்டிகளாக—நிலவுடைமையாளருடைய மகனாகிய முகம்மது அக்பரின் தலைமையில் ''தேசியவாதப் பெரும்பான்மையினரும்'' அப்துல் கையூம் தலைமையில் சிறுபான்மையினரைக் (22) கொண்ட ''கம்யூனிஸ்ட் போக்கினரும்''—பிரிந்தார்கள்.

அப்துல் கையூம் சோவியத் துருக்கிஸ்தானுக்கு வந்ததும் மார்க்சியத்தை சுயேச்சையாகப் படிக்கத் தொடங்கினார் என்று அறிகிறோம். 1921 ஆரம்பத்தில் அவர் **இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள். ஒரு கையேடு** என்ற சிறுபிரசுரத்தை ஆங்கில மொழியில் எழுதினார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் அதிகார பூர்வமான மொழிபெயர்ப்பாளராகிய லெவ்கியேவ்ஸ்கி 1921 ஏப்ரல் 13இல் இதன் சுருக்கத்தைத் தயாரித்தார். அப்புத்தகத்தில் பத்து அத்தியாயங்கள் இருக்கின்றன, ஆனால் மொழிபெயர்ப்பாளர் ஏழு அத்தியாயங்களை மட்டுமே குறிப்பிடுகிறார். முதல் அத்தியாயம் ''முதலாளி மற்றும் தொழிலாளி வர்க்கங்களின் தோற்றம். நம்முடைய கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் பற்றிய ஆராய்ச்சி'' என்ற தலைப்பைக் கொண்டிருந்தது. அதில் ஆசிரியர் ''இனக்குழு முறையிலிருந்து நவீன அரசு

முறைக்குப் படிப்படியாக மாறியதும் எதேச்சாதிகார முடியாட்சி நிறுவப்பட்டதும்'' என்பதையும் இன்றைய சமூக வர்க்கங்களையும் பற்றி எழுதுகிறார். இரண்டாவது அத்தியாயம் ''எதேச்சாதிகார முடியாட்சியிலிருந்து ஏகாதிபத்திய மற்றும் முதலாளித்துவ அரசு வடிவத்துக்கு. முதலாளித்துவம் வளர்ச்சியடைதல்'' என்ற தலைப்பைக் கொண்டிருக்கிறது. மூன்றாவது அத்தியாயம் ''நமது பொருளாதார நிலைமைகள்—கடந்த காலமும் நிகழ்காலமும்'' என்பதைப் பற்றியதாகும். இந்தியாவின் செல்வம் ''விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின்'' உழைப்பினால் படைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் ''பட்டினியில் வாடுகிறார்கள், அவர்களால் தம் குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூட முடியவில்லை'' என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். அவர்களால் படைக்கப்படுகின்ற செல்வம் ''முடிசூட்டு விழாக்களிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகமான ஊதியங்களிலும் முதலாளிகளுடைய குழந்தைகளுக்கு அன்பளிப்புகளிலும்'' வீணாகச் செலவிடப்படுகிறது. ''தொழிலாளி வர்க்கம் இனியும் முதலாளித்துவத்தின் அடிமையல்ல. உங்கள் வெற்றிக்குப் பாதை'' என்பது நான்காவது அத்தியாயத்தின் தலைப்பு. உழைக்கும் மக்கள் சகிக்க முடியாத வாழ்க்கை நிலைமைகளில் வசிப்பதைப் பற்றி எழுதிய பிறகு ஆசிரியர் ''இத்தகைய வாழ்க்கை உங்களுக்கு முன்பே விதிக்கப்பட்டது என்ற கருத்தைக் கைவிட வேண்டும்'' எனக் கூறுகிறார். ''எசமானருடைய வாழ்க்கையைப் போலவே ஒவ்வொரு தொழிலாளியும் வாழ்க்கை நடத்துவதற்கு உரிமையுண்டு.'' ''இப்பாதை எங்கே போகிறது?'' என்பது ஐந்தாவது அத்தியாயத்தின் தலைப்பு. ''கம்யூனிசத்தின் சிறப்புக்களும் முதலாளித்துவத்தின் குறைகளும்'' என்பது ஆறாவது அத்தியாயத்தின் தலைப்பு. ''கம்யூனிசத்தின் கீழ் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்?'' என்பது ஏழாவது அத்தியாயம். இரண்டு வகையான சோஷலிஸ்டுகள் இருப்பதாக ஆசிரியர் எழுதுகிறார்: (அ) தேசிய சோஷலிஸ்டுகள்—இவர்கள் உண்மையில் தேசியவாதிகளே, (ஆ) சர்வதேசிய சோஷலிஸ்டுகள். தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ''சமூக, பொருளாதாரத் துன்பங்களுக்கு... முடிவேற்படுத்துகின்ற சாத்தியத்தை நிரூபித்தது'' இவர்கள் மட்டுமே.

கம்யூனிஸ்ட் போதனையின் சாரத்தை எழுதுகின்ற பொழுது ''ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தைத் தூக்கியெறிய வேண்டும்'' என்று வற்புறுத்துகிறார், ''மூலதனத்தின் தனியுடைமை உரிமையை'' நிராகரிக்கிறார், ''ஏனென்றால் உழைப்பு எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறது, மூலதனம் உழைப்பைத் திருடுவதைத் தவிர வேறு எதையுமே செய்வதில்லை''. இந்தியாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் ருஷ்யத் தொழிலாளர்களுடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டுமென்ற வேண்டுகோளுடன் ஆசிரியர் தன் பிரசுரத்தை முடிக்கிறார். ''முதலாளிகளின்... காட்டு மிராண்டித்தனமான நுகத்தடியைச் சுமப்பதற்கு நீங்கள் விரும்பவில்லை என்றால் கிளர்ந்தெழுங்கள், உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொள்ளுங்கள். நீங்கள் 30 கோடியினர். இந்தியர்களில் பத்தில் ஒரு பகுதியினரை ஒரு இராணுவமாக அமைத்தால் கூட அது உலக முழுவதையும் வெல்லக் கூடியதாக இருக்கும்.'' மார்க்சியத்தின் அறிவின் சிகரங்களைக் கண்டுபிடித்திருக்கின்ற ஒரு இளம் கம்யூனிஸ்டு அந்தப் பரவசத்தில் ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்குரிய வழியை உடனடியாக மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்று துடிப்பதை மேலே தரப்பட்ட சுருக்கத்திலிருந்து பார்க்கிறோம். அப்படிச் செய்கின்ற பொழுது ஆசிரியர் இயல்புணர்ச்சியின் மூலமாகவே இடதுசாரி புரட்சிகர நிலைகளுக்கு முன்னேறுகிறார். இந்தியா ருஷ்ய அனுபவத்தைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் மனப்பூர்வமாகவும் ஆவேசத்துடனும் கேட்டுக் கொள்கிறார். இந்தியா உடனடியான சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பாடுபட வேண்டும் என்கிறார். அதை மக்கள் இராணுவத்தின் ஆயுதமேந்திய எழுச்சியாகப் பார்க்கிறார். புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தேசிய முதலாளி வர்க்கத்துடன் தற்காலிகமான ஒத்துழைப்பு சாத்தியம் என்பதைக் கற்பனை செய்யக்கூட அவர் விரும்பவில்லை. அப்துல் கையூமின் கட்சி உறுப்பினர் அட்டை ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அவர் 1921 ஏப்ரல் 11இல், அதாவது இப்பிரசுரத்தை எழுதி முடித்தவுடன் கட்சியில் சேர்ந்தார் என்பதை அதிலிருந்து அறிகிறோம். இந்த இரண்டு சம்பவங்களும் தற்செயலானவை அல்ல. அரசியல் சுய தெளிவு

என்ற நீண்ட கால நிகழ்வுப் போக்கின் இறுதிக் கட்டத்துக்கு அவர் வந்திருப்பதை இப்பிரசுரம் குறித்தது. ''கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும்படி உங்களைத் தூண்டியது எது?'' என்ற கேள்விக்கு ''மார்க்ஸ், எங்கெல்சினுடைய நூல்களைப் படித்தது'' என்று அப்துல் கையூம் பதிலளித்ததற்குக் காரணம் இதுவே. அப்துல் கையூம் பிற்காலத்தில் நிஸார் முகம்மதைப் போலவே சோவியத் குடியுரிமை பெற்றார். அவர் கஸீனின் என்ற நகரத்தில் செஞ்சேனையின் தளகர்த்தராகப் பணியாற்றினார், ரயில்வே போக்குவரத்து மற்றும் தொழில்துறையைப் புனரமைப்பதில் பங்கெடுத்தார்.*

ஷௌகத் உஸ்மானி தேசியவாதத்திலிருந்து கம்யூனிசத்துக்கு முன்னேறியவர்களில் ஒருவர். இந்தியாவில் காலனியாதிக்கத்தை அகற்றுவதற்காகப் போராடுவதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட புரட்சிகர இளைஞர்களுக்கு அவருடைய வாழ்க்கை ஒரு குறியடையாளமாகும். ''பிரிட்டிஷ் ஆட்சி மீது வெறுப்பு என்னுடன் கூடப்பிறந்ததாகும். குழந்தைப் பருவத்திலே நான் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டிருந்தேன். 12 வயதான பொழுது பழிவாங்குவேன் என்று நான் பிரதிக்ஞை செய்து கொண்டேன். 19 வயதில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கு அமைக்கப்பட்ட ''மைன்புரி'' என்ற இரகசிய அமைப்பில் நான் சேர்ந்தேன். ஆனால் எங்களுடைய ஸ்தாபனத்தில் ஒரு துரோகி இருந்தான். அவனுக்கு 20 உறுப்பினர்களைத் தெரியும். அவர்கள் வெடிகுண்டுகளுடன் பிடிக்கப்பட்டார்கள். அவர்களில் சிலர் தூக்கிலிடப்பட்டார்கள்; வேறு சிலர் அந்தமான் தீவுகளில் வாழ்க்கை முழுவதையும் கழிக்கும்படி நாடு கடத்தப்பட்டார்கள். 1919இல் இது நடைபெற்றது. கட்டுப்பாடில்லாத சிந்தனைகள் என் தலையில் தறிகெட்டுப் பாய்ந்தன'' என்று அவர் 1922இல் எழுதினார் (மா.-லெ.ஆ.க.ம,க.ஆ.கா.).

அந்த இளைஞர் தாய்நாட்டை விடுவிப்பதற்குரிய வழிகளை வேதனையுடன் தேடிக் கொண்டிருந்தார். அவர் அக்டோபர் புரட்சியையும் சோவியத் ஆட்சியையும் பற்றிக் கேள்விப்பட்டார். தன் மூளையில் கொதித்துக் கொண்

* Masood Alikhan, "Recalling Days Indians Fought Shoulder to Shoulder with Soviet People for Revolution", *New Age*, October 1, 1967, p. 8.

டிருந்த கேள்விகளுக்கு பதிலைப் புரட்சிகர ருஷ்யாவில்தான் தேட வேண்டும் என்று முடிவு செய்தார். இந்தக் கட்டத்தில்தான் இந்தியாவை விட்டு வெளியேறுகின்ற இயக்கம் தொடங்கியது. அவர் அதில் சேர்ந்தது இயற்கையே. ''என் தோழர்களும் நானும் ஆப்கானிஸ்தானுக்குச் சென்று அப்பிரதேசத்திலிருந்து ஏதாவது முயற்சி செய்ய முடியுமா என்று பார்க்க விரும்பினோம்.'' ஆப்கானிஸ்தானுக்குப் போன பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தீர்மானகரமான முறையில் காபூல் இனிமேல் எதிர்க்காது என்பதை முஜாகிர்கள் உடனே உணர்ந்தார்கள். ''எனவே எல்லோரும் வடக்கே போவோம் என்ற பிரச்சார இயக்கத்தைத் தொடங்கினோம்.'' ருஷ்யாவுக்குள் போகின்ற இயக்கத்திற்கு ''நான் முக்கிய பிரச்சாரகனாக இருந்தேன்''. 1920 அக்டோபர் 22க்குப் பிறகு தாஷ்கன்டுக்கு வந்த முஜாகிர்கள் அங்கே தங்கள் நாட்டவர்கள் இரண்டு எதிரி கோஷ்டிகளாகப் பிரிந்திருப்பதைக் கண்டார்கள்: இந்தியப் புரட்சிச் சங்கம் மற்றும் எம். என். ராயின் கம்யூனிஸ்ட் குழு. ''யாருடன் சேருவதென்று எங்களுக்குத் தெரியவில்லை.'' சண்டை போட்டுக் கொண்டிருந்த இரண்டு கோஷ்டிகளையும் பற்றி எல்லா விவரங்களையும் ஷௌகத் உஸ்மானி சேகரித்தார். அவர் இடதுசாரி புரட்சிகர நிலைகளைப் பின்பற்றிய ராயின் அகில இந்திய தற்காலிக புரட்சிக் கமிட்டியுடன் ஒத்துழைப்பதற்கு அவை போதுமானவையாக இருந்தன. ஆனால் அவர் மார்க்சியத் தத்துவத்தையும் சோவியத் கொள்கையையும் பற்றிப் படிப்பதில் ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலத்தைச் செலவிட்ட பிறகுதான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவதென்று முடிவு செய்தார். மாஸ்கோவிலிருந்த பொழுது, அநேகமாக 1921இன் நடுப்பகுதியில் இது நடைபெற்றது.

இந்தியாவின் தேசியப் புரட்சிகர ஸ்தாபனங்களின்—உதாரணமாக, நாட்டுக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த இந்தியத் தற்காலிக அரசாங்கத்தின்—பிரதிநிதிகளாக துருக்கிஸ்தானுக்கு வந்த இந்தியர்களில் இன்னும் சிலர் கம்யூனிஸ்ட் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். தாஷ்கன்டில் அமைக்கப்பட்டிருந்த சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் இந்தியப் பிரிவில் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்களும் இன்னும் சில தேசியப் புரட்சிக்காரர்

களும் இருந்தார்கள். அது கம்யூனிஸ்ட் தத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற திசையில் வேகமாக முன்னேறியது.

1920 மே மாதத்திலேயே முகம்மது அலி, அப்துல் மஜீது, முகம்மது ஷாபிக் ஆகியோர் கம்யூனிஸ்டு ஸ்தாபனத்தை ஏற்படுத்த முயன்றனர்.

முகம்மது அலி ஆப்கானிஸ்தானில் இருந்த பொழுது (1919 கடைசியில் அல்லது 1920 ஆரம்பத்தில்) கம்யூனிஸ்டாகத் தன்னைக் கருதத் தொடங்கியதாகப் பிற்காலத்தில் எழுதினார்.* எனினும் அவர் 1920 ஏப்ரலில் சோவியத் ருஷ்யாவுக்கு வந்த பிறகு இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தைச் சேர்ந்த தேசியப் புரட்சிக்காரர்களின் கருத்துக்களை முற்றிலும் ஆதரித்தார். முகம்மது ஷாபிக்கும் கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை வெகு விரைவில் ஏற்றுக்கொண்டார். ''ஷாபிக் இளைஞர், அனுபவமில்லாதவர். மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்... இரண்டு மாதங்களுக்கு முன்பு அவர் கம்யூனிசத்தின் பரம வைரி; ஆனால் இப்பொழுது அவர் கம்யூனிஸ்டாகி விட்டார்'' என்று எம். ஷூல்மன் 1920இல் அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.).

முகம்மது அலி மற்றும் முகம்மது ஷாபிக்கின் மார்க்சியப் பயிற்சி மற்றும் இந்தியாவில் புரட்சியின் பிரச்சினைகளைப் பற்றி அவர்களுடைய அணுகுமுறையைப் பற்றி மிகச் சுவாரசியமான மதிப்பீடு இருக்கிறது. அது மிகச் சரியான மதிப்பீடுதான் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் காபூலில் தங்கியிருந்த பொழுது ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் தூதராக அங்கே இருந்த எஃப். எஃப். ராஸ்கோல்னிக்கவ் 1921 கடைசியில் அல்லது 1922 ஆரம்பத்தில் அதை எழுதியிருக்க வேண்டும். ''நம்முடைய இந்திய நண்பர்கள் இருவருடைய முக்கியமான குறை இந்தியப் புரட்சிகர இயக்கத்தைப் பற்றி அவர்களுடைய மேலோட்டமான தீவிரவாத மற்றும் அதிதீவிரக் கம்யூனிஸ்ட் அணுகுமுறையே. அவர்களிடம் அடிப்படையான மார்க்சியத் தெளிவு இல்லை, வர்க்க மற்றும் பொருளாதார உறவுகளைப் பகுத்தாராய்கின்ற திறமை இல்லை'' என்று அவர் எழுதினார். ''அவர்களுடைய மார்க்சிய அறிவு

* Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, pp. 118—119.

முழுவதும் பொது மக்களுக்காக எழுதப்பட்டிருக்கின்ற பிரசுரங்களிலிருந்தும் **கம்யூனிஸ்ட் அகிலம்** இதழ்களிலிருந்தும் கிடைத்தவையே.'' ''அவர்கள் கம்யூனிசத்தைப் பற்றி மேலோட்டமாகவே அறிந்திருப்பதனால் 'இடதுவாதத்தில்' ஈடுபடுகிறார்கள்; காங்கிரஸ் மற்றும் கிலாபத் தேசிய இயக்கத்தை பகிஷ்கரிக்க விரும்புவதில், ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியை முன் மாதிரியாகக் கொண்டு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உடனடியாக நிறுவுவதற்கு ஆசைப்படுவதில் இது வெளிப்படுகிறது'' என்று அவர் மேலும் எழுதினார்.

தேசியத்திலிருந்து சோஷலிசத்துக்கான தன்னுடைய சொந்த மாற்றத்தைப் பற்றிய மதிப்பீட்டை எம். என். ராய் எழுதியிருக்கிறார்; அதற்குச் சற்று முந்திய காலத்தில் அதே மாதிரியான மாற்றத்துக்கு இளம் இந்திய கம்யூனிஸ்டுகள் இருவர் உட்பட்டதைப் பற்றிய வர்ணனையை எஃப். எஃப். ராஸ்கோல்னிக்கவ் எழுதியிருக்கிறார். இரண்டுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை நம்முடைய கவனத்தைக் கவர்கிறது. அந்த ஒற்றுமை தற்செயலானதல்ல. இரண்டு உதாரணங்களிலும் அந்த நபர்கள் ஒரு பொதுவான நிலையிலிருந்து—குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகர தேசியவாதத்திலிருந்து — கம்யூனிஸ்ட் திசையில் முன்னேறினார்கள். ராயைப் போலவே மற்ற இந்திய தேசியப் புரட்சிக்காரர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பாதையின் மூலமாகக் கம்யூனிசத்துக்கு வந்தார்கள். இந்தியாவிலோ அல்லது மற்ற கிழக்கு நாடுகளிலோ முதல் கம்யூனிஸ்டுகளில் அதிகமான பெரும்பான்மையினர் குட்டி முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த தேசியப் புரட்சிக்காரர்கள் மற்றும் புரட்சிகர ஜனநாயகவாதிகள் மத்தியிலிருந்து தோன்றியது முற்றிலும் தர்க்க ரீதியானதே. பல பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் தேசிய இயக்கம் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் சிறிதும் ஒத்துழைக்க முடியாது, ஏனென்றால் முந்தியது தேசபக்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, ஆனால் பிந்தியது முற்றிலும் தேசபக்த எதிர்ப்புத் தன்மை கொண்டது; ஏனென்றால் அது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிறது, கிழக்கு நாடுகளின் பொது வாழ்க்கையின் பிரதான நீரோட்டமாகிய தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து முற்றிலும் பிரிந்து நிற்கிறது என்று

நிரூபிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்தியாவிலும் மற்ற கிழக்கு நாடுகளிலும் கம்யூனிஸ்ட் அகிலம் மற்றும் போல்ஷிவிக்குகளிடம் கைக்கூலி பெற்றவர்களே மார்க்சியத்தை விதைத்தார்கள் என்று அவர்கள் எழுதுகிறார்கள். எனினும் இத்தகைய வாதங்கள் உண்மைக்குப் புறம்பானவையே. இந்திய தேசியப் புரட்சிக்காரர்களின் உதாரணம்—சீனா, துருக்கி, இரான் ஆகிய நாடுகளில் மார்க்சியத்தை ஏற்றுக்கொண்ட தேசியப் புரட்சிக்காரர்கள் மற்றும் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் உதாரணங்களைப் போல—கம்யூனிசத்துக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் பகைமை இருப்பதாகச் சொல்லப்படுவதை மறுக்கிறது. ஆனால் மார்க்சியத்தை ஏற்றுக்கொள்ளும் பொழுது பல புரட்சிக்காரர்கள் பெரும்பாலும் தம்முடன் ஆழமாக வேரூன்றிய மத உணர்ச்சியின் சில கூறுகளையும், இரகசிய தேசியப் புரட்சிகர ஸ்தாபனங்களில் அவர்கள் உறுப்பினர்களாக இருந்த பொழுது உருவாக்கிக் கொண்ட குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகர தேசியவாதத் தப்பெண்ணங்களின் எச்சங்களையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் இவற்றை நீக்குவதற்குப் பல வருடங்களாயின.

இது வேறுவிதமாக இருந்திருக்க முடியாது. இந்தியா மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் வளர்ந்த, வசித்த சமூக-பொருளாதாரச் சூழல் மார்க்சிய-லெனினிய போதனையை சரியாகப் புரிந்து கொள்வதற்கும் வேகமாக கிரகிப்பதற்கும் ஏற்றதாக இருக்கவில்லை.

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் மார்க்சியத்தை நோக்கி வந்த பொழுது தமது பரம்பரையான மதப்பற்றைக் கைவிடுவதற்கு மிகவும் சிரமப்பட்டார்கள். அவர்கள் ஒரு பிரத்யேகமான வழியைப் பின்பற்றியது கூட அதற்குக் காரணமாக இருக்கலாம். அவர்கள் மார்க்சியத்தை மதத்துடன் பொருந்தும்படிச் செய்து கொண்டார்கள் அல்லது தம்முடைய மதத்துக்கு (பெரும்பாலும் இஸ்லாம் மதத்துக்கு) சோஷலிஸ்ட் முறையில் விளக்கமளித்தார்கள். முகம்மது அலியும் முகம்மது ஷாபிக்கும் ''கம்யூனிசத்துக்கும் மதத்துக்கும் இடையில் எவ்விதத்திலும் பகைமை கிடையாது என்று தீவிரமாக வலியுறுத்தினார்கள்'' என்று எஃப்.எஃப். ராஸ்கோல்னிக்கவ் எழு

தினார். சோவியத் ருஷ்யாவில் கம்யூனிஸ்டாக மாறிய ஷௌகத் உஸ்மானி இதே கருத்தை இன்னும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளியிட்டார். அவர் 1922 ஜூன் 20ந் தேதியன்று எம். என். ராய்க்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''இஸ்லாம் சமத்துவத்தை போதிக்கிறது. கம்யூனிசமும் அதையே போதிக்கிறது. அதன் காரணமாகவே நான் கம்யூனிஸ்டானேன்'' (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.).

சில தேசியப் புரட்சிக்காரர்களைப் பொறுத்த மட்டில் இஸ்லாமுக்குத் தரப்பட்ட சோஷலிஸ்ட் விளக்கம் அவர்கள் விஞ்ஞான கம்யூனிசத்தின் உண்மையான கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் பிற்காலத்தில் அவற்றை ஏற்றுக் கொண்டு தம்முடைய மதப்பற்றைக் கைவிடுவதற்கும் தூண்டியிருக்கக் கூடும்.

முஸ்லிம்களின் மதநூலாகிய குரானில் சமத்துவவாத அம்சங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அவற்றை உண்மையான சோஷலிஸ்ட் கோட்பாடுகள் என்று விளக்குவதற்கும் அவர்கள் முயற்சி செய்த பொழுது மதப்பற்றுடைய முஸ்லிம் மக்கள் சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி அமைத்து காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அதன் உதவியைப் பெற வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும் உறுதியான நாத்திகமும் மதப்பற்றுடையவர்களின் பாலான பகைமையும் கம்யூனிசத்தின் பிரதான அம்சம் என்று பிற்போக்காளர்கள் செய்த பிரச்சாரத்தை அவர்கள் எதிர்க்க விரும்பினார்கள்.

நமக்கு ஏற்கெனவே அறிமுகமான பர்க்கத்துல்லா, அப்துர் ராப் பார்க் போன்ற பலர் குரானுக்கு சோஷலிச விளக்கம் தந்தார்கள். பர்க்கத்துல்லாவின் கருத்துகளில் பின்வருபவற்றை முக்கியமாகச் சுட்டிக் காட்டலாம்: 1. ஜூடாயிசம், கிறிஸ்துவம், இஸ்லாம் மதங்களின் முதல் அருட்போதகர்களின் காலத்தில் எல்லா மக்களும் இந்த அருட்போதகர்கள் முன்வைத்த சோஷலிச விதிகளின்படி வாழ்ந்தனர்; 2. ஒவ்வொரு மதமும் பிரகடனப்படுத்தும் சமத்துவம், சகோதரத்துவம் என்ற சோஷலிசக் கோட்பாடுகள்—இவைதான் ''தன்னைப் போலவே பிறனையும் நினை'' எனும் முதுமொழியில் அடங்கியுள்ளன—இப்போது சோவியத் ருஷ்யாவில் அமல்படுத்தப்பட்டுள்ளன.

அப்துர் ராப் பார்க் தலைமையிலிருந்த இந்தியப் புரட்சிச் சங்கத்தின் முதல் வேலைத்திட்டத்தில் இரண்டு வாக்கியங்கள் கிட்டத்தட்ட அருகருகே இருந்தன: ''சங்கம் கம்யூனிசக் கோட்பாடுகளைக் காத்து நிற்கும்'', ''சங்கம் தேசிய மற்றும் மதப் பிரச்சாரம் செய்யும்...''

எனவே இஸ்லாமை பற்றிய சோஷலிச விளக்கம் எனப் படுவது (இதற்கு எவ்வித விஞ்ஞான அடிப்படைகளும் கிடையாது) மதப் பற்றுள்ள புரட்சிக்காரர்களில் ஒரு பகுதியினர் தாமும், குறிப்பாக தம் பின்வந்த உழைப்பாளிகளும் மார்க்சியத்திற்கு மாறுவதையும் சோவியத் ருஷ்யாவுடன் ஒத்துழைப்பதையும் எளிதாக்குவதற்காக செய்த முயற்சிகளுக்கு சான்று பகர்ந்தது. இந்த அர்த்தத்தில் மேற்கூறிய விளக்கம் ஓரளவு நல்ல பங்காற்றியது.

இஸ்லாம் மதத்தைப் பற்றிய இதே விளக்கத்தைப் பிற்போக்கு சக்திகளும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன என்பதை நாம் மறக்க முடியாது. அக்டோபர் புரட்சியின் தாக்கத்தினால் கிழக்கு நாடுகள் முழுவதிலும் பரவிய விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களை எதிர்ப்பதற்கு அவர்கள் இந்த விளக்கத்தை ஒரு வழியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் பின்வரும் முறையில் வாதிட்டார்கள்: சமத்துவக் கருத்துக்களை முதலில் எடுத்துரைத்தது இஸ்லாம் மதமே; குரானில் நெடுங்காலத்துக்கு முன்பே சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்களைத்தான் போல்ஷிவிக்குகள் திருப்பிக் கூறினார்கள்; ஆனால் அந்த மதத் தோற்றுவாய்க்கு நன்றி காட்டுவதற்கு பதிலாக அவர்கள் மதத்தை முற்றிலும் நிராகரித்து விட்டார்கள். இத்தகைய வாதமுறை மதப்பற்றுடையவர்கள் சோவியத் யூனியனுக்கு நெருக்கமாக வர முடியாதபடித் தடுத்தது, உழைக்கும் மக்கள் மதத்தின் அடிப்படையில் சுரண்டல்காரர்களுடன் ஒன்று கூடும்படிச் செய்தது, அப்பொழுது உருவாகிக் கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசிய ஒற்றுமைக்கு இடையூறு விளைவித்தது, விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதையும் தடுத்தது.

கிழக்கு நாடுகளின் விடுதலை இயக்க வீரர்கள் மிகவும் சுற்றி வளைந்து செல்கின்ற பாதையின் வழியாகவே மார்க்சியத்துக்கு வர முடிந்தது, தங்களுடைய மரபுவழிப்பட்ட

மனோபாவத்தை அகற்றுவதற்கு முன்னர் பல கஷ்டங்களை மீறி வர வேண்டியிருந்தது. எனவே அவர்களில் பலர் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று அறிவித்துக் கொண்ட பிறகும் கூட உடனே உண்மையான கம்யூனிஸ்டுகளாகி விடவில்லை. இது கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் வெளிப்பட்டது. அக்காங்கிரசில் வி.இ.லெனின் சமர்ப்பித்த கருத்துக்களை எதிர்த்து எம். என். ராய் வாதாடினார்.

### கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இந்திய கம்யூனிஸ்டுகள்

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் ஓரளவுக்குப் பெரிய இந்தியக் குழு கலந்து கொண்டது, அதாவது துல்லியமாகச் சொல்வதென்றால் உலகத்தில் அன்றிருந்த இந்திய கம்யூனிஸ்டுகளில் அநேகமாக எல்லோருமே கலந்து கொண்டார்கள்.

இவர்களில் முதலாவதாக எம்.என். ராயை (ராபர்ட் அலென் ராய் என்பது இவருடைய புனைப் பெயர்) குறிப்பிட வேண்டும். முன்பே அமைக்கப்பட்டிருந்த மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சி அவரை அனுப்பியிருந்தபடியால் அவர் வாக்களிக்கும் உரிமையுள்ள பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். எனினும் அவர் உண்மையில் இந்தியாவையே பிரதிநிதித்துவம் செய்தார். அபனி முக்கர்ஜியும் திருமலாச்சார்யாவும் ஆலோசக அதிகாரத்துடன் காங்கிரசில் கலந்து கொண்டார்கள்.* முகம்மது ஷாபிக் பார்வையாளராகப் பங்கெடுத்தார்.** மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எம். என். ராயின் மனைவி எவலின் டிரென்ட் ராய் ஆலோசக அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.***

இக்காங்கிரசில் துருக்கி, இரான், கொரியா, சீனா

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், சுருக்கெழுத்தறிக்கை, பெத்ரோகிராத், 1921, பக்கங்கள் 661—662 (ருஷ்ய மொழியில்).

** Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, p.68.

*** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 662.

முதலிய கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்த நாடுகளில் இந்தியாவுக்கு முன்பே கம்யூனிஸ்ட் இயக்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேற்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுடன் ''கிழக்கில், காலனி நாடுகளில், பின்தங்கிய நாடுகளில்... உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளும் குழுக்களும் காங்கிரசில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன'' என்று லெனின் சுட்டிக் காட்டினார். வளர்ச்சியடைந்த நாடுகளின் புரட்சிகர இயக்கம் காலனி நாடுகளின் விடுதலைப் போராட்டத்துடன் முழுமையாகவும் சாத்தியமான அளவுக்கு நெருக்கமாகவும் ஒத்துழைக்காவிட்டால் அது வெறும் மோசடியாகத்தான் இருக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.*

உலக சோஷலிச இயக்கத்தின் பல்லாண்டு கால வரலாற்றில் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், சாராம்சத்தில் பார்த்தால் கம்யூனிஸ்டுகளின் உண்மையான முதல் சர்வதேசக் கூட்டமாக விளங்கியது. அது மேற்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கத்தை மட்டுமல்லாமல் கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் சிறப்பாகப் பிரதிநிதித்துவம் செய்தது. இது தவிர காங்கிரசின் நடவடிக்கை அதன் பிரதிநிதித்துவத்திற்கு முற்றிலும் ஏற்றதாயிருந்தது. அக்காங்கிரஸ் லெனினுடைய வழிகாட்டுதலின் கீழ் கிழக்கு நாடுகள் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் விவாதித்தது ஒடுக்கப்பட்ட நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சினையைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலத்தின் மிகக் கவனமான அணுகுமுறையை எடுத்துக்காட்டியது. காலனிச் சமூகத்தின் சமூக-பொருளாதாரத் தரங்கள், கிழக்கு நாடுகளில் எதிர்பார்க்கப்படுகின்ற புரட்சிகளின் தன்மை, இப்புரட்சிகளில் தேசிய முதலாளி வர்க்கமும் இதர வர்க்கங்களும்—குறிப்பாக விவசாயிகளும்—வகிக்கக் கூடிய பாத்திரம், தேசிய புரட்சி இயக்கத்தின் பாலான கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறை, கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு முன்புள்ள விசேஷக் கடமைகள், மற்றும் இதர பிரச்சினைகளைக் காங்கிரஸ் விவாதித்தது. காங்கிரசின்

---

* வி.இ. லெனின், ''கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், 1920 ஜூலை 19—ஆகஸ்ட் 7'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 448.

தீர்மானங்கள், கம்யூனிஸ்ட் மற்றும் தேசிய விடுதலை இயக்கம் பற்றிய வி. இ. லெனினின் படைப்புகளில் ஆதாரப் படுத்தப்பட்டன. இவற்றை இவர் முதலாவது உலக யுத்த ஆண்டுகளிலும் அக்டோபர் புரட்சிக்குப் பின்னரும் எழுதினார்.

தேசிய மற்றும் காலனிகளின் பிரச்சினைகளைப் பற்றி காங்கிரசின் நகல் தீர்மானத்தை லெனின் **தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள்** என்ற தலைப்பில் மிக முந்திய காலமான 1920 ஜூன் 5இலேயே தயாரித்திருந்தார்.* இந்த ஆவணம் ஜூன் மாதத்தின் நடுப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டது.** லெனினுடைய வேண்டுகோளின்படி கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளுடன் சம்பந்தமுடைய கம்யூனிஸ்டுகள் இந்த ஆவணத்தை ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நன்கு விவாதித்தார்கள்.

இதே நேரத்தில் அப்போது மாஸ்கோவில் இருந்த எம். என். ராய்க்கு (இவர் 1920 மே மாதத்திலேயே இங்கு வந்தார்) **பூர்வாங்க நகல் ஆய்வுரைகள்,** ''விமரிசனம், ஆலோசனைகளுக்காக தோ. ராய்க்கு''*** என்று லெனின் தன் கைப்பட எழுதிய வார்த்தைகளுடன் அனேகமாக கிடைத்திருக்க வேண்டும். இதற்குப் பின் கிழக்கத்திய நாடுகளின் தேசிய மற்றும் சமூக பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்காக ராய் பன்முறை வி.இ. லெனினை சந்தித்தார்.

அவர் லெனினுடன் உரையாடிய சந்தர்ப்பங்களில் இப் பிரச்சினைகளைப் பற்றித் தன்னுடைய இடது குறுங்குழுவாதக் கருத்துக்களை எடுத்துக் கூறினார். இக்கருத்துக்கள் புதியவை அல்ல. ஏனென்றால் கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளில் பலரும் இத்தகைய இடது புரட்சிகர நிலைகளையே பின்பற்றி வந்தார்கள். எம். என். ராய் இக்கருத்துக்களை அதிகமான தெளிவுடனும் வன்மை

---

* வி.இ. லெனின், ''தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள் (கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்காக)'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்,** முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984 பார்க்க.

** **கம்யூனிஸ்ட் அகிலம்,** 1920, இதழ் 11, பக்கங்கள் 1719—1724 (ருஷ்ய மொழியில்).

*** *M. N. Roy's Memoirs*, p. 340.

யுடனும் வெளியிட்டார்; நாம் முன்பே குறிப்பிட்டதைப் போல இடது குறுங்குழுவாத வாதங்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்த அமைப்பாகத் தயாரித்தளித்தார். வி.இ. லெனின் ராயுடன் பல மணிக் காலம் விவாதித்தார், அவருடைய ''இடதுசாரி'' கருத்துக்கள் விஞ்ஞானத்துக்குப் புறம்பானவை, ஆபத்தானவை என்று விளக்கினார் என்று அந்த சந்தர்ப்பங்களில் உடனிருந்தவர்கள் எழுதியிருக்கிறார்கள். லெனின் அன்புடனும் பொறுமையுடனும் முற்றிலும் திறந்த மனதுடனும் தன்னிடம் விவாதித்ததாக ராய் பிற்காலத்தில் எழுதினார்.*

கிழக்கு நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் தேசிய முதலாளி வர்க்கம் தலைமை தாங்கிய விடுதலை இயக்கம் அந்த நாடுகளின் பொது வாழ்க்கையின் மிக முக்கியமான அம்சமாக இருந்தது. லெனினுடைய ஆய்வுரைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்று, விடுதலை இயக்கத்தை ஆதரிக்குமாறு கம்யூனிஸ்டுகளைக் கோரியது. விவசாயிகள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் தொடக்கப் பிரிவுகளின் வர்க்க முனைப்பான நடவடிக்கைகள் உள்பட மற்ற எல்லா நடவடிக்கைகளுமே நடைமுறையில் தேசிய விடுதலை இயக்கத்தின் பகுதியாக இருந்தன.

சுதந்திரமான அரசுகளை உருவாக்குகின்ற நீண்டகாலப் போராட்டத்தின் போது பின்தங்கிய நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் தம்முடைய சித்தாந்த மற்றும் ஸ்தாபன சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டே விடுதலை இயக்கத்தை ஆதரிக்க வேண்டும், ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைத்துக் கொண்டு அந்நிய ஏகாதிபத்தியம் மற்றும் ஸ்தல நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு எதிராக இன்னும் உறுதியான நடவடிக்கைக்குத் தூண்ட வேண்டும்.

பின்தங்கிய நாடுகளில் மிகவும் அதிகமான பெரும்பான்மையைக் கொண்டிருந்த விவசாயிகள் தேசிய இயக்கத்தின் பிரதான சக்தியாகவும் அடிப்படையாகவும் இருந்தது மிகவும் முக்கியமானதாகும். கிழக்கு நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று லெனின் வற்புறுத்தியது முதன்மையாக விவசாய இயக்

* *M. N. Roy's Memoirs*, pp. 380, 381.

கத்தை ஆதரியுங்கள், அதனோடு நெருக்கமான கூட்டணியை உருவாக்குங்கள் என்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தது.* எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் கொண்ட ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துங்கள் மற்றும் அடிமைப்பட்டிருக்கின்ற தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை என்ற கோஷங்களில் இப்பாதை சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளைப் பற்றி ராய் அன்று கொண்டிருந்த கருத்துக்களை மதிப்பிடுவதற்கு நம்பகமான பல ஆதாரங்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இரண்டாவது காங்கிரசின் தேசிய மற்றும் காலனிக் கமிஷனில் ஜூலை 25ந் தேதியில் நடைபெற்ற விவாதங்களைப் பற்றிய ஓரளவுக்கு விரிவான பத்திரிகைச் செய்தி அவற்றில் ஒன்றாகும்.** அநேகமாக மிஹயீல் பவ்லோவிச் அதை எழுதியிருக்க வேண்டும். இரண்டாவது, 1920 ஜூலை 20ந் தேதியன்று பிரசுரத்துக்கு அனுப்பப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலத்தின் சஞ்சிகையில் எம். என். ராய் எழுதிய கட்டுரையாகும்.*** மூன்றாவது, இந்தியப் புரட்சிகரக் கட்சியின் அறிக்கை****, இதுவும் ராயினால் எழுதப்பட்டதே. நான்காவது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை; எம். என். ராய், அபனி முக்கர்ஜி, சாந்தி தேவி (எவலின் ராய்) ஆகியோரின் கையொப்பத்துடன் மாஸ்கோவுக்குச் செல்வதற்கு முன்னர் பெர்லினில் வெளியிடப்பட்டது*****, மற்றும் சில. இரண்டு அறிக்கைகளையும் கட்டுரைகளையும் ராய் இரண்டாவது காங்கிரசுக்கு முன்பு எழுதியபடியால் அவரு

---

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, 1982, பக்கங்கள் 71—74 மற்றும் தொழிலாளர் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதத்துக்கும் செக்டேரியனிஸத்துக்கும் எதிராக, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1968, பக்கங்கள் 232—234.

** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தி ஏடு, இதழ் 1, ஜூலை 27, 1920.

*** எம். என். ராய், ‘‘இந்தியாவில் புரட்சிகர இயக்கம்’’, கம்யூனிஸ்ட் அகிலம், இதழ் 12, 1920, பக்கங்கள் 2169—2172 (ருஷ்ய மொழியில்).

**** ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய், ஜூலை 25, 1920.

***** *Documents of the History of the Communist Party of India*, Vol. 1, pp. 151—155.

டைய மெய்யான நிலையை அவை பிரதிபலிப்பதாகக் கருத லாம். ராய் தயாரித்த ஆய்வுரைக்குப் பிற்சேர்க்கை இரண்டாவது தீர்மானமாகக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது. அது அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இதற்குப் பல வருடங்களுக்குப் பிறகு எழுதப்பட்ட எம். என். ராயின் நினைவுக் குறிப்புகள் ஓரளவுக்கு சுவாரசிய மானவை.

லெனினுடைய ஆய்வுரைகளைப் பற்றி ராய் பின் வருமாறு எழுதினார்: ''தேசிய முதலாளி வர்க்கம் வரலாற்று ரீதியில் புரட்சிகரமான பாத்திரத்தை வகித்தது, கம்யூனிஸ்டுகள் அதை ஆதரிக்க வேண்டும் என்று அவர் கூறிய கருத்துக்கு நான் உடன்படவில்லை.''* இந்தியா ஏற்கெனவே முதலாளித்துவ நாடாக இருக்கிறது, ''ஏகாதிபத்திய பிரிட்டிஷ் மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு... உட்பட்டிருப்பதால் மொத்த மக்கள்தொகையில் 80 சதவிகிதத்தினர் பாட்டாளிகளாக மாறியிருக்கின்றனர்''** என்று ராய் வாதாடினார். காங்கிரசின் தேசிய மற்றும் காலனிக் கமிஷனின் கூட்டத்தில் பேசுகின்ற பொழுது எம். என். ராய் அந்த சூத்திரத்தை மேலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக மாற்றினார். ''ஆங்கில முதலாளித்துவம் இந்தியாவில் வேரூன்றிய காலத்திலிருந்து விவசாய உழைப்பைக் கொண்டு வாழ்க்கை நடத்திய 80 சதவிதித மக்கள்தொகையினர் தம் உடைமையை இழந்து தொழிலாளிகளாக மாறி விட்டனர்'', அதாவது அவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக மாறிவிட்டனர் என்று ராய் கூறினார். இந்தியாவில் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை 5 மில்லியன் என்று அவர் கூறியது மிகையான மதிப்பீடாகும். 1920 நவம்பரில் ராய் தயாரித்த இந்தியப் புரட்சிக் கமிட்டியின் (தாஷ்கன்ட்) செயல்திட்டம் இந்திய மக்கள்தொகையில் 90 சதவிகிதம் தொழிலாளி வர்க்கம் என்று மீண்டும் கூறியது.

ஆசிய நாடுகளில் பாட்டாளி வர்க்கம் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது அல்லது அந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கமே இல்லை என்பதை எம். என். ராய்

---

* *M. N. Roy's Memoirs*, p. 355.

** கம்யூனிஸ்ட் அகிலம், இதழ் 12, 1920, பக்கம் 2169 (ருஷ்ய மொழியில்).

உள்பட கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஒத்துக் கொள்ள மறுத்தார்கள். அதற்கு மாறாக பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாகவும், எப் படி இருந்தாலும் அரசியல் ரீதியில் சுறுசுறுப்பாக இருப்ப தாகவும் அவர்கள் கூறினார்கள். ''பாட்டாளி வர்க்கம்'' என்ற கருத்தின் சமூக மற்றும் வர்க்க உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளத் தவறியதாலோ அல்லது தங்களுடைய இடதுவாதத்தை நியாயப்படுத்துவதற்காகவோ அவர்கள் அவ்வாறு கூறினார்கள். மக்கள் தொகையின் மிகவும்ஏழ்மை யான, மிகவும் ஒடுக்கப்பட்ட, உடைமை பறிக்கப்பட்ட பகுதியாக அப்பாட்டாளி வர்க்கம் இருப்பதாக அவர்கள் வாதாடினார்கள். இத்தகைய அளவு கோல்களைப் பின் பற்றி இந்தியப் பாட்டாளி வர்க்கத்தில் கோடிக் கணக்கான நலிவுற்ற கைவினைஞர்கள், கைத்தொழிலாளர்கள், விவ சாயிகள் மற்றும் லும்பன்கள், ஓட்டாண்டியான தொழிலா ளர்கள்—மார்க்சியப் பார்வையில் தொழிலாளி வர்க்கத் திலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கின்ற, குட்டி முத லாளி வர்க்க மனநிலையைக் கொண்டவர்கள்—சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்தியாவில் தொழிலாளி வர்க் கத்தின் சதவிகிதத்தைப் பற்றி ராயின் கணக்கை ஒத்துக் கொள்வதென்றால் அந்த வர்க்கம் நாட்டிலுள்ள உழைக் கும் மக்கள் அனைவரையும்—அவர்களில் பெரும்பான்மை யினர் விவசாயிகளாக இருந்த போதிலும்—கொண்டிருக் கும்.

இந்திய மக்களின் போராட்டத்துக்கு சாராம்சத்தில் தேசிய உள்ளடக்கம் இல்லை; ''பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்காக, எல்லா விதமான வர்க்க ஆதிக்கத்தை யும் ஒழிப்பதற்கான போராட்டத்தின் குணாம்சத்தை அது வேகமாக அடைந்து கொண்டிருக்கிறது'' என்று ராய் உண்மைக்குப் புறம்பாக வாதாடினார்.

''அரசியல் சுதந்திரத்துக்காக'' மட்டுமே பாடுபடுகின்ற தேசிய விடுதலை இயக்கத்தைப் பொறுத்த மட்டில் ''இந் திய மக்களின் மிகவும் அதிகமான பெரும்பான்மையினர் அதற்கு அனுதாபம் காட்டவில்லை''* என்று ராய் கூறி னார். ''பெருந்திரளான இந்திய மக்கள் தங்களுக்கு என்

---

* ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய், ஜூலை 25, 1920, பக் கம் 2.

னவென்றே தெரியாத பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி யெறிதல் என்று கருத்தின் மூலம் உணர்ச்சிப் பரவசமடையப் போவதில்லை''* என்று கூட அவர் எழுதினார்.

தேசிய முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையில் சிறிதளவு புரட்சித்தன்மை கூட இல்லை என்று கூறிய ராய் ''தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை'' என்ற கோஷத்தின் நியாயத்தை மறுப்பதற்கும் துணிந் தார். ''எமது அதிகார வர்க்கத் தலைவர்கள் (இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்களை ராய் இப் படிக் குறிப்பிடுகிறார்—ஆ-ர்) இந்தியாவுக்குச் சுயநிர் ணயம் கோருவதன் மூலம் பெருந்திரளான மக்களின் விடு தலையைப் பற்றி எதுவுமே பேசாத முதலாளி வர்க்க தேசிய வாதக் கருத்தை வலுப்படுத்துகிறார்கள்.''** தேசிய அரசு களை ஏற்படுத்துதல் அல்லது தேசிய இனங்களின் சுய நிர்ணயக் கோட்பாட்டை அமுலாக்குதல் ''ஏகாதிபத்திய வேடதாரிகளின் பயனற்ற நடவடிக்கைகளே''; ஏனென் றால் அவை செய்யக் கூடியது பெருந்திரளான உழைக் கும் மக்களை தேசிய முதலாளி வர்க்கம் என்ற புதிய எச மானரின் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதே என்று ராய் கருதினார்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்னும் இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோட்பாடுதான் சிறிது காலத் துக்கு முன்பு தேசியப் புரட்சிக்காரரான ராயை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்ளும்படி தூண் டியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்பொழுது அதே ராய் அதை முற்றிலும் நிராகரித்து விட்டார். ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' குறித்து ராயின் எதிர் மறையான அணுகுமுறை இந்தியா அல்லது ஒடுக்கப்பட் டிருந்த மற்ற கிழக்கு நாடுகள் தேசிய சுதந்திரம் பெறு வதை எதிர்த்தது என்பது அர்த்தமல்ல. இந்தியாவைப் பொறுத்த மட்டில் மற்ற முதலாளித்துவ ஜனநாயக நோக் கங்களுக்கு உச்ச நிலை முக்கியத்துவம் அளிப்பதன் அவ சியத்தையும் அவர் மறுக்கவில்லை. ஆனால் சோஷலிஸ்ட்

---

* கம்யூனிஸ்ட் அகிலம், இதழ் 12, 1920, பக்கம் 2169 (ருஷ்ய மொழியில்).

** ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய், ஆகஸ்ட் 25, 1920, பக் கம் 2.

புரட்சியே இந்தியாவுக்கு தேசிய சுதந்திரத்தையும் உழைக்கும் மக்களின் சமூக விடுதலையையும் சாதிக்கும் என்று அவர் கருதினார்.

சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுவதற்கு அவசியமான எல்லா நிபந்தனைகளும் இந்தியாவில் ஏற்கெனவே இருப்பதாக ராய் கருதினார். இந்தியாவின் பிரத்யேகமான வரலாற்று நிலைமைகளைப் புறக்கணித்து, லெனின் கூறிய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி அல்ல, பாட்டாளி வர்க்க சோஷலிஸ்ட் புரட்சியே இந்தியாவில் உடனடியாக ஏற்பட வேண்டும் என்று நிரூபிப்பதற்கு ராய் பாடுபட்டார். ''ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் நலன்களை ஒன்று திரட்டியுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிக்க வேண்டும், ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்துடன் வர்க்கங்களின் அனைத்து ஆதிக்கமும் மறைய வேண்டும்''* என்று ராய் எழுதினார். இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு முன்னாலிருந்த உடனடிக் கடமைகளை—எதிர்காலக் கடமைகள் அல்ல—விரித்துரைக்கின்ற பொழுது ராய் பின்வருமாறு எழுதினார்: ''இந்தியாவின் பாட்டாளி வர்க்கத்தையும் நிலம் இல்லாத விவசாயிகளையும் வர்க்கப் போராட்டக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல், பொருளாதார மற்றும் சமூகச் சுரண்டலை ஒழிப்பதற்கும் கம்யூனிசத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பிரகடனப்படுத்துவதற்கும் அமைப்பு ரீதியாகத் திரட்ட வேண்டும் என்று நமது செயல்திட்டம் அறைகூவுகிறது.''** ''பாட்டாளி வர்க்கப் புரட்சிதான் நாம் மனதார விரும்புகின்ற இலட்சியங்களுக்கு நம்மை இட்டுச் செல்லும்''*** என்று ராய் மற்றொரு கட்டுரையில் தொகுத்துக் கூறினார்.

இரான், துருக்கி, சீனா, கொரியா முதலிய நாடுகளைச் சேர்ந்த முதல் கம்யூனிஸ்டுகளும் இதே நிலையைத்தான் கடைப்பிடித்தார்கள். முதல் கிழக்கத்திய கம்யூனிஸ்டுகள் மத்தியிலும் ஏன் ஒரு சில சோவியத் அதிகாரிகள் மத்தியி

---

* **கம்யூனிஸ்ட் அகிலம்,** *இதழ் 12, 1920, பக்கம் 2169 (ருஷ்ய மொழியில்).*

** **ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய்,** *ஜூலை 25, 1920.*

*** **கம்யூனிஸ்ட் அகிலம்,** *இதழ் 12, 1920, பக்கம் 2171 (ருஷ்ய மொழியில்).*

லும் வெகுவாகப் பரவியிருந்த இடதுசாரி புரட்சிகர கண்ணோட்டங்களைக் கவனத்தில் கொண்ட வி.இ.லெனின் இவர்கள் தம் கருத்துநிலைகளைக் காங்கிரசில் எடுத்து ரைக்க வாய்ப்பளிப்பது விவேகமானதாயிருக்கும் என்று கருதினார்.

தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வுரையை எழுதும்படி லெனின் தன்னைக் கேட்டுக் கொண்டதாக ராய் பிற்காலத்தில் எழுதினார். லெனின் தயாரித்த **பூர்வாங்க நகல்** ஆய்வுரைகளுக்கு மாற்று ஆய் வுரை எழுதும்படி லெனின் கூறியதாகவும் லெனினுடைய நகலுக்குத் துணையாகவே தன்னுடைய ஆய்வுரை இருக்கு மென்று தான் வற்புறுத்தியதாகவும் ராய் எழுதியிருக் கிறார்.* ராய் தன்னுடைய கருத்துக்களை எழுதி தேசிய **மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிய துணை** ஆய் வுரை என்று தலைப்புக் கொடுத்தார். ஆனால் அது சாராம் சத்தில் மாற்று ஆய்வுரையாகவே இருந்தது.

காங்கிரசின் கமிஷன் கூட்டத்தில் லெனினுடைய **பூர்வாங்க நகல்** ஆய்வுரைகள் மற்றும் ராயின் **துணை** ஆய்வுரை பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது. எம். என். ராய் தன்னுடைய ஆய்வுரையை விளக்கிப் பேசினார். லெனின் அவருடைய ''இடது'' நிலைகளை முழுமையாக விமர்சனம் செய்தார்; கமிஷன் அவரை ஆதரித்தது. முடி வில் ராயின் ஆய்வுரையில் இடம் பெற்றிருந்த அப்பட்ட மான இடதுவாதக் கருத்துக்கள்—தேசிய விடுதலை இயக் கங்களின் பாத்திரத்தையும் கம்யூனிஸ்டுகள் அவற்றை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் நிராகரித்தல், கிழக்கு நாடுகளில் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்தின் நிலையையும் மேற்கு நாடு களின் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவதில் கிழக்கு நாடுகளின் பாத்திரத்தையும் மிகைப்படுத்துதல், வளர்ச்சி யடைந்த நாடுகளில் முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு காலனி நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சி அத்தியாவசிய மான முன் நிபந்தனை என்று வாதிடுதல், கிழக்கு நாடு களின் புரட்சிகரப் போராட்டத்தில் முதலாளித்துவ ஜன நாயகக் கட்டம் அவசியமல்ல என்று நிரூபிக்க முனைதல் ஆகியவை—அகற்றப்பட்டன.

---

* *M. N. Roy's Memoirs*, p. 380.

லெனினும் காங்கிரஸ் கமிஷனும் ராயின் ஆய்வுரையில் அவசியமான திருத்தங்களைச் செய்தனர். உதாரணமாக, காலனிகளில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத் தூக்கியெறியாமல் ஐரோப்பிய நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சாத்தியம் முற்றிலும் நிராகரிக்கப்படாமல் முற்றிலும் வேறுவிதமான கருத்தைத் தெரிவிக்கின்ற முறையில் ஆய்வுரையின் நான்காவது ஷரத்து திருத்தி எழுதப்பட்டது. எதிர்காலத்தில் உலகப் புரட்சி முடிவான வெற்றிபெற வேண்டுமென்றால் இரண்டு சக்திகளும்—வளர்ச்சியடைந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் காலனி நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும்—ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று அந்த ஷரத்து தெரிவித்தது.* எனவே புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இடையில் போர்க்குணமிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்க வேண்டும்.

கிழக்கு நாடுகளில் அந்நிய ஆதிக்கத்துடன் சுதேசி முதலாளித்துவத்தையும் தூக்கியெறிவதற்கு சோஷலிஸ்ட் புரட்சியினால்—கிழக்கு நாடுகளில் இதற்கான நிலைமைகள் ஏற்கெனவே இருக்கின்றன—மட்டுமே முடியும் என்று துணை ஆய்வுரையில் முதலில் எழுதப்பட்டிருந்தது. காலனி நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கக் கூடாது; ஏனென்றால் அப்படி ஆதரிப்பதனால் ''பேணி வளர்க்கப்படுகின்ற தேசிய உணர்ச்சி பெருந்திரளான மக்களிடம் வர்க்க உணர்வு தோன்றுவதைத் தடை செய்யும் என்பது மெய்யே'' என்று கூறிய பத்தாவது ஷரத்தை லெனின் முற்றிலும் நீக்கிவிட்டார். ''பாட்டாளிகளின் கம்யூனிஸ்ட் கட்சி மூலம் வெகுஜன புரட்சிகர நடவடிக்கைகளை ஊக்குவித்து ஆதரிப்பது'' என்னும் இன்னொரு வழியும் முன்மொழியப்பட்டது. இது ''உண்மையான புரட்சிகர சக்திகளை நடவடிக்கைகளுக்கு தட்டியெழுப்ப வேண்டும், இச்சக்திகள் அந்நிய ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவதோடு கூட ஸ்தல முதலாளித்துவ வளர்ச்சியையும் தடுக்கும்''. ராயின் துர்ச்சாகச, குறுங்குழுவாதக் கருத்தாகிய உடனடியான சோஷலிஸ்ட்

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், மாஸ்கோ, 1934, பக்கம் 497 (ருஷ்ய மொழியில்).

புரட்சி தேசிய சுதந்திரம் பெற்ற நாடுகள் முதலாளித்துவமல்லாத பாதையில் வளர்ச்சி அடையக் கூடிய சாத்தியத்தைச் கருதவில்லை என்பது பெறப்படும். எனினும் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளும் அவர்களுடன் ஒத்துழைத்த சோவியத் அரசியல் ஊழியர்களும் சில சந்தர்ப்பங்களில் விவாதித்ததுண்டு. ஆனால் கிழக்கு நாடுகளில் முதலாளித்துவமல்லாத வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒரேயொரு காரணி சோஷலிஸ்ட் புரட்சியே, வெற்றியடைந்த மேற்கத்தியப் பாட்டாளி வர்க்கம் அதை நிறைவேற்றுவதில் கிழக்கு நாடுகளின் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி செய்ய வேண்டும் என்று அவர்கள் பொதுவாக முடிவு செய்தார்கள்*.

இரண்டாவது காங்கிரசின் தேசிய மற்றும் காலனிக் கமிஷனில் விவாதங்களின் போது லெனின் ஒருவர்தான் முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையைப் பற்றிய பிரச்சினையை எழுப்பினார், தேசிய விடுதலை இயக்கங்கள் வெற்றி அடையக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன, கிழக்கு நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சி நடைபெற முடியாது என்ற யதார்த்த நிலைமையிலிருந்து லெனின் அப்பிரச்சினையை விவாதித்தார்.

திருத்தம் செய்யப்பட்ட ராயின் ஆய்வுரை இரண்டு இடங்களில் (ஏழு மற்றும் ஒன்பதாவது ஷரத்துக்கள்) ''காலனிகளில் ஏற்படுகின்ற புரட்சி முதல் கட்டங்களில் கம்யூனிஸ்ட் புரட்சியாக இருக்கப் போவதில்லை'' என்று அறிவித்தது. இதிலிருந்து அந்நிய முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதற்கு ''முதலாளித்துவ தேசியப் புரட்சிகர சக்திகளின் ஒத்துழைப்பு பயனுள்ளதாக இருக்கும்'' என்று ஏழாவது ஷரத்தில் எழுதப்பட்டிருந்தது.

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு முன்புள்ள முதன்மையான, அவசியமான கடமை ''விவசாயிகளையும் தொழிலாளர்களையும் அமைப்பு ரீதியாகத் திரட்டி புரட்சியை நடத்துவதற்கும் சோவியத் குடியரசுகளை

* M. A. Persits, "Eastern Internationalists in Russia and Some Questions of the National Liberation Movement", *The Comintern and the East*, pp. 131—133.

நிறுவுவதற்கும் தலைமை தாங்குவதே''* என்ற லெனினுடைய கருத்தைத் துணை ஆய்வுரையின் (ஏழாவது ஷரத்து) இறுதி வடிவம் பிரகடனம் செய்தது. இங்கே குறிப்பிடப் பட்டது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் குடியரசு அல்ல, மக்கள் ஜனநாயக அரசே. வளர்ச்சியடைந்த நாடுகளின் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அது முதலாளித்துவக் கட்டத்தைத் தவிர்த்துப் பெருந் திரளான மக்களை சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும்.

''பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் மூலமாக இல்லாமல் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் கம்யூனிசத்தை அடைவார்கள்''** என்று ஆய்வுரை கூறியது.

ராயின் துணை ஆய்வுரையில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது தெளிவு. ஆனால் லெனின் தன்னுடைய நகலைச் சில சிறு திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டார், காங்கிரஸ் அந்த நகலை அப்படியே நிறைவேற்றியது என்று ராய் முற்றிலும் உண்மைக்கு மாறாக எழுதியிருக்கிறார்.*** லெனினும் கமிஷனும் அந்த நகலிலிருந்த அப்பட்டமான இடதுவாதக் கருத்துக்களைக் கொண்ட அமைப்பை நீக்கினார்கள் என்பதே உண்மையாகும். அதனால்தான் காங்கிரசில் பேசுகின்ற பொழுது இரண்டு தீர்மானங்களுமே பல பொதுவான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும் நாம் முழுமையான கருத்தொருமையை எட்டியுள்ளோம்''**** என்று லெனின் சொல்ல முடிந்தது.

ஜூலை 25ந் தேதியன்று கிழக்கு நாடுகளைப் பற்றிய கமிஷன் தீவிரமான விவாதங்களுக்குப் பிறகு லெனினுடைய

* வி. இ. லெனினும் கம்யூனிஸ்ட் அகிலமும், மாஸ்கோ, 1970, பக்கம் 204 (ருஷ்ய மொழியில்).

** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

*** *M. N. Roy's Memoirs*, p. 381.

**** வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 72.

பூர்வாங்க நகல் ஆய்வுரைகளை மாற்றங்க துணை ஆய்வுரையை கோட்பாட்டு ரீதியானனும் ராயின் டனும் நிறைவேற்றியது. கமிஷன் சிபாரிசின்படித்தங்களு 28இல் இரண்டாவது காங்கிரசின் பேரவைக் ஜூலை தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிட்டம் கூறப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற் முடிவு செய்தது.

லெனினுடைய மூலத் தீர்மானத்துக்கும் துணை ஆய்வுரைக்கும் இடையில் முக்கியமான வேற்றுமை கிடையாதென்று சிலர் கருதினார்கள். உதாரணமாக, நெதர்லாந்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டேவிட் வைன்காப் பின்வருமாறு கூறினார்: ''விவாதங்களின் போது இரண்டு ஆய்வுரைகளும் ஒன்றோடொன்று முழுமையாகப் பொருந்தும்படி செய்யப்பட்டுவிட்டன.'' இரண்டாவது காங்கிரசின் கிழக்கு நாடுகளின் கமிஷனின் செயலாளரான மாரிங் ''தோழர் ராயின் ஆய்வுரைக்கும் தோழர் லெனினுடைய ஆய்வுரைக்கும் இடையில் எவ்விதத்திலும் வேறுபாடு இல்லை. அவை சாராம்சத்தில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன''* என்று கூறினார்.

அப்படியானால் சில கேள்விகள் எழுகின்றன. இரண்டு ஆய்வுரைகளும் சாராம்சத்தில் ஒரே மாதிரியாக இருந்திருக்குமானால் அவை தனித்தனியாக நிறைவேற்றப்பட்டது ஏன்? ஒன்றை நிறைவேற்றியிருந்தால் போதாதா? பூர்வாங்க நகல் ஆய்வுரைகளையும் துணை ஆய்வுரையையும் ஒரே தீர்மானமாகச் சேர்த்திருக்க முடியாதா?

லெனினால் தயாரிக்கப்பட்டுக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானத்துக்கும் துணை ஆய்வுரையில் வகுத்தளிக்கப்பட்ட அரசியல் பாதைக்கும் ஓரளவு வேறுபாடு இருந்தது என்று முடிவு செய்ய வேண்டும். ஆனால் ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும் நாம் முழுமையான கருத்தொருமையை எட்டியுள்ளோம்'' என்று ஜூலை 26ந் தேதி லெனின் கூறியிருப்பது அத்தகைய முடிவுக்கு வருவதைத் தடுக்கிறது. ஆனால் கமிஷன் ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும்'' ஒத்த கருத்தைக் கொண்

---

* *The Second Congress of the Communist International*, Proceedings..., Moscow, 1920, p. 145.

நிறுவுவதற்கும் தலைமை தாங்குவதே''* என்ற லெனினுடைய கருத்தைத் துணை ஆய்வுரையின் (ஏழாவது ஷரத்து) இறுதி வடிவம் பிரகடனம் செய்தது. இங்கே குறிப்பிடப்பட்டது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் குடியரசு அல்ல, மக்கள் ஜனநாயக அரசே. வளர்ச்சியடைந்த நாடுகளின் வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அது முதலாளித்துவக் கட்டத்தைத் தவிர்த்துப் பெருந்திரளான மக்களை சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும்.

''பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் மூலமாக இல்லாமல் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் கம்யூனிசத்தை அடைவார்கள்''** என்று ஆய்வுரை கூறியது.

ராயின் துணை ஆய்வுரையில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது தெளிவு. ஆனால் லெனின் தன்னுடைய நகலைச் சில சிறு திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டார், காங்கிரஸ் அந்த நகலை அப்படியே நிறைவேற்றியது என்று ராய் முற்றிலும் உண்மைக்கு மாறாக எழுதியிருக்கிறார்.*** லெனினும் கமிஷனும் அந்த நகலிலிருந்த அப்பட்டமான இடதுவாதக் கருத்துக்களைக் கொண்ட அமைப்பை நீக்கினார்கள் என்பதே உண்மையாகும். அதனால்தான் காங்கிரசில் பேசுகின்ற பொழுது இரண்டு தீர்மானங்களுமே பல பொதுவான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும் நாம் முழுமையான கருத்தொருமையை எட்டியுள்ளோம்''**** என்று லெனின் சொல்ல முடிந்தது.

ஜூலை 25ந் தேதியன்று கிழக்கு நாடுகளைப் பற்றிய கமிஷன் தீவிரமான விவாதங்களுக்குப் பிறகு லெனினுடைய

---

* வி. இ. லெனினும் கம்யூனிஸ்ட் அகிலமும், மாஸ்கோ, 1970, பக்கம் 204 (ருஷ்ய மொழியில்).

** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

*** *M. N. Roy's Memoirs*, p. 381.

**** வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 72.

பூர்வாங்க நகல் ஆய்வுரைகளை மாற்றங்களுடனும் ராயின் துணை ஆய்வுரையை கோட்பாட்டு ரீதியான திருத்தங்களுடனும் நிறைவேற்றியது. கமிஷன் சிபாரிசின்படி ஜூலை 28இல் இரண்டாவது காங்கிரசின் பேரவைக் கூட்டம் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிய மேற்கூறப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்ற முடிவு செய்தது.

லெனினுடைய மூலத் தீர்மானத்துக்கும் துணை ஆய்வுரைக்கும் இடையில் முக்கியமான வேற்றுமை கிடையாதென்று சிலர் கருதினார்கள். உதாரணமாக, நெதர்லாந்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டேவிட் வைன்காப் பின்வருமாறு கூறினார்: ''விவாதங்களின் போது இரண்டு ஆய்வுரைகளும் ஒன்றோடொன்று முழுமையாகப் பொருந்தும்படி செய்யப்பட்டுவிட்டன.'' இரண்டாவது காங்கிரசின் கிழக்கு நாடுகளின் கமிஷனின் செயலாளரான மாரிங் ''தோழர் ராயின் ஆய்வுரைக்கும் தோழர் லெனினுடைய ஆய்வுரைக்கும் இடையில் எவ்விதத்திலும் வேறுபாடு இல்லை. அவை சாராம்சத்தில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன''* என்று கூறினார்.

அப்படியானால் சில கேள்விகள் எழுகின்றன. இரண்டு ஆய்வுரைகளும் சாராம்சத்தில் ஒரே மாதிரியாக இருந்திருக்குமானால் அவை தனித்தனியாக நிறைவேற்றப்பட்டது ஏன்? ஒன்றை நிறைவேற்றியிருந்தால் போதாதா? பூர்வாங்க நகல் ஆய்வுரைகளையும் துணை ஆய்வுரையையும் ஒரே தீர்மானமாகச் சேர்த்திருக்க முடியாதா?

லெனினால் தயாரிக்கப்பட்டுக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானத்துக்கும் துணை ஆய்வுரையில் வகுத்தளிக்கப்பட்ட அரசியல் பாதைக்கும் ஓரளவு வேறுபாடு இருந்தது என்று முடிவு செய்ய வேண்டும். ஆனால் ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும் நாம் முழுமையான கருத்தொருமையை எட்டியுள்ளோம்'' என்று ஜூலை 26ந் தேதி லெனின் கூறியிருப்பது அத்தகைய முடிவுக்கு வருவதைத் தடுக்கிறது. ஆனால் கமிஷன் ''முக்கிய பிரச்சினைகள் அனைத்தின் மீதும்'' ஒத்த கருத்தைக் கொண்

---

* *The Second Congress of the Communist International*, Proceedings..., Moscow, 1920, p. 145.

டிருந்தது என்று லெனின் குறிப்பிட்டாரே தவிர இரண்டு ஆய்வுரைகளுக்கும் இடையில் (முக்கியமான வேறுபாடு இருக்கட்டும்) எந்த வேறுபாடும் இல்லை என்று லெனின் கூறவில்லை. அத்தகைய வேறுபாடு இருக்கிறது, வேறு விதமாக இருக்க முடியாது என்ற அடிப்படையில்தான் லெனின் பேசினார் என்றுகூட நாம் முடிவு செய்யலாம். ''பிரிட்டனால் ஒடுக்கப்பட்டுவரும் இந்தியா மற்றும் இதர பெரிய ஆசிய நாடுகளின் நோக்கு நிலையில் இருந்தே துணை ஆய்வுரை தயாரிக்கப்பட்டிருக்கிறது''* என்று லெனின் வெளிப்படையாகக் கூறியதற்குக் காரணமிருக்க வேண்டும்.

இரண்டு ஆய்வுரைகளுக்கும் இடையில் எவ்விதத்திலும் வேறுபாடு இல்லை என்று கூறிய மாரிங்கின் வாதத்தில் இரண்டாம் பகுதியை நாம் கவனிப்பது முக்கியமானதாகும். ''பின்தங்கிய நாடுகளிலும் காலனிகளிலும் புரட்சிகர தேசிய இயக்கத்துக்கும் சோஷலிஸ்ட் இயக்கத்துக்கும் இடையிலான உறவைப் பற்றிய துல்லியமான கருத்து நிலையைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. இக்கஷ்டம் யதார்த்தத்தில் இல்லை. நடைமுறையில் புரட்சிகர தேசிய சக்திகளுடன் சேர்ந்து பாடுபடுவது அவசியமாக இருப்பதை நாம் காண்கிறோம்...''**

அப்படியானால் கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் புரட்சிகர வேலையைப் பற்றிய பிரதான பிரச்சினையில் கஷ்டம் அல்லது தெளிவின்மை எங்கே இருந்தது? காங்கிரசில் லெனின் சமர்ப்பித்த தீர்மானத்தில் அத்தகைய கஷ்டமோ அல்லது தெளிவின்மையோ இல்லை. அத்தீர்மானம் தேசியப் புரட்சிகர சக்திகளுடன் கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்புக்குரிய நிபந்தனைகளை—அவற்றின் எல்லா அம்சங்களிலும்—குறைந்த பட்சம் நான்கு இடங்களில் பகுப்பாய்வு செய்தது. அது நான்கு இடங்களில் பின்வருமாறு பிரகடனம் செய்தது: ''சார்பு அல்லது சமத்துவமற்ற நாடுகள்... மற்றும் காலனி நாடுகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் நேரடியாக

---

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 73.

** *The Second Congress of the Communist International*, p. 145.

உதவி செய்ய வேண்டும்''; ''விடுதலைக்கான புரட்சிகர இயக்கங்களுக்கு எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் முனைப்பான ஆதரவளிக்க வேண்டும்'', ''புரட்சிகர இயக்கத்தை ஆதரிப்பது கம்யூனிஸ்ட் அகிலத்தின் கடமை'' மற்றும் அகிலம் ''காலனிகள் மற்றும் பின்தங்கிய நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயகத்துடன் தற்காலிகமான உடன்பாடுகளையும் கூட்டுகளையும் கூட ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்''* (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்). இதற்குப் பிறகும் துணை ஆய்வுரை சற்றுத் தெளிவில்லாமல் இருந்திருக்கக் கூடுமா?

ராயின் துணை ஆய்வுரையை கவனமாக ஆராய்ந்தால் இது ஆதாரமற்ற கருத்தல்ல என்பது விளங்கும். அந்த ஆய்வுரையிலிருந்து இடதுசாரி புரட்சிகர, சுயவிருப்பக் கருத்துக்களின் அமைப்பு சாராம்சத்தில் நீக்கப்பட்டிருந்த போதிலும் ராயின் ''இடது'' கருத்துக்களைப் பிரதிபலித்த சில அம்சங்கள் அதில் இன்னும் இடம் பெற்றிருந்தன. மூலப் பிரதியில் இருந்த அளவுக்குத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இடம் பெற்றிருக்கவில்லை என்று வேண்டுமானால் கூறலாம். ஜூலை 26ந் தேதிய காங்கிரஸ் கூட்டத்தில் தன்னுடைய ஆய்வுரைக்குக் கமிஷன் ஆலோசனை கூறிய ''திருத்தங்களில் சிலவற்றை'' ஏற்றுக்கொள்வதாக ராய் கூறியது இக்காரணத்தால்தான் என்று கருதலாம்.

நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல இந்தியா, சீனா, இந்தோனேஷியா—எகிப்து கூட—முதலிய நாடுகள் பின்தங்கியவை என்றாலும் அவை முதலாளித்துவ நாடுகள் என்ற அனுமானத்திலிருந்து ராய் முன்னேறினார். காங்கிரசுக்கு முன்னால் எழுதப்பட்ட கட்டுரைகளில் இந்த வாதத்தை நியாயப்படுத்துவதற்கு அவர் முயற்சி செய்தார். லெனினும் கமிஷனும் அவருடைய ஆய்வுரையைத் திருத்திய பிறகும் கூட ஜூலை 26இல் நடைபெற்ற காங்கிரசின் பேரவைக் கூட்டத்தில் அவர் அதை மீண்டும் வற்புறுத்திப் பேசினார். ''முதல் உலக யுத்தத்தின் போதும் அது முடிவடைந்த உடனடிக் காலத்திலும் இந்தியாவில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்பு ஆங்கில முதலாளித்துவம் இந்தியத் தொழில்துறையின் வளர்ச்

* Ibid., p. 574.

சியை எப்பொழுதுமே தடை செய்தது என்றால் சமீப காலத்தில் அக்கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் தொழில்துறை வளர்ச்சியடைந்திருக்கின்ற வேகத்தை இங்கே ஐரோப்பாவிலுள்ள நம்மால் கற்பனை செய்யக்கூட முடியாது. சமீப வருடங்களில் பிரிட்டிஷ் இந்தியாவில் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை 15% அதிகரித்திருக்கிறது, இந்தியத் தொழில்துறையில் மூலதன முதலீடு 2000% அதிகரித்திருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டால் பிரிட்டிஷ் இந்தியாவில் முதலாளித்துவத்தின் வேகமான வளர்ச்சியை நாம் புரிந்து கொள்ள முடியும். எகிப்து, டச்சு இந்தியத் தீவுகள், சீனாவுக்கும் இது பொருந்தும்.''*

எனினும் இந்தியாவில் முதலாளித்துவ அமைப்பு தலைமையான ஆதிக்கத்தைப் பெற்றிருக்கிறது என்ற ராயின் முடிவு எதார்த்த நிலைமைகளுக்குப் பொருந்தவில்லை. எனினும் உண்மையில் இந்தியா காலனி மற்றும் நிலப்பிரபுத்துவ அமைப்பு ஆதிக்கம் செலுத்திய நாடாகவே இருந்தது. மக்கள் தொகையில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்கள் கிராமப் பகுதிகளில் வசித்தார்கள். நாட்டில் முதலாளித்துவக் கூறுகள் தோன்றி, வளர்ச்சியடைந்து கொண்டிருந்த போதிலும் இந்திய விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ எச்சங்கள் ஆழமாக வேரூன்றியிருந்தன, இவற்றைத் தக்க வைக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சகல விதங்களிலும் முயன்றது.

இந்தியா மற்ற காலனி நாடுகளைக் காட்டிலும் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றமடைந்திருந்தது; யுத்தத்தின் போது அந்த வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தது. எனினும் தேசியப் பொருளாதாரத்தில் தொழிற்சாலை உற்பத்தி 10 அல்லது 15 சதவிகிதம் என்ற குறைவான அளவில் தான் இருந்தது. ஆங்கில ஏகாதிபத்தியம் பல உபாயங்களைப் பயன்படுத்தி இந்தியாவின் தொழில் வளர்ச்சியைத் தடை செய்தது; குறிப்பாக கன இயந்திரத் தொழில் வளர்ச்சி ஏற்படாமல் தடுத்தது. தொழில்துறையில் முக்கியமான பிரிவுகள் பிரிட்டிஷ் மூலதனத்தின் பிடியில் இருந்தன; தேசியத் தொழில்துறை அதையே

* *The Second Congress of the Communist International*, p. 118.

முற்றிலும் நம்பியிருந்தது. பொருளாதார ரீதியில் சார்பு நிலையிலும் அரசியல் அதிகாரத்திலிருந்து ஒதுக்கிவைக்கப் பட்டுமிருந்த தேசிய முதலாளி வர்க்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் தீவிரமான வேறுபாடுகளைக் கொண்டு நாட்டின் தேசிய விடுதலை இயக்கத்துக்குத் தலைமை தாங்கியது.

காங்கிரஸ் கமிஷன் மற்றும் லெனினுடைய முயற்சிகளினால் இந்தியாவில் அல்லது அதைப் போன்ற நாடுகளில் முதலாளித்துவ அமைப்பு ஆதிக்கம் செலுத்துவதாக எத்தகைய நேரடியான கூற்றும் ராயின் ஆய்வுரையில் இனி இடம் பெறவில்லை. அந்த ஆய்வுரையில் ஒரு ஷரத்தில் பின்தங்கிய நாடுகள் (இங்கே இந்தியா குறிப்பிடப்படவில்லை; அது ஆசியாவைக் காட்டிலும் ஐரோப்பாவுக்கு நெருக்கமான முதலாளித்துவ நாடு என்று ராய் கருதியிருக்க வேண்டும்—ஆ-ர்) முதலாளித்துவ கட்டத்தைத் தவிர்த்துக் கம்யூனிசத்தை அடைய முடியும் என்று எழுதப்பட்டிருந்தாலும் இந்தக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு தான் அந்த ஆய்வுரை தயாரிக்கப்பட்டிருந்தது.

ஏழாவது ஷரத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: கிழக்கில் உள்ள காலனி நாடுகளில், எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவில் ''ஒன்றிடமிருந்து மற்றொன்று நாள் தோறும் மேலும் விலகிச் சென்று கொண்டிருக்கின்ற இரண்டு தனிவகையான இயக்கங்களைக் காண முடியும். ஒன்று, முதலாளித்துவ அமைப்பின் கீழ் அரசியல் சுதந்திரம் என்ற செயல்திட்டத்தைக் கொண்ட முதலாளித்துவ ஜன நாயக தேசிய இயக்கம், அடுத்து, எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் விடுதலை அடைவதற்காக ஏழைகள், கல்வியறிவற்ற விவசாயிகள், தொழிலாளர்களுடைய வெகுஜன இயக்கம். முதல் இயக்கம் இரண்டாவது இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முயல்கிறது, பெரும்பாலும் வெற்றி அடைகிறது''* (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்). ''1920ம் வருடத்திய இந்தியாவில் அத்தகைய 'தனிவகையான' இரண்டு இயக்கங்கள் எங்கே இருந்தன?... அவை ராயின் கனவுகளில் இருந்திருக்கலாம்; ஆனால் கனவுகள்

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

உண்மை அல்ல''* என்று எஸ். ஜி. சர்தேசாய் மறுக்கிறார். ராயை விமர்சனம் செய்த ஜி. அதிகாரியும் அவர் ஒற்றுமையான இயக்கத்தை இரண்டு எதிர்ப்பகுதிகளாகப் பிரித்ததாக, ''தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பொருளாதாரப் போராட்டத்தைப் பொது தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிர்நிலைப்படுத்தியதாகக்''** கூறியுள்ளார். அன்று தொழிலாளர்கள் எல்லாச் சுரண்டலிலிருந்தும் தம்மை விடுவிப்பதற்குப் போராடவில்லை, விவசாயிகள் நிச்சயமாக அப்படிப் போராடவில்லை என்பது வெளிப்படையாகும். ஏன்னென்றால் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அத்தகைய கடமையை அவர்கள் முன் வைக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் அன்று இல்லை. தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்களுடைய நடவடிக்கைகளின் மூலம் அன்றைக்கிருந்த சுரண்டல் சமூக அமைப்புக்குள்ளாகவே தமது பொருளாதார நிலைமையை அபிவிருந்தி செய்து கொள்வதை மட்டுமே விரும்பினார்கள். அவர்களுடைய போராட்டம் பெரும்பாலும் அந்நிய ஆட்சியாளர்களையும் அவர்களுடைய உள்நாட்டு ஏஜென்டுகளையும் எதிர்த்து நடைபெற்றபடியால் தேசிய விடுதலை இயக்கத்துடன் நன்கு பொருந்தியிருந்தது.

ராயின் ஏழாவது ஷரத்தில் லெனின் சில அவசியமான திருத்தங்களைச் செய்து அதில் முதலில் இடம் பெற்றிருந்த ''இடது'' தொனியைப் பெருமளவுக்குக் குறைத்தார். முதலாளித்துவ ஜனநாயக தேசிய இயக்கத்துக்கு வெகுஜன ஆதரவு கிடையாது, முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் மீது பெருந்திரளான மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று ராய் எழுதியிருந்ததை அவர் அடித்துவிட்டார்.

காங்கிரஸ் கமிஷனில் ராய் பின்வருமாறு பேசினார்: ''ஐரோப்பாவில் புரட்சிகர இயக்கத்தின் முடிவு கீழ்த்திசை நாடுகளில் புரட்சியின் முன்னேற்றத்தையே முற்றிலும் சார்ந்திருக்கிறது. கீழ்த்திசை நாடுகளில் புரட்சி வெற்றி

---

* எஸ். ஜி. சர்தேசாய், இந்தியாவும் ருஷ்யப் புரட்சியும், மாஸ்கோ, 1967, பக்கங்கள் 81—82 (ருஷ்ய மொழியில்).

** G. Adhikari, "Lenin on Roy's Supplementary Colonial Theses", *Marxist Miscellany*, 1, (January 1970), New Delhi, 1970, p. 3.

அடையவில்லை என்றால் மேற்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஒன்றுமில்லாமலாகிவிடும்.'' இம்முடிவை ஆதரிக்கின்ற வகையில் ''உலக முதலாளித்துவம் தன்னுடைய முக்கியமான செல்வாதாரங்களையும் லாப ஈவுகளையும் பெரும்பான்மையாக ஆசியாவில் அமைந்திருக்கின்ற காலனிகளிலிருந்து பெற்றுவருகிறது... அதன் காரணமாகவே கீழ்த்திசை நாடுகளில் புரட்சிகர இயக்கத்தை ஊக்குவித்துத் தூண்டிவிட வேண்டும்; உலக கம்யூனிசத்தின் தலைவிதி கீழ்த்திசை நாடுகளில் கம்யூனிசத்தின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்ய வேண்டும்''* என்று வாதாடினார். இக்கருத்து இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளிடம் மட்டுமின்றி மற்ற ஆசிய நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளிடமும் பரவலாக இருந்தது. கிழக்கு நாடுகளில் பெரும்பான்மையோரிடம் காணப்படுகின்ற பிரத்யேகமான தலைவிதி எனப்படுகின்ற கருத்தை ஒட்டிய ஒருதலைச் சார்பான இத்தத்துவம் யதார்த்தங்களுக்குப் புறம்பான, முற்றிலும் தவறான பாதையைக் காட்டியது. புறநிலையாகப் பார்க்கும் பொழுது ராயின் கருதுகோள் மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் அனைத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துவதை, அவற்றை சோவியத் ருஷ்யாவைச் சுற்றித் திரட்டுவதைக் குறிக்கவில்லை; இந்த சக்திகளைப் பிளவுபடுத்துவதை, ஆகவே அவற்றை பலவீனப்படுத்தி, தோல்வியடையச் செய்வதைக் குறித்தது.

காங்கிரஸ் கமிஷனில் ராய் மற்றும் இதர இடது கம்யூனிஸ்டுகளிடம் அவர்களுடைய நிலை தவறானது என்று லெனின் பொறுமையுடனும் சாதுரியமாகவும் விளக்கினார், ''தோழர் ராய் வெகு தூரம் போய் விடுகிறார்'', அவருடைய கருத்துக்கள் ''பெருமளவுக்கு ஆதாரமற்றவை''** என்று கூறினார். நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல ராயின் தவறான இக்கருத்து நீக்கப்பட்டது. உலக முதலாளித்துவம் ஒரே சமயத்தில் இரண்டு புரட்சிகளால்—காலனிகளில் தேசிய விடுதலைப் புரட்சி மற்றும் வளர்ச்சி

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தி ஏடு, இதழ் 1, பக்கங்கள் 1—2 (ருஷ்ய மொழியில்).

** அதே நூல், பக்கம் 2.

யடைந்த முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி—தூக்கியெறியப்பட முடியும் என்ற கருத்து அதனிடத்தில் சேர்க்கப்பட்டது.

எனினும் ராயின் ஆரம்பக் கருத்தின் தொடக்கநிலையான அம்சங்களில் சில அப்படியே விட்டு வைக்கப்பட்டன. உதாரணமாக இரண்டாவது ஷரத்தின் இறுதியில் ''காலனிகளின் பரந்த சந்தைகளும் சுரண்டலுக்குரிய விரிவான களமும் இல்லையென்றால் ஐரோப்பாவின் முதலாளித்துவ அரசுகள் சிறிது காலத்துக்குக் கூட வாழ முடியாது'' என்று எழுதப்பட்டிருந்தது.''பரந்த காலனிப் பிரதேசங்கள் இல்லையென்றால்... இங்கிலாந்தின் முதலாளித்துவ அமைப்பு அதன் சொந்தச் சுமையின் கீழ் நெடுங்காலத்துக்கு முன்பே நசுங்கிப் போயிருக்கும்'' என்று மேலும் எழுதப்பட்டிருந்தது. இக்கருத்தை மூன்றாவது ஷரத்தின் தொடக்க வரிகள் உறுதிப்படுத்துகின்றன: ''காலனி நாடுகளிலிருந்து கிடைக்கும் மிகைலாபமே நவீன முதலாளித்துவத்தின் ஆதாரம்...''*

''ஐரோப்பிய முதலாளித்துவம் தன்னுடைய முக்கியமான பலத்தைப் பெறுகின்ற பிரதான தோற்றுவாய்களாகக்'' காலனிகள் இருக்கின்றன என்று ராய் இரண்டாவது ஷரத்தின் ஆரம்பத்தில் கூறிவிட்டு அதே ஷரத்தின் முடிவிலும் மூன்றாவது ஷரத்தின் ஆரம்பத்திலும் காலனிகளும் சார்பு நாடுகளுமே ஐரோப்பிய முதலாளித்துவத்தின் ஜீவனத்துக்கும் சக்திக்கும் பிரதான தோற்றுவாய், அது அகற்றப்பட்ட உடனே ஏகாதிபத்தியம் தன்னுடைய சொந்தச் சுமையின் கீழ் நசுங்கிவிடும் என்று தெளிவுபடுத்தினார்.

கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களை ஆதரிக்கக் கூடாது என்னும் ராயின் மூலக் கருதுகோள் **துணை ஆய்வுரையிலிருந்து** நீக்கப்பட்டதே தவிர, அந்தக் கருத்துக்குப் பின்னாலிருந்த வாதங்கள் நீக்கப்படவில்லை. ''காலனிகளில் புரட்சி முதல் கட்டங்களில் கம்யூனிஸ்ட் புரட்சியாக இருக்கப் போவதில்லை. ஆனால் தொடக்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் முன்னணிப்படையின் வசம் தலைமை இருக்குமானால் புரட்சியில் ஈடுபடுகின்ற பெருந்திரளான மக்கள் முன்வைக்கப்பட்ட லட்சியங்களை

* **கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்,** பக்கம் 496 (ருஷ்ய மொழியில்).

அடைவதை நோக்கி சரியான பாதையில் நடைபோடுவார்கள்''* என்று ஒன்பதாவது ஷரத்து கூறியது. இதன் அர்த்தம் என்ன?

இதைப் பின்பற்றுவதென்றால் கம்யூனிஸ்டுகள் தேசியப் புரட்சிகர சக்திகளை ஆதரிக்கக் கூடாது, அவர்களை அகற்றி விட்டு புரட்சிகரப் போராட்டத்தின் தலைமையான நிலைகளைக் கைப்பற்ற வேண்டும். அதாவது எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றுசேர்ப்பதற்கு பதிலாக அவர்கள் தமக்குள்ளாகவே போராட வேண்டும், அதிலும் கம்யூனிஸ்டுகளுக்கு பாதகமான சூழ்நிலையில் அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும். ராய் துல்லியமாக இந்தக் கருத்தையே கொண்டிருந்தார் என்பதை காங்கிரசுக்கு முன்னர் அவர் எழுதிய கட்டுரையில் காண முடியும். பாட்டாளி வர்க்க கம்யூனிஸ்ட் கட்சி உருவாகி விட்டால் அது உடனடியாக ''முதலாளித்துவ தேசியக் கொள்கையை எதிர்த்து முறைப்படியான போராட்டத்தைத் தொடங்கும், பெருந்திரளான மக்களை சமூக மற்றும் பொருளாதார விடுதலைக்கு இட்டுச் செல்லும்''** என்று அக்கட்டுரையில் அவர் எழுதியிருந்தார்.

ஒன்பதாவது ஷரத்தின் சாரத்தைப் பற்றி எஸ். ஜி. சர்தேசாய் அதிருப்தியோடு எழுதினார்: ''அடிமை நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி 'தொடக்கத்திலிருந்தே' விடுதலை இயக்கத்தின் தலைமையைப் பெறுவது எப்படி? சரியான கொள்கையையும் செயல் தந்திரத்தையும் கடைப்பிடித்தால் கூட இக்கடமையை நிறைவேற்றுவதற்கு மாபெரும் உழைப்பும் பொறுமையும் தேவைப்படும். ஆனால் கண் சிமிட்டுகின்ற நேரத்தில் இதைச் சாதிக்க முடியுமென்று ராய் கருதினார்.''***

ஆறாவது ஷரத்தின் வாசகம் மாற்றப்படவில்லை. தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைப்பைப் பற்றி இந்த ஷரத்தின் வாசகம் சில சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. அந்நிய ஆதிக்கம் கிழக்கு நாடுகளின் ''சமூக சக்தி

---

* அதே நூல், பக்கம் 499.

** கம்யூனிஸ்ட் அகிலம், இதழ் 12, 1920, பக்கம் 2172 (ருஷ்ய மொழியில்).

*** எஸ். ஜி. சர்தேசாய், இந்தியாவும் ருஷ்யப் புரட்சியும், பக்கம் 82.

களின் சுதந்திரமான வளர்ச்சியைத் தடை செய்திருக்கிறது'', ஆகவே பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான வளர்ச்சியை அது நிறுத்தி வைத்திருப்பதால் ''காலனி நாடுகளில் அந்நிய ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கு உதவி செய்வது... சுதேசி முதலாளி வர்க்கத்தின் தேசிய விருப்பார்வங்களை அங்கீகரிப்பதல்ல, அங்கே நசுக்கப்பட்டிருக்கின்ற பாட்டாளி வர்க்கத்துக்குப் பாதையைத் திறந்து விடுவது **மட்டுமே**''* (அழுத்தம் என்னுடையது—**ஆ-ர்). துணை ஆய்வுரையின்** மூல வாசகத்தில் ''மட்டுமே'' என்ற சொல் இடம்பெறவில்லை. தீர்மானத்தின் இறுதி வாசகத்தில் லெனினும் மாரிங்கும் திருத்தங்களைச் செய்த பிறகு இச்சொல் சேர்க்கப்பட்டது. ஆனால் இந்தச் சொல்லைச் சேர்த்த பிறகும் **துணை ஆய்வுரை** லெனினால் தயாரிக்கப்பட்டுக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட பிரதான தீர்மானத்தின் மதிப்பீட்டுக்கு நெருங்கி வரவில்லை. பிரதான தீர்மானத்தின் பதினொன்றாவது ஷரத்து எ பாராவில் ''காலனிகள் மற்றும் பின்தங்கிய நாடுகளில் உள்ள தேசியப் புரட்சிகர (லெனின் முதலில் முதலாளித்துவ ஜனநாயக என்று எழுதியிருந்தார்—**ஆ-ர்**) இயக்கத்தை **ஆதரிப்பது** கம்யூனிஸ்ட் அகிலத்தின் கடமை''** (அழுத்தம் என்னுடையது—**ஆ-ர்) என்று** இரண்டு தடவை வற்புறுத்தியது. ஆனால் **துணை ஆய்வுரை** வேறுவிதமான கருத்தைத் தெரிவித்தது: ''...காலனி நாடுகளில் அந்நிய ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கு உதவி செய்வது சுதேசி முதலாளி வர்க்கத்தின் தேசிய விருப்பார்வங்களை **அங்கீகரிப்பதல்ல...**'' ஆனால் உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் தேசிய விருப்பார்வங்களில் நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டமும் அந்த நாட்டில் சொந்த அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பதும் இயற்கையாகவே அடங்கியிருக்கின்றன. காலனிகளில் (அங்கே கம்யூனிஸ்ட் கட்சி இல்லாத பொழுது, பாட்டாளி வர்க்கம் பலவீனமாக இருக்கின்ற பொழுது) உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் தேசியப் போராட்டத்தை ஆதரிக்காமல், அதனுடன் ஏதோ ஒருவிதமான தற்காலிக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல்

---

* **கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்,** பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

** அதே நூல், பக்கம் 494.

ஏகாதிபத்திய ஆட்சியைத் தூக்கியெறிவதற்கு எப்படி உதவி செய்ய முடியும்?

இந்த ஆய்வுரையிலிருந்த சரியான ஆரம்பநிலை முற்றிலும் சரியான முறையில் வளர்த்துச் செல்லப்படவில்லை. அந்நிய ஆட்சியைத் தூக்கியெறிவதில் பாட்டாளி வர்க்கத்துக்கு அக்கறை இருக்கிறது, காலனிச் சமூகத்திலுள்ள மற்ற எல்லா வர்க்கங்களையும் காட்டிலும் அதிகமான அக்கறை இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். லெனின் எழுதியதைப் போல அந்தக் காரணத்தினால்தான் கம்யூனிஸ்டுகள் ''காலனி நாடுகளின், பிற்பட்ட நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயகத்தோடு ஒரு தற்காலிகக் கூட்டு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்''*. அதாவது தேசியப் புரட்சிகர சக்திகளுக்கு உதவி செய்வதும் ஆதரவளிப்பதும் அவசியம். ஆனால் அவற்றுடன் இணைய வேண்டியதில்லை; ''பாட்டாளி வர்க்க இயக்கம் மிகவும் கருவடிவத்தில் இருந்தால் கூட அதன் சுதந்திரத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பதும்'', கம்யூனிஸ்டுகளின் நோக்கங்கள் முதலாளி வர்க்கத்தின் நோக்கங்களுக்கு நேரெதிராக இருக்கின்றன என்று ஆரம்பகால கம்யூனிஸ்ட் சக்திகளுக்கு போதிப்பதும் அவசியமே.**

கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் எல்லாவற்றுக்கும் மேலாக (''தொடக்கத்திலிருந்தே'') புரட்சிகர இயக்கத்தின் தலைமையைப் பெற வேண்டும், அந்த நோக்கத்தில் தேசிய விடுதலைச் சக்திகளுடன் தொடர்பையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்பே கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைப்பதை வேகப்படுத்த வேண்டும் என்ற உறுதி துணை ஆய்வுரையில் அநேகமாக அப்படியே விட்டு வைக்கப்பட்டிருந்தது.

எட்டாவது ஷரத்தை இங்கே குறிப்பிடுவது அவசியமே. கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஊக்குவிப்பதோடு கம்யூனிஸ்ட் அகிலம் நின்றுவிட வேண்டும் என்று ராய் விரும்பினார்; ஏனென்றால் பெருந்திரளான

---

* வி.இ. லெனின், ''தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள்'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984 பார்க்க.

** அதே நூல்.

மக்களுக்கு, குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்துக்கு ''தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அக்கறை இல்லை''* என்று அவர் கருதினார். ''பெரும்பான்மை யான காலனி நாடுகளில் சோஷலிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்கெனவே இருக்கின்றன''**, நேரடியாக சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பாடுபடுவதே அவற்றுக்கு முன் பாக உள்ள கடமை*** என்ற வாதத்தை ராய் தன்னுடைய ஆய்வுரையில் சேர்த்திருந்தார். காங்கிரஸ் கமிஷனில் நடை பெற்ற விவாதங்களுக்குப் பிறகு சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பாடுபடுவதைப் பற்றிய குறிப்பு நீக்கப்பட்டது.

காலனிகளில் நடைபெறுகின்ற புரட்சி முதல் கட்டத் தில் ''கம்யூனிஸ்ட் புரட்சியாக இருக்காது'', ''அது நிறை வேற்றுகின்ற செயல்திட்டம் பல குட்டி முதலாளி வர்க்க சீர்திருத்த ஷரத்துக்களைக் கொண்டிருக்கும்'' என்று ஆய் வுரையில் இரண்டு தடவை சொல்லப்பட்டிருந்தது. பெரும் பான்மையான ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன என்ற வாதத்தைப் பொறுத்தமட்டில் அது கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு அல்ல, புரட்சிகரக் கட்சிகளுக்குப் பொருந்துகின்ற மாதிரி அடிப்படையில் மாற்றப்பட் டிருப்பதாக முதல் பார்வைக்குத் தோன்றும்.**** ஆனால் அது உண்மையல்ல. ஆய்வுரையை முழுவதும் படித்தால் இக்கட்சிகள் ''தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படை'', ''உழைக்கின்ற பெருந்திரளான மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவை செயல்படுகின்றன'', அவர் களின் சித்தத்தை வெளிப்படுத்துகின்றன, இறுதியாக, ''அவை பாட்டாளி வர்க்கக் கட்சிகள்''***** என்னும் பகுதி களைக் காண முடியும்.

---

* ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய், ஜூலை 25, 1920, பக்கம் 2.

** அ.பி. ரேஸ்னிக்கவ், ''தேசிய மற்றும் காலனிப் பிரச்சினையில் குறுங்குழுவாத திரிபுகளுக்கு எதிரான லெனி னுடைய போராட்டம்'', கம்முனிஸ்ட், 1968, இதழ் 5, பக்கம் 46.

*** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தி ஏடு, இதழ் 1, பக்கம் 1.

**** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 498 (ருஷ்ய மொழியில்).

***** அதே இடம்.

இது பழைய கருதுகோள்தான். இது துணை ஆய்வுரையின் மற்ற பகுதிகள் மீது தாக்கம் செலுத்தியது. விடுதலை இயக்கத்தின் தலைமையான சக்திகளுடன் கம்யூனிஸ்டுகள் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிடுகின்ற— இப்பொழுது நமக்கு நன்கு அறிமுகமாகிவிட்ட—வாசகம் குறிப்பிடத்தக்கதாகும். ''காலனி நாடுகளில் அந்நிய முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவது புரட்சியை நோக்கிய முதல் காலடியாகும். அதற்கு முதலாளி வர்க்க தேசிய வாதப் புரட்சிகர சக்திகளின் ஒத்துழைப்பு பயனளிப்பதாகும்''* என்று ஏழாவது ஷரத்து கூறியது. முதலாவதாக, இங்கே ஒத்துழைப்பு பயனுள்ளதாக இருக்கும் என்பது மட்டும் வலியுறுத்தப்படுகிறதே தவிர அத்தகைய ஒத்துழைப்பை ஏற்படுத்துவது கம்யூனிஸ்டுகளின் கடமை என்பதை அல்லது அவர்கள் அத்தகைய ஒத்துழைப்புக்கு முயற்சிப்பதன் அவசியத்தைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. இரண்டாவதாக, விடுதலைப் புரட்சிகளுக்கு ஏற்கெனவே கம்யூனிஸ்ட் கட்சிகள் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்றன, அவற்றுடன் ஒத்துழைக்க முன்வந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்ற தேசிய முதலாளி வர்க்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் ''உபயோகித்துக் கொள்ள'' முடியும் என்ற யதார்த்தத்துக்குப் புறம்பான மதிப்பீடு தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

ஒன்பதாவது ஷரத்திலுள்ள மற்றொரு கருத்தை இங்கே ஆராய்வது பொருத்தமாக இருக்கும். காலனி நாடுகளில் நடைபெறுகின்ற புரட்சி முதல் கட்டத்தில் கம்யூனிஸ்ட் புரட்சியாக இருக்காது என்பதால் ''பல கிழக்கு நாடுகளில் விவசாயப் பிரச்சினையைப் பரிசுத்தமான கம்யூனிஸ்ட் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்ப்பதற்கு முயற்சி செய்வது மிகவும் தவறாகும்''**. அப்படியானால் அத்தகைய முயற்சி சில கிழக்கு நாடுகளுக்குச் சரியாக இருக்கும் என்று அர்த்தமா? இந்தியா ஏற்கெனவே சோஷலிஸ்ட் புரட்சிக்கு முதிர்ச்சியடைந்துவிட்டது, ஆகவே அங்கே எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் கொண்ட ஐக்கிய முன்னணியைப் பற்றிய பிரச்சினையைக் கீழ்த்திசையிலுள்ள

---

* அதே இடம்.

** அதே நூல், பக்கம் 499.

பெரும்பான்மையான காலனி மற்றும் சார்பு நாடுகளைப் போலன்றி வேறுமுறையில் தீர்க்க வேண்டும் என்ற ராயின் கருத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் பொழுது இது இந்தியாவைப் பற்றிய குறிப்பாக இருக்குமா?

எட்டாவது ஷரத்திலிருந்து மற்றுமொரு உதாரணத்தை மேற்கோள் காட்டுவோம். ''பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் காலனி நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சிகளுடன் இணைந்து வேலை செய்ய வேண்டும், அவற்றின் மூலம் பொதுவாகப் புரட்சி இயக்கத்துக்குப் பொருளாயத உதவி அளிக்க வேண்டும்.''* கம்யூனிஸ்ட் அகிலத்தைப் பற்றியும் இம்மாதிரியே சொல்லப்பட்டது. காலனி நாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கங்களுடன் அதன் உறவுகள் ஸ்தல பாட்டாளி வர்க்கக் கட்சிகள் என்னும் ''**ஊடகத்தின் மூலமாக**'' மட்டுமே நடத்தப்பட வேண்டும்.**

லெனினால் எழுதப்பட்ட முதல் தீர்மானத்தில் இப்பிரச்சினை அடிப்படையில் வேறுவிதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. வளர்ச்சியடைந்த நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் விடுதலை இயக்கத்துக்கு **நேரடியாகவும் உடனடியாகவும்** ஆக்கபூர்வமான உதவியளிக்க வேண்டும், உதவியின் **வடிவத்தைப் பற்றி மட்டுமே** ஸ்தலத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியுடன் **விவாதிக்க** வேண்டும். மேலும் குறிப்பிட்ட கிழக்கு நாட்டில் அப்படி ஒரு கட்சி இருக்குமானால் என்ற விசேஷ காப்படக்கத்துடன் அதில் எழுதப்பட்டிருந்தது*** (அழுத்தம் என்னுடையது—**ஆ-ர்**). இக்காப்படக்கம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் இது கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளிடம் பரவலாக இருந்த இடது குறுங்குழுவாதத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தேசிய விடுதலை இயக்கத்தின் பால் அவர்களுடைய எதிர்மறையான அணுகுமுறையைச் சரிசெய்தது.****

---

* அதே நூல், பக்கங்கள் 498—499.

** அதே நூல், பக்கம் 498.

*** அதே நூல், பக்கம் 494.

**** லெனினுடைய **பூர்வாங்க நகல் ஆய்வுரைகளில்** இக்காப்படக்கம் முதலில் இல்லை. காங்கிரஸ் விவாதங்களுக்குப் பிறகு இச்சொற்றொடர் தீர்மானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. எனவே ராயின் வற்புறுத்தலினால்

மாரிங் கிழக்கு நாடுகளின் தேசியப் புரட்சிகர சக்திகளுடன் கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்பைப் பற்றிய பிரச்சினையைக் குறிப்பிட்டு அது மிகவும் தெளிவில்லாதிருக்கிறது, மிகவும் கடினமாக இருக்கிறது என்று கூறிய பொழுது அவர் ஆய்வுரையின் ஆறு, ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது ஷரத்துக்களையே குறிப்பிட்டிருக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் மிஹயீல் பவ்லோவிச், ராயின் துணை ஆய்வுரையை சுருக்கமாகக் குறித்துக் கொண்டார். அச்சுருக்கம் சுவாரசியமானது. ''காலனி நாடுகளில் முதலாளித்துவ அமைப்பின் கீழ் அரசியல் சுதந்திரத்துக்குப் பாடுபடுகின்ற மிதவாதக் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் அகிலம் விடுதலை இயக்கத்துக்கு உதவி செய்யக் கூடாது, காலனி நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளை உருவாக்குவது மற்றும் வலுப்படுத்துவதன் மூலம் உதவி செய்ய வேண்டும். காலனி நாடுகளில் புரட்சியின் தலைமை பாட்டாளி வர்க்கக் கட்சிகளிடம் இருக்க வேண்டும் என்பது தோழர் ராயின் கருத்துக்களின் சாராம்சம்''* என்று அவர் எழுதினார். இக்காங்கிரசில் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பவ்லோவிச் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிய கமிஷன் கூட்டங்களிலும் பங்கெடுத்திருக்க வேண்டும். அவர் ராயின் ஆய்வுரையின் சாராம்சத்தை மிகவும் துல்லியமாகச் சுருக்கித் தந்திருக்

---

லெனினுடைய ஆய்வுரை திருத்தப்பட்டது என்று இது எடுத்துக்காட்டுவதாக இந்தியாவைச் சேர்ந்த மார்க்சிய வரலாற்றாசிரியரான கௌதம் சட்டோபாத்யாயா தன்னுடைய நூலில் எழுதியிருக்கிறார் (Gautam Chattopadhyaya, *Communism and Bengal's Freedom Movement*, Vol. 1, p. 33). இக்கருத்து தவறானது. முதலாவதாக, இச்சொற்றொடர் ராயின் இடதுசாரி நிலைகளை எதிர்க்கிறதே தவிர ஆதரிக்கவில்லை. இரண்டாவதாக, கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்னர் நடைபெற்ற பூர்வாங்க விவாதம் மற்றும் காங்கிரசில் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிய கமிஷனில் நடைபெற்ற பொது விவாதம் ஆகியவற்றின் விளைவாக லெனினே தம்முடைய தீர்மானத்தில் திருத்தங்களைச் செய்தார்.

* **ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய்,** ஆகஸ்ட் *10, 1920*, பக்கம் *2*.

கிறார். இவற்றின் சாரத்தில் அவர் ''இடதுவாதத்தை'' பார்க்கவில்லை.

எனினும் ஆய்வுரையில் (இவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும்) ராய் மற்றும் இதர ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்ற சில சொற்களும் அழுத்தமும் நீடித்தன.

தன்விருப்பவாதம் மற்றும் ''இடதுவாதத்தைக்'' கொண்டிருந்த மேற்கண்ட அம்சங்களை லெனினால் பார்க்காமலிருந்திருக்க முடியாது. அவர் அவற்றை கவனித்தார், அவை விஞ்ஞானத்துக்குப் புறம்பானவை, நியாயப்படுத்த முடியாதவை என்பதை விளக்குவதற்கு மிகவும் பாடுபட்டார் என்பதை நமக்குக் கிடைத்திருக்கும் எல்லா விவரங்களும் சுட்டிக் காட்டுகின்றன. கிழக்கத்திய கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளின் ''இடது'' கருத்துக்களை உடனடியாக முற்றிலும் நீக்குவது சாத்தியமென லெனின் கருதவில்லை.

இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது. இரண்டாவது காங்கிரசின் பேரவைக் கூட்டம் ஜூலை 26ந் தேதியன்று நடைபெற்றபொழுது லெனின் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றித் தன்னுடைய அறிக்கையில் ''முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகளில் கம்யூனிஸ்ட் செயல்தந்திரத்தையும் கொள்கையையும் எப்படிச் செயல்படுத்துவது'' என்ற கேள்விக்கு பதிலளிப்பதற்கு கம்யூனிஸ்டுகளுக்கு இன்னும் போதுமான அனுபவமில்லை என்பதை இரண்டு தடவை வலியுறுத்தினார். ''இந்த விவகாரத்தில் இதுகாறும் நமது கூட்டு அனுபவம் விரிவானதாய் இல்லை''* என்று லெனின் கூறினார். கம்யூனிஸ்ட் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு இடையில் உறவைப் பற்றிய பல முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான சான்றை எதிர்காலப் புரட்சிகர அனுபவம் தரும் என்று லெனின் எதிர்பார்த்தார். ''ஆனால் மேலும் மேலும்

---

* வி.இ. லெனின், ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், 1920 ஜூலை 19—ஆகஸ்ட் 7'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கங்கள் 441, 442.

அதிகமான உண்மை விவரங்கள் சிறிது சிறிதாகச் சேகரிக்கப்படும்''* என்றார் லெனின். ''நாம் புதிய துறையைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்; நடைமுறை அனுபவம் கிடைக்கின்றவரை இறுதித் தீர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டும்'' என்று லெனின் காங்கிரஸ் கமிஷனில் பேசியதாக ராய் தன்னுடைய நினைவுக்குறிப்புகளில் எழுதியதுடன் அதைப் பற்றித் தனக்கே உரிய முறையில் விமர்சனம் செய்தார்.**

லெனின் மாற்று ஆய்வுரை எழுதும்படி தன்னைக் கேட்டுக் கொண்டதாக ராய் எழுதியிருக்கிறார். ராயின் ஆய்வுரை மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தன என்பதை நாம் பார்த்தோம். ராயின் ஆய்வுரையிலிருந்த இடதுவாத அம்சங்களை முற்றிலும் நீக்கி விட வேண்டும் என்று லெனின் வற்புறுத்தவில்லை என்பதும் வெளிப்படையானது. தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலம் பின்பற்ற வேண்டிய பாதை லெனினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது காங்கிரஸ் தீர்மானத்தில் மிகவும் திட்டவட்டமாக எடுத்துரைக்கப்பட்டது. லெனின் 1921 கோடைகாலத்தில் கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலத்தின் திசைவழி குறித்து இந்திய தேசியப் புரட்சிக்காரரான புபேந்திரநாத் தத்தாவுக்கு எழுதிய பொழுது தன்னுடைய ஆய்வுரையைக் குறிப்பிட்டாரே தவிர **துணை ஆய்வுரையை** அல்ல.***

''துணை ஆய்வுரை'' தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகள் குறித்து லெனினுடைய திசைவழிக்கும் இடதுசாரி புரட்சித் திசைவழிக்கும் இடையில் ஒரு சமரசத்தின் விளைவு என்று தோன்றுகிறது. லெனின் எல்லாவிதமான சமரசங்களையும் அறவே நிராகரித்தவரல்ல. ''கம்யூனிஸ்டுகளுக்கு மத்தியில்... குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் சமரசங்கள் அவசியமே''**** என்று அவர் கருதினார். துல்

---

* அதே நூல், பக்கம் 442.

** *M. N. Roy's Memoirs*, pp. 380—381.

*** V. I. Lenin, "Letter of August 26, 1921 to Bhupendranath Dutta", *Collected Works*, Vol. 45, p. 270.

**** கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் செயல்தந்திர ஆய்வுரையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது ''நமது ஆய்வுரைகள் ஒரு சமரசம் என்பது தெரிந்ததுதான்'' என்று லெனின் கூறினார்

லியமாக அத்தகைய நிலைமைகள்தான் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் ஏற்பட்டிருந்தன. கிழக்கு நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாக வந்திருந்தவர்களில் மிகவும் அதிகமானவர்கள் ''இடது'' நிலைகளைப் பின்பற்றினார்கள். கம்யூனிஸ்ட் இயக்கம் கிழக்கு நாடுகளில் தோன்றிய சூழ்நிலையில் இடதுசாரி புரட்சிகர கருத்துக்களுக்கு ஆழமாக வேரூன்றிய புறநிலைக் காரணங்கள் இருந்தன என்பதையும் ஒருவர் புறக்கணிக்க முடியாது. எனவே கம்யூனிஸ்ட் தத்துவத்தை அரைகுறையாகப் புரிந்து கொண்ட ஆரம்பக் கட்டத்தைப் பிரதிபலித்த கருத்துக்களையும் முடிவுகளையும் வெறுமளவில் நிராகரிப்பது பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கும் கிழக்கு நாடுகளில் விடுதலை இயக்கத்துக்கும் ஒற்றுமையை உண்டாக்குவதை பாதிக்கும். ''இடது'' தவறுகள் ''வளர்ச்சிக் காலத் துன்பங்கள்'' என்று லெனின் கூறினார்.*

மார்க்சியத்தின் பல அம்சங்களை முதல் கிழக்கத்திய கம்யூனிஸ்டுகளால் புரிந்து கொள்ள இயலவில்லை என்பதை கவனத்தில் கொண்ட வி.இ. லெனின் சில சமயங்களில் இவர்களுடைய இடதுசாரி புரட்சி கருத்துக்களுக்கு ஓரளவு இணக்கம் காட்டினார். தம் தவறுகளை தாமே உணரும் வாய்ப்பை இவர்களுக்கு அளிப்பதற்காகவும் இதன் மூலம் இவை விரைவாக மாற உதவவும் லெனின் இப்படிச் செய்தார்.

**கம்யூனிஸ்டுகளின் சரியான செயல்முறை தந்திரம் ''...பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் வரும் பகுதியோருக்கு—அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் வரும் போதும், எந்த அளவுக்கு வருகிறார்கள் என்பதற்கு ஏற்பவும்—சலுகைகள் தருவதைக் கோருகிறது''**** என்று லெனின் எழுதினார் (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்).

---

(வி.இ. லெனின், ''1921, ஜூலை 1ல், கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாம் காங்கிரசில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் போர்த் தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு'', வெகு ஜனங்களிடையே கட்சியின் பணி, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 206).

* லெனின் தொகுப்பு நூல், தொகுதி 37, மாஸ்கோ, 1970, பக்கம் 224 (ருஷ்ய மொழியில்).

** வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 275.

தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிக் காங்கிரசின் பிரதான தீர்மானத்திலிருந்து மாறுபட்ட சில கருத்துக்கள் துணை ஆய்வுரையில் நீடித்ததற்கு லெனினுடைய இந்த அணுகுமுறைதான் காரணமாகும். இரண்டாவது காங்கிரசில் தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளின் மீது நடைபெற்ற விவாதத்தைப் பற்றி பல பூர்ஷ்வா ஆசிரியர்கள் விரிவாக எழுதியிருக்கிறார்கள். லெனினுடைய ''இடது'' விமரிசகர்களில் ராய் ஒருவரைத்தான் அவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களுடைய கண்ணோட்டத்திலிருந்து மிக முக்கியமானது மறைகிறது: அக்காலத்தில் கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் மத்தியில் பரவலாக இருந்த இடதுசாரி புரட்சிகர கருத்துக்களை ராய் வெளியிட்டார். அவர் தயாரித்த ஆய்வுரைக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டதென்றால் அது மார்க்சிய நிலையின்படி இன்னும் பக்குவமடையாத ஆசிய நாடுகளின் தொடக்க நிலைக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் கருத்துக்களைப் பிரதிபலித்தது காரணமாகும். எனவே அவற்றை விவாதிப்பதும் குறைகளைப் போக்கி வளர்த்துச் செல்வதும் அவசியமாக இருந்தன. பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் இந்த முக்கியமான அம்சத்தைப் புறக்கணித்து விட்டு ராய் என்ற நபரின் ஆளுமையைப் பற்றியே எழுதியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தின் கீழ்த்திசை நாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் தீர்மானகரமான பாத்திரத்தை வகித்தவர் என்று ராயை அளவுக்கு மீறிப் புகழ்ந்திருக்கிறார்கள். ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைவர்கள் மத்தியில் ராய் ஒருவர்தான் பல்வேறு காலனி நாடுகளில் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களைப் பற்றி ஆராய்ந்து அவற்றுக்குப் பொருத்தமான செயல்முறையைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப் புரிந்து கொண்டிருந்தார்''* என்று டாக்டர் நாயக் எழுதுகிறார். ''தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலத்தின் கொள்கையை உருவாக்குவதில் ராய் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தார்'' என்றும் ''தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி லெனின் ஆய்வுரை ராயின்

* J. A. Naik, *Soviet Policy Towards India. From Stalin to Brezhnev*, Delhi, 1970, p. 11.

விமர்சனத்துக்குப் பிறகு திருத்தப்பட்டது''* என்றும் ஜான் பாட்ரிக் ஹேய்த்காக்ஸ் கூறுகிறார். ''சலுகைகள் தரும்படி லெனினை நிர்ப்பந்தித்த நபர் என்ற முறையில் ராய் கணிசமான மரியாதைக்கு உரியவரானார்''** என்று ஓவர்ஸ்ட்ரீட் மற்றும் வின்ட்மில்லர் எழுதியுள்ளனர். ஆனால் இத்தகைய மதிப்பீடுகள் பிற்காலத்தில் ராய் தன்னைப் பற்றிப் பெருமையாக எழுதியிருக்கும் வரிகளை—அநேகமாக சொல்லுக்குச் சொல்—அப்படியே திருப்பி எழுதப்பட்டவையே. உதாரணமாக ராய் தன்னுடைய நினைவுக் குறிப்புகளில் பின்வருமாறு கூறினார்: ''என்னுடன் நெடுநேர விவாதத்துக்குப் பிறகு தன்னுடைய ஆய்வுரையைப் பற்றித் தனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக லெனின் அறிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.''*** அப்படி எதுவும் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை. லெனினுக்குத் தன்னுடைய ஆய்வுரையைப் பற்றி சிறிதும் சந்தேகம் ஏற்படவில்லை என்பதுடன் பூர்வாங்க நகலில் எழுதப்பட்டிருந்த கருத்துக்கள் அனைத்தும் சரியானவை என்பதையும் கண்டார். லெனின் ஆய்வுரையின் கோட்பாட்டு நிலைகளில் ஒன்றாவது தவறு என்று நிரூபிக்கப் படவில்லை அல்லது ஆட்சேபிக்கப்படக்கூட இல்லை. ''பின்தங்கிய நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயக இயக்கத்தை ஆதரிப்பதைப்'' பற்றிய சூத்திரத்தை இன்னும் அதிகமான துல்லியத்துடன் உருவாக்குவது அவசியம் என்பதையே பொது விவாதம் சுட்டிக் காட்டியது. அந்த முக்கியமான கருத்தை நீக்க வேண்டுமென்று ராய் வற்புறுத்தினார், ஆனால் அது இன்னும் தெளிவுபடுத்தப்பட்டு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இரண்டாவது காங்கிரசில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட லெனினுடைய ஆய்வுரை தேசிய புரட்சிகர சக்திகளை, அதாவது உண்மையில் புரட்சிகரமானவையாக இருந்த முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களை ஆதரிப்பது அவசியம் என்று சுட்டிக் காட்டியது. அந்தப் ''புதிய'' சூத்திரத்திலும் கோட்பாட்டளவில்

---

* J. P. Haithcox, "The Roy-Lenin Debate on Colonial Policy — A New Interpretation", *Journal of Asian Studies*, 1963, Vol. 23, No. 1, p. 94.

** G. D. Overstreet, M. Windmiller, *Communism in India*, p. 33.

*** *M. N. Roy's Memoirs*, p. 381.

புதுமை எதுவுமில்லை. லெனின் 1916இலேயே சோஷலிஸ்டுகள் ''தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களில் உள்ள அதிகப் புரட்சிகரமான சக்திகளை''—கிழக்கு நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கத்தை அல்ல—''உறுதியாக'' ஆதரிக்க வேண்டும்* என்று கூறினார்.

ஆகவே ராயின் ஆய்வுரைதான்—முழுமையாக இல்லாவிட்டாலும்—அடிப்படையில் திருத்தப்பட்டது. லெனினுடைய பூர்வாங்க நகல் ஆய்வுரைகளில் திருத்தங்கள் செய்யப்பட்ட போதிலும் அவை ஓரளவு முக்கியமான திருத்தங்கள் என்று கூறலாம்; அவையும் லெனினுடைய திசை வழியைத்தான் வற்புறுத்தின. பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் லெனினும் கம்யூனிஸ்ட் அகிலமும் அளித்த சலுகைகளைப் பற்றி அதிகமாக எழுதுகிறார்கள். ஆனால் இச்சலுகைகள் ராய் என்பவருக்குத் தரப்பட்டவை அல்ல, மார்க்சியத்தை நோக்கி வந்து கொண்டிருந்த கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்ட் சக்திகளுக்குத் தரப்பட்டவையே.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் செயல் திட்டத்தையும் செயல்முறையையும் வரையறுத்துக் கூறி, எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒற்றுமைப் படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய பாதைகளைச் சுட்டிக் காட்டி அங்கே கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்ச்சியடைவதில் மாபெரும் பாத்திரத்தை வகித்தது.

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை (இந்தச் சொற்றொடர் இன்னும் வகுக்கப்படவில்லை) உருவாக்க வேண்டும், தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்க வேண்டும், தேசியப் புரட்சிகரக் கட்சிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று லெனினும் கம்யூனிஸ்ட் அதிலத்தின் இரண்டாவது காங்கிரசும் வலியுறுத்தினர்.

* * *

---

* வி.இ. லெனின், ''சோஷலிஸ்ட் புரட்சியும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்'', பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 215.

அதே சமயத்தில் ஜனநாயக இயக்கத்திற்குள் கம்யூனிஸ்டு கள் தம்முடைய சித்தாந்த மற்றும் ஸ்தாபன சுயதன் மையை பாதுகாத்துக் கொள்ள வேண்டும், கம்யூனிஸ்டுகள் தம் விசேஷ கடமைகளை உணரும்படி பயிற்றுவிக்க வேண்டு மென அறைகூவல் விடுத்தார்கள், நெடுங்கால நோக்கில் அவர்கள் மக்களின் புரட்சிகர இயக்கத்தின் தலைமையைப் பெற வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். பெருந் திரளான மக்களிடையில் எல்லாக் காலத்திலும்—''புரட்சி கரமாக இல்லாத நிலைமையிலும் கூட''* என்று லெனின் வற்புறுத்தினார்—தொடர்ச்சியான ஸ்தாபன மற்றும் புரட்சி கரப் பிரச்சார வேலைகளைச் செய்தால் மட்டுமே இக் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

ராயின் தலைமையிலிருந்த இந்தியாவின் ''இடது'' கம்யூனிஸ்டுகள் தமது இடது குறுங்குழுவாதக் கருத்துக் களைக் கைவிடுவது சுலபமல்ல. அவர்களிடம் உறைந்து போயிருந்த குட்டி முதலாளி வர்க்க தேசியவாதம், தேசியப் புரட்சிகர ஸ்தாபனங்களின் சதிக் கூட்ட நடவடிக்கை களில் நெடுங்காலமாகப் பங்கெடுத்திருத்தல் மற்றும் இதரவை அதற்குக் காரணங்களாகும். துருக்கிஸ்தானிலிருந்த இந்தியக் குடியேறிகள் மத்தியில் ராயின் குழுவினருடைய கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளை அது பாதிப்பதற்கு அதிக காலமாகவில்லை.

இரண்டாவது காங்கிரஸ் முடிவடைவதற்குள் இந்திய கம்யூனிஸ்டுகள் இந்தியப் புரட்சிக்கான பொதுத் திட்டமும் வேலைத் திட்டமும் என்ற ஆவணத்தைத் தயாரித்திருந் தார்கள்.** இந்திய கம்யூனிஸ்டுகள் துருக்கிஸ்தானில் செய்த வேலை பற்றிய அறிக்கை மற்றும் இதர ஆவணங்களின் படி ''பொதுத் திட்டம்'' மூன்று முக்கியமான கடமைகளை முன்வைத்தது: முதலாவதாக, அகில இந்தியப் புரட்சிகர மையத்தை அமைப்பதும் அதன் மூலம் அகில இந்தியப் புரட்சிக்காரர்கள் காங்கிரசைக் கூட்டுவதும்; இரண்டாவ தாக, உடனடியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்

---

* V. I. Lenin, "Speech on the Terms of Admission into the Communist International", *Collected Works*, Vol. 31, p. 251.

** *Report of Work Done in the Three Months of October 1920—January 1921 by the Provisional All-Indian Central Revolutionary Committee*, p. 1.

பது; மூன்றாவதாக, புரட்சிகர சக்திகளுக்கு இராணுவ மற்றும் அரசியல் பயிற்சியை உடனே ஆரம்பித்தல்.

இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் சில மாஸ்கோவில் உடனே ஆரம்பிக்கப்பட்டன. அவர்கள் மாஸ் கோவில் 1920 செப்டெம்பர் மாதத்தின் நடுப்பகுதி வரை தங்கியிருந்த பிறகு அக்டோபர் முதல் தேதி வாக்கில் தாஷ்கன்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தன.

*அத்தியாயம் மூன்று*

# நாட்டைத் துறந்து சோவியத் குடியரசிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்கள் மத்தியில் சித்தாந்த மற்றும் அரசியல் சண்டைகள். முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழு அமைக்கப்படுதல்

ராயும் அவருடைய குழுவினரும் அகில இந்தியப் புரட்சிக் காரர்கள் காங்கிரசைக் கூட்ட வேண்டும், தேசியப் புரட்சிகர மையத்தை அமைக்க வேண்டும் என்று தமது பொதுத் திட்டத்தில் அறிவித்த பொழுது எல்லா ஏகாதி பத்திய எதிர்ப்பு சக்திகளையும் கொண்ட ஐக்கிய முன்ன ணியை அமைக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் முடிவைத் தாங்கள் அமுலாக்கு வதை எடுத்துக் காட்டுவதற்கு முயன்றிருக்க வேண்டும். நாட்டின் விடுதலைக்கு இந்திய சமூகத்திலுள்ள பல்வேறு சக்திகளையும் ஒன்றுசேர்ப்பது இந்தியக் கம்யூனிஸ்டுகளு டைய நோக்கம் என்று எம்.என். ராய் அடிக்கடி கூறியதற் கும் இதுவே காரணமாக இருக்கக் கூடும். 1920 அக்டோபர் கடைசியில் தாஷ்கன்டில் இந்தியக் குடியேறிகளின் பொதுக் கூட்டத்தில் கம்யூனிசத்தைப் பற்றி உரை நிகழ்த்திய பொழுது ராய் பின்வருமாறு கூறினார்: ''இந்தியப் புரட்சி —பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிவதைப் பொறுத்த மட்டில்—மிகப் பல்வேறான சக்திகளால்தான் நிறைவேற்றப் பட வேண்டும். நாங்களும் (கம்யூனிஸ்டுகள்) பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிய விரும்புகிறோம். இந்த நோக் கத்துக்கு நாம் இந்தியாவிலுள்ள அனைத்துப் புரட்சிகர சக்திகளுடன் சேர்ந்து பாடுபட வேண்டும்... பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிவதைப் பொறுத்தமட்டில் நாம் அனைவரும் உடன்படுகிறோம்; நாம் கை கோர்த்து முன் னேறுவோம்.''*

எனினும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்

---

* *Statement on Communism Made by Roy before a General Meeting of Indian Revolutionaries and Immigrants in Tashkent, October 1920*", அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 9.

கிரசுக்குப் பின்னர் கூட ராய் தன்னுடைய இடதுகுறுங் குழுவாதக் கருத்துக்களைக் கைவிடவில்லை, அதிலும் தேசிய முதலாளி வர்க்கம், தேசியப் புரட்சிகர ஸ்தாபனங்கள் மற்றும் கட்சிகளுடன் ஒத்துழைப்பைப் பற்றி அவர் எதிர்மறையான நிலையைக் கொண்டிருந்தார் என்பதுதான் உண்மை. அவர் முதலில் வலியுறுத்திய உடனடியான சோஷலிஸ்ட் புரட்சி என்ற தத்துவத்தின் விளைவு இது. இரண்டாவது காங்கிரசின் முடிவுகளுக்கு மாறான வகையில் அவர் இதை வளர்ப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கும் முயற்சி செய்ததை தாஷ்கன்டிலிருந்த இந்தியர்கள் மத்தியில் அவருடைய நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்த இந்தியப் பிரதிநிதிகள் 1920 ஆகஸ்ட் 9இல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறினார்கள்: ''மற்ற நாட்டைப் போலவே இந்தியாவிலும்—முதலாளி வர்க்கப் புரட்சி மட்டும் அல்ல—சமூகப் புரட்சியே சாத்தியம் என்று கம்யூனிஸ்டுகளாகிய நாம் கருத வேண்டும்.'' செப்டெம்பரில் ராய் அநேகமாக மாஸ்கோவில்தான் எழுதிய **இந்தியாவில் சமூகப் புரட்சி...*** என்ற கட்டுரையில் இந்தியா ஒரு பின்தங்கிய நாடென்றாலும் முதலாளித்துவ நாடு, ''இந்தியா பின்தங்கியிருந்தாலும் உண்மையைச் சொல்வதென்றால் அங்கே ஏற்கெனவே பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது'' என்று அவர் நிரூபிப்பதற்குப் பாடுபட்டார். நாட்டில் துவங்கிய தொழிலாளர்களின் வெகுஜன வேலை நிறுத்தங்கள் மற்றும் விவசாயிகளின் எழுச்சிகள் ஆகியவற்றை இவர் இப்படி மதிப்பிட்டார்.

ராய் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான நடவடிக்கையையும் வர்க்க உணர்வையும் மிகைப்படுத்திக் கூறி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணிக்கு ஒருதலைச் சார்பான விளக்கம் கொடுத்தார். இந்தியாவின் விடுதலைக்கான மொத்த புரட்சிகர இயக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் மத்தியப்படுத்துவதற்கு, விரைவாக அந்த இயக்கத்தின் தலைமையைக் கைப்பற்றுவதற்கு, சோஷலிஸ்ட் புரட்சியை நோக்கி அதைச் செலுத்துவதற்கு ஒரு வழி என்ற அளவில் மட்டுமே அவர் அதைப் பார்த்

* **ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய்**, அக்டோபர் 10, 1920.

தார். ''பொதுத் திட்டம்'' தீட்டும் நடவடிக்கைகள் இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் தலைமையை கம்யூனிஸ்டு கள் வேகமாகக் கைப்பற்றுவது பற்றிய ராயின் இலட்சி யத்தின் ஈடேற்றத்துக்கு உதவும்.

## தற்காலிக இந்தியப் புரட்சிக் கமிட்டி நிறுவப்படுதல்

''இந்தியாவில் இருக்கின்ற புரட்சிகரக் கட்சிகள், கோஷ்டிகள், சக்திகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்ட அகில இந்திய புரட்சிக் காங்கிரசை இயன்ற அளவுக்கு சீக்கிரமாகக் கூட்டுவது'' ''பொதுத் திட்டத் தில்'' இடம் பெற்றிருந்தது. மேலும் அக்காங்கிரஸ் ''மத் தியப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தையும் செயல் திட்டத்தையும் அகில இந்தியப் புரட்சிகரக் கட்சியையும்'' (''அது அனைத்து இந்தியாவின் நலன்களை வெளிப்படுத்த வேண்டும்'') உருவாக்கவும் ''தன் மத்தியிலிருந்து அகில இந் திய மத்திய புரட்சிக் கமிட்டியையும் தேர்ந்தெடுக்கவும் வேண்டியிருந்தது''; இக்கமிட்டி இந்தியாவிலிருந்த எல்லா புரட்சிகர சக்திகளையும் ஒன்றிணைப்பதை முடித்து, இதன் மூலம் புரட்சியின் வெற்றிக்கு வழிகோல வேண்டும். அத் தகைய காங்கிரஸ் இந்திய மக்களின் விடுதலைப் போராட் டத்தில் முன்னெப்போதும் ஏற்பட்டிராத நிகழ்ச்சியைக் குறிப்பதுடன், மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கும் என்று ராயும் அவர் குழுவினரும் கருதி னார்கள்.

இங்கே உருவரையாகச் சொல்லப்பட்ட திட்டங்கள் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டிய அவசியத்தைப் பிரதி பலிப்பதாக, ஆகவே தேசிய மற்றும் காலனிப் பிரச்சினை களைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங் கிரசின் முடிவுகளை அமுலாக்குகின்ற திசைவழியைக் கொண்டிருப்பதாக முதல் பார்வைக்குத் தோன்றும். ஆனால் காலனி நாடாகிய இந்தியாவின் உண்மையான யதார்த்த நிலைமையைச் சிந்தித்தால் அது தவறு என்பது புலப்படும். அங்கே விடுதலை இயக்கம் பல வருடங்களாக

முதலாளித்துவ தேசிய கட்சியாகிய இந்திய தேசிய காங்கிரசின் தலைமையில் வளர்ச்சியடைந்து வந்தது. அந்தக் கட்சியின் பிரபலமான தலைவர்கள்—எல்லோரையும் காட்டிலும் மகாத்மா காந்தி—ராயின் கம்யூனிஸ்ட் குழு விடுதலை இயக்கத்தின் தலைமையைக் கைப்பற்றுவதற்கு விடமாட்டார்கள். ஒரு புரட்சிக் காங்கிரசைக் கூட்டி இந்திய மக்களுக்கு முதலாளி வர்க்கம் தலைமை தாங்குவதை சுலபமாகவும் எளிமையாகவும் அகற்றிவிட முடியும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை அநேகமாக ஒழித்து விட்டுப் புரட்சியை சோஷலிஸ்ட் திசையில் செலுத்த முடியும் என்று நம்பிய ராய் இந்திய விடுதலை இயக்கத்தின் தலைமையைக் கைப்பற்ற முடியும் என்று எதிர்பார்த்தார்.

உண்மையைச் சொல்வதென்றால் ராய் குழுவினர் தம்முடைய உத்தேசங்களை மறைக்கவில்லை. ஆகஸ்ட் 9 தேதியன்று இந்தியக் கம்யூனிஸ்டுகள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். இந்தியாவில் புரட்சிகர இயக்கத்தை வளர்ப்பதில் ஒத்துழைப்பைப் பற்றிய அறிவார்ந்த, உபயோகமுள்ள திட்டத்துடன் யதார்த்தத்துக்குப் புறம்பான சில ஆலோசனைகளும் அதில் இடம் பெற்றிருந்தன. இந்தியாவின் "தேசியவாத அரசியல்வாதிகள் மற்றும் சாத்விகமான எதிர்ப்பாளர்களிடமிருந்து தலைமையைக் கைப்பற்றுவதற்கு மற்றும் அரசியல் சுதந்திரம், பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்கு இந்தியத் தொழிலாளர்களை வர்க்க அடிப்படையில் அமைப்பு ரீதியாகத் திரட்டுவதற்கு" கம்யூனிஸ்ட் அமைப்பாளர்கள் மற்றும் இந்தியக் கிளர்ச்சிக்காரர்களை இந்தியாவுக்கு அனுப்புமாறு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சிபாரிசு செய்யப்பட்டது. (அழுத்தம் என்னுடையது.—ஆ-ர்.) இது யதார்த்தத்துக்குப் புறம்பான, வெகுளித்தனமான திட்டம். எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றுபடுத்த வேண்டும், கீழ்த்திசைக் காலனி நாடுகளில் புரட்சிகர விடுதலை இயக்கத்தைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்க வேண்டும் என்பது கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முடிவுகளிலுள்ள முக்கியமான கருத்து. இத்திட்டம் இக்கருத்துக்கு எதிராக இருந்தது.

ராயின் திட்டத்தின் விளைவாக தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தின் கரங்களுக்குத் தூக்கியெறியப்படும்,

விடுதலை இயக்கம் பிளவுபடுத்தப்பட்டு பலவீனமடையும், தொடக்க நிலையிலிருக்கின்ற கம்யூனிஸ்ட் இயக்கம் தேசியப் புரட்சிகர ஏகாதிபத்திய எதிர்ப்புவாதிகளிடமிருந்து, பெருந்திரளான மக்களிடமிருந்து, தொழிலாளி வர்க்கத் திடமிருந்தே தனிமைப்படுத்தப்படும்.

ராயும் அவருடைய குழுவினரும் தயாரித்த திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் மேற்கொண்ட முதல் நடவடிக்கை துருக்கிஸ்தானிலிருந்த இந்தியக் குடியேறிகள் மத்தியில் பிளவையும் சச்சரவையும் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படுத்தியது.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்த இந்தியப் பிரதிநிதிகள் மாஸ்கோவில் இருக்கும் பொழுது அல்லது தாஷ்கன்டுக்கு ரயிலில் போய்க் கொண்டிருக்கும் பொழுது ராயின் முன்முயற்சியின் பேரில் கம்யூனிஸ்டுகளை மட்டுமே கொண்ட தற்காலிக அகில இந்திய மத்திய புரட்சிக் கமிட்டியை அமைத்தார்கள். காங்கிரசைக் கூட்டுகின்ற வரை, பிரதிநிதித்துவம் கொண்ட மத்திய புரட்சிக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரை சிக்கலான நிலைமைகளைச் சமாளிப்பதற்காக விருப்ப பூர்வமான அமைப்பு என்ற முறையில் இந்தப் புரட்சிக் கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதாக அக்கமிட்டியின் வேலை அறிக்கை கூறியது.* எம்.என்.ராய் புரட்சிக் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு 1920 டிசம்பர் 30இல் ராய் புஹாரா மக்கள் சோவியத் குடியரசுக்கு எழுதிய கடிதத்தில் ‘‘ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசு, புஹாரா, ஆப்கானிஸ்தான் மற்றும் அண்டை நாடுகளில் இந்தியக் குடியேறிகள் மத்தியில் எல்லா அரசியல் வேலையையும் செய்வதற்கு இக்கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது; இந்தியாவில் புரட்சிகர வேலைக்கும் தலைமை தாங்கும்’’ என்று விளக்கமளித்தார்.

இப்படி எல்லாவற்றையும் தழுவிய செயல்முறைப் பணிகளைக் கொண்ட அகில இந்தியப் புரட்சிக் கமிட்டியை அமைத்த பொழுது ராயும் அவருடைய குழுவினரும் மற்ற

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 1.

நாடுகளில் (ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ்) இருந்த இந்திய தேசியப் புரட்சிக்காரர்களை மட்டுமல்லாமல் இந்தியாவிலிருந்து சோவியத் துருக்கிஸ்தானுக்கு வந்து வேலை செய்து கொண்டிருந்தவர்களையும் முற்றிலும் புறக்கணித்து விட்டார்கள். நாம் குறிப்பிடுவது தாஷ்கன்டில் 1920 ஜூலை முதல் தேதியிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த இந்தியப் புரட்சிச் சங்கமே. 1921 ஜனவரி மாதத்தில் ராய் இந்த பிரிவினை நடவடிக்கைகளை ''குடியேறிகளின் இயல்பு'' என்று விளக்கினார்; இதனால்தான் ஏதோ ''தற்காலிக புரட்சிக் கமிட்டியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இவர்களுக்கு அளிக்க முடியாமலிருந்ததாம். இவர்கள் இதன் வாக்கெடுப்பில் மட்டுமே கலந்து கொள்ள முடியும்''* என்று ராய் விளக்கினார்.

உண்மை என்னவென்றால் பல்வேறு அரசியல் சக்திகளையும் பொது இலட்சியத்துக்காகப் போராடுவதற்கு ஒன்றுசேர்க்கின்ற கூட்டணி மற்றும் ஒத்துழைப்புக்குரிய மத்திய உறுப்பாக அகில இந்தியப் புரட்சிக் கமிட்டி நிறுவப்படவில்லை; மற்ற எல்லா சக்திகளையும் காட்டிலும் தன்னையே மிகப் புரட்சிகரமானதாகக் கருதிய ஒரு சக்தியின் சித்தத்துக்கு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய கருவியாக அது நிறுவப்பட்டது.

அகில இந்தியப் புரட்சிக் காங்கிரசைக் கூட்டுவதற்கு அமைப்புக் கமிட்டியைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்தியக் குடியேறிகளின் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அத் தேர்தலில் எம். என். ராயின் குறுங்குழுவாத சகிப்புத் தன்மை இல்லாமை குறிப்பாக வெளிப்பட்டது. எம்.என். ராய், அபனி முக்கர்ஜி, முகம்மது ஷாபிக் ஆகிய மூவரைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. இக்கமிட்டியில் கம்யூனிஸ்டுகள் மட்டுமே இடம் பெற்றிருந்தார்கள். இப்படி ஒரே கட்சியின் பிரதிநிதிகளைக் கொண்ட கமிட்டியை அமைத்ததைப் பற்றி இந்தியப் புரட்சிச் சங்கத்தின் தலைவர்கள் இரண்டு கூட்டங்களில் வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள், கமிட்டியில் தம் பிரதிநிதிகளைச் சேர்க்க வேண்டுமென நியாயமாகக் கோரினார்கள். எனினும் சங்கத்தின் எதிர்ப்பு இரண்டு தடவையும் நிராகரிக்கப்பட்டது.

---

* அதே இடம்.

ராய்கூட தன்னுடைய நடவடிக்கைகளின் குறுங்குழுவாதத் தன்மையை மறைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. புஹாரா மக்கள் சோவியத் குடியரசின் புரட்சிக் கமிட்டிக்கு எழுதிய கடிதத்தில் ''இந்தியாவிலிருந்து வந்து வசிப்பவர்கள் மத்தியில் தனிப்பட்ட குழுக்கள் இருப்பதற்கு ஊக்கமளிக்கக் கூடாது'' என்று ராய் கூறியிருந்தார். குழுக்கள் முக்கியமல்ல, ஆனால் வெவ்வேறு ஸ்தாபனங்கள் இருப்பதுதான் முக்கியம், இவற்றுடன் ராய் ஒத்துழைத்திருக்க வேண்டும், ஆனால் அவர் இதை விரும்பவில்லை.

இவ்வாறாக இந்தியப் புரட்சிச் சங்கத்தின் சுதந்திரத்தைப் பறிக்கத் திட்டமிடப்பட்டது. ''அகில இந்திய மத்திய புரட்சிக் கமிட்டி என்னும் மத்தியப்படுத்துகின்ற உறுப்புக்கு அதைக் கீழ்ப்படுத்த வேண்டும்'' என்று ராய் அதே கடிதத்தில் குறிப்பிட்டார். இக்கமிட்டியை அமைப்பதில் இச்சங்கம் பங்கெடுக்கவில்லை; அப்படிப் பங்கெடுக்காததும் அதனுடைய தவறு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியப் புரட்சிச் சங்கத்தின் தலைவர்களும் (அவர்களில் திருமலாச்சார்யா என்னும் பெயருடைய கம்யூனிஸ்டும் ஒருவர்) சர்வதேசப் பிரச்சாரக் கவுன்சிலின் பிரதிநிதி எம்.ஷூல்மனும் இக்கமிட்டி இந்தியக் குடியேறிகள் அனைவருக்கும் பொதுவானது அல்ல, அது ''தோழர் ராயின் சொந்த விவகாரம்'' என்று 1921 பிப்ரவரியில் கூறியது சரியானதே.

ராயும் அவருடைய குழுவினரும் தாஷ்கன்டுக்கு வந்து சேருவதற்கு முன்பே ஒரு கட்சி புரட்சிக் கமிட்டியை அமைத்து இந்தியப் புரட்சிச் சங்கத்துடன் சண்டைக்கு தளத்தை அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் தாஷ்கன்டுக்கு வந்து ஒரு மாதத்துக்குப் பிறகு, அக்டோபர் 27ந் தேதியன்று இச்சங்கத்தின் தலைவரான அப்துர் ராப் பார்க்கை ''தற்காலிக அகில இந்திய மத்திய புரட்சிக் கமிட்டியின் கூடுதல் உறுப்பினராக இணைத்துக் கொள்வதென்று'' புரட்சிக் கமிட்டி ஏகமனதாக முடிவு செய்ததென்பது உண்மையே.* ஆனால் இந்தியப் புரட்சிச் சங்கம் தன்னுடைய ஸ்தாபன மற்றும் அரசியல் சுதந்திரத்தைத் தக்கவைப்பதற்கு முடிவு செய்த படியால்—இதை எம்.

---

* *Minute of the Meeting of the Provisional All-India Central Revolutionary Committee, Held October 27, 1920, Tashkent.*

என்.ராய் ஒத்துக்கொள்ளவில்லை—இந்த முடிவு எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

புரட்சிக் கமிட்டி நவம்பர் கடைசியில் அல்லது டிசம்பர் தொடக்கத்தில் ஒரு அற்பமான சாக்கைக் கூறி அப்துர் ராப் பார்க்கை கமிட்டியிலிருந்து வெளியேற்றியது. டிசம்பர் 18ந் தேதியன்று துருக்கிஸ்தானிலுள்ள சோவியத் அதிகாரிகள் இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கு நேரடியாக உதவி செய்வதை ஆட்சேபித்தது. கம்யூனிஸ்ட் அகிலம் சங்கத்துடனும் மற்றும் இதர இந்தியப் புரட்சிகர சக்திகளுடனும் தாஷ்கன்டில் இருக்கின்ற மத்தியப் புரட்சிக் கமிட்டியின் மூலமாக மட்டுமே உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்று அக்கமிட்டி அதே ஆவணத்தில் கோரியது.*

கம்யூனிஸ்ட் அகிலம் இந்த சச்சரவை நிறுத்துவதற்குப் பாடுபட்டது; இந்திய கம்யூனிஸ்டுகள் இந்தியப் புரட்சிச் சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் முடிவுப்படி ஜி.இ. சபாரவ் 1920 டிசம்பர் 22ந் தேதியன்று புரட்சிக் கமிட்டியின் ''சமரசக் கூட்டத்துக்கு'' ஏற்பாடு செய்தார். அப்துர் ராப் பார்க்கை மறுபடியும் கமிட்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர் முன்மொழிந்தார். எனினும் ராய் வற்புறுத்தியதன் பேரில் இம்முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது. டிசம்பர் 22ந் தேதியன்று திருமலாச்சார்யா இதை ஆட்சேபித்து புரட்சிக் கமிட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். ''இனிமேல் இந்தக் கமிட்டியில் தோழர் ராயுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு என்னால் முடியாது'' என்று அவர் கூறினார். புரட்சிக் கமிட்டி அவருடைய பதவி விலகலை அங்கீகரிக்க மறுத்தது. ஆனால் 1921 ஜனவரி ஆரம்பத்தில் திருமலாச்சார்யாவை கமிட்டியின் உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேற்றியது.** சச்சரவு மேன்மேலும் வலுத்து இறுதியில் தாஷ்கன்டிலிருந்த இந்தியக் குடியேறிகளின் மத்தியில் புரட்சிப் பணி சீர்குலைவதற்கு இட்டுச் சென்றது.

இந்தியக் குடியேறிகள் சமூகத்தில் கம்யூனிஸ்டுகளுக்

---

* *Minute of the Meeting of the Provisional All-India Central Revolutionary Committee, Held December 27, 1920, Tashkent.*

** இந்தியப் புரட்சிக் கமிட்டி 1921 ஜனவரி 24ந் தேதியன்று திருமலாச்சார்யாவுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.

கும் தேசியப் புரட்சிக்காரர்களுக்கும் இடையிலான உறவைப் பற்றிய பிரச்சினை எழுந்தது. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிக்கின்ற பொது இலட்சியத்துக்காக, விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில் இரண்டு குழுக்களுக்கும் இடையில் உண்மையிலேயே நட்புறவான ஒத்துழைப்பை நிறுவ வேண்டும் என்னும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலமாக மட்டுமே அதைத் தீர்க்க முடியும்.

ஆனால் ராயின் தலைமையிலிருந்த ''இடது'' கம்யூனிஸ்டுகள் அவசரப்பட்டார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முன்னூகித்த இயற்கையான நிகழ்வுப் போக்கு அவர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எனவே அவர்கள் அதைத் துரிதப்படுத்துவதற்கு விரும்பினார்கள். அவர்கள் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர அதற்கான மும்முரமான தயாரிப்புகள், ஸ்தாபன மற்றும் பிரச்சாரப் பணி, குறிப்பாக பெருந்திரளான மக்களை வெல்லும் நெடுங்காலப் பணி மற்றும் இதரவற்றைப் பற்றி அக்கறை காட்டவில்லை.

புரட்சிக் கமிட்டிக்கும் இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவுக்கு எம்.என். ராயின் ''இடது'' குறுங்குழுவாதமே மூலவேர். இரு அமைப்புக்களின் அடிப்படையான சித்தாந்த நிலைகள் வேறுபட்டிருந்ததைப் போல புரட்சிக் கமிட்டி என்னும் சுற்றுவட்டத்துக்குள் ''இடது'' கம்யூனிஸ்டுகளுக்கும் தேசியப் புரட்சிக்காரர்களுக்கும் ஸ்தாபன முரண்பாடுகள் தோன்றின. இந்தியாவில் புரட்சியின் தன்மை, அதைத் தயாரிப்பதற்குரிய வழிமுறைகள் ஆகிய மதிப்பீடுகளில் ராயும் அவருடைய குழுவினரும் சங்கத்துடன் உடன்பாட்டுக்கு வரத் தவறினார்கள் (வர மறுத்தார்கள் என்று சொல்வது இன்னும் துல்லியமாக இருக்கும்). அவர்கள் சுயசித்தம், தன்விருப்பவாதம் ஆகிய நிலைகளைப் பின்பற்றி இந்தியாவின் யதார்த்த நிலைமையைக் காண்பதற்கு மறுத்தார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் 1920 நவம்பரில் தற்காலிகப் புரட்சிக் கமிட்டியின் செயல்திட்டத்தைத் தயாரித்தார்கள். டிசம்பர் முதல் தேதியன்று அது பிரசுரிக்கப்பட்டது.*

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 486, தாள் 3.

தேசியப் புரட்சிகர சக்திகளுடன் ஒற்றுமையான நட வடிக்கையை அந்த ஆவணம் விவாதிக்கும் என்று எதிர்பார்ப் பது இயற்கையே. ஏனென்றால் அத்தகைய ஒற்றுமையை நிர்மாணித்து வலுப்படுத்துவது புரட்சிக் கமிட்டியின் முக் கியமான நோக்கங்களில் ஒன்றாகும். ஆனால் அந்த செயல் திட்டம் இந்தியாவில் உடனடியான சோஷலிஸ்ட் புரட்சி யைப் பற்றி ராயின் பழைய கருத்துக்களை—சற்று மறை வாகக்—கூறியது. இந்தியர்கள் நாட்டுப்பற்றுடைய தேசிய வாதத்தை ஆதரிக்கவில்லை என்று ஆதாரமில்லாமல் நிரூ பிக்க முனைந்தது; இந்தியாவின் உழைக்கும் மக்கள் சோஷ லிஸ்ட் தன்மையைக் கொண்ட கோரிக்கைகளையும் கோஷங்களையும் தவிர மற்றவற்றைப் புரிந்து கொள்ள முடியாது என்று அதே மாதிரியாக ஆதாரமில்லாமல் வாதிட் டது.

நாட்டு விடுதலை இயக்கப் பேரெழுச்சி இந்தியாவை உலுக்கிக் கொண்டிருந்த நேரத்தில் ''நாட்டின் புனிதத் தன்மை மற்றும் அது போன்ற விஷயங்களைப் பற்றிய உணர்ச்சியான பிரச்சாரத்தால் இந்தியாவின் கல்வியில் லாத, ஒடுக்கப்பட்ட மக்களிடம் தேசபக்தியை ஏற்படுத்த முடியாது. கடந்த 50 வருடங்களில் தேசிய இயக்கம்,படித்த மத்தியதர வர்க்கத்தின் சில பகுதியினரோடு நின்றுவிட் டது... எனவே **பொருளாதார** மற்றும் சமூக விடுதலைக் கோரிக்கையை ஆதரிப்பதற்கு முதலில் நகரப் பாட்டாளி வர்க்கத்தையும் பிறகு ஏழை விவசாயிகளில் பெரும்பான் மையினரையும் அமைப்பு ரீதியாகத் திரட்டுவதென்று தற் காலிக அகில இந்தியப் புரட்சிக் கமிட்டி முடிவு செய்திருக் கிறது'' என்று ஆவணத்தில் எழுதப்பட்டிருந்தது (அழுத் தம் என்னுடையது—**ஆ-ர்**).

இந்தியாவில் சோஷலிஸ்ட் புரட்சியும் சோஷலிஸ்ட் பிரச்சாரமும் முதற் கடமைகள் என்று செயல்திட்டம் மறுபடியும் பிரகடனம் செய்த போதிலும் இந்தியாவின் புரட்சிகர சக்திகள் அனைத்தும் அந்நிய ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கு ஒன்றுசேர வேண்டும் என்று அறை கூவியது. ''அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத் தூக்கி யெறிகின்ற பொது இலட்சியத்துக்காகப் பல்வேறு புரட்சி கர சக்திகளையும் ஒன்றுசேர்ப்பதற்குப்'' புரட்சிக் கமிட்டி ''நடவடிக்கைகளைச் செய்யும்'' என்று ஆவணத்

தில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அதில் சொல்லப்பட்டிருந்த அரசியல் மற்றும் பொருளாதாரக் கோரிக்கைகள் அத்தகைய ஒற்றுமைக்கு முற்றிலும் எதிராக இருந்தன.

அந்நிய ஆதிக்கத்தை ஒழித்த பிறகு புரட்சிக் கமிட்டி ''புரட்சிகரமான சர்வாதிகாரத்தை அமுலாக்க வேண்டும்...'' என்று ஆவணத்தில் எழுதப்பட்டிருந்தது. புரட்சிக் கமிட்டியின் அதிகாரத்தின் தன்மையைப் பற்றி எவ்விதமான சந்தேகமும் இருக்கக் கூடாது என்பதற்காக செயல் திட்டத்தில் பின்வரும் பகுதி சேர்க்கப்பட்டிருந்தது: ''தற்காலிக அகில இந்திய மத்திய புரட்சிக் கமிட்டியின் சர்வாதிகார ஆட்சி புரட்சிகர இராணுவம் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் ஆதரவை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.''

பொருளாதாரத் துறையில் கிராமப்புறங்களில் நிலப் பிரபுத்துவ உறவுகளும் நகரங்களில் தனிச் சொத்துடைமை உறவுகளும் ஒழிக்கப்படும் என்று செயல்திட்டம் தெரிவித்தது. ''ஜமீன்தார்கள், சர்தார்கள், தாலுக்தார்கள், ஜாகீர்தார்கள், இதர மேற்குடி மற்றும் நிலப்பிரபுத்துவ உடைமையாளர்களுக்குச் சொந்தமான எல்லா பெரிய பண்ணைகளும் பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் செய்யப்பட்ட நிலம் நாட்டுடைமை ஆக்கப்பட்டு உழுபவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்...'' என்று செயல்திட்டத்தின் அ பாராவில் எழுதப்பட்டிருந்தது.

மேலும் கிராமப்பகுதிகளை சோஷலிஸ்ட் திசையில் படிப்படியாகப் புனரமைப்பதற்குத் தயாரிப்புகள் தொடங்கப்படும் என்று செயல்திட்டம் அறிவித்தது. பாரா ஆவில் ''அரசு நிதியுதவி தரப்படுகின்ற கம்யூனிஸ்ட் விவசாயப் பண்ணைகள் அமைக்கப்படும்'' என்று எழுதப்பட்டிருந்தது. நிலவுடைமை விவசாயிகளுக்கு அரசு நவீன விவசாய இயந்திரங்களைக் கொடுக்கும். ''புரட்சிகர அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற அளவுக்கு மேல் தனியார்களின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்'' என்று பாரா இ சுட்டிக் காட்டியது. ''ரயில் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து, சுரங்கங்கள், தந்தி மற்றும் இதர பொதுச் சேவைகள் நாட்டுடைமை ஆக்கப்படும்'', அவை லாப நோக்கமின்றி, ''தொழிலாளர்கள் கவுன்சில்களினால் நிர்வகிக்கப்படும்'' என்று பாரா ஈ அறிவித்தது.

‘‘பெரிய தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் தொழிலாளர்கள் நிர்வாகம் அமைக்கப்படும்...தொழிலாளர்கள்... இவற்றை எடுத்துக்கொண்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் உற்பத்தி, வினியோகம் மற்றும் பரிவர்த்தனைக்குப் பொறுப்பாக இருப்பார்கள்’’ என்று பாரா ஏ தெரிவித்தது.

இத்தகைய செயல்திட்டம் நாட்டிலுள்ள பல்வேறு ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணிக்கு அடிப்படையாக இருக்க முடியாது என்பது இயற்கையே. எம்.என். ராயும் அவருடைய குழுவினரும் இதைச் சிறிது கூடப் பார்க்கவில்லை. ‘‘சமூகப் புரட்சியின் குறைந்த பட்சக் கோரிக்கைகளும் மற்றும் இந்தியாவின் இன்றைய நிலையில் அவசியமாகவுள்ள முதலாளி வர்க்க சீர்திருத்தமும்’’* செயல்திட்டத்தில் இடம் பெற்றிருப்பதாக அவர்கள் கருதினார்கள்.

இந்தியப் புரட்சிச் சங்கம் இதற்கு எதிரான கோட்பாடுகளை வற்புறுத்தியது. உடனடியான எதிர் காலத்தில் இந்தியாவில் நடைபெறக் கூடிய ஒரே புரட்சி அரசியல் புரட்சி, அதாவது தேசிய விடுதலைப் புரட்சியாகவே இருக்கும், அதற்குப் பிறகு மட்டுமே, குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் மட்டுமே சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாரிப்புகளைத் தொடங்க முடியும் என்று அப்துர் ராப் பார்க் கருதினார். அவர் 1921 ஜூலை 29ந் தேதியன்று ஜி.வி. சிச்சேரினுக்கு அனுப்பிய செய்தியில் பின்வருமாறு எழுதினார்: இந்தியாவில் ‘‘...உடனடியான எதிர்காலத்தில் கம்யூனிஸ்ட் புரட்சி நடக்க முடியாது. அங்கே ஆங்கில அரசாங்கம் இருக்கின்ற வரை கம்யூனிசப் பிரச்சாரம் கூட ஒரு பிரச்சினையாகவே இருக்கும்’’. நாட்டில் ‘‘அந்நிய ஆதிக்கம் ஒழிக்கப்பட்ட பிறகு மட்டுமே’’, அதிலும் ‘‘ஸ்தல அரசாங்கம் (பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றிய பிறகு ஏற்படுகின்ற ஆட்சி —ஆ-ர்) பெருந்திரளான மக்களின் நிலைமையை மேம்படுத்த முடியாத பொழுது மட்டுமே’’, கம்யூனிஸ்டுகள் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளான பகுதியினருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு தம்முடன் அவர்களை இட்டுச் செல்ல முடியும் என்று அவர் வாதிட்டார்.

---

* அதே ஆவணக் காப்பகம், பத்திரம் 488, தாள் 2.

பெருந்திரளான மக்களிடம் கம்யூனிஸ்ட் பிரச்சாரம் செய்வது சாத்தியமாகியிருந்தால் கூட அதை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது என்று அப்துர் ராப் பார்க் கருதினார். இதை நிரூபிப்பதற்கு அவர் சில வாதங்களை யும் முன்வைத்தார். முதலாவதாக, ''கம்யூனிஸ்ட் இலட்சி யங்கள் நியாயமானவை'' என்று பெருந்திரளான மக்களை நம்பச் செய்திருக்க முடியாது. ஏனென்றால் இந்தியாவின் பாட்டாளி வர்க்கம் ''மிகவும் அதிகமான அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கியிருக்கிறது... மதம், ஒழுக்கம், சாதிகளை நிராகரித்து பறையனும் பிராமணனும் சம மானவர்கள் என்று போதிக்கின்ற திட்டத்தைக் கொண்ட நபர்களை அவர்கள் பின்பற்ற மாட்டார்கள்''. இரண் டாவதாக, கம்யூனிஸ்ட் பிரச்சாரம் ''சமூகப் புரட்சி யினால் பாதிக்கப்படப் போகின்ற சுதேச மன்னர்கள், பெரிய நிலக்கிழார்கள், ஸ்தல முதலாளி வர்க்கம், குட்டி முதலாளி வர்க்கம் மற்றும் அனைவரையும் ஆங்கிலேயர் களிடம் விரட்டியடிப்பதன் மூலம் அவர்களுக்கே உதவி செய்யும்''. இந்தியாவுக்கு அந்த சமயத்தில் தேசியப் பிரச் சாரம் மட்டுமே பொருத்தமுடையது என்று அப்துர் ராப் பார்க் கருதினார்.

அதே கடிதத்தில் இந்தியப் புரட்சிச் சங்கம் ''சோஷ லிஸ்ட் போக்குகளை பிரகடனப்படுத்தியது'', ஆனால் அவை வெளிப்படுவதற்கு நெடுங்காலமாகும் என்று அப் துர் ராப் பார்க் கூறினார். அவருடைய முடிவுகள் இந்தியா வின் உண்மையான நிலைமைகளைப் பிரதிபலித்த சில அறிவார்ந்த குறிப்புகளைக் கொண்டிருந்தன. கம்யூனிஸ்டு கள் அவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்வது அவசியம்.

எம்.என்.ராய் இந்தியாவில் உடனடியான சோஷலிஸ்ட் புரட்சியை வலியுறுத்தினார். ஆனால் நாட்டில் தேசிய விடுதலைப் புரட்சியைத் தவிர வேறு எதுவும் சாத்தியமல்ல என்று அப்துர் ராப் பார்க் கூறினார்.

இந்தியாவில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வர்க்க உணர்வு உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது, இந்தியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று ராய் கூறினார். அபனி முக்கர்ஜி ஜி.சபாரவுக்கு எழு திய கடிதத்தில் (1921 ஏப்ரல் 27) ராயை ஆதரித்தார்: ''இந்தியாவில் பெருந்திரளான தொழிலாளர்கள் மற்றும்

விவசாயிகள் மீது மதம் ஆதிக்கம் செலுத்திய போதிலும் (மக்களிடம்) செயற்கையாக விதைக்கப்பட்டிருக்கின்ற மதரீதியான தப்பெண்ணங்களை'' அகற்றியதும் (அவ்வளவு சுலபமான காரியம்!—ஆ-ர்) அவர்கள் கம்யூனிஸ்டுகள் தரப்புக்கு வந்து விடுவார்கள். அப்துர் ராப் பார்க் இதற்கு எதிரான கருத்தைக் கூறினார். இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை சொற்பமே, அது விவசாயிகளிடமிருந்து இன்னும் பிரிந்துவிடவில்லை, அது ''பற்பல சாதிகள், மதங்களாகப் பிரிந்திருக்கிறது'', ''சாதி உணர்வு தவிர வர்க்க உணர்வு இன்னும் எற்படவில்லை'' என்று அப்துர் ராப் பார்க் சரியாகக் கூறினார்.

இந்தியாவில் சோஷலிஸ்ட் பாணிப் பிரச்சாரமே சாத்தியம், அவசியம், தேசிய நாட்டுப்பற்றுப் பிரச்சாரத்தை மக்களால் புரிந்து கொள்ள முடியாது; ஏனென்றால் ''இந்தியாவின் இயக்கம்—அதன் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நிலைமைகளினால்—ஆசிய நாடுகளைப் போன்றதாக இல்லாமல் அதிகமான அளவுக்கு ஐரோப்பியத் தன்மை கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. பொருளாதார அடிப்படையில் மட்டுமே இந்திய மக்களை ஒன்றிணைக்க முடியும். கலப்பற்ற தேசியப் பிரச்சாரம் வெற்றியடைய முடியாது''* என்று நிரூபிப்பதற்கு ராய் முயற்சி செய்தார். அப்துர் ராப் பார்க் இக்கருத்தை மறுத்தார், இந்திய மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய ஒரே பிரச்சாரம் முற்றிலும் தேசிய, ஆங்கில எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்; ஏனென்றால் இந்தியப் ''பாட்டாளி வர்க்கம் சமூகப் புரட்சியை விரும்பவில்லை, ஆனால் முதலாளி வர்க்கம் அதன் மீது சுமத்துகின்ற புரட்சியை ஏற்றுக்கொள்ளும்''.

எம்.என்.ராய் மற்றும் அபனி முக்கர்ஜி தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைக்கின்ற சாத்தியத்தை அறவே நீக்கிவிட்டார்கள். ஏனென்றால் அதன் கட்சியாகிய இந்திய தேசிய காங்கிரசை ஒழிப்பதற்கு அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். முக்கர்ஜி 1921 ஏப்ரல் 27ந் தேதியன்று சபாரவுக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரசுக்கு பதிலாக ஒரு புதிய

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கு எம். என். ராய் எழுதிய கடிதம் (1920 அக்டோபர் அல்லது நவம்பர்).

''மத்திய புரட்சிகர தேசியக் கட்சியை'' அமைக்க வேண்டும் என்று கூறினார். ''இந்தியாவின் இன்றைய நிலைமை ஆங்கில அரசாங்கத்துக்கு எதிராகப் பிளக்க முடியாத ஐக்கிய முன்னணியைக் கோருகிறது'', ''பொது விரோதிக்கு எதிராக இன்றைய அரசியல் ஒற்றுமையை... அழிக்கக் கூடிய எதையும் செய்யக் கூடாது''* என்று அப்துர் ராப் பார்க் வாதிட்டார்.

உண்மை என்னவென்றால் எம்.என்.ராய் குட்டி முதலாளி வர்க்க தேசியப் புரட்சிக்காரர்களுடன் கூட ஒத்துழைக்க மறுத்தார், அவர்கள் கம்யூனிஸ்ட் தலைமைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கோரினார். அப்துர் ராப் பார்க் இந்தியப் புரட்சிச் சங்கத்தின் அரசியல், ஸ்தாபன சுதந்திரத்திற்காக வாதாடினார்.

எம்.என். ராயும் அப்துர் ராப் பார்க்கும் ஒரு விஷயத்தில் மட்டுமே ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். அவர்களிருவரும் உலக சோஷலிஸ்ட் புரட்சியில் இந்தியாவின், பொதுவாகக் கிழக்கு நாடுகளின் பாத்திரத்தை அதிகமாக மிகைப்படுத்திப் பேசினார்கள். லெனின் ராயைப் பற்றி இதே கருத்தைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒரு பிரச்சினையில் கருத்து ஒற்றுமை மட்டும் போதாது என்பது இயற்கையே. புரட்சிக் கமிட்டிக்கும் சங்கத்துக்கும் நடவடிக்கையில் ஒற்றுமை ஏற்படவில்லை. ஐரோப்பாவிலிருந்த தேசியப் புரட்சிக்காரர்கள் குழுவிலிருந்த பலர் கம்யூனிஸ்ட் கருத்துக்களை விரும்பினார்கள், மார்க்சியத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள் என்ற போதிலும் அவர்களுடனும் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதைப் பற்றிப் பின்னர் எழுதுவோம்.

இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை இயக்கத்துக்குத் தலைமை வகித்து உழைக்கும் மக்கள் உட்பட இந்திய மக்களின் பல்வேறு பகுதியினரிடமும் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருந்தது. அது முதலாளித்துவ தேசிய, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சி. அந்தக் கட்சியுடனும் தொடர்பு இல்லை. அப்படித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது

---

* அப்துர் ராப் பார்க் 1921 ஜூலை 29ந் தேதியன்று ஜி.வி. சிச்சேரினுக்கு எழுதிய கடிதம்.

எம்.என். ராயின் நோக்கம் அல்ல.என்ன விலை கொடுத் தாகிலும் காங்கிரஸ் புரட்சித்தன்மையற்ற கட்சி என்று நிரூபிப்பதற்கும் கம்யூனிஸ்டுகள் இந்திய மக்களின் விடு தலைப்போராட்டத்துக்கு ''தொடக்கத்திலிருந்தே''(துணை ஆய்வுரை) தலைமை தாங்க வேண்டும் என்று வாதாடுவதற் குமே அவர் பாடுபட்டார்.

தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு களில் ராயும் அபனி முக்கர்ஜியும் அவர்களுடைய சித்தாந்த நிலைகளை மிகத் தீவிரமான முறையில் விமர்சனம் செய் தார்கள், சோஷலிஸ்ட் கோஷங்களை ஆதரித்து வரம்பு மீறிப் பிரச்சாரம் செய்தார்கள். எனவே அவர்கள் ஒத்து ழைப்பதாகப் பேசிய பொழுது அதற்குத் தக்க வரவேற்பு இல்லாதது இயற்கையே.

புரட்சிக் கமிட்டியின் சார்பில் அபனி முக்கர்ஜி 1920 டிசம்பர் 30ந் தேதியன்று காசியிலிருந்த சிவ பிரசாத் குப்தா என்ற இந்திய தேசிய இயக்கத் தலைவருக்கு எழுதிய கடி தம் சுவாரசியமானது. ''தாஷ்கன்டில் வசிக்கும் இந்திய கம்யூனிஸ்டுகள் கட்சிகள், ஸ்தாபனங்கள் மற்றும் தனி நபர்களைக் கொண்ட அகில இந்திய புரட்சிக் காங்கிரசைக் கூட்டுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்... நாங்களும்— கம்யூனிஸ்டுகளும் நீங்களும்—தேசியவாதிகளும் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்குப் பாடுபடுவது அவசியம்'' என்று கடிதம் தொடங்கியது. பிறகு முக்கர்ஜி யாருடன் ஒத்துழைக்கப் போகின்றாரோ அவர்களுடைய கொள்கை நிலைகள் தவறு என்று எடுத்துக்காட்டும் முயற்சி யில் ஆதாரமற்ற வாதங்கள் ஏராளமாகத் தொடர்ந்தன. கடிதத்தைப் பெறுபவருக்குப் பின்வரும் அறிவுரைகள் கூறப்பட்டன: முதலாவதாக, ''இந்தியாவின் இன்றைய நிலைமையில் தேசியப் புரட்சி சாத்தியமல்ல'', இரண்டாவ தாக, ''இத்தகைய தேசியப் புரட்சிகளின் மூலம் இந்தியா வின் புல்லுருவிகள் அல்லது அறிவுஜீவிகள் மற்றும் முத லாளிகள் மட்டுமே லாபமடைவார்கள்'', மூன்றாவதாக, அத்தகைய புரட்சிக்குப் பிறகு ''இந்தியத் தொழிலாளர் கள் இன்றைய தினத்திலிருப்பதைப் போல தொடர்ந்து துன்பமடைவார்கள், ...அது அதிகமாக இருக்காது என்று சொல்ல முடியாது'', மற்றும் நான்காவதாக, அத்தகைய புரட்சி பற்றிய கருத்து ''ஏமாற்றம் மற்றும் துர்ச்சாகச

மாகும்'', இதை நிறைவேற்றினால் இந்திய மக்கள் இரத்தக் களறியான உள்நாட்டு யுத்தத்தில் தள்ளப்படுவார்கள். ஒரே ஒரு புரட்சிதான் இன்றைய நிலைமையில் இந்தியாவுக்குப் பொருத்தமாக இருக்கும், அது ருஷ்யாவில் நடைபெற்றதைப் போல ''தொழிலாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் புரட்சியே'' என்று கடிதத்தை முடித்தார்.

இக்கடிதம் எழுதப்பட்டு அறுபத்தைந்து வருடங்களாகி விட்டன. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் புரட்சிகரமான அவசரத்தை இன்று நாம் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் நேர்மையானவர்கள் கள்ளமில்லாதவர்கள், விட்டுக்கொடுக்காதவர்கள், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்த உறுதியான போராட்டக்காரர்கள்.

அவர்கள் இந்திய யதார்த்தத்தை உள்ளது உள்ளபடியே பார்க்கவில்லை. உள்நாட்டு முதலாளிகளையும் நிலக்கிழார்களையும் ஏகாதிபத்தியத் தலையீட்டுக்காரர்களையும் ஒழித்த ருஷ்ய அக்டோபர் புரட்சியின் வெற்றிகளின் ஒளியில் அதைப் பார்த்தார்கள். அதே போல இந்தியாவிலும் செய்தால் என்ன என்று அவர்கள் சிந்தித்தார்கள். எனவே ஒரே சமயத்தில் சமூக மற்றும் தேசியப் புரட்சி என்ற சொந்த கோஷத்தைக் கொடுத்தார்கள், இந்தியாவில் சோஷலிசம் ஏற்கெனவே முற்றிலும் சாதிக்கப்படக் கூடியதே என்று நிரூபிப்பதற்குப் பாடுபட்டார்கள், தேசிய இயக்கத்தில் தொழிலாளி வர்க்கத் தலைமை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்த அறைகூவினார்கள்.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் முடிவுகள் தவறானவை. ஏனென்றால் அவர்கள் ருஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிருந்த அடிப்படையான வேறுபாடுகளைப் புறக்கணித்துவிட்டு மேலே சொல்லப்பட்ட வளர்ச்சிகளின் மேலெழுந்தவாரியான அம்சத்தை மட்டுமே ஒரு தலையாகக் கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். ருஷ்யா தன்னைப் போன்ற பல தேசிய இனங்களை ஒடுக்கிய ஏகாதிபத்திய அரசு; ஆனால் இந்தியா ஒடுக்கப்பட்ட காலனி நாடு. ருஷ்யா நகரத்திலும் கிராமப்புறங்களிலும் சராசரி முதலாளித்துவ வளர்ச்சியையும் தொழில்துறைக் குவிப்பையும் நீண்ட வரலாற்றை உடைய பாட்டாளி வர்க்கத்தையும் கொண்டிருந்தது (ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் மூன்று புரட்சிகளில் புடம் போட்டு எடுக்கப்பட்டிருந்தது).

இந்தியாவின் கிராமப்பகுதிகளில் முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகள் ஆதிக்கம் செலுத்தி வந்தன, சாதி அமைப்பு ஆழமாக வேரூன்றியிருந்தது, தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் அப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருந்தது, பட்டறைத் தொழிலும் சிறு தொழில்களும் மேலோங்கி யிருந்தன.

ருஷ்யாவில் வரலாற்று நிகழ்ச்சிகளில் சோதிக்கப்பட்ட போல்ஷிவிக் கட்சி இருந்தது; லெனின் அக்கட்சிக்குத் தலைமை தாங்கினார், மக்களில் பெரும்பான்மையினர் அக்கட்சியை ஆதரித்தார்கள். இந்தியாவில் மக்களில் பெரும்பான்மையினர் அகிம்சை வழிப் போராட்டத்தைப் பின்பற்றிய தேசிய முதலாளி வர்க்கக் கட்சியான இந்திய தேசிய காங்கிரசை ஆதரித்தார்கள். கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை மிகவும் சொற்பம்.

மேலே தரப்பட்ட எளிமையான ஒப்பீடு எம்.என்.ராய் மற்றும் அவருடைய ஆதரவாளர்களின் செயல்திட்ட வழி எவ்வளவு பக்குவமில்லாதது என்பதை எடுத்துக்காட்டு வதற்குப் போதுமானது. புறவய ரீதியாக இவர்களின் நாட்டங்கள் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் பரவுவதற்குத் தடையாக இருந்தன, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி தோன்றுவதற்கு இடையூறு விளைவித்தன, அதிசாகச அறைகூவல்களுக்கு இட்டுச் சென்றன, இன்னமும் கடக்காத கட்டங்களைத் தாண்டிச் செல்ல வைத்தன, மக்கள் திரளினரின் அரசியல் சுய உணர்வின் உண்மையான மட்டத்தை அலட்சியப்படுத்தச் செய்தன.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் ருஷ்ய அனுபவத்தை யாந்திரிகமாகப் பின்பற்றியதும், இயக்கவியலுக்கு மாறான முறையில் அதை இரவல் பெற்றதும், தாங்கள் இயங்க வேண்டிய பிரத்யேகமான வரலாற்று நிலைமையையும் குறிப்பிட்ட தேசியச் சூழலையும் புறக்கணித்ததும் அவர்களுடைய ‘‘இடதுசாரிக்’’ கோளாறின் சின்னங்களே.

*1921* ஜனவரி 3ந் தேதியன்று எம்.என். ராயும் அபனி முக்கர்ஜியும் புரட்சிக் கமிட்டியின் சார்பில் மகாத்மா காந்திக்கு ஒரு அதிகார பூர்வமான கடிதத்தை அனுப்பினார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் முடிவுகளையும் கம்யூனிஸ்ட் அகிலம் விடுதலை இயக்கத்தை

ஆதரிக்கத் தயாராக இருப்பதையும் அவருக்குத் தெரிவித்தார்கள். அந்த வருடம் கோடை காலத்தில் அகில இந்தியப் புரட்சிக் காங்கிரஸ் கூட்டப்படுமென்றும் அதில் ''எல்லா குழுக்களையும் ஸ்தாபனங்களையும் ஒன்றுசேர்த்து ஒரு மத்திய புரட்சிகரக் கட்சி அமைக்கப்படுமென்றும்'' அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆனால் மகாத்மா காந்தியைத் தலைவராகக் கொண்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் உண்மையில் அத்தகைய வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சியாக இருந்தது. எனவே புரட்சிக் காங்கிரசுக்கு ''இயன்ற அளவுக்கு அதிகமான பிரதிநிதிகளை'' அனுப்பி வைக்கும்படி ராயும் முக்கர்ஜியும் காந்தியைக் கேட்டுக் கொண்ட பொழுது கட்சி என்ற முறையில் இந்திய தேசிய காங்கிரசைக் கலைக்கும்படி சொல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமையை அது கைவிடுவதற்கு காந்தி ஒத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். காந்தி அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெளிவு.

1921 டிசம்பர் 1இல் சோவியத் ருஷ்யாவில் இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் குழுவின் சார்பில் அகமதாபாதில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் 36வது மாநாட்டுக்கு ஒரு அறிக்கையை அனுப்பினார்கள். சுயராஜ்யம், சுதேசி இயக்கம் என்னும் கோரிக்கைகளில் அடங்கியிருக்கின்ற அவர்களுடைய கொள்கைகள், ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, வெளிநாட்டுச் சரக்குகளை பகிஷ்கரித்தல், இராட்டையை மையமாக வைத்துக் கைத்தொழில் உற்பத்தியை மறுபடியும் ஏற்படுத்துதல் ஆகியவை வாணிகர்கள் மற்றும் தொழிலதிபர்களின் நலன்களை வெளிப்படுத்துகின்றன, எனவே பயனற்றவை; அல்லது பெரும் முக்கியத்துவமுடையவை என்றாலும் நிறைவேற்றப்பட முடியாதவை, ஏனெனில் காங்கிரஸ் நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் உள்ள கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் விருப்பார்வங்களைப் புறக்கணிக்கிறது என்று காங்கிரஸ் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் முக்கியமாக இவர்களுடைய நலன்களை வெளிப்படுத்தும் கட்டாயத்திற்குத்தான் காங்கிரஸ் உள்ளாகியிருந்தது, ஏனென்றால் ''அந்நிய ஆதிக்கம் ஒழிக்கப்படும் என்பது பெருந்திரளான மக்களுக்குப் போதுமான

தூண்டுதலாக இல்லை''. ''சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் மட்டும் என்ன நன்மை ஏற்படப் போகிறது'' என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்* என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த தொழிலாளி வர்க்க மற்றும் விவசாயிகளின் சமூகப் போராட்டமே முதன்மையானது, தேசிய சுதந்திரத்துக்கான இயக்கம் இரண்டாம் நிலையானதே என்று காங்கிரஸ் தலைவர்களுக்கு போதிக்கின்ற முயற்சியாக அறிக்கை இருந்தது. உடைமை பறிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகக் காங்கிரஸ் வரவில்லை என்றால் அது ''உடைமை வர்க்கத்தின் அரசியல் கருவியாகக்'' காலப்போக்கில் மாறிவிடும். இந்தியாவில் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமூகப் புரட்சிக்கு அது தலைமை தாங்க முடியாது.

தேசிய விடுதலை, சமூகப் புரட்சி ஆகிய இரண்டு இயக்கங்களையும் பற்றி ராயின் தவறான அனுமானங்கள்தான் இன்னும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக இருந்தன. மேலும் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களை அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பார்க்கவில்லை, பொருளாதார நலன்களுக்காகத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் சமூகப் போராட்டங்களாகப் பார்த்தார்கள்.

இந்த ஆவணமும் இந்தியாவின் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணியின் அடிப்படையாக இருக்க முடியவில்லை. இது தேசிய முதலாளி வர்க்க கட்சியான காங்கிரசை தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பொருளாதார இயக்கத்துக்குத் தலைமை தாங்கக்கூடிய ஸ்தாபனமாக மாற்றுகின்ற திட்டத்தை முன்வைத்தது. அது யதார்த்தத்துக்குப் புறம்பாக இருந்தது.

எனினும் இந்த அறிக்கை இதற்கு முன்பு எழுதப்பட்ட அறிக்கையிலிருந்து வித்தியாசமானதாக இருந்தது. இந்திய தேசிய காங்கிரசைக் கலைக்க வேண்டும் என்று அது இனியும் சொல்லவில்லை. காங்கிரஸ் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் விசேஷக் கோரிக்கைகளை ஆதரிக்கு

* ''Manifesto to the 36th Indian National Congress, Ahmedabad, 1921", *Documents of the History of the Communist Party of India*, p. 347.

மானால் அது தலைமை தாங்கும் இயக்கம் வெற்றி அடைவது சாத்தியம் என்று ஒத்துக்கொண்டது. மொத்தத்தில் அறிக்கையில் காங்கிரசைப் பற்றிய விமர்சனம் அதிகமாக இருந்தாலும் தேசிய விடுதலை இயக்கத்தின் தீர்மானகரமான சக்தியாகிய உழைக்கும் மக்களின் கோரிக்கைகளைக் காங்கிரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தது சாராம்சத்தில் நியாயமானதே.

அந்த அறிக்கை காங்கிரசின் அகமதாபாத் மாநாடு முடிவடைவதற்குள் போய்ச் சேரவில்லை என்று எம்.என். இகோரவா ஆதாரங்களைக் காட்டி எழுதியிருக்கிறார்.* எனினும் **சியாசாட்** என்ற காங்கிரஸ் இடதுசாரிப் பத்திரிகை 1922இல் அதைப் பிரசுரித்ததுடன் வரவேற்றும் எழுதியது.

ராய்—முக்கர்ஜியின் இடது குறுங்குழுவாத மற்றும் விஞ்ஞானத்துக்குப் புறம்பான அணுகுமுறை ஓரளவுக்குக் குறைந்திருந்த போதிலும் முதல் இந்திய கம்யூனிஸ்டு களைப் பெருந்திரளான மக்களிடமிருந்து நெடுங்காலம் வரை பிரித்து வைத்திருந்தது; நாட்டிலிருந்து வெளியேறிய இந்தியப் புரட்சிக்காரர்களின் பல்வேறு குழுக்கள் பொது வான ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில் ஒன்று சேருவதைத் தடுத்தது.

ராயின் புரட்சிக் கமிட்டிக்கும் அப்துர் ராப் பார்க்கின் இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கும் இடையில் உறவுகள் சீர் கேடடைந்தன. குடியேறிகள் என்ற நிலையைப் பற்றி எப்பொழுதுமே அதிருப்தியோடிருந்த கம்யூனிஸ்டுகள் தம்மை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று அறிவிக்க முடிவு செய்த பொழுது அது குறிப்பாக வெளிப்பட்டது.

## இந்திய கம்யூனிஸ்டுகளின் முதல் அமைப்பு ரீதியான குழு

''மூன்று மாதங்களுக்கு முன்பு நாங்கள் மாஸ்கோவில் இருந்த பொழுது ஆயிரக்கணக்கான இந்தியர்கள் துருக்கிஸ்

---

* டி.எஃப். தெவ்யாத்கினா, எம்.என். இகோரவா, அ.எம். மெல்னிக்கவ், **இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிறப்பு**, மாஸ்கோ, 1978, பக்கங்கள் 157, 175 (ருஷ்ய மொழியில்).

தானுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து அதிகமான மகிழ்ச்சியடைந்தோம்... இந்தியக் குடியேறிகள் புரட்சிகர வேலைக்குத் தகுந்த நபர்களாக இருப்பார்கள் என்று கருதினோம்''* என்று ராய் 1920 டிசம்பரில் கூறினார்.

விரைவில் துருக்கிஸ்தானில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து விட முடியும், அதன் மூலம் காலனி நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்கெனவே இருக்கின்றன, ''கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்குவதும் ஊக்குவிப்பதுமே'' கம்யூனிஸ்ட் அகிலத்தின் ''ஒரே'' அக்கறையாக இருக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தான் கூறியதை மெய்ப்பிக்க முடியும் என்று ராய் கருதினார்.

வி.இ. லெனின் இந்த விஷயத்தை முற்றிலும் வேறு நிலையிலிருந்து பார்த்தார். அவர் கிழக்கு நாடுகளில் வரலாற்றுப் பரிணாமத்தில் உருவாகியுள்ள உண்மையான நிலைமையைத் தனக்கு வழிகாட்டியாகக் கொண்டார். ராய் மற்றும் ''இடது'' கம்யூனிஸ்டுகள் செய்ததைப் போல உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் வழிகாட்டியாகக் கொள்ளவில்லை. லெனின் காலனி நாடுகளில் சுதந்திரமான கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களை அமைக்க வேண்டும் என்று அறைகூவினார். ஆனால் அந்தப் போக்கை செயற்கையான முறையில் துரிதப்படுத்துவதை எதிர்த்தார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் பேரவைக் கூட்டத்தில் பேசுகின்ற பொழுது பின்தங்கிய கீழ்த்திசை நாடுகளில் அந்த சமயத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை அமைப்பது சாத்தியமா என்று அவர் சந்தேகப்பட்டார். ''இந்தப் **பின்தங்கிய நாடுகளில் பாட்டாளிகளின் கட்சிகள்—உண்மையிலேயே உதித்தெழக்கூடுமானால்—**விவசாயிகள் இயக்கத்துடன் திட்டவட்டமான உறவுகளை நிறுவிக் கொள்ளாமல், அதற்குத் திறமான ஆதரவை அளிக்காமல் கம்யூனிஸ்டு

---

* ''துருக்கிஸ்தானில் இந்தியப் புரட்சிக்காரர்கள்—கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோ நடத்திய இந்தியப் புரட்சிக்காரர்கள் மற்றும் குடியேறிகளின் மகாசபைக் கூட்டத்தில் தோழர் ராய் நிகழ்த்திய உரை'' (அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 6).

போர்த்தந்திரங்களையும் கம்யூனிஸ்டுக் கொள்கையையும் கடைப்பிடிக்க முடியும் என்று நம்புவது கற்பனாவாதம் ஆகும்''* என்று லெனின் கூறினார் (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்). ''இந்திய கம்யூனிஸ்டுகள் தம்முடைய நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதில் இன்னும் வெற்றி பெறவில்லை...''** என்று லெனின் சுட்டிக் காட்டினார். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதில் வெற்றியடைந்தால் கூட அது வரையறுத்துச் சொல்ல முடியாத காலம் வரை குறைவான வாய்ப்புகளைக் கொண்ட சிறு கட்சியாகவே இருக்கும்.***

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் லெனினுடைய வாதங்களை மறுக்க முடியாத ராய் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பைத் துரிதப்படுத்துவதன் மூலம் நடைமுறையில் அதை எதிர்ப்பதற்கு முயற்சி செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை விரைவாக அமைத்து விட முடியும் என்ற எண்ணம் ராய்க்கு இரண்டாவது காங்கிரசுக்கு முன்பாக ஏற்பட்டிருக்க வேண்டும். காங்கிரசுக்கு முன்னர் எழுதிய கட்டுரையில் ராய் இரண்டு கருத்துக்களை முன்வைத்தார்: முதலாவதாக, இந்தியாவில் ''பலமான, கட்டுப்பாடுள்ள, மத்தியப்படுத்தப்பட்ட மற்றும் உண்மையாகவே புரட்சிகரமான கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பது முதல் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது'', இரண்டாவதாக, இந்தியாவில் அப்படிப்பட்ட கட்சிக்கு வேண்டிய தொழிலாளர்கள் ''மிக அதிகமான'' எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.**** தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றிய கமிஷன் கூட்டத்தில் ''பலமான

---

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 74.

** கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தி ஏடு, இதழ் 1, பக்கம் 2 (ருஷ்ய மொழியில்).

*** வி.இ. லெனினின் இக்கூற்றை அ. ரோஸ்மெர் கூறுகிறார். அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் கிழக்கத்திய கமிஷனில் லெனினுக்கும் ராய்க்கும் இடையே விவாதம் நடந்த போது இவர் கூட இருந்தார்.

**** கம்யூனிஸ்ட் அகிலம், இதழ் 12, 1920, பக்கங்கள் 2170—2171 (ருஷ்ய மொழியில்).

கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கு அவசியமான சக்திகள் இருக்கின்றன''* என்று ராய் உறுதியளித்தார்.

நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முடிவடைந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஆகஸ்ட் 9ந் தேதியன்று இந்தியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கும், தனியாக பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசிக்கும் கடிதம் எழுதினார்கள்.

கிரேட் பிரிட்டனில் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைத்திருப்பதைப் பற்றி அந்த நாட்டின் உழைக்கும் மக்களைப் பாராட்டிய பிறகு ''இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைத் துரிதமாக அமைப்பது அவசியம்'' என்று வலியுறுத்தினார்கள், ''அமைக்கப்பட்ட செய்தியை விரைவிலேயே தெரிவிக்க இயலும்'' என்ற நம்பிக்கையை வெளியிட்டார்கள். இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் முதலில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் குழுக்களை அமைக்காமல், சோவியத் துருக்கிஸ்தானுக்கு வந்திருந்த சொற்ப எண்ணிக்கையைக் கொண்ட இந்தியர்கள் மத்தியில் தொடர்ச்சியான பிரச்சார வேலைகளைச் செய்யாமல், மற்ற நாடுகளில் மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களுடன் தம்முடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துக் கொள்ளாமல் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிரகடனம் செய்வதற்கு, அதாவது முடிவிலிருந்து தொடங்குவதற்கு விரும்பினார்கள்.

எனினும் உடனடியாகக் கட்சியை அமைப்பதைப் பற்றிய பிரச்சினையில் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு இடையில் கருத்து வேற்றுமை இருந்தது. ராய் அவசரப்பட்டார். இரண்டாவது காங்கிரஸ் முடிவடைந்தவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டு விட்டதென்று அறிவிப்பதற்குத் துடித்தார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கு 1921 செப்டெம்பர் முதல் தேதியன்று எழுதிய கடிதத்தில் ''இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கும் வேலை துல்லியமாக ஒரு வருடத்துக்கு முன்பு செப்டெம்பரில் தொடங்கியது'' என்று ராய் தெரிவித்

---

* கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் செய்தி ஏடு, இதழ் 1, பக்கம் 1 (ருஷ்ய மொழியில்).

தார். நான் முன்னர் சுட்டிக் காட்டியதைப் போல 1920 ஆகஸ்டில் மாஸ்கோவிலேயே அமைப்பு வேலை தொடங்கி விட்டதாகவும் கூறலாம். பக்குவமில்லாத இந்திய கம்யூனிஸ்டுகள் நால்வர் (ராயின் அமெரிக்க மனைவி எவலின் டிரென்ட் ராயைச் சேர்த்துக் கொண்டால் ஐந்து நபர்கள்) அங்கே அந்த சமயத்தில் கூடியிருந்தார்கள். அவர்கள் முழு சித்தாந்த ஒற்றுமையையும் மார்க்சியத் தத்துவஞானத்தில் அவசியமான தரத்தையும் இன்னும் அடையவில்லை; அவர்களால் அடைந்திருக்கவும் முடியாது.

திருமலாச்சார்யா வேறொரு கருத்தைக் கொண்டிருந்தார். 1921 ஜனவரி 30ந் தேதியன்று அவர் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாக கமிட்டிக்குப் பின்வருமாறு எழுதினார்: ''தோழர் ராய் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய ஆலோசனையை முன்வைத்த பொழுது தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்கின்ற வெவ்வேறு விதமான நபர்களைக் கொண்டு கட்சியை அமைப்பதைக் காட்டிலும் அந்தப் பெயரில் ஒரு கட்சி இல்லாதிருப்பது மிகவும் சிறப்பானது (கம்யூனிசத்தைப் புரிந்து கொண்டு உணர்வு பூர்வமாக இதற்காகப் போராடக் கூடிய நல்ல, கட்டுப்பாடுள்ள ஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பது இயலாவிடில்) என்று நான் தெளிவாகவும் பகிரங்கமாகவும் கூறினேன்''.

இந்தியக் குழுவைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் அநேகமாக ராயை ஆதரித்திருக்க வேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை ''அமைக்கின்ற'' வேலை தொடர்ந்தது. தாஷ்கன்டில் இந்த வேலையை முடிப்பதென்று முடிவு செய்தார்கள். அங்கேயுள்ள இந்தியர்களில் பலர் சேர விரும்புவார்கள் என்று எதிர்பார்த்திருக்க வேண்டும்.

ராயும் அவர் குழுவினரும் 1920 அக்டோபர் முதல் தேதியன்று தாஷ்கன்டுக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிகிறது. கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பது சிக்கலான வேலை; தாஷ்கன்டில் அது இன்னும் அதிகச் சிக்கலான பிரச்சினையாக இருந்தது. அங்கே இருந்தவர்களில் பெரும்பான்மையினர் கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த இளம் தேசியப் புரட்சிக்காரர்கள். அவர்கள் மத்தியில் தொழிலாளி வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் அநேகமாக இல்லை. நிலம் வைத்திருந்த விவசாயக் குடும்பங்களிலிருந்தும் நகரக் குட்டி

முதலாளி வர்க்கத்திலிருந்தும் வந்தவர்களே அதிகமாக இருந்தார்கள். பெரும்பான்மையானவர்கள் அப்பொழுது தான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தொடங்கி யிருந்தார்கள்; அந்த நடவடிக்கைகள் நாட்டுப் பற்றுள்ள தேசியவாதத்துக்கும் தீவிர இஸ்லாம் ஆதரவுக்கும் அப் பால் போகவில்லை. தாஷ்கன்டில் இருந்த உண்மையான நிலைமை ராய்க்கு அதிகமான ஏமாற்றத்தைக் கொடுத்த படியால் அவர்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாத் திரத்தை ஒத்துக்கொள்வதற்குக்கூட அவர் விரும்பவில்லை. 1921 ஜனவரியில் புரட்சிக் கமிட்டியின் அதிகாரபூர்வமான அறிக்கையில் அவர் பின்வருமாறு எழுதினார்: ''இந்தியா விலிருந்து வந்திருக்கின்ற கிலாபத் யாத்திரிகர்கள் அனைவரி டமும் மிகவும் ஆரம்ப அரசியல் உணர்வுகூட இல்லை. அவர் களிடம் எவ்விதமான தேசிய அல்லது புரட்சிகர உணர்ச்சி களும் கிடையாது. இந்தியாவுக்காக அல்ல, இஸ்லாமுக் காகப் போராடுவதற்கே வந்திருக்கிறோம் என்று அவர்கள் பகிரங்கமாகக் கூறுகிறார்கள்.''*

இது அகநிலையான மதிப்பீடே, நேர்மையான மதிப் பீடு அல்ல என்பது தெளிவு. அது யாரைப் பற்றியெல்லாம் ராய் எழுதினாரோ அவர்களை சித்தரித்ததை விட ராயை அவருடைய குறுகிய கண்ணோட்டத்தையும் தேசியப் புரட்சிக்காரர்களுடன் கூட்டு சேர அவரால் இயலாததை யும் சித்தரித்தது.

ராயும் அவருடைய குழுவினரும் இந்தியர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்கள். தேசியப் புரட்சி உண்மையான புரட்சி அல்ல என்று இந்தியர்களை நம்பச் செய்வது அவர்களுடைய முக்கியமான நோக்கமாக இருந் தது. ''நான் அவர்களிடம் கம்யூனிசத்தைப் பற்றிப் பேசவே இல்லை. நாட்டிலிருந்து பிரிட்டிஷ்காரர்களை விரட்டிய பிறகு அந்நிய சுரண்டல்காரர்களின் இடத்தில் சுதேசி சுரண்டல்காரர்கள் உட்காருவதென்றால் அது புரட்சியே அல்ல என்று அவர்களிடம் எடுத்துக் கூறினேன். புரட்சியின் சமூக முக்கியத்துவத்தை, புரட்சி பலனளிக்க வேண்டு மென்றால்... அது கம்யூனிஸ்ட் புரட்சியாக இருக்க வேண்

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 1.

டும் என்பதை நான் அவர்களுக்கு விளக்க வேண்டியிருந்தது''* என்று ராய் தன்னுடைய பிரச்சார முறையைப் பற்றி பிற்காலத்தில் எழுதினார்.

''சுதேசிச் சுரண்டல்காரர்கள்'' ஆங்கிலேயர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களல்ல என்பது உண்மையே: ஆனால் அந்நியச் சுரண்டல்காரர்களை அகற்றாமல் இவர்களை ஒதுக்கிவிட்டு சோஷலிசத்துக்கு முன்னேற முடியுமா? உழைக்கும் மக்களுடைய அறிவு மட்டம், அரசியல் ஸ்தாபன வளர்ச்சி, தம்முடைய வர்க்கநிலை மற்றும் பாத்திரத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கின்ற அளவு ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது புரட்சியின் இரண்டு வெவ்வேறு கட்டங்களுக்குப் பொருத்தமான இரண்டு வெவ்வேறு பிரச்சினைகளை ஒரே சமயத்தில் அவர்கள் தீர்க்க முடியுமா? அக்காலத்தில் இந்தியாவின் யதார்த்தங்கள் புரட்சியின் இரண்டு கட்டங்களையும் இணைக்கின்ற வாய்ப்பைத் தந்தனவா? அதாவது ருஷ்யாவைப் போல 1920ம் வருடத்தில் இந்தியா முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாராக இருந்ததா அல்லது சோஷலிஸ்ட் புரட்சியாக வேகமாக வளர்ச்சியடைகின்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பக்குவமடைந்திருந்ததா?இந்தியாவில் இந்த வாய்ப்புகள் சிறிதும் இல்லை. எனவே ராய் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் தயாரித்த திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமாக இருக்கவில்லை.

கம்யூனிச ஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பது சம்பந்தமான பிரச்சாரப் பணி—இது சாராம்சத்தில் சரியானது, அவசியமானது—இங்கே தேசியப் புரட்சிக்காரர்களின் அரசியல் நாட்டங்களுக்கு எதிரானதாக இருந்தது, இவர்களின் லட்சியங்களுக்குப் பெரும்பாலும் இழுக்கேற்படுத்தியது, இது முற்றிலும் அனுமதிக்கத் தகாததாய் இருந்தது.

இந்தியக் குடியேறிகளில் சிறுபான்மையினர் மட்டுமே ராயின் பிரச்சாரத்தைத் தாங்கிக் கொண்டார்கள். பெரும்பான்மையினருக்கு அது ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவர்

* *M. N. Roy's Memoirs*, p. 464.

கள் ஆயுதங்களை ஏந்திப் போராடுவதற்குத் தயாராக இருந்த இலட்சியம், பிறந்த நாட்டிலிருந்து வெளியேறி பல துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமாக இருந்த இலட்சியம் பொருளற்றது அல்லது இந்திய மக்களில் பெரும்பான்மையினருக்கு அவசியமில்லாதது என்று சொல்லப்பட்ட பொழுது அவர்கள் எரிச்சலடைந்தது இயற்கையே.

இந்தியாவின் விடுதலைப் போராட்டப் பேரெழுச்சியில் உத்வேகம் பெற்று தம்முடைய சொந்த நடவடிக்கைகளால் அது மேலும் ஓங்கி வெற்றி பெற வேண்டுமென்று பாடுபட்டவர்கள் மனப்பூர்வமாக ராயின் கருத்துக்களுக்கு எதிராக நின்றனர். இந்தியக் குடியேறிகளில் பலர் மதப் பற்றினாலும் பழக்கவழக்கங்களினாலும் கட்டுப்படுத்தப் பட்டிருந்தபடியால் அவர்களுடைய மனோபாவத்தை நாம் புறக்கணிக்க முடியாது. தேசியக் கருத்துக்களை முற்றிலும் ஏளனம் செய்வதும் கம்யூனிசக் கோட்பாடுகளை அவற்றுக்கு எதிராக வைப்பதும் சாராம்சத்தில் தவறானது, செயல்முறைத் தந்திர நோக்கங்களில் பார்த்தால் பொருளற்றது.

இந்திய கம்யூனிஸ்டுகள் வரலாறு, பொருளாதாரம், தொழிலாளி வர்க்க இயக்கம் மற்றும் சோஷலிசத்தின் பிரச்சினைகளைப் பற்றி தாஷ்கன்டில் மூன்று வார வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்த பொழுது அவற்றில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் வரவில்லை. ''அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூக விஞ்ஞான அறிவு தங்கள் மதத்துக்கு விரோதமானது என்று இந்தியக் குடியேறிகள் பலர் கருதியது இவ்வகுப்புகள் பகுதியளவுக்குத் தோல்வியடைந்ததற்குக் காரணம்; அவர்கள் மொழி வகுப்புகளில் பங்கெடுத்தார்கள், இந்த வகுப்புகளுக்கு வரவில்லை'' என்று புரட்சிக் கமிட்டியின் வேலை அறிக்கை கூறியது.

பெருந்திரளான மக்கள் சில கடமைகளை நிறைவேற்றுவதற்கு இன்னும் பக்குவமடையாத நிலையில் அவற்றை அவர்கள் மீது சுமத்துவதை வி.இ. லெனின் எப்பொழுதுமே கண்டனம் செய்தார். நாட்டுப்புறத்தில் உடனடியாக கம்யூனிசத்தை அமுலாக்கும் முன்யோசனையற்ற லட்சியத்தை முன்வைக்க முடியாது என்று அவர் 1923 ஜனவரியில் பொருள் பொதிந்த முறையில் கூறினார்: ''கம்யூனிசத்

துக்குத் தேவையான பொருளாயத அடித்தளம் நமது கிராமப்புறங்களில் இல்லாதவரை, இதைச் செய்வது கம்யூனிசத்துக்குத் தீங்கிழைப்பதாகவே இருக்கும், உண்மையில் பேராபத்து விளைவிப்பதாகவே இருக்கும் என்றே கூற வேண்டும்.''*

இந்தியக் குடியேறிகளுடன் சேர்ந்து வேலை செய்த சில சோவியத் நபர்கள் லெனின் கூற்று நடைமுறையில் நிரூபிக்கப்படுவதைக் கண்டார்கள். உதாரணமாக 1920 டிசம்பர் முதல் தேதியன்று எம். ஷூல்மன் பின்வருமாறு எழுதினார்: ''இங்கே (இந்தியக் குடியேறிகள் மத்தியில்—ஆ-ர்) அல்லது இந்தியாவில் கலப்பற்ற கம்யூனிஸ்ட் பிரச்சாரம் செய்ய இயலாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே... (முதலில்) பெருந்திரளான மக்களுடைய சிந்தனை முறை, மனோபாவம், பழக்கவழக்கங்கள், மரபுகள் மற்றும் மதத்துக்குப் பொருந்துகின்ற முறையில் அவர்களுக்கு அரசியல் கல்வி அளிக்கப்பட வேண்டும்.''

எம்.என். ராயோ அல்லது அவரைப் பின்பற்றிய முதல் இந்திய கம்யூனிஸ்டுகளோ இதை உணரவில்லை. இந்தியர்கள் சோஷலிஸ்ட் புரட்சியை நடத்த வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்; ஆனால் இந்தியர்களில் பலருக்கு சோஷலிசம் என்றால் என்ன, அது இஸ்லாமைக் காட்டிலும் சிறப்பானது என்று ஏன் சொல்ல வேண்டும் என்பது தெரியாது. எனவே கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சி மாஸ்கோவிலிருந்த பொழுது எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவான பலனையே கொடுத்தது.

ராய் தாஷ்கன்டில் 1920 அக்டோபர் 17ந் தேதியன்று இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கூட்டத்தைக் கூட்டினார்; அதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். எம்.என். ராய், எவலின் டிரென்ட் ராய், அபனி முக்கர்ஜி, சோவியத் பிரஜையாக இருந்த அவரது மனைவி ரோஸா ஃபிட்டிங்ஹாப், முகம்மது அலி, முகம்மது ஷாபிக் மற்றும் திருமலாச்சார்யா கட்சியின் உறுப்பினர்கள். முகம்மது ஷாபிக் செயலாளராகத் தேர்ந்

* வி.இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 12, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 289.

தெடுக்கப்பட்டார்.* இக்கட்சி ''மூன்றாவது அகிலம் பிரகடனம் செய்திருக்கின்ற கோட்பாடுகளை ஏற்றுக்கொள்கிறது, இந்திய நிலைமைகளுக்குப் பொருத்தமான செயல் திட்டத்தைத் தயாரிக்கும்'' என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த வருடத்தின் இறுதியில் மூன்று நபர்களைக் கொண்ட கட்சியின் செயற்குழு அமைக்கப்பட்டது என்ற விவரத்தை 1920 டிசம்பர் 15ந் தேதிக் கூட்டத்தின் பதிவேட்டில் காண்கிறோம்: திருமலாச்சார்யா—இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் தலைவர், முகம்மது ஷாபிக்—செயலாளர் மற்றும் ராய்—மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்.**

புதிதாக அமைக்கப்பட்ட ''கட்சி'' இரண்டாவது காங்கிரசில் கலந்து கொண்ட அதே ஐந்து இந்தியக் கம்யூனிஸ்டுகளைக் கொண்டிருந்தது. முகம்மது அலி, ரோஸா ஃபிட்டிங்ஹாப் என்ற இரண்டு நபர்கள் மட்டுமே புதியவர்கள். துருக்கிஸ்தானில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பை அதிகாரபூர்வமாகப் பதிவு செய்து கொள்வதென்று சிறிது காலதாமதத்துக்குப் பிறகு, அதாவது டிசம்பர் 15ம் தேதி கூட்டத்தில்தான் முடிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதே. கட்சியின் அமைப்பைத் தெரிவிக்கின்ற அதிகாரபூர்வமான கடிதம் துருக்கிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு டிசம்பர் 20ந் தேதியன்று,*** அதாவது கட்சி நிறுவப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பிறகு அனுப்பப்பட்டது. கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை சிறிதளவாவது அதிகரித்த பிறகு கடிதத்தை அனுப்ப விரும்பியதால் இக்காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம்.

டிசம்பர் 15ந் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில்

---

* உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசின் கட்சி ஆவணக் காப்பகம், தொகுப்பு 60, பட்டியல் 1, பத்திரம் 194, தாள் 2.

** அதே பத்திரம், தாள் 1. பிந்திய கட்டத்தில் ராய்க்கும் திருமலாச்சார்யாவுக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்த பொழுது திருமலாச்சார்யாவுக்கு பதிலாக அபனி முக்கர்ஜி செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். (Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 34.)

*** அதே பத்திரம், தாள் 3.

அப்துர் காதிர் ஸஹ்ரை, முகம்மது அலிஷா காஜி, அக்பர் ஷா ஆகிய மூவரைத் தேர்வுநிலை உறுப்பினர்களாகச் சேர்ப்ப தென்று முடிவு செய்யப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு இன்னும் மூவர் தேர்வுநிலை உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். ''நாங்கள் பதின்மூன்று உறுப்பினர் களைக் கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத் திருக்கிறோம்'' என்று அபனி முக்கர்ஜி சிவ பிரசாத் குப்தா வுக்கு 1920 டிசம்பர் 30ந் தேதியன்று எழுதிய கடிதத்தில் தெரிவித்தார். அதற்குப் பிறகுதான் இந்திய கம்யூனிஸ்டு கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பதிவு செய்வதென்று முடிவு செய்தார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்திருப்பதைப் பற் றிய அறிவிப்பு கம்யூனிஸ்ட் அகிலத்துக்கும் உடனடியாக அனுப்பப்படவில்லை. இந்திய கம்யூனிஸ்டுகள் 1920 அக் டோபர் 17ந் தேதியன்று நடத்திய முதல் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பில் 5வது பாராவில் ''இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சி அமைப்பைப் பற்றிய அறிவிப்பு கட்சியின் செயல்திட்டம் தயாரானவுடன் மூன்றாவது அகிலத்துக்கு அனுப்பப்படும்'' என்று குறிப்பிடப்பட்டது. எனினும் அச்சம யத்தில் செயல்திட்டத்தைத் தயாரிக்க முடியவில்லை. 1921 ஜனவரி 2ந் தேதி கூட்டத்தில் அபனி முக்கர்ஜி தயாரித்த செயல்திட்டம் விவாதிக்கப்பட்டு எம். என். ராய் வற்பு றுத்தியதன் பேரில் அது நிராகரிக்கப்பட்டது. அந்த சம யத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் தாஷ்கன்டிலிருந்த இந்திய கம்யூனிஸ்டுகளை ஒரு குழு என்ற அளவில் மட்டுமே அங்கீ கரித்தது.

மேலே எழுதப்பட்ட விவரங்கள் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி லெனின் செய்த எச்சரிக்கை எவ்வளவு சரியானது என்று எடுத்துக்காட்டின. ராயின் இடது குறுங்குழுவாத நடவடிக்கை அப்பாதை யிலிருந்த இயற்கையான தடைகளை அகற்றுவதற்கு பதிலாக இன்னும் அதிகமான தடைகளை ஏற்படுத்தியது. இந்தியா வின் முதல் கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் கதை லெனினு டைய தீர்க்கதரிசனத்தையும் ராயின் தவறுகளையும் நிரு பித்த படியால் ராய் பிற்காலத்தில் எழுதிய புத்தகத்தில்

உண்மையை மட்டுமல்லாமல் 1920—1921ம் வருடங்களில் தான் செய்த மதிப்பீடுகளையும் திரித்துக் கூறியிருக்கிறார்.

இந்தியக் குடியேறிகளில் ஒருவரிடமாவது ''மிகவும் ஆரம்ப நிலையான'' அரசியல் உணர்வுகூட இல்லை, எனவே கம்யூனிஸ்ட் உணர்வைப் பற்றிப் பேச்சே இல்லை என்று ராய் 1921 ஜனவரியில் புரட்சிக் கமிட்டியின் அறிக்கையில் எழுதியதை நாம் நினைவுபடுத்திக் கொள்வோம். அவர் களுக்கு அரசியல் கல்வி அளிப்பதிலும் கம்யூனிஸ்ட் ஸ்தாப னத்தை அமைப்பதிலும் பெரிய கஷ்டங்களைச் சமாளித் திருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக ராய் உண்மை யைத் திரித்துக் கூறினார். ஆனால் சில பத்தாண்டுகளுக்குப் பிறகு லெனினுடைய கருத்துக்கு மாறான தன்னுடைய அவசரமான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக அவர் மறுபடியும் பொய்களை எழுதினார்.

''தாஷ்கன்டிலிருந்த இந்தியக் குடியேறிகளில் கல்விகற் றிருந்த சிறுபான்மையினர் மத்தியில் என்னுடைய வேலை எதிர்பார்த்ததைக் காட்டிலும் — நான் விரும்பியதைக் காட்டிலும் கூட — அதிகமான பலனைக் கொடுத்தது'' என்று அவர் எழுதினார். இதனால் அவர்களில் பெரும் பாலோர் எந்த வெறியோடு இஸ்லாம் மீது பற்றுதல் வைத் திருந்தார்களோ அதே வெறியோடு கம்யூனிசத்தின் மீது பற்று செலுத்தத் தொடங்கினார்கள். அவர்களில் சிலர் ''என்னிடம் வந்து தாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர விரும்புவதாகக் கூறினார்கள். மற்றவர்கள் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியை நாம் ஏன் உடனே அமைக்கக் கூடாது என்று கேட்டார்கள்'' என்று ராய் எழுதினார்.

அவர்கள் உடனே கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க வேண்டும் என்று உறுதி கொண்டிருந்ததாகவும் ''இந்த விஷயத்தில் அவசரப்படக் கூடாது, நீங்கள் இந்தியா வுக்குத் திரும்புகின்ற வரை பொறுக்க வேண்டும்; நாட்டை விட்டு வந்த சில தனிநபர்கள் கம்யூனிஸ்ட் கட்சி என்று தம்மைச் சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை'' என்று அவர்களிடம் வாதாடியதாகவும் ராய் எழுதியிருப்பதைப் படிக் கும் பொழுது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. ஆனால் அவர் கள் பிடிவாதமுடையவர்கள், எனவே இனியும் மறுத்தால் அவர்கள் ''மனங்குலைந்து விடுவார்களே'' என்ற கவலை தனக்கு ஏற்பட்டதாக ராய் தொடர்ந்து எழுதினார்.

''எனவே கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க வேண்டும் என்ற முன்மொழிவை நான் ஏற்றுக்கொண்டேன்''* என்று ராய் முடிக்கிறார். அந்த நபர்களின் பெயர்களை ராய் குறிப்பிடாததைப் பற்றி நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஏனென்றால் இது அவருடைய கற்பனை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டதைப் பற்றிய உண்மையான நிலைமையை அதே ராய் 1921 ஜனவரியில் இந்தியப் புரட்சிக் கமிட்டியின் அறிக்கையில் எழுதியிருக்கிறார்: ''தாஷ்கன்டிலிருந்த கம்யூனிஸ்டுகள் (மொத்தம் ஏழு நபர்கள்) தங்களுடைய கோட்பாடுகள் மற்றும் **ஐரோப்பியக் கம்யூனிஸ்டுகளுடன் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட திட்டத்தைப்** பின்பற்றி 1920 அக்டோபர் 17ந் தேதியன்று தம்மை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக அமைத்துக் கொண்டார்கள்.** (அழுத்தம் என்னுடையது.—ஆ-ர்.) பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுடைய ஒத்துழைப்புடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கான திட்டங்கள் மாஸ்கோவில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் பொழுது அல்லது அது முடிந்தவுடன், அதாவது ராய் தாஷ்கன்டிலிருந்த முஜாகிர்களைச் சந்திப்பதற்கு முன்பே திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று தன்னை அறிவித்துக் கொண்ட முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழுவில் ஒரு முஜாகிர் கூட இல்லை என்பதைப் பார்க்க முடியும். ஏழு பேர்களைக் கொண்ட கட்சியில் முகம்மது அலி, முகம்மது ஷாபிக் சித்தி ஆகிய இருவர்தான் முன்பு முஸ்லிம்களாக இருந்தவர்கள். ஆனால் அவர்கள் கூட இந்தியத் தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளாக தாஷ்கன்டுக்கு வந்தவர்கள்; முஸ்லிம் இயக்கம் என்ற முறையில் நாட்டைத் துறந்தவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. முஜாகிர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை உடனே அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள் என்று ராய் எழுதியிருப்பது உண்மையாக இருந்தால் முதல் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏழு நபர்களல்ல—பல மடங்கானவர்கள் இருந்திருப்பார்

---

* *M. N. Roy's Memoirs*, p. 464.

** அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள் 2.

கள். ஏனென்றால் அந்த சமயத்தில் தாஷ்கன்டில் நூற்றுக் கணக்கான இந்தியக் குடியேறிகள் இருந்தார்கள். முக்கிய மான முஜாகிர்களான ஷௌகத் உஸ்மானி மற்றும் ரபீக் அகமது 1921இல் மாஸ்கோவிலிருந்த பொழுதுதான் கம்யூ னிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்கள். ஏனென்றால் அதற்கு முன்பு கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவதற்கு அவர்கள் தயா ராக இருக்கவில்லை. தாஷ்கன்டில் தங்களுடைய சகாக்கள் கம்யூனிஸ்ட் கட்சியை உடனே அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியதாக அவர்களில் ஒருவரேனும் பிற்காலத்தில் தம்முடைய நினைவுக் குறிப்புகளில் எழுதவில்லை. சோவியத் துருக்கிஸ்தானிலிருந்த இந்தியக் குடியேறிகளில் பெரும்பான்மையானவர்கள் மதப்பற்று மிக்கவர்கள்; அது அவர்கள் மார்க்சியத்தை ஏற்றுக்கொள்வதைத் தடுத்தது. குறிப்பாக, அவர்கள் தாஷ்கன்டிலிருந்த இந்தியக் கம்யூ னிஸ்ட் குழுவில் சேராதபடிச் செய்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை பிரகடனம் செய்வதற்கு மாஸ்கோவிலிருந்த சமயத்திலேயே ராய் முழு அளவில் தயாரிப்புகளைத் தொடங்கியிருந்தார்; தாஷ்கன்டில் அவ் வேலைகளைத் தீவிரப்படுத்தினார். கம்யூனிஸ்ட் ஸ்தாப னத்தைக் கட்டுகின்ற முயற்சியில் குடியேறிகள் மீது ராய் அனுமதிக்கப்பட முடியாத நிர்ப்பந்தங்களைச் செய்தார் என்று அந்த சமயத்தில் பல இந்தியர்கள் அவர் மீது குற்றம் சாட்டியதற்குக் காரணமுண்டு. உதாரணமாக, இந்தியப் புரட்சிக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் ராய் 1920 டிசம்பர் 3ந் தேதியன்று பயன்மிகு உழைப்பில் ஈடுபட மறுத்ததற்காக இந்தியர்கள் குழு ஒன்றுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதை நிறுத்தி வைத்தார். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும்படி செய்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கூற முடியாது. ஆனால் குடியேறிகள் மத்தியில் பிணக்குகள் சகஜமாக இருந்த சூழ் நிலையில் இந்த நடவடிக்கைக்கு இத்தகைய நோக்கம் கற்பிக்கப்பட்டது. உதாரணமாக, எம். ஷூல்மன் பின் வருமாறு எழுதினார்: ''தாஷ்கன்டிலிருந்த குடியேறிகளைப் பொறுத்த மட்டில் ஒரு தவறு செய்யப்பட்டுவிட்டது. அவர் கள் மீது கம்யூனிசம் திணிக்கப்படுவதாக, சலுகைகள் உள்ள கம்யூனிஸ்டுகள் என்றும் புண்படுத்தப்படுகின்ற கம் யூனிஸ்ட் அல்லாதவர்கள் என்றும் அவர்கள் பிரிக்கப்படு

வதாகக் கூறினார்கள்.'' ராயின் இடது குறுங்குழுவாதப் பிரச்சாரம் பெருந்திரளானவர்களைக் கவரவில்லை, அவர்களை விரட்டியது என்று ஷூல்மன் சரியாகக் கூறினார்.

எம்.என்.ராய் குடியேறிகளைப் பற்றித் தவறான அணுகுமுறையைக் கடைப்பிடித்ததாக அப்துர் ராப் பார்க் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் குறிப்பிட்டிருக்கிறார். 1920 டிசம்பர் 5ந் தேதியிட்ட இந்தியப் புரட்சிச் சங்கத்தின் ஆவணம் பின்வருமாறு கூறியது: ''மருத்துவ நிலைய ஊழியர்களாக சேவை செய்ய வேண்டும் அல்லது கம்யூனிஸ்டுகளாக வேண்டும் என்று பெரும்பான்மையான இந்தியர்கள் வற்புறுத்தப்பட்டனர். இது சிறிதும் அவசியமற்றது... நாங்கள் கம்யூனிசத்துக்கு எதிரானவர்கள் அல்ல. நாங்கள் கம்யூனிஸ்ட் புரட்சிக்காரரையும் வெறும் புரட்சிக்காரரையும் வேறுபடுத்தவில்லை. (கம்யூனிசத்துக்கு) பலவந்தமாக மாற்றுவதையே நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் கருத்துக்களை மதிக்கிறோம். எனவே பலாத்காரத்தை உபயோகிப்பதை ஆட்சேபிக்கிறோம். தோழர் ராய் 3ந் தேதியிலிருந்து இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கும் இந்தியக் குடியேறிகளுக்கும் உணவுப் பொருள்கள் வழங்குவதை நிறுத்திவிட்டார்'' (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.).

புரட்சிக் கமிட்டிக்கும் சங்கத்துக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்தன. 1920 டிசம்பர் 31இல் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் துருக்கிஸ்தான் பீரோ மற்றும் துருக்கிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் செயற்குழுவின் கூட்டுக் கூட்டத்தில் இரண்டு அமைப்புக்களுக்கும் இடையிலுள்ள உறவுகள் விவாதிக்கப்பட்டன. ''இந்தியக் குடியேறிகளின் மத்தியிலான வேலை முறைகளைப் பற்றி எழுந்த வேறுபாடுகளின் அடிப்படையில்'' மோதல்கள் ஏற்பட்டன என்று நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கட்சி ஸ்தாபனத்தில் சேரும்படி குடியேறிகளை நிர்ப்பந்தித்ததாக அக்கூட்டத்தில் திருமலாச்சார்யா ராயைக் குற்றம் சாட்டினார். ''இங்கே கம்யூனிசம் கற்பிக்கப்படும் என்று இந்தியர்களிடம் சொல்ல வேண்டும். ஆனால் அவர்களை பலவந்தமாகக் கட்சியில் சேர்க்கக் கூடாது'' என்று அவர் கூறினார். எம்.என்.ராய் ''இந்தியர்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து விட்டபடியால்... புரட்சிக்

கமிட்டிப் பொறுப்பிலிருந்து அவரை நீக்க வேண்டும்''* என்று அவர் கோரினார்.

சண்டையிட்டுக் கொண்டிருந்த குழுக்களுக்கு இடையில் சமரசம் ஏற்படுத்துவதற்குச் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் உதவியுடன் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு... புரட்சிக் கமிட்டியின் உறுப்பினர்கள்... இயன்றவரை சீக்கிரமாக மாஸ்கோவுக்குப் புறப்பட வேண்டும்''** என்று சிபாரிசு செய்யப்பட்டது. 1921 ஜனவரி ஆரம்பத்தில் எம்.என்.ராயும், பிறகு திருமலாச்சார்யாவும் அப்துர் ராப் பார்க்கும் மாஸ்கோவுக்குச் சென்றனர்.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட்குழு இந்தியர்களின் விவகாரங்களை ஆராய்வதில் சில மாதங்களை செலவிட்டது. கார்ல் ஷ்டைன்கர்ட், கன்ஸ்தன்தீன் ஸெத்கின், கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் பிரதிநிதியாகிய யா. க. பேட்டர்ஸ் ஆகியோரடங்கிய கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் விசேஷக் குழு நேரில் விசாரணை நடத்துவதற்காக 1921 மார்ச்சில் தாஷ்கன்டுக்கு வந்தது. விசேஷக் குழு மார்ச் 14ந் தேதியன்று மாஸ்கோவுக்கு தன் முடிவை அனுப்பியது. கொள்கை வேறுபாடுகளும் தனிப்பட்ட உறவுகளில் ஏற்பட்ட சிக்கல்களும் சச்சரவுகளுக்கு மூல காரணங்கள் என்று விசாரணைக் குழு தெரிவித்தது. முக்கியமான வேற்றுமைகளைப் பற்றி எழுதுகின்ற பொழுது ''ராய் தவறான கம்யூனிசப் பிரச்சார முறையைக் கையாண்டார்; அது இச்சமயத்தில் அர்த்தமில்லாதது'' என்று அப்துர் ராப் பார்க் குழு குற்றம் சாட்டியது என்று குறிப்பிட்டது. ''தேசியத்தையும் கணிசமான அளவுக்கு உபயோகித்துக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று அப்துர் ராப் பார்க் கூறினார்.

விசேஷக் குழுவும் சற்று அழுத்தமான இடதுசாரி புரட்சிகர மனோபாவத்தில் இருந்திருக்க வேண்டும். ''முக்கர்ஜி-ராய் குழுவின் செயல்திட்டம் இரண்டாவது காங்கிரசின் ஆணைகளுடன் துல்லியமாகப் பொருந்தியிருந்தது'' என்ற

---

* உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசின் கட்சி ஆவணக் காப்பகம், தொகுப்பு 60, பட்டியல் 1, பத்திரம் 194, தாள் 4.

** அதே இடம்.

ஆதாரமற்ற முடிவுக்கு வந்தது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட்குழு 1921 மார்ச்சிலும் ஏப்ரலிலும் இரு தரப்பினருக்கு மிடையில் சமரசத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியர்களுடன் விசேஷக் கூட்டங்களை நடத்தியது; இந்தியக் கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்டு அல்லாதவர்கள், ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் இரண்டு பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டுக் கமிட்டியை அமைக்கின்ற ஆலோசனையைத் தெரிவித்தது. அப்துர் ராப் பார்க் அக்கமிட்டியில் பங்கெடுப்பதற்குத் தயாராக இருந்தார். ஆனால் ராய் இந்தியப் புரட்சிச் சங்கத்துடன் எவ்விதத்திலும் ஒத்துழைக்க முடியாது என்று உறுதியாகக் கூறினார்.

அன்றைக்கிருந்த நிலைமையில் கம்யூனிஸ்ட் அகிலம் நல்லதொரு முடிவைச் செய்தது. இந்தியப் புரட்சிக்காரர்கள் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைக் கற்றுக்கொள்வதற்கு உதவி செய்ய வேண்டும்; அப்பொழுதுதான் அவர்கள் உடனடியான சோஷலிஸ்ட் புரட்சி என்ற பயனற்ற திட்டத்தைக் கைவிட்டு அதற்குச் செய்ய வேண்டிய நெடுங்கால, அடிப்படையான தயாரிப்புகளுக்கு மாறுவார்கள் என்று கம்யூனிஸ்ட் அகிலம் கருதியது. அது அதே சமயத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை, இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான கட்சியை அமைப்பதற்குச் சரியான பாதையாகவும் இருந்தது.

1921 ஏப்ரலில் துருக்கிஸ்தானில் இந்தியக் குடியேறிகள் மத்தியில் செய்துவந்த வேலைகளை நிறுத்துவதென்றும் எல்லா இந்தியர்களையும் மாஸ்கோவுக்கு மாற்றி, அங்கே அப்பொழுது நிறுவப்பட்டிருந்த கீழை நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்ட் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதென்றும் உட்குழு முடிவு செய்தது.

சுறுசுறுப்பான அரசியல் வாழ்க்கை நடந்து கொண்டிருந்த, ஏராளமான கல்விக் கூடங்கள் இருந்த மாஸ்கோ இந்தியர்களின் புரட்சிக் கல்விக்கு மிகவும் ஏற்ற இடமாக இருந்தது.

மேற்கூறிய முடிவை அமுலாக்குவதற்கு மிகவும் நெடுங்காலமாயிற்று. இந்தியர்கள் மாஸ்கோவுக்கு ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். ஆகஸ்ட் மாதத்தில் மாஸ்கோவிற்கு 23 இந்தியர்கள் வந்திருந்தார்கள். 1921 அக்டோபர் முதல் தேதியன்று 18 இந்தியர்கள்—அவர்களில்

பெரும்பான்மையினர் கம்யூனிஸ்டுகள்—கீழை நாட்டு உழைப் பாளிகளின் கம்யூனிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

சோவியத் ருஷ்யாவுக்கு வந்த இந்தியப் புரட்சிக்காரர் களில் பெரும்பான்மையினருடைய வாழ்க்கையில் அது ஒரு புதிய கட்டத்தின் தொடக்கமாக இருந்தது. மாஸ் கோவில் இந்திய கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை முன்னெப் போதையும் காட்டிலும் அதிகரித்தது. 1921 செப்டெம்பர் முதல் தேதியில் மாஸ்கோவில் 30 இந்திய கம்யூனிஸ்டு கள் இருந்தனர் என்று எம்.என்.ராய் எழுதினார்.*

கீழை நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்ட் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருக்கும் செய்தி வெகு விரைவில் இந்தியாவை எட்டியது. பல தேசியப் புரட்சிக்காரர்கள் அப்பல்கலைக்கழகத்தில் படிப்பதற்குத் துடித்தார்கள். 1921 ஆகஸ்டில் மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு டிசம்பர் 15 வாக்கில் பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்த ஒரு இந்திய கம் யூனிஸ்டு (அவர் பெயர் நமக்குத் தெரியவில்லை) சுமார் ஏழு மாத காலம் (1922 ஜூன் 2ந் தேதி வரை) இந்தியா வில் செய்த சுற்றுப்பயணங்களைக் குறித்து ''இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் செயலாளருக்கு'' எழுதியிருக்கிறார். இந் தியாவில் பத்து தொழில்நகரங்களுக்குப் போனதாகவும் புரட்சிக் கலையைப் பயில்வதற்கு மாஸ்கோவுக்குப் போக விரும்பிய பலரைச் சந்தித்ததாகவும் தெரிவித்தார். ''அப் பல்கலைக்கழகத்தில் சேர முடியுமென்றால் சொந்தச் செல வில் (இரான் வழியாக) மாஸ்கோவுக்கு வருவதற்கு சுமார் 50 இளம் மாணவர்கள் தயாராக இருந்தார்கள்.''

சோஷலிஸ்ட் தத்துவத்தைக் கற்பதற்கும் சோவியத் ருஷ்யாவில் அது எப்படி அமுலாக்கப்படுகிறது என்பதை ஆராய்வதற்கும் கதர் கட்சியின் தலைமையும் ஆர்வத்தோ டிருந்தது. சோவியத் புரட்சியின் முக்கியத்துவத்தைக் கதர் கட்சி உணர்ந்தது, மார்க்சும் லெனினும் உருவாக்கிய சோஷலிஸ்ட் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கு முதற் படியாக பொறுப்பான சில தோழர்களை சோவியத் ருஷ்யா வுக்கு அனுப்புவது அவசியம் என்று முடிவு செய்தது

* எம். என். ராய் 1921 செப்டெம்பர் முதல் தேதியன்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கு எழுதிய கடிதம்.

என்று கதர் கட்சியின் தலைவரான சோகன் சிங் ஜோஷ் பிற்காலத்தில் கம்யூனிஸ்டான போது எழுதினார். கதர் கட்சி கம்யூனிஸ்ட் அகிலத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அமெரிக்காவிலும் கானடாவிலுமிருந்து சில இளை ஞர்களைப் புரட்சிகரப் பயிற்சிக்காக சோவியத் ருஷ்யா வுக்கு அனுப்பியது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவிலிருந்து கதர் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் — ரத்தன் சிங், சான்டோக் சிங் மாஸ்கோவுக்கு 1922இல் வந்தார்கள். புரட்சிகர வேலையில் பயிற்சி பெற்று இந்தியாவுக்குச் சென்று புரட்சிகர வேலையில் ஈடு படுகின்ற நோக்கத்துடன் வந்திருப்பதாக அவர்கள் நமூனா வில் எழுதியிருந்தார்கள். இருவரும் கம்யூனிஸ்ட் அகிலத் தின் நான்காவது காங்கிரசில் கலந்து கொண்டார்கள்.

இதுவரை சோவியத் நாட்டிற்கு வர இயலாமலிருந்த இந்தியத் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்களும் மாஸ்கோவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர் ரஹ்மத் அலி ஜக்காரியா. அவர் 1921ம் வருடத்தின் ஆரம்பத்தில் ''பொதுவான அரசியல் நிலைமையைத் தெரிந்து கொள் வதற்கு'' வந்ததாக அவருடைய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தியாவின் இதர புரட்சிகர தேசிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் மற்ற நாடுகளுக்குப் போகும் வழியில் மாஸ்கோவில் தங்கிச் சென்றார்கள்.

கீழை நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்ட் பல் கலைக்கழகம் இந்தியக் குடியேறிகளின் அரசியல் கல்வியில் தலைமையான பாத்திரத்தை வகித்தது. துருக்கிஸ்தானி லிருந்து வந்த இந்தியர்களில் அதிகமானவர்களும் கம்யூ னிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்தார்கள்.

கம்யூனிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்த முதல் குழு வில் எட்டு இந்தியர்கள் இருந்தார்கள். அவர்கள் படிப்பு முடிந்ததும் 1921 நவம்பர் 20ந் தேதியன்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கும் ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சிக்கும் நன்றியைத் தெரிவித்துச் செய்தி களை அனுப்பினார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்துக்கு எழு திய முதல் கடிதத்தில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ''கீழை நாட்டு மக்களினங்களின் கம்யூனிஸ்ட் பல்கலைக் கழகத்தின் இந்தியப் பிரிவின் மாணவர்களாகிய நாங்கள் சமூக விஞ்ஞானங்களில் எங்களுடைய படிப்பை முடித்து

கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்... ஒடுக்கப்பட்டிருக்கின்ற கீழை நாட்டு மக்களினங்களுக்குத் தோழமைக் கரம் நீட்டிய... கம்யூனிஸ்ட் அகிலத்துடன் எங்களுக்குத் தொடர்பு ஏற்பட்டதன் மூலம் அறிந்து கொண்ட கம்யூனிஸ்ட் கருத்துக்களுக்கு எங்களுடைய விசுவாசத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

இந்தியர்கள் தம்முடைய இரண்டாவது செய்தியில் ''ருஷ்யாவில் தங்களுக்குக் கிடைத்த வரவேற்புக்கும் கல்வி மற்றும் அபிவிருத்திக்குத் தமக்குத் தரப்பட்ட வாய்ப்புகளுக்கும்'' ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சிக்கு நன்றி தெரிவித்தார்கள். ''ருஷ்யப் புரட்சி கொடுத்திருக்கின்ற உத்வேகத்தில் இந்தியாவில் வரப்போகின்ற புரட்சியில் முழு அளவில் பங்கெடுக்க முடியும்'' என்று நம்புவதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள். மாஸ்கோவில் கல்வி கற்றல் மற்றும் சோவியத் மக்களுடன் ஏற்பட்ட தொடர்பு மூலமாகவே ஷௌகத் உஸ்மானி, ரபீக் அகமது, முஜாபர் அகமது, ரஹ்மத் அலி ஜக்காரியா ஆகியோர்* கம்யூனிஸ்டுகளானார்கள். இவர்கள் பிற்காலத்தில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதில் முக்கியமான பாத்திரத்தை வகித்தார்கள்.

எனவே இந்திய கம்யூனிஸ்டுகள் குழு தாஷ்கன்டைக் காட்டிலும் மாஸ்கோவில்தான் உருவாயிற்று என்று கூற வேண்டும். அது மாஸ்கோவில்தான் அதிகமான சித்தாந்த ஸ்திரத்தன்மையைப் பெற்று எண்ணிக்கையில் அதிகரித்தது. இந்திய வரலாற்றில் முதல் கம்யூனிஸ்ட் குழுவின் உருவாக்கம், இந்தியாவிற்குள் அதன் நடவடிக்கைகள் (பேச்சுக்களின் மூலமாகவும் புத்தகங்களின் மூலமாகவும் மார்க்சியப் பிரச்சாரம் செய்தது, தேசியப் புரட்சிக்காரர்கள் மற்றும் 1921 இலேயே அங்கே தோன்றிய முதல் கம்யூனிஸடுகளுடன் தொடர்புகள், கம்யூனிஸ்ட் குழுக்களை அமைப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் கொடுத்த செய்முறை உதவி ஆகியன) இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தோற்றுவித்தன. முதலில் தாஷ்கன்டிலும் பிறகு மாஸ்கோவிலுமிருந்தும் இயங்கிய ''இந்திய கம்யூனிஸ்ட் கட்சி'' கம்யூனிஸ்ட் அகி

* *Documents of the History of the Communist Party of India*, p. 229.

லத்தின் தலைமையில் அந்நிய நாட்டிலிருந்து இயங்குகின்ற கம்யூனிஸ்ட் மையமாக வளர்ச்சியடைந்து உண்மையான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றுவதற்கு அடிப்படையை அமைத்தது.* சோவியத் ருஷ்யாவில் இந்திய கம்யூனிஸ்ட் முன்னோடிகளது நடவடிக்கைகளின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் இதிலடங்கியிருக்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுது அமைக்கப் பட்டது என்பதைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் முன்பு இருந்ததுண்டு. 1925 டிசம்பர் 26இல் கான்பூரில் நடை பெற்ற, ஐநூறுக்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது என்று 1959 ஆகஸ்ட் 18ந் தேதியன்று கட்சியின் செயற்குழு முடிவு செய்தது. கான்பூர் மாநாட் டில் மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது, கட்சியின் அமைப்பு விதிமுறைகள் நிறைவேற்றப்பட்டன. எனினும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தவர்களில் ஒரு வரான முஜப்பர் அகமது ''1920 அக்டோபர் 17இல் தாஷ் கன்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதாகக்'' கருதுகிறார். ''எதிர்காலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு எழுதப்படுகின்ற பொழுது வரலாற்றாசிரியர்கள் இந்தத் தருணத்திலிருந்து தான் தொடங்க வேண்டியிருக் கும்'', ஏனென்றால் ''முதல் விஷயங்களைப் பற்றியே முத லில் எழுத வேண்டும்''** என்று கூறுகிறார்.

முதல் விஷயங்கள் முதலில் எழுதப்பட வேண்டும் என் பது உண்மையே. கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் மாஸ்கோவில் நடைபெற்ற காலத்திலும் அதற்கு பின்னரும் பிறகு தாஷ்கன்டிலும் மறுபடியும் மாஸ்கோ விலும் எம்.என்.ராய் மற்றும் அவருடைய தோழர்களின் நடவடிக்கைகள் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தொடக்க மாக இருந்தன, அவற்றின் மூலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் முதல் கம்யூனிஸ்ட் குழு அமைக்கப்

---

* சாராம்சத்தில் ஜி. அதிகாரி இதே கருத்தை வெளி யிட்டார். (G. Adhikari, *Lenin on Roy's Supplementary Colonial Theses*, pp. 2—3 பார்க்க.)

** Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, p. 28 and *The Communist Party of India and its Formation Abroad*, p. 5.

பட்டது. ஆனால் தாஷ்கன்டிலும் மாஸ்கோவிலும் நிறுவப் பட்ட குழுவை கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்லி 1921—1922ம் வருடங்களில் இந்தியாவில் வெவ்வேறு நகரங்களில் அமைக்கப்பட்ட இதர கம்யூனிஸ்ட் குழுக்களுக்கு இப் பெயரை மறுப்பதும் ஏன்? ராயின் குழு முதலில் ஏற்பட்டது என்பதற்காகவா? அது மிகவும் முக்கியமான அம்சம் என் பதில் சந்தேகமில்லை. ராய் குழுவையே முதல் குழு என்று கருத வேண்டும். ஆனால் அது ஒரு சிறு குழு, கட்சி அல்ல என்பதை நாம் பார்க்காமலிருக்க முடியாது.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட்குழு 1921 ஜூன் 13இல் எஸ்.யூ.ருட்கர்ஸ் என்னும் பெயருடைய டச்சுக் கம்யூனிஸ் டின் தலைமையில் இந்தியக் கமிஷனை நியமித்தது. அது எம்.என்.ராயின் குழுவைப் பற்றி ஜூன் 26இல் பின்வரும் மதிப்பீட்டைச் செய்தது: ''புரட்சிகர இயக்கத்துக்கு சர்வ தேசக் கட்சிக் கட்டுப்பாடு அவசியம் என்பதை இக்குழு ஒப்புக்கொள்வதால், எண்ணிக்கையில் சொற்பமாக இருந் ததும் இந்தியாவில் அதற்கு இன்னும் வேர்கள் இல்லை என்பதும் அதற்கு ஒரு தற்காலிகத் தன்மையைக் கொடுத் தாலும் இக்குழு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்கம் என்று கருதலாம்.''*

இக்குழுவை கட்சி என்று அங்கீகரிக்குமாறும் அப் பொழுது ஆரம்பமாகியிருந்த மூன்றாவது காங்கிரசில் ஆலோசனை வாக்குரிமையுடன் கலந்துகொள்ள அனுமதிக்கு மாறும் (இந்தியாவில் வேர்கள் இல்லாததன் காரணமாக) இந்தியக் கமிஷன் கம்யூனிஸ்ட் அகிலத்துக்கு சிபாரிசு செய் தது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். மூன் றாவது காங்கிரசின் பிரதிநிதிகள் பட்டியலில் ''இந்தியா—கம்யூனிஸ்ட் கட்சி''** என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதற்கு முந்திய ''குழுக்களின் பட்டியலில்'' இந்திய ''கம் யூனிஸ்ட் குழுக்கள்''*** என்பதாக மட்டுமே குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் முதலில் தாஷ்கன்

---

* *Indian Commission to the Small Bureau of the Comintern.*

** கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது உலக காங்கிரஸ், சுருக் கெழுத்தறிக்கை, பெத்ரோகிராத், 1922, பக்கம் 496 (ருஷ்ய மொழியில்).

*** அதே நூல், பக்கங்கள் 8—9.

டிலும் பிறகு மாஸ்கோவிலும் முதல் கம்யூனிஸ்ட் குழுவை அமைத்து, நாட்டுக்கு வெளியே கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கு முயற்சி செய்தனர்; அந்த நடவடிக்கையின் மூலம் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு அடிப்படையை அமைத்தனர் என்னும் நமது மதிப்பீட்டை இது மாற்ற வில்லை.

முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழு சோவியத் ருஷ்யாவில் அமைக்கப்பட்ட உண்மையை முதலாளித்துவ வரலாற்றாசிரி யர்கள் திரித்துக் கூறுகிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் ''வெளிநாட்டில் விதைத்து வளர்க்கப்பட்டு இந் திய மண்ணுக்குக் கொண்டு வந்து நடப்பட்டது'', அது ''மாஸ்கோ ஏஜண்டுகளின் நடவடிக்கைகளின்''* விளை வாகவே தோன்றியது, ஏனென்றால் இந்தியாவுக்குள் ''தொழிலாளி வர்க்கப் புரட்சிகர ஸ்தாபனங்கள் தோன்ற முடியாத நிலைமை இருந்தது''** என்று எழுதுகிறார்கள். ''அக்காலத்திய இந்தியர்கள் பலரைப் போன்றே ராயும் சித்தாந்தப் பற்றுக்களுக்காக அல்ல, இந்தியாவில் ஏகாதி பத்தியத்திற்கு எதிரான தன் போராட்டத்திற்கு அரசியல் மற்றும் நிதி ஆதரவைப் பெறுவதற்காகத்தான் அகிலத் திற்கு வந்தார் என்பது முற்றிலும் சாத்தியமே''*** என்று அவர்கள் எழுதினார்கள்.

கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வெறி இந்த வரலாற்றாசிரியர் களின் கண்களை மறைக்கிறது. கிழக்கு நாடுகளில் ஏகாதி பத்தியவாதிகளின் காலனியாதிக்க கொள்கைகள் அங்கே கம்யூனிசக் கருத்துக்கள் வேகமாக வளர்ச்சியடைவதற்கும் தேசியப் புரட்சிக்காரர்கள் வெகு விரைவில் போல்ஷிவிக்கு களை நோக்கி திரும்புவதற்கும் உதவின என்பதே உண்மையாகும்.

1921 டிசம்பரில் *Setarei Iran* என்ற பத்திரிகை பின் வருமாறு எழுதியது: ''பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகக் கிழக்கு நாடுகளில் ஆத்திரமேற்பட்டிருக்கிறதென்றால் அதற்கு ருஷ்ய ஏஜண்டுகள் காரணமல்ல, இங்கிலாந்தின்

---

* *Indian Communist Party. Documents (1930-1956)*, Bombay, 1957. Introduction by V. B. Karnik, pp. VII—VIII.

** பார்க்க: Pelling Henry, *The British Communist Party. A Historical Profile*, London, 1958, pp. 41—42.

*** G. D. Overstreet, M. Windmiller, *Communism in India*, p. 36.

ஆக்கிரமிப்புக் கொள்கைகளே அதற்குக் காரணம்... அக் கொள்கைகள் இல்லையென்றால்... துருக்கியோ அல்லது ஆப்கானிஸ்தானோ இத்தகைய பிரச்சினையை (அதாவது போல்ஷிவிசக் கருத்துக்களை—ஆ-ர்) இன்றிலிருந்து நூறு வருடங்களுக்குப் பிறகு கூட சந்திக்காது என்று நாங் கள் உறுதியாகக் கூற முடியும். அந்த நாடுகள் போல்ஷி விசத்தை வரவேற்பதற்கு இங்கிலாந்தின் ஏகாதிபத்தியக் கொள்கைகளைத் தவிர வேறு காரணம் கிடையாது...''*

மற்றொரு உண்மையையும் இங்கே குறிப்பிட வேண் டும். முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழுவை அமைத்த எம். என்.ராய், அபனி முக்கர்ஜி மற்றும் திருமலாச்சார்யா தங் களைக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டுதான் சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கு முன்முயற்சி எடுத்துக்கொண்ட வர்கள் அவர்களே தவிர, போல்ஷிவிக்குகளோ, லெனினோ அல்ல. இந்த விஷயத்தில் அவசரப்படக் கூடாது, நிதானம் வேண்டும் என்று லெனின் அடிக்கடி வற்புறுத்தினார். 1925 செப்டெம்பரில் எம்.என்.ராயே வி.இ. லெனினின் இந்த நிதானம் பற்றி எழுதினார். இதற்கெதிராகத்தான் ராய் 1920ல் செயல்பட்டார், இதைத்தான் அவரால் அப்போது புரிந்து கொள்ள இயலாமலிருந்தது, பின்னர்தான் இது புரிந்தது. 1925இல் கட்சி வேலையைப் பற்றிய அறிக்கை யில் ராய் பின்வருமாறு எழுதினார்: ''1923ம் வருடத்தின் கடைசி வரை கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கின்ற வேலையை நாங்கள் வேண்டுமென்றே தவிர்த்தோம். அது அவசரப் படுவதாகும்... களம் இன்னும் தயாரிக்கப்படவில்லை, அறிவுஜீவிகளைக் கொண்ட முன்னணிப் படை போதிய அளவில் இல்லை, பாட்டாளி வர்க்கம் மிகவும் அதிகமாகப் பின்தங்கியிருந்தது, கம்யூனிசத்தை சரியாகப் புரிந்து கொள்ளாத ஒரு சில உறுப்பினர்களைக் கொண்டு கம்யூ னிஸ்ட் கட்சி என்ற பிரமையை ஏற்படுத்துவதில் அர்த்த மில்லை. கிழக்கு நாடுகளின் பல்வேறு விடுதலை போக்கு களுக்குக் கம்யூனிச வர்ணத்தைத் தீட்டுவது ஆபத்தானது

---

* அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 522, தாள்கள் 151—152.

என்ற லெனினுடைய எச்சரிக்கை எங்களுக்கு வழிகாட்டி யாக இருந்தது.''*

இவர்களைத் தவிர, இந்திய முதலாளி வர்க்க மற்றும் குட்டி முதலாளி வர்க்க அறிவுஜீவிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தேசியப் புரட்சிக்காரர்கள் பலர் சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்கள். அவர்களை இங்கு வந்து கம்யூ னிஸ்டுகளாக மாறும்படி யாரும் நிர்ப்பந்திக்கவில்லை. அவர்கள் தாங்களாகவேதான் இங்கே வந்தார்கள்.

எனவே இந்தியப் புரட்சிக்காரர்களில் பலரை சோவியத் ருஷ்யாவுக்குப் போகுமாறும், அவர்களில் சிலரைக் கம்யூ னிசத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் உந்தித் தள்ளிய களம் எது? அது இந்தியாவின் தேசியக் களமே, ஏகாதிபத்திய எதிர்ப்பு, விடுதலைப் போராட்டத்தின் அவசியங்களே. இந் தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளில் மிகப் பெரும்பான்மை யானவர்கள் தேசியப் புரட்சிக்காரர்களின் அணிகளிலிருந்து வந்தவர்கள் என்பது முக்கியத்துவமுடையதாகும். இந்தியா வின் தேசியப் புரட்சிகர குட்டி முதலாளித்துவ ஜன நாயகத்தின் மிகச் சிறந்த பிரதிநிதிகள் பல வருடகாலம் சதி நடவடிக்கை ஸ்தாபனங்களில் ஈடுபட்டு உழைப்பை வீணாக்கிய பிறகு தேசிய விடுதலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசியம் மட்டும் போதாது என்ற முடிவுக்கு வந்தார்கள். மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் மகத் தான சக்தியை அக்டோபர் புரட்சி எடுத்துக்காட்டியது. எனவே மார்க்சிய-லெனினியத் தத்துவமும் சோவியத் ருஷ்யா வும் அவர்களை ஈர்த்தது வியப்பல்ல. அவர்கள் மேற்கு ஐரோப்பாவில் பல வருடங்களைக் கழித்தார்கள்; ஆனால் உருப்படியான பலன் ஒன்றுமில்லை. சோவியத் ருஷ்யா தான் அவர்களுக்கு உண்மையான ஆதரவு கொடுத்தது, ஏனென்றால் ஏகாதிபத்திய எதிர்ப்பு நலன்கள் என்ற பொது நோக்கம் சோவியத் ஆட்சியுடன் அவர்களை ஒன்று

* இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டிருப்பதாக தாஷ்கன்டில் செய்த பிரகடனத்தைப் பற்றி ராய் குறிப்பிட வில்லை என்பது முக்கியமானது. அப்படி எந்தப் பிரகடன மும் இல்லை என்பதைப் போல ராய் எழுதியிருக்கிறார். அங்கே கட்சியல்ல, இந்தியாவில் உண்மையான கட்சியை அமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கம்யூனிஸ்ட் குழுவே அமைக்கப்பட்டது என்று அவர் இச்சமயத்தில் உணர்ந்திருக்க வேண்டும்.

சேர்த்தது. மேலும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அனுபவத்தை ஆராய்வது அவர்களுக்கு முதலில் அவசியமாக இருந்தது. அது சோவியத் ருஷ்யாவுக்குப் போவதன் மூலமாகத்தான் நிறைவேறும்.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்கு முறையை மீறி 1921—1922ம் வருடங்களில் (அதாவது சோவியத் ருஷ்யாவில் கம்யூனிஸ்ட் குழு அமைக்கப்பட்ட பிறகு) கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றின. கல்கத்தா, பம்பாய், லாகூர் மற்றும் சென்னையில் முன்பு தேசியப் புரட்சிக்காரர்களாக இருந்தவர்கள், இந்திய தேசிய காங்கிரசின் இடதுசாரிப் பிரிவினர் அல்லது தீவிரமான தொழிற் சங்கவாதிகள் தோன்றினார்கள், ''இவர்கள் ஒருவரை ஒருவர் சாராமல் கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்கின்ற பணியில் ஈடுபட்டார்கள்''*.

எனவே இந்தியாவில் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றுவதற்குக் களம் இல்லை என்ற வாதம் உண்மையானதா? கம்யூனிஸ்ட் நடவடிக்கையை மட்டுமல்லாமல், மிகக் குறைந்த கம்யூனிஸ்ட் அனுதாபத்தைக் கூட ஈவிரக்கமில்லாமல் நசுக்கியதன் மூலம் பிரிட்டிஷ் அதிகாரிகள் களத்தைத் தகர்க்க முயற்சிக்கவில்லையா? கம்யூனிசத்தை ஒடுக்கும் கொள்கை இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றுவதற்கு இயற்கையான வரலாற்று நிலைமைகள் இருந்ததை நிரூபிக்கவில்லையா?

எனினும் இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் மார்க்சியத் தத்துவத்தை நன்கு கற்றுக்கொள்வதற்கு நெடுங்காலமாயிற்று, அது மிகவும் கடினமானதாகவும் இருந்தது. ஏனென்றால் அவர்களால் தம்முடைய குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகரக் கருத்துக்களை சுலபமாகக் கைவிட முடியவில்லை. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் 1920—1921இல் வெளிநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்குச் செய்த முயற்சிகளுக்கு அவர்களுடைய அரை குறையான மார்க்சிய அறிவுதான் காரணம். அதன் விளைவாகவே அது தோல்வியடைந்தது. அதற்கு அவசியமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் அனைத்தும் இந்தியாவில் இன்னும் ஏற்படவில்லை. வெளி

* Muzaffar Ahmad, *Myself and the Communist Party of India*, p. 78.

நாட்டில், இந்தியக் குடியேறிகளின் சமூகத்தில் அத்தகைய நிலைமைகளை உருவாக்கவும் முடியாது. ஏனென்றால் அந்தக் குடியேறிகளும் இந்திய சமூகத்தின் ஒரு பகுதியே.

இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியிலும் இருந்த கம்யூனிஸ்ட் குழுக்களை ஒன்றுசேர்த்து 1925 டிசம்பரில் கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டதாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பிறகும் கூட கட்சியைக் கட்டுவதற்குப் பல வருடங்களாயிற்று. அவசியமான நிலைமைகள் தோன்றிய பிறகு இந்தியத் தொழிலாளி வர்க்க இயக்கம் மார்க்சிய சோஷலிசத்துடன் இணைந்த பிறகே அது சாத்தியமாயிற்று. சோவியத் ருஷ்யாவில் முதலில் தோன்றிய தனித்தனியான கம்யூனிஸ்ட் குழுக்களைக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட நீண்ட நிகழ்வுப் போக்கில் செயற்கையான அம்சம் என்ன இருக்கிறது? ‘‘மாஸ்கோவின் கை’’ என்று சொல்கிறார்களே, அது எங்கே இருக்கிறது?

சோவியத் ருஷ்யாவில் அமைக்கப்பட்ட முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழுவுக்கு சிறப்பைத் தருவது அது முதல் குழு என்பது மட்டுமல்ல, அதன் மொத்த நடவடிக்கைகளுமே.

இந்தியாவின் உழைக்கும் மக்கள் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தோடு சேர்த்து பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் மீதும் நெடுங்காலமாக அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள். இந்திய புரட்சிக்காரர்களிடையே கம்யூனிஸ்டுகள் மட்டுமே பாரம்பரியமான நம்பிக்கையின்மைக்கு எதிராகப் போராடினார்கள். இந்தியா சுரண்டப்படுகின்ற மக்களைக் கொண்ட நாடு, கிரேட் பிரிட்டன் சுரண்டல்காரர்களைக் கொண்ட நாடு என்று இந்தியாவின் புரட்சிக்காரர்கள் கருதியதே இத்தப்பெண்ணத்துக்குக் காரணம். ஒடுக்கப்பட்டிருக்கும் நாடு ஒடுக்குகின்ற நாட்டின் மீது மொத்தமாக அவநம்பிக்கை கொண்டிருப்பது தேசியத் தப்பெண்ணம், அது எளிதில் மறையாது, அதை ஒழிக்காமல் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் விருப்பபூர்வமான கூட்டணி ஏற்பட முடியாது, சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்துடன் தேசிய

விடுதலை இயக்கத்தின் கூட்டணியும் ஏற்பட முடியாது என்று லெனின் எழுதினார்.*

இந்தியக் கம்யூனிஸ்டுகள் பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையுடன் போர்க் குணமிக்க கூட்டணியை நிறுவுகின்ற முயற்சியில் முதலில் ஈடுபட்டார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பங்கெடுத்த இந்திய மற்றும் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் தோழர்கள் என்ற முறையில் மாஸ்கோவில் 1920 ஆகஸ்ட் 12ந் தேதியன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தங்களுடைய பொதுப் போராட்டத்துக்கு செயல்திட்டத்தைத் தயாரித்தார்கள்.**

இந்திய கம்யூனிஸ்டுகள் தாஷ்கன்டிலும் சில முக்கியமான பணிகளை நிறைவேற்றினார்கள். வரலாறு, பொருளாதாரம், தொழிலாளி வர்க்க இயக்கம் மற்றும் சோஷலிசத்தைப் பற்றி மூன்று வார வகுப்புகள் நடத்தியது வெற்றியடையவில்லை என்ற போதிலும் அவர்கள் வாரந்தோறும் இந்தியக் குடியேறிகளின் கூட்டங்களை நடத்தி அவற்றில் நடப்புப் பிரச்சினைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். இந்தியாவில் நடைபெறுகின்ற சம்பவங்கள், ருஷ்யப் புரட்சியின் உட்பொருளும் முக்கியத்துவமும் மற்றும் உலகத்தில் நடைபெறுகின்ற புரட்சிகரமான வளர்ச்சிகள் எனும் தலைப்புகளில் உரை நிகழ்த்தினார்கள். புரட்சிக் கமிட்டியின் வேலை அறிக்கையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: ''நம்முடைய முயற்சிகளின் பலனாக குடியேறிகள் அரசியல் விவாதங்களில் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பது உற்சாகமளிப்பதாகும்... அவர்களுடைய கண்ணோட்டத்தில் மத சித்தாந்தத்தைக் காட்டிலும் அரசியல் சித்தாந்தத்தை நோக்கி மென்மேலும் வளர்ச்சியடைகின்ற போக்கு உருவாகியிருப்பது மனநிறைவளிக்கிறது.''*** புரட்சிக் கமிட்டியின் நகல் செயல்திட்டத்தைப்

---

* வி.இ. லெனின், ''தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள்'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 429 பார்க்க.

** *Practical Measures for Coordinating the Indian Revolutionary Movement with the Proletarian Revolution in England.*

*** அ.பு.ப.ம.அ.ஆ. கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 488, தாள்கள் 2—3.

பற்றி இரண்டு வார காலம் நடைபெற்ற விவாதம் இந்தியர்கள் மத்தியில் கணிசமான அக்கறையைத் தூண்டியது. அந்த ஆவணத்தைப் பற்றி நாம் ஏற்கெனவே எழுதிய பொழுது அன்றைக்கிருந்த நிலைமைகளில் இந்தியாவில் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு அது அடிப்படையாக இருக்க முடியாது என்று சுட்டிக் காட்டியிருக்கிறோம். அதே சமயத்தில் நகல் செயல்திட்டத்தின் சமூக, பொருளாதாரக் கோரிக்கைகளில் பல, குறிப்பாக நிலப்பிரபுத்துவச் சுரண்டலை ஒழிப்பதைப் பற்றியவை இந்தியர்களின் அக்கறையைத் தூண்டியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் அப்பொழுது தான் தேசிய மற்றும் சமூக விடுதலைப் பிரச்சினைகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கியிருந்தார்கள்.

தாஷ்கன்டில் இந்தியக் குடியேறிகளில் சிலர் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து ருஷ்ய மொழியை எழுதவும் படிக்கவும் கற்றார்கள். பதினைந்து இந்தியர்கள் முஸ்லிம்களுக்கான கட்சிப் பள்ளியில் படித்தார்கள்; சில இந்தியர்கள் துருக்கிஸ்தான் தொழிற்சங்கப் பள்ளியிலும் படித்தார்கள். தாஷ்கன்டின் கல்விநிலையங்களும் அரசியல் வகுப்புகளும் இந்தியப் புரட்சிக்காரர்களின் அரசியல் வளர்ச்சியில் ஓரளவுக்குப் பாத்திரம் வகித்தன.*

இந்தியாவுக்கு அனுப்புவதற்குப் பிரச்சார வெளியீடுகளைத் தயாரிப்பதிலும் அதிகமான வேலை செய்யப்பட்டது. 1920 அக்டோபர் 20இல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோ அமைக்கப்பட்ட பிறகு அந்த வேலை விரிவாக்கப்பட்டது. 1921 மே மாதத்திலிருந்து ஜூன் 16 முடிய ஆறு வார காலத்தில் பின்வரும் பிரசுரங்கள் உருது மொழியிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன: **கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் பீரோவின் அறிக்கை** (10,000 பிரதிகள்), **கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு** மார்க்சின் **முன்னுரை** (4,000 பிரதிகள்), **கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரசுக்கு கிழக்கு நாடுகளின் பிரச்சினையைப் பற்றிய நகல் ஆய்வுரை** (அநேகமாக ராய் எழுதியிருக்க வேண்டும்—2,50,000 பிரதிகள்). **இந்தியாவின் இளைஞர்களுக்கு,**

---

* அதே இடம்.

இரானிலுள்ள இந்தியப் படைவீரர்களுக்கு என்று எழுதப் பட்ட பிரசுரங்களும் இன்னும் சில வெளியீடுகளும் உருது மொழியிலும் ஆங்கிலத்திலும் இதே சமயத்தில் வெளியி டப்பட்டன.*

இந்திய கம்யூனிஸ்டுகள் இந்தியாவுக்குப் புத்தகங்களை அனுப்பியதோடு நிற்கவில்லை; அவர்கள் பிரச்சாரகர்களை யும் இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர்கள் இரானி லிருந்த பிரிட்டிஷ் துருப்புகள் மத்தியில் பிரச்சாரம் செய்தார் கள். 1920ம் வருடத்தின் முடிவில் தாஷ்கன்டிலிருந்த நூறு இந்தியக் குடியேறிகளில் 18 நபர்கள் இந்தியாவுக்கும் அதன் எல்லைப் பகுதிகளுக்கும்—இனக்குழு மக்களிடம்—சென்று புரட்சிகரப் பணிகளைச் செய்தார்கள். ஐவர் இரானுக்குச் சென்று பிரிட்டிஷ் துருப்புகள் மத்தியில் பிரச்சாரம் செய் தார்கள்.

முதல் இந்திய கம்யூனிஸ்டுகள் சோவியத் ருஷ்யாவில் தாம் கற்றவற்றை முக்கியமாக தேசிய புரட்சிகர அறிவுத் துறையினர் வட்டத்தில் பரப்பினார்கள். இந்த வட்டத்தி லிருந்துதான் சமீபத்தில் இவர்கள் வந்தனர், புதிய கம்யூ னிஸ்ட் குழுக்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நடவடிக்கை முகம்மது அலி, முகம்மது ஷாபிக், நளினி குப்தா (இவர்களைத்தான் எம்.என்.ராய் 1921ல் இந்தியாவிற்கு அனுப்பினார்) எனும் மூன்று ''கம்யூனிசத் தூதுவர்களின்'' பெயர்களுடன் தொடர்புடையதாயிருந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்குரிய சித் தாந்த மற்றும் அரசியல் தயாரிப்பு வேலைகளில் கணிச மான பகுதியை ராய் (அவருடைய இடது குறுங்குழுவாதக் கருத்துக்கள் இந்த வேலையில் குறுக்கிட்ட போதிலும்) நிறைவேற்றினார்.

ராய் தேசியப் புரட்சிக்காரர்களிடம் தனக்கு இன்னு மிருந்த தொடர்புகளை உபயோகித்துக் கடிதங்களிலும் பிர சுரங்களிலும் பலனுள்ள விமர்சன வேலையைச் செய்தார். பெருந்திரளான மக்களைப் புறக்கணிப்பது, தனிப்பட்ட பயங்கரவாதம், சதித்திட்டம் ஆகியவற்றில் ஈடுபடுகின்ற அவர்களின் செயல்முறை தீங்கானது என்று விளக்கினார்.

---

* 1921 மே முதல் ஜூன் நடுப்பகுதி வரை கம்யூனிஸ்ட் அகிலத்தின் துருக்கிஸ்தான் காரியாலய வேலை பற்றிய அறிக்கை.

இம்முறையில் பல தேசியப் புரட்சிக்காரர்களை மார்க்சியத்துக்குக் கொண்டு வருவதில் அவர் சிறப்பான பங்காற்றினார். இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளுக்கு அவர் அனுப்பிய வேண்டுகோள்களில் உழைக்கும் மக்களின் உடனடியான நலன்களைப் பற்றி அக்கறை காட்டுமாறு கேட்டுக் கொண்டார். இந்திய தேசிய காங்கிரசில் இடதுசாரி அணி உருப்பெறுவதில் இந்த வேண்டுகோள்கள் உதவி செய்தன.

1922ம் வருடத்தின் ஆரம்பத்தில் பதின்மூன்று இளம் இந்தியர்கள் (அவர்களில் பெரும்பான்மையினர் கம்யூனிஸ்டுகள்) கம்யூனிஸ்ட் பல்கலைக்கழகத்தின் குறுகிய காலப்பாடதிட்டத்தை முடித்த பிறகு தேசிய விடுதலை போராட்டம் பற்றிய லெனின் தத்துவத்தில் உறுதி கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார்கள். ருஷ்யாவின் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றி மக்களிடம் எடுத்துக் கூறுவதும் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுப்பதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்குரிய பரந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவர்களுடைய நோக்கம். முகம்மது அக்பர் கான், மிர் அப்துல் மஜீது, பிரோசுதீன் மன்சுர், ரபீக் அகமது, ஹபீப் அகமது, அக்பர் ஷா, சுல்தான் முகம்மது (அல்லது அப்துல் ஹமீது), அப்துல் காதிர் செஹ்ராய், கௌகர் ரஹ்மான், சையது, நிஜாமுத்தீன் என்னும் பெயர்களைக் கொண்ட புரட்சிக்காரர்கள் சிறு சிறு குழுக்களாக பாமீர் மலைகளைக் கடந்து இந்தியாவுக்குச் செல்வதற்காகப் புறப்பட்டார்கள்.*

ஆனால் இப்புரட்சிக்காரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகள் 1922—1923ம் வருடங்களின் போது பெஷாவரில் அவர்கள் மீது குற்ற விசாரணைகளை நடத்தினார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு நடைபெற்ற ''மாஸ்கோ-தாஷ்கன்ட் சதியில்'' பங்கெடுத்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்தியாவின் மீது போல்ஷிவிக் கருத்துக்களின் வன்மை

---

* "The Story of Rafiq Ahmad's Travels."—Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, pp. 35—45, 52—54; S. M. Mehdi, *The Story Behind "Moscow-Tashkent Conspiracy Case?"*, New Delhi, 1967, pp. 3—4.

யான தாக்கத்தைக் கண்டு பிரிட்டிஷ் காலனியாதிக்க வாதிகள் எவ்வளவு அச்சமடைந்தார்கள் என்பதையும் தாஷ்கன்டிலும் மாஸ்கோவிலும் அமைக்கப்பட்ட முதல் இந்திய கம்யூனிஸ்ட் குழுவின் உறுப்பினர்கள் இந்தியாவில் எவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளைத் தூண்டினார்கள் என்பதையும் பெஷாவர் விசாரணைகள் தெளிவாக நிரூபிக்கின்றன.

இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் அநேகமாக ஒரே சமயத்தில் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றின. இவற்றை ஒன்றுசேர்த்துப் படிப்படியாக இணைத்து அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பது நெடிய, சிக்கலான நிகழ்வுப் போக்காக இருந்தது.

சோவியத் ருஷ்யாவிலிருந்த முதல் இந்திய கம்யூனிஸ்டுகள் ஒரு இராணுவப் பயிற்சிப் பள்ளியை நிறுவுவதைத் தமது முக்கியமான நோக்கமாகவும் சாதனையாகவும் கருதினார்கள். அவர்களுடைய இடது குறுங்குழுவாதக் கருத்துக்கள் என்ற மொத்த அமைப்பில் இராணுவக் காரணியின் பாத்திரத்தை புரட்சியில் மிகைப்படுத்துவது மிக முக்கியமான பகுதியாக இருந்தது. சீனா, இரான், துருக்கி, கொரியா ஆகிய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த முதல் கம்யூனிஸ்டுகளும் இதே மாதிரியான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள்.

## இந்தியப் புரட்சிக்காரர்களின் இராணுவப் பயிற்சிப் பள்ளி. இந்தியப் புரட்சியில் இராணுவக் காரணி

எம்.என்.ராயும் அவர் குழுவிலிருந்த இந்திய கம்யூனிஸ்டுகளும் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல்தகுதிகளை மறுத்ததுடன் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தகுதிகளையும் மறுத்தார்கள்—குறைந்த பட்சம் அதைப் பற்றிக் கேள்வியை எழுப்பினார்கள். ராயும் அவருடைய குழுவினரும் இந்தியாவில் புரட்சியை நடத்துவதற்கும் அதற்குரிய சக்திகளைத் திரட்டுவதற்கும் நீண்ட காலப் போராட்டம் அவசியம் என்ற நிலையிலிருந்து சிந்திக்கவில்லை; அவர்கள் உடனடியான சோஷலிஸ்ட் புரட்சியின் சாத்தியத்தையும் அவசியத்தையும் நிரு

பிப்பதற்கு முனைந்தார்கள். ஆனால் அன்றைய இந்தியாவில் அத்தகைய கடமையை நிறைவேற்றுவதற்கு அவசியமான சமூக, பொருளாதார நிலைமைகள் இருக்கவில்லை.

முதலாவதாக, அங்கே வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளி வர்க்கம் இல்லை. அது முற்றிலும் பொருளாதாரப் போராட்டத்திலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதற்கு ஒவ்வொரு காலடியாக முன்னேற ஆரம்பித்திருந்தது அரசியல் ரீதியில் விழிப்படைந்து கொண்டிருந்ததை எடுத்துக்காட்டியது. தொழிலாளி வர்க்கத்தை சமூக வளர்ச்சியின் மாபெரும் புரட்சிகர சக்தியாக மாற்றியமைக்கின்ற நெடிய நிகழ்வுப்போக்கில் அது உணரத்தக்க, அவசியமான முன்னேற்றமாகும். அங்கே கம்யூனிஸ்ட் கட்சியும் இல்லை. அது இல்லாமல் வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கத்தை உருவாக்குகின்ற நிகழ்வுப் போக்கு முன்னேற முடியாது, வெற்றி பெறவும் முடியாது.

இந்தியாவின் காலனிச் சமூகத்திலிருந்த இப்பிரத்யேகமான அம்சத்தை ராய் பார்க்கத் தவறினார் என்று கூற முடியாது. அவர் அதைப் பார்த்தார் என்பதில் ஐயமில்லை; அவர் அதைப் பற்றி எழுதவும் பேசவும் கூடச் செய்தார். அவர் தன்னுடைய தத்துவ நூல்களில் முரண்பாடான கருத்துக்களை ஒன்று கூட்டி எழுதியது வியப்புக்குரியதாகும். தொடர்ச்சியின்மை, மார்க்சியம் மற்றும் குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகரவாதத்தின் கதம்பம் ஆகியன அவருடைய கருத்துக்களின் அமைப்பில் முக்கியமான கூறுகளாக இருந்தன.

இந்தியாவின் உழைக்கும் மக்கள் ''உணர்ச்சிபூர்வமான தேசியவாத'' கோஷங்களை ஏற்கெனவே கைவிட்டு விட்டார்கள் என்று கூறி அவர்களுடைய வர்க்கப் போராட்டங்கள் உயர்ந்த மட்டத்தை அடைந்து விட்டன என்று திரும்பத் திரும்ப வற்புறுத்திய ராய் அதே சமயத்தில் அதற்கு எதிரான கருத்தையும் கூறினார். உதாரணமாக, அவர் ''இன்னும் குழந்தைப் பருவத்தில்'' இருக்கின்ற இந்தியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பின்தங்கிய நிலைமையைப் பற்றியும் அடிக்கடி எழுதினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துகின்ற சூழ்நிலையில் இந்தியாவில் புரட்சிகரமான பாட்டாளி வர்க்க

இயக்கத்தை அமைப்பது அநேகமாக இயலாதது என்று வற்புறுத்தினார்.*

இந்தப் புறநிலையான தடைகளை மீறி எப்படி வெற்றியடைவது என்று அவர் சிந்தித்த பொழுது இந்தியாவில் உடனடியான சோஷலிஸ்ட் புரட்சிக்கு ஒரே வழி சோவியத் ருஷ்யாவில் அல்லது சுதந்திரமான ஆப்கானிய இனக்குழுக்களின் பிரதேசத்தில் விடுதலைப் புரட்சிகர இராணுவத்தை அமைத்து இந்தியாவுக்குள் அனுப்புவதே என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் இத்தகைய முடிவுக்கு வருவதில் அவர்களுடைய புரட்சிகரமான பொறுமையின்மை மாபெரும் பாத்திரத்தை வகித்தது என்றாலும் அது மட்டுமே காரணமாக இருக்கவில்லை. முதல் இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தத் திசையில் சிந்திப்பதற்குச் சில புறநிலையான சந்தர்ப்பங்களும் இருந்தன.

ஏகாதிபத்திய அரசுகள் ருஷ்யாவுக்குப் பக்கத்திலிருந்த கிழக்கு நாடுகளை தளமாக உபயோகித்து சோவியத் ருஷ்யா மீது படையெடுத்தன. குறிப்பாக, இரான், ஆப்கானிஸ்தான், புஹாராவில் பிரிட்டிஷ் ஏஜண்டுகளின் பெரும் சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் நேரில் கண்டார்கள். எனவே ருஷ்யப் பிரதேசத்திலிருந்து விடுதலைச் சேனைகள் இந்தியா மீது படையெடுப்பது அவசியம், அது நியாயமானதே என்று அவர்கள் கருதுவதற்குப் போதிய காரணமிருந்தது. மேலும் அதன் மூலம் தங்கள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை சோஷலிஸ்ட் புரட்சியாக மாற்ற முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். உள்நாட்டு யுத்தத்தின் போது பல போர்முனைகளில் செஞ்சேனையின் வெற்றிகளைக் கண்டு அவர்கள் பெருமிதம் அடைந்தார்கள்; புரட்சிகரப் போராட்டங்களில் இராணுவ வழியை உபயோகிப்பது எவ்வளவு வெற்றிகரமாக இருக்கும் என்பதை அது எடுத்துக்காட்டியதாகக் கருதினார்கள். அவர்கள் செஞ்சேனையின் வெற்றிகளைக் கண்டு பூரித்தார்களே தவிர, புரட்சிகரமான வெகுஜனங்களின் ஆதரவினால்தான் அந்த வெற்றி

* ''இந்தியப் புரட்சிகர கட்சியின் அறிக்கை'', **ஷிஸ்ன் நஸியனால்னஸ்தேய்**, ஜூலை 25, 1920.

கள் கிட்டியிருக்கின்றன, அது கூலிப்படையல்ல, அந்நிய நாட்டுப் படையல்ல, புரட்சி செய்த கோடிக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேசிய இராணுவம், லெனினால் உருவாக்கப்பட்ட முதிர்ச்சியுள்ள, மாபெரும் கட்சி அதற்குத் தலைமை தாங்குகிறது என்பவற்றை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிற்போக்காளர்கள் மீது அதன் வெற்றியை அக்டோபர் புரட்சி முன்நிர்ணயம் செய்து விட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். பெருந்திரளான மக்களைப் பயிற்றுவிப்பதற்கு, தொழிலாளி வர்க்க இயக்கத்தை சோஷலிசக் கருத்துக்களுடன் இணைப்பதற்கு, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையை அமைப்பு, சித்தாந்த மற்றும் தத்துவ ரீதியாக வலுப்படுத்துவதற்குக் கட்சி பல வருடங்களாக நிறைவேற்றிய கடினமான பணிகளின் மூலம் இராணுவக் காரணி வெற்றியடைவது சாத்தியமாயிற்று. இந்திய கம்யூனிஸ்டுகள் உள்பட ''இடது'' கம்யூனிஸ்டுகள் இதைப் புரிந்து கொள்ளவில்லை.

புரட்சிகர யுத்தத்துக்கு இராணுவப் படையெடுப்பை நம்பியதற்கு மற்றொரு காரணியும் உண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 4,00,000 அதிகாரிகள் மற்றும் படைவீரர்களைக் கொண்ட ஒரு சிறிய இராணுவத்தின் உதவியினால் தான் 40 கோடி மக்களைக் கொண்ட மாபெரும் நாட்டைப் பிடித்து 150 வருடங்கள் ஆட்சி செய்தது. சோவியத் ருஷ்யாவுக்கும் சோஷலிசத்துக்கும் ஆதரவாக ஏற்பட்ட முதல் முளைகளை மட்டுமல்லாமல், தேசிய முதலாளி வர்க்கத்தின் தலைமையில் நடந்த ஜனநாயக இயக்கத்தையும் இராணுவத்தின் மூலமாகவே நசுக்க முடிந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின்பலமாக இருந்த இராணுவ பலத்தைப் புரட்சிகரமான இராணுவத்தினால் மட்டுமே நசுக்க முடியும், அத்தகைய இராணுவத்தினால் மட்டுமே சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பாதையைச் செப்பனிட முடியும் என்று இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் கருதினார்கள்.

அவர்களிடம் இன்னும் எஞ்சியிருந்த குட்டி முதலாளித்துவ தேசியப் புரட்சிகர மனோபாவம் அவர்களுடைய நிலையின் மீது பெருமளவுக்குத் தாக்கம் செலுத்தியது. இந்தியப் புரட்சிக்காரர்களில் பலர் வீரசாகசத்திலும் பயங்கரவாதத்திலும் மிகவும் அதிகமான நம்பிக்கை வைத்திருந்

தார்கள். ருஷ்யாவில் முதல் புரட்சி நடைபெற்ற 1905ம் வருடத்தின் போது இந்தியாவின் குட்டி முதலாளி வர்க்க அறிவுஜீவிகளில் தீவிரவாத பகுதியினர் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிப்பதில் இராணுவமே தீர்மான கரமான பாத்திரத்தை வகிக்க முடியும் என்று போதிக்கத் தொடங்கினார்கள். எம்.என்.ராய் இராணுவப் படையெடுப்புக் கருத்தைத் தீவிரமாக ஆதரித்தவர்களில் ஒருவர். இராணுவத்தைப் புரட்சியின் தொடக்கக் காரணியாக உபயோகிப்பது, அதாவது வெளியிலிருந்து வருகின்ற இராணுவப் படையெடுப்பினால் ஏற்படுகின்ற தேசியப் புரட்சிகர யுத்தத்தின் மூலம் இந்தியாவை விடுவிப்பதைப் பற்றிய கருத்துக்கள் இந்திய கம்யூனிஸ்டுகளிடம்—அவர்களுடைய சமீபத்திய கடந்த காலத்தின் எச்சமாக—நீடித்தன. அவர்கள் பெருந்திரளான மக்களிடமிருந்து பிரிந்திருந்தார்கள்; கல்வியில்லாத, அழுத்தப்பட்டிருந்த மக்கள் மத்தியில் வேலை செய்வதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி அவர்களுடைய அச்சங்கள் புரட்சியில் இராணுவக் காரணியின் பாத்திரத்தை மிகைப்படுத்துமாறு செய்தன.

அக்காலத்தில் இந்தியாவில் வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கம் அறவே கிடையாது என்ற நிலை இல்லாவிட்டாலும் மிகவும் பலவீனமாக இருந்தது. அதற்கு பதிலாக, விவசாயிகளுடன் அதன் புரட்சிகரமான கூட்டணிக்கு பதிலாக—கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பதிலாகக் கூட—இராணுவத்தை உபயோகிக்க முடியும் என்று இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் கருதினார்கள். பெருந்திரளான மக்கள் சோஷலிஸ்ட் புரட்சி அவசியம் என்று பார்க்காவிட்டாலும்—அவர்களால் அப்படிப் பார்க்க முடியவில்லை என்பது இயற்கையே—இராணுவத்தின் உதவியுடன் பெருந்திரளான மக்களை சோஷலிஸ்ட் புரட்சிக்குக் கிளர்ந்தெழச் செய்ய முடியும் என்று அவர்கள் கருதினார்கள். ஆகவே உழைக்கும் மக்கள் மத்தியில் புரட்சிகர வேலை செய்வதற்கு பதிலாக—மார்க்சிய-லெனினிய மூலவர்கள் எப்பொழுதுமே தவறு என்று கூறிய* வழியைப் பின்பற்றி—அவர்கள் மீது

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, Moscow, 1975, p. 331; வி.இ.லெனின், ''சுயநிர்ணயம் பற்றிய விவாதத்தைத் தொகுத்துரைத்தல்'', **பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கம் 229.

''ஆசிகளைச்'' சுமத்துவதற்கு விரும்பினார்கள். அக்காலத்தில் இந்திய கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல, சீனா, துருக்கி, கொரியா, இரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளும் இக்கருத்தைக் கொண்டிருந்தார்கள்.

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த முதல் கம்யூனிஸ்டுகள் தத்துவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முதிர்ச்சி இல்லாமலிருந்தது புரட்சியில் இராணுவக் காரணியின் பாத்திரத்தை அவர்கள் மிகைப்படுத்துவதற்குக் காரணமாக இருந்தது என்பது தெளிவு.

இராணுவத்தின் மூலம் புரட்சியைக் கொண்டு வரும் தன்னுடைய திட்டத்தை ராய் மாஸ்கோவிலிருந்த பொழுதே தீட்டத் தொடங்கினார். இந்தியக் குடியேறிகள் பல்லாயிரக்கணக்கில் துருக்கிஸ்தானுக்கு வரப் போகிறார்கள், அவர்களைக் கொண்டு புரட்சிகரப் படையை அமைக்க முடியும், பாமீர் மலையிலிருந்து பலூச்சிஸ்தான் வரை, அதாவது டூராண்டு எல்லைக் கோடு என்று சொல்லப்படுகின்ற பிரதேசத்தில் வசிக்கின்ற சுதந்திரமான இனக்குழுவினரைக் கொண்ட படைப்பிரிவுகளை அதற்குத் துணையாகக் கொள்ள முடியும் என்று அவர் நம்பினார்.

விடுதலைப் படையை அமைப்பதில் தனக்கு உதவி செய்ய வேண்டும் என்று ராய் சோவியத் அதிகாரிகளை வற்புறுத்தினார். ''உரிய காலத்தில் (இந்தியா மீது) தாக்குதலைத் தொடங்கும் பொழுது எல்லைப் பகுதிகளில் வசிக்கின்ற இனக்குழு மக்கள் உபயோகமாக இருப்பார்கள்'' என்று ராய் 1920 நவம்பர் 25ந் தேதியன்று ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் புரட்சிகர இராணுவக் கவுன்சிலின் துணைத் தலைவர் ஏ.எம். ஸ்கிலியான்ஸ்கிக்கு எழுதினார். இந்தியாவுக்கு வெளியே அமைக்கப்படவிருக்கின்ற படை இந்தியாவில் சோஷலிஸ்ட் புரட்சிக்கு உத்திரவாதம் அளித்திருக்க வேண்டும்.

ஷௌகத் உஸ்மானி ஏதோ முடிந்து போன ஒன்றை நினைவூட்டுவதைப் போல எம்.என். ராய்க்குப் பின்வருமாறு எழுதினார்: ''இந்தியாவில் கம்யூனிஸ்ட் புரட்சியை ஆரம்பிப்பதற்கு முன்பு நாம் நாட்டைப் பிடிக்க வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய வேலை சுலபமாக இருக்கும்'' (மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா.). அத்தகைய இராணுவத்தில் கிலாபத் இயக்கத்துக்காக நாட்டைத் துறந்த இந்

தியர்களோ அல்லது எல்லைப் பகுதிகளில் குலத்தலைமை முறையில் வசிக்கின்ற இனக்குழு மக்களின் படைவீரர்களோ, எப்படிப்பட்டவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு சோஷலிசத்தைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்காது. இவர்களைக் கொண்ட படையை உபயோகிப்பது எப்படிப் பொருந்தும் என்று இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் சிந்திக்கவில்லை.

அவர்கள் **எல்லைப் பகுதிகளிலும் இந்தியாவிலும் இராணுவ நடவடிக்கைத் திட்டம்*** தயாரித்தார்கள். படையெடுக்கின்ற இராணுவம் ''இனக்குழு மக்களைக் கொண்டிருக்கும், ஆகவே அது கூலிப்படையாக இருப்பது இயற்கையே'' என்று இத்திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. கூலிப் படை கொள்ளையடிப்பதில் சுலபமாக ஈடுபடக் கூடும் என்பதால் அப்படை முதலில் பிரிட்டிஷ் படைகளைத் தாக்குவதற்கும், தனிப் பிரதேசங்களையும் மாவட்டங்களையும் விடுவிப்பதற்கும் மட்டும் உபயோகிக்கப்படும் என்று திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உடனடியாகப் புரட்சிகர அதிகாரம் நிறுவப்படும், பாட்டாளி வர்க்கப் படைகள் அமைக்கப்படும். மேலும் கூலிப்படைகளின் தலைமை கம்யூனிஸ்ட் அதிகாரிகளிடம் இருக்கும். பாட்டாளி வர்க்க இராணுவம் படிப்படியாகப் படையெடுத்த கூலிப்படைக்குச் சமமான பலத்துடன் உருவாகும், பிறகு ''நாட்டில் முன்னேறிச் செல்கின்ற புரட்சிகர இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும்''. ஆகவே புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்காது, இராணுவமே தலைமை தாங்கும்.

இந்தியாவில் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய புரட்சியை உறுதிப்படுத்துவதற்குரிய இராணுவ நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதுடன் திட்டம் நின்று விடவில்லை. ''இந்தியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இறுதி வெற்றி வலிமையான, சிறப்பான கட்டுப்பாட்டைக் கொண்ட கட்சி அமைக்கப்படுவதைப் பெருமளவில் சார்ந்திருக்கிறது. அக்கட்சி தொழிலாளர்கள் மற்றும் நிலமில்லாத ஏழை விவசாயிகள் மத்தியில் விரிவான முறையில் கொள்கைப் பிரச்சாரம் செய்யும்'' என்று திட்டத்தில்

---

* *Plan of Military Operation on the Borders and in India*, அ.பு.ப.ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 489, தாள்கள் 10—11.

கூறப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் வந்த பகுதி இச்சரியான கருத்துக்கு எவ்விதமான அர்த்தமும் இல்லாமல் செய்தது. ''நாட்டின் இன்றைய நிலையும் மக்களின் இன்றைய நிலைமைகளும் அமைப்பு மற்றும் பிரச்சார வேலைகள் அனைத்தையும் அறவே இயலாதபடிச் செய்யவில்லை என்ற போதிலும் பலனளிக்க முடியாதபடிச் செய்திருக்கின்றன.'' எனவே ''புரட்சியை ஆரம்பிப்பதற்குப் பரந்த அளவில் இராணுவ நடவடிக்கைகள் அவசியமாக இருக்கின்றன''. பெருந்திரளான மக்களிடம் பிரச்சார வேலை செய்ய வேண்டும் அல்லது ''சாத்தியமென்றால் இராணுவ நடவடிக்கை பொது வேலை நிறுத்தத்துடன் சேர்ந்து நடைபெற வேண்டும்'' என்பதைப் போன்ற சொற்றொடர்கள் திட்டத்தில் இடம் பெற்றிருந்த போதிலும் அவை விசேஷமாக எதையும் குறிப்பிடவில்லை. ஏனென்றால் அவை முதல் முக்கியத்துவம் உடையவையாகக் கருதப்படவில்லை, துணை முக்கியத்துவம் உள்ளவையாகவே கருதப்பட்டன.

வெகுஜனப் பாட்டாளி வர்க்க மற்றும் விவசாய இயக்கம் இல்லாமல், பெருந்திரளான மக்கள் மத்தியில் கட்சியின் பிரச்சார மற்றும் அமைப்பு வேலை இல்லாமல் இத்திட்டம் புரட்சியின் அமைப்பைத் தலைகீழாக்கியது.

புரட்சிகர யுத்தத்தை வெகுஜனப் புரட்சியாக மாற்றுவதற்குத் திட்டம் முன்வைத்த வழியை இங்கே குறிப்பிடுவது அவசியம். இராணுவம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை செய்த பிறகு அங்கே தற்காலிகமான புரட்சிகரத் தொழிலாளி வர்க்க ஆட்சியை நிறுவும். அந்த ஆட்சி தன்னுடைய சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் மூலம் ''பாட்டாளி வர்க்கத்தின் செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது'', ஆகவே புரட்சி சோஷலிஸ்ட் தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத் தொடங்கும். ''பெருந்திரளான மக்கள் புரட்சியில் உற்சாகத்தோடு ஈடுபடுவதற்கு'' அவ்வாறு எடுத்துக்காட்டுவது அவசியம். அதன் விளைவாக விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆயுதமேந்திய எழுச்சிகள் நடைபெறும். அதிகமான பிரதேசங்கள் விடுவிக்கப்பட்ட பிறகு பிராந்திய எழுச்சிகள் ஒரு மாபெரும் அகில இந்திய எழுச்சியில் ஒன்று சேரும். பிரிட்டிஷ் ஆட்சி தூக்கியெறியப்படும், கம்யூனிஸ்ட் கட்சியினால் தலைமை தாங்கப்படுகின்ற தற்காலிக

தொழிலாளர்கள் அரசாங்கம் சமூகத்தை சோஷலிஸ்ட் முறையில் புனரமைப்பதற்குத் தொடங்கும். ராய் தயாரித்த இராணுவத் திட்டம் அவருடைய கருத்துக்களின் மொத்த அமைப்பின் ஒன்றிணைந்த பகுதியாக இருந்தது. அவருடைய சுயவிருப்ப முத்திரையைக் கொண்டிருந்த இராணுவத் திட்டம் முரட்டுத்துணிச்சலாக மட்டுமே இருந்தது.

இராணுவத்தைக் கொண்டு ஆப்கானிஸ்தான் மூலம் இந்தியாவின் மீது படையெடுக்கின்ற திட்டம் நடைமுறை சாத்தியமற்றது, முரட்டுத் துணிச்சலானது என்று லெனின் தன்னிடம் வற்புறுத்தினார் என்று ராய் பிற்காலத்தில் நினைவுக் குறிப்புகளில் எழுதினார். அப்படிப்பட்ட இராணுவத்தை அமைக்கின்ற கருத்து யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது, நாட்டில் புரட்சிகர நிலைமையை உருவாக்குவதற்கு உதவக்கூடிய வேறு மாதிரியான போராட்ட முறைகள் தேவை என்று லெனின் வலியுறுத்தினார்.*

வி.இ. லெனின் 1918இல் வெகுஜனங்கள் இன்னும் பக்குவமடையாத நிலையில் அவர்கள் புரிந்து கொள்ள முடியாத கடமைகளை நிறைவேற்றும்படி அவர்களை நிர்ப்பந்தித்து ''ஆசிகளைத்'' திணிக்கின்ற கோட்பாட்டைப் பற்றிய போல்ஷிவிக்குகளின் நிலையைத் தெளிவுபடுத்தினார். ''உழைப்பாளி மக்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைவது வெளியிலிருந்து நடைபெற முடியாது, உழைக்கும் மக்கள் தாமாகவே தங்களுடைய போராட்டத்தின் மூலம், தங்களுடைய இயக்கத்தின் மூலம், தங்களுடைய கிளர்ச்சியின் மூலம் புதிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற கற்றுக்கொள்ள வேண்டும்; இந்த வரலாற்றுக் கடமை எவ்வளவு அதிகக் கடினமானதாக, அதிகப் பெரியதாக, அதிகப் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அதை நிறைவேற்றுவதில் சுதந்திரமான பங்கு வகிக்கின்ற நோக்கத்துடன் சேர்க்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்க வேண்டும். இவற்றை நாம் எப்பொழுதுமே கூறி வந்திருக்கிறோம்''** என்று லெனின் கூறினார்.

---

* *M. N. Roy's Memoirs*, p. 417.

** V. I. Lenin, "Fourth Conference of Trade Unions and Factory Committees of Moscow, June 27—July 2, 1918", *Collected Works*, Vol. 27, Progress Publishers, Moscow, p. 469.

எம்.என். ராயும் அவருடைய குழுவினரும் இதற்கு எதிரிடையான நோக்கத்தைக் கொண்டிருந்தார்கள்; வெகு ஜனங்கள் இல்லாமல், அவர்கள் நேரடியாகப் பங்கெடுக்காமல் ஒரு புதிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முயற்சி செய்தார்கள். எல்லைப் பகுதிகளிலும் இந்தியாவிலும் இரா ணுவ நடவடிக்கைத் திட்டம் இக்கடமையை நிறைவேற்றும் என்று ராய் நம்பியிருக்க வேண்டும்.

இந்தியப் புரட்சிக் கமிட்டி தாஷ்கன்டில் புரட்சிகர இராணுவத்தை உருவாக்குகின்ற திட்டத்தை அமுலாக்கத் தொடங்கியது. முதலில் புரட்சிகர இராணுவத்தின் அதிகாரி களுக்குப் பயிற்சி கொடுப்பதென்று முடிவு செய்தது. இவர் கள்தான் மேற்கூறிய இராணுவத்தை உருவாக்க வேண்டும். இராணுவப் பயிற்சிப் பள்ளிக்குத் திட்டம் 1920 அக்டோபர் 5ந் தேதி வாக்கில் தயாராகிவிட்டது. இந்தியப் புரட்சிக் கமிட்டி ''இராணுவப் பயிற்சிப் பள்ளியை அமைப்பதைத் தன்னுடைய முக்கியமான வேலையாகக்'' கருதுகிறது என்று அதன் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையில் எழுதப் பட்டிருந்தது.

இராணுவப் பயிற்சிப் பள்ளியில் வகுப்புகளை நடத்து வதற்கு அவசியமான தளவாடங்களையும் பயிற்சி ஆசி ரியர்களையும் வழங்கி உதவி செய்ய வேண்டுமென்று சோவி யத் அரசாங்கத்தை இந்தியப் புரட்சிக்காரர்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்தில் இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு குறிப் பிட்ட நிதியும் ஆயுதங்களும் தருவதென்று ருஷ்ய கம்யூ னிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டியின் பேர வைக் கூட்டம் விசேஷ முடிவெடுத்தது.* கம்யூனிஸ்ட் அகி லமும் அதை அங்கீகரித்தது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்களின் ஆயுதமேந்திய போராட்டங்களில் பங்கெடுப் பதற்கு விரும்பிய இரானிய, துருக்கிய புரட்சிக்காரர்களுக்கு உதவி செய்வதைப் பற்றிய பிரச்சினையிலும் இம்மாதிரியான முடிவுகளெடுக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் (இவர்களின் லட்சியங்கள் சோவியத் குடியரசின் நலன்

* ரோ. அ. உலியனோவ்ஸ்கி, தேசிய விடுதலைப் போராட்டம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கங்கள் 433—446 பார்க்க.

களோடு முழுவதுமாக ஒத்துப்போயின) ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்துகின்ற விடுதலைப் போராட்டத்துக்கு உதவி செய்கின்ற சோவியத் கொள்கையைப் பின்பற்றி இம்முடிவுகள் செய்யப்பட்டன. இந்தியா, இரான், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்களுக்குப் பொருளாயத உதவி மற்றும் இராணுவ, அரசியல் பயிற்சி அந்த உதவியின் முக்கியமான வடிவங்களாகும். இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளின் காரியசாத்தியமற்ற திட்டங்களுக்கும் இந்த உதவிக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. அதைப்போல சோவியத் ருஷ்யா துருக்கி, இரான் அல்லது இந்தியா மீது படையெடுத்துப் பிடிக்க விரும்பியது என்று முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர்கள் எழுதுவதற்கும் சம்பந்தமில்லை. அகில இந்திய மத்திய புரட்சிக் கமிட்டி நிறுவியுள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளிக்கு என்.அ.கிசெலேவ் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக துருக்கிஸ்தான் போர்முனைக்கான ஆணையில் 1920 அக்டோபர் 11இல் அறிவிக்கப்பட்டது. அவர் டிசம்பர் 21ந் தேதியன்று உயர்நிலைப் பயிற்சிக்கு மாஸ்கோ சென்றபடியால் அவருக்கு பதிலாக கோடயார்கனவ் நியமிக்கப்பட்டார்; 1921 பிப்ரவரியில் ஜி.என். ஃபிரலோவ் அவருடைய இடத்தில் நியமிக்கப்பட்டார்.

அ.எம். தரக்கானவ் இராணுவப் பயிற்சிப் பள்ளியின் அரசியல் இயக்குநராக 1920 டிசம்பர் 11இல் நியமிக்கப்பட்டார். இந்தியர்களின் அரசியல் கல்விக்கும் பயிற்சிக்கும் அவர் முக்கியமான பொறுப்பைக் கொண்டிருந்தார். அவர் 27 வயது நிறைந்தவர். முன்பு விவசாயியாகவும் பிறகு நெசவாலைத் தொழிலாளியாகவும் இருந்து 1917 ஜூன் மாதத்தில் போர்முனையில் இருந்த பொழுது கட்சியில் சேர்ந்தவர். அக்டோபர் புரட்சி நடைபெற்ற பொழுது படைப்பிரிவின் புரட்சிகரக் கமிட்டியின் தலைவராக இருந்தார். 1920இல் அவர் முதல் மாஸ்கோ பீரங்கிப்படை மற்றும் காலாட்படை வகுப்புகளின் உதவி அரசியல் இயக்குநராகக் குறைந்த காலம் சேவை செய்தார். பிறகு தாஷ்கன்டிலிருந்த இந்தியர்களுக்கு உதவி செய்வதற்காக அனுப்பப்பட்டார்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இராணுவப் பயிற்சி ஆசிரியர்களைக் கொண்ட தூதுக்

குழுவை சோவியத் அரசாங்கம் காபூலுக்கு அனுப்பியது. ஆனால் பிரிட்டிஷ் நிர்ப்பந்தத்தின் காரணமாக எமீர் அவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கவில்லை. அவர்கள் தாஷ்கன்டில் தங்கியிருந்தார்கள். அவர்களில் பலர் இந்தியர்களுடைய இராணுவப் பயிற்சிப் பள்ளியின் கல்வி, பயிற்சி மற்றும் நிர்வாகப் பிரிவுகளில் வேலை செய்தார்கள்.

இந்த இராணுவப் பள்ளியில் இந்தியர்களுடன் சோவியத் குடிமக்கள் மட்டுமல்ல, பல நாடுகளைச் சேர்ந்த முந்திய யுத்தக்கைதிகளும் வேலை செய்தார்கள். இவர்கள் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற பொழுது உதவி செய்வதற்காக வந்த சர்வதேச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆஸ்திரியர்கள், ஜெர்மானியர்கள், ஸ்லோவாக்கியர்கள். இப்பயிற்சிப் பள்ளியின் படைப் பிரிவின் கமாண்டராக நியமிக்கப்பட்ட ஆஸ்திரிய கம்யூனிஸ்டாகிய அன்டோன் கிரனேடேர் நமூனாவில் ''நாடு'' என்ற கேள்விக்கு எதிரில் ''சர்வதேசியவாதி'' என்று எழுதியது குறிப்பிடத்தக்கது.

அப்பள்ளியில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்ச்சி நிலவியது. அது இளம் இந்தியப் புரட்சிக்காரர்களின் அரசியல் கல்விக்கு மிகவும் உதவியாக இருந்தது. நவம்பர் 10ந் தேதியன்று பதினொரு இந்தியர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எல்லோருமே விமானப் படைப் பிரிவில் வைக்கப்பட்டனர். நவம்பர் 12ந் தேதியிலிருந்து விமானத் தளபதி வி.வி. கோப்பேயின் மேற்பார்வையில் வகுப்புகள் தொடங்கின. வகுப்புக்களுக்கான மாணவர்கள் மெதுவாக வந்து கொண்டிருந்தனர். டிசம்பரில் இன்னும் எட்டு இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாவது குழு சேர்ந்த பிறகு காலாட்படை-இயந்திரத் துப்பாக்கிப் பிரிவு செயல்படுவதற்குத் தொடங்கியது. இராணுவப் பள்ளியில் வேறு பிரிவுகள் இல்லை. 1921 ஜனவரியில் ஒன்பது நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பிப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் 27 மாணவர்கள் இருந்தார்கள். ஏப்ரல் 25க்குப் பிறகு இந்த எண்ணிக்கை 40ஆக உயர்ந்தது. முதலில் 110 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் இராணுவப் பாடங்களைக் கற்பதற்குரிய தகுதியுடைய இந்தியர்கள் இதற்குமேல் இல்லை. கல்வி கற்காத 10 இந்தியர்கள் சாதாரணப் படைவீரர்களின் அந்

தஸ்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இராணுவப் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட பிறகு அதில் படிக்க விரும்பு கின்ற மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை என் பது கண்டுபிடிக்கப்பட்டது. எம்.என். ராயின் இடது குறுங் குழுவாத செயல்முறைகளே இதற்குக் காரணம். புரட்சிக் கமிட்டிக்கும் இந்தியப் புரட்சிச் சங்கத்துக்கும் இடையில் சச்சரவுகள் முடிவில்லாதபடி நடந்து கொண்டிருந்தன. அதன் காரணமாக இராணுவப் பள்ளியில் சேருவதற்கு விரும்பிய சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர் சேரவில்லை.

மாணவர்கள் சோஷலிஸ்ட் புரட்சியின் நோக்கங்களைக் கற்க வேண்டும் என்று ராயும் அபனி முக்கர்ஜியும் கூறிய படியால் தேசியவாத நிலைகளைக் கொண்ட இந்தியர்கள் இப்பயிற்சியிலிருந்து ஒதுக்கப்பட்டனர். எனினும் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டவர்கள் கூட எம்.என். ராய் வகுத்தளித்த நோக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. ''மாணவர்களுக்கு சோஷலிசத்தைப் பற்றி எதுவுமே தெரியாதபடியால் அவர் களிடம் இன, மதத் தப்பெண்ணங்கள் அதிகமாக இருக் கின்றன'' என்று அ.எம். தரக்கானவ் எழுதினார்.

இது போதாதென்று ராய் மிகவும் அவசரப்படவும் செய்தார். மாணவர்கள் முறையான அரசியல் பயிற்சி பெறு கின்ற வரை அவரால் பொறுத்திருக்க முடியவில்லை. உடனே சோஷலிஸ்ட் புரட்சி நடைபெற வேண்டும் என்று அவர் விரும்பினார். சோவியத் இராணுவப் பயிற்சிப் பள்ளி களில் இந்தியர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது, ''ஏனென்றால் மிகவும் நீண்ட பாட திட்டம் அங்கே பின் பற்றப்படுகிறது...'' இந்தியர்கள் ''கூடிய விரைவில் பயிற்சி பெற்று வேலை செய்வதற்காக இந்தியாவுக்கும் அதன் எல் லைப் புறங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்'' என்று ராய் 1920 நவம்பர் 20இல் ஏ.எம்.ஸ்கிலியான்ஸ்கிக்கு எழுதி னார். இராணுவப் பள்ளி ஏழு மாதங்களுக்கும் குறைந்த காலமே நடைபெற்றது. அது மூடப்பட்டுவிட்டதென்று 1921 ஏப்ரல் 27ந் தேதியன்று அறிவிக்கப்பட்டது. மாணவர் கள் சோவியத் ருஷ்யாவில் உள்ள மற்ற இராணுவப் பயிற்சி நிலையங்களில் தம் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புத் தரப்பட்டது.

இராணுவப் பயிற்சிப் பள்ளி குறைந்த காலமே இயங்கி யது என்றாலும் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகித்தது.

சோவியத் தளபதிகளும் அரசியல் அதிகாரிகளும் தம்முடைய மொத்த இராணுவ மற்றும் அரசியல் அனுபவத்தை இந்தியச் சகோதரர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று உற்சாகத்துடன் பாடுபட்டார்கள். இராணுவப் பள்ளியில் பணியாற்றிய சோவியத் அதிகாரிகளைப் பற்றி 1921 மார்ச்சில் அ.எம். தரக்கானவ் பின்வருமாறு எழுதினார்: ''உள்நாட்டு யுத்தத்திலும் புரட்சிகரப் போராட்டங்களிலும் செஞ்சேனையின் தளகர்த்தருக்கு இன்றியமையாததாக உள்ள இராணுவக் கலை அறிவை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களிடம் உணர்வுபூர்வமான புரட்சிகரக் கட்டுப்பாட்டை வளர்க்க வேண்டுமென்றும் ஆசிரியர்கள் அக்கறையுடன் இருக்கிறார்கள்.'' ''தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து'' உருவாகிய புரட்சிக்காரர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள், அவர்கள் ''மாணவர்களோடு நெருக்கமான ஒற்றுமையுடன் வசிக்கிறார்கள்''* என்று மேலும் எழுதினார்.

ரபீக் அகமது சோவியத் ருஷ்யாவுக்கு வந்த பிறகு கம்யூனிஸ்ட் ஆனவர். அவர் இந்தப் பள்ளியில் பயிற்சி பெற்றவர். அவர் பிற்காலத்தில் இப்பள்ளியைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: ''நாங்கள் இயந்திரத்துப்பாக்கிகளை உபயோகிப்பதைக் கற்றுக் கொண்டோம். எங்களுக்கு பீரங்கிகளையும் பற்றி கற்பிக்கப்பட்டது. சிலர் விமானம் ஓட்டுகின்ற பயிற்சி பெற்றார்கள். நாங்கள் வாடிக்கையான அணிவகுப்புப் பயிற்சிகளைச் செய்தோம். புதிதாக நிறுவப்பட்ட இராணுவப் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சியைத் தவிர அரசியல் பயிற்சியையும் கொடுத்தது''** என்றும் அவர் எழுதினார்.

இராணுவப் பள்ளியை நடத்துவதில் பல கஷ்டங்கள் இருந்தன. ஆசிரியர்கள் பற்றாக்குறை, போதிய தளவாடங்கள் இல்லை, வகுப்புகளில் ருஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து உருது மொழியிலும் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டியிருந்தது.

மேற்கூறிய இடர்ப்பாடுகளை அகற்ற இயன்றவை

---

* சோ. இ.ம.அ.ஆ.கா, தொகுப்பு 25025, பட்டியல் 1, பத்திரம் 11, தாள்கள் 1, 11.

** Muzaffar Ahmad, *The Communist Party of India and its Formation Abroad*, p. 30.

எல்லாம் செய்யப்பட்டன. இராணுவப் பள்ளியின் கட்சி மற்றும் சமூக நடவடிக்கைகளில் நன்கு பங்கேற்கும்படி இந்தியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்ட கம்யூனிஸ்ட் செல் அமைக்கப்பட்டது. இந்தியர்கள் சுவாரசியமான பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். இந்தியர்கள் ''ருஷ்யா-நிலவு'' என்ற நாடகத்தைத் தயாரித்தார்கள் என்று தரக்கானவ் எழுதியுள்ளார். இந்த நாடகத்தை இருபது வயது நிரம்பிய கவிஞர் ஹபீப் வாஃபா எழுதித் தயாரித்திருக்க வேண்டும். இவர் இராணுவப் பள்ளி மாணவர்களின் கலாச்சார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராக இருந்தார். பிற்காலத்தில் இவர் சோவியத் குடியுரிமையைப் பெற்றார். சோவியத் எழுத்தாளர்கள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். அவருடைய கவிதைகள் இலக்கிய ஏடுகளில் வெளியிடப்பட்டன; நாடகங்கள் சோவியத் கலையரங்கங்களில் நடிக்கப்பட்டன. அவர் கீழ்த்திசை ஆராய்ச்சி நிலையத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். இங்கே இந்தி மொழிப் பிரிவிற்குத் தலைமை தாங்கினார், சோவியத் யூனியனில் முதன் முதலாக விஞ்ஞான முறைப்படியான இந்தி மொழி பாட போதனை முறையை உருவாக்கினார்.

இந்தியர்களுக்கென்று அமைக்கப்பட்ட இராணுவப் பயிற்சிப் பள்ளியில் இராணுவப் பயிற்சி எவ்வளவு வெற்றிகரமாக இருந்தது என்பதை நாம் உறுதியாகக் கூற இயலாது. ஆனால் அரசியல் கல்வி வெற்றிகரமாக இருந்தது. சமூகப் பாடங்களை போதித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் மாணவர்கள் தம் ஆசிரியர்கள் உள்பட சோவியத் மக்களுடன் நெருங்கிப் பழகியதும் நாட்டின் பொது விவகாரங்களில் பங்கெடுத்ததும் அதற்குக் காரணங்களாகும். பல இந்தியர்கள் சோஷலிஸ்ட் கருத்துக்களையும் சோஷலிஸ்ட் அரசின் தன்மை மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும் என்ற லெனினுடைய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அதன் கொள்கையின் சாராம்சத்தையும் நன்றாக அறிந்தனர். பிந்திய கட்டத்தில் இந்தியப் புரட்சிக்காரர்கள் தங்கள் அறிவையும் இந்தியாவை எதிர்நோக்கியுள்ள கடமைகளைப் பற்றி தாங்கள் சோவியத் ருஷ்யாவில் பெற்ற தெளிவையும் தாய் நாட்டுக்கு எடுத்துச்

சென்றார்கள். இந்தியா மீது சோவியத் ருஷ்யா படையெடுக்கப் போகிறது என்று பீதியைக் கிளப்புவதன் மூலம் போல்ஷிவிசத்தின் சித்தாந்தத் தாக்கத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மறைத்த போதிலும் இதைப் பற்றியே மிகவும் அதிகமாக அஞ்சியது.

* * *

சோவியத் ருஷ்யா ஆரம்பத்திலிருந்தே இந்தியா மீது படையெடுத்து அதைப் பிடிப்பதற்குத் திட்டம் போட்டது, அதற்காக சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்று முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர்கள் இன்னும் எழுதுகிறார்கள்.

ஜி. பாந்த்யோபாத்யாயா என்னும் இந்திய வரலாற்றாசிரியர் இக்கருத்துடையவர். சோவியத் அரசாங்கம் இந்தியாவை ஆக்கிரமிப்பதற்குத் திட்டமிடுகிறது என்னும் பொய்யை பிரிட்டிஷ் பத்திரிகைகள் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகும், குறிப்பாக மூன்றாவது ஆங்கில-ஆப்கானிய யுத்தத்தின் போதும் (1919) அதன் பிறகும் பரப்பி வந்தன. ஆனால் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்கள் அப்பொய்யைச் சிறிதும் நம்பவில்லை என்பதை இந்த வரலாற்றாசிரியர் ஒத்துக்கொள்கிறார். ''போல்ஷிவிக் ஆபத்து என்று சொல்லப்படுவதை நான் எப்பொழுதுமே நம்பியதில்லை'' என்று காந்தி கூறியதாக பாந்த்யோபாத்யாயா மேற்கோள் காட்டுகிறார்.

''ஆசிய நாடுகளுடன் சோவியத் யூனியனுடைய நெருக்கமான உறவும் ஆப்கானிஸ்தானில் அரசர் அமானுல்லாவின் பிரிட்டிஷ் எதிர்ப்புக் கொள்கையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அப்பட்டமான ஒடுக்குமுறைத் தன்மையைத் தடுக்க உதவின''* என்று காந்தி கூறியதை மேற்கோள் காட்டிய இவரால் இத்துடன் நிற்கவில்லை, தனக்கே உடன்பாடில்லாத முடிவுகளை இவர் செய்ய வேண்டியிருந்தது. ''கம்யூனிஸ்ட் கருத்தை சித்தாந்த ரீதியில் சிறிதளவு கூட ஆதரிக்காத'' மகாத்மா காந்திகூட ''சோவியத் யூனியன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உலகத்தில்

* D. Bandyopadhyaya, *Indian Nationalism..*, pp. 143, 144.

சுதந்திரத்துக்காகப் பாடுபடுகிறது'' மற்றும் ''ருஷ்யப் புரட்சி இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உதவி செய்திருக்கிறது'' என்று இந்த சமயத்தில் கருதிய தாகத் தோன்றுகிறது என்று அவர் எழுதுகிறார். ''ஒப்புநோக்கில் காங்கிரசின் பழமைவாதத் தலைவர்கள்கூட ருஷ்யப் புரட்சியின் முதல் வருடங்களில் அதற்குச் சாதகமான கருத்தைக் கொண்டிருந்தார்கள்'' என்று அவர் மேலும் சுட்டிக் காட்டுகிறார்.

அப்படியானால் அநேகமாக யதார்த்தமான இந்த முடிவுகளை அவர் தம்முடைய புத்தகத்தின் சோவியத் எதிர்ப்புப் போக்கிற்கு எப்படி உபயோகிக்கிறார்? சோவியத் அரசாங்கம், லெனின் மற்றும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைப் பற்றி இந்தியாவின் தேசியத் தலைவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, எனவே அக்டோபர் புரட்சிக்குச் சாதகமான முறையில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் செல்லத்தக்கவை அல்ல என்று பாந்த்யோபாத்யாயா அறிவிக்கிறார். ''இந்தியாவைப் பற்றி லெனின், போல்ஷிவிக் அரசாங்கம் மற்றும் கம்யூனிஸ்ட் அகிலம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த சித்தாந்த, செயல்திட்ட, செயல்தந்திர இலக்குகள் மற்றும் தாஷ்கன்டிலும் மத்திய ஆசியாவின் இதர பகுதிகளிலும் சோவியத் நடவடிக்கைகளின் தன்மை ஆகியவற்றைப் பற்றி இச்சமயத்தில் இந்தியத் தலைவர்களுக்குத் தெரியாது என்பதை இக்கருத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன''* என்று அவர் எழுதுகிறார்.

சோவியத் எதிர்ப்புத் தலையீட்டில் இங்கிலாந்து ஈடுபட்டிருந்ததை நியாயப்படுத்துவதற்காக இந்தியாவைப் பிடிக்க சோவியத் ருஷ்யா திட்டமிடுகிறது என்னும் குற்றச்சாட்டுகளை 1920க்களின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் பிரச்சாரம் பரப்பியது. பொதுவாக எல்லா ஏகாதிபத்திய அரசுகளுமே அச்சமயத்தில் சோவியத் அதிகாரம் ''தணிக்க முடியாத ஆக்கிரமிப்பு வெறி'' கொண்டிருக்கிறது, அநேகமாக உலக முழுவதையும் பிடிப்பதற்கு முயற்சி செய்கிறது என்று குற்றம் சாட்டின. வி.இ. லெனின் இத்தகைய போலிக் குற்றச்சாட்டுகளை கிண்டல் செய்து அவற்றின் வர்க்கத்

---

* Ibid., pp. 143, 144, 145.

தன்மையை அம்பலப்படுத்தினார். ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் எட்டாவது காங்கிரசில் கட்சியின் செயல்திட்டத்தைப் பற்றி உரையாற்றுகின்ற பொழுது அவர் பின்வருமாறு கூறினார்: ''நாம் ஜெர்மனியைப் படையெடுத்து வெல்ல விரும்புகிறோம் என்று ஷெய்டெமன் ஆதரவாளர்கள் ஏற்கெனவே நம்மைப் பற்றி கூறுகிறார்கள். இது நிச்சயமாயும் கேலிக்கிடமானது, முட்டாள்தனமானது. ஆனால் முதலாளி வர்க்கத்தினருக்கு அவர்களது சொந்த நலன்களும் சொந்தப் பத்திரிகைகளும் உள்ளன. கோடிக் கணக்கான பிரதிகள் மூலம் இப்பத்திரிகைகள் இதை உலகம் முழுவதிற்கும் ஓங்கிப் பறைசாற்றுகின்றன. வில்சனும் தனது சொந்த நலன்களுக்காக இதை ஆதரிக்கிறார். போல்ஷிவிக்குகளிடம் பெரிய சேனை இருக்கிறது, அவர்கள் படையெடுத்து வெல்வது மூலம் ஜெர்மனியில் தமது போல்ஷிவிசத்தை நடவு செய்ய விரும்புகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள்.''*

இக்காலத்திலுள்ள மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் கூட இதே குற்றச்சாட்டை முன்னைக் காட்டிலும் அதிகமாகக் கூறுகிறார்கள்; அதை நிரூபிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். டேவிட் ட்ரு என்னும் அமெரிக்க வரலாற்றாசிரியர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர். அவர் **சோவியத் ருஷ்யாவும் இந்தியக் கம்யூனிசமும்** என்கின்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அது அப்பட்டமான சோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் புத்தகமாக இருக்கிறது. அதில் இந்தியப் புரட்சிக்காரர்கள், அவர்களுடைய திட்டங்கள், தப்பெண்ணங்களைப் பற்றி முற்றிலும் இகழ்ச்சியாக ஆசிரியர் எழுதியிருக்கிறார். பாந்த்யோபாத்யாயா தன்னுடைய கருத்துக்களை நிரூபிப்பதற்கு இப்புத்தகத்தின் வாதங்களையே வழக்கமாகச் சான்று காட்டுகிறார். ட்ரு ருஷ்ய-இந்திய உறவுகளின் வரலாற்றைப் பற்றி எழுதும் சாக்கில் ஜார் பாவெல் மற்றும் முதலாம் அலெக்சாந்தர் நெப்போலியனுடன் சேர்ந்து இந்தியாவைத் தாக்கி பிரிட்டனை நசுக்குவதற்குத் திட்டமிட்டதையும் 19ம் நூற்றாண்டில் மற்ற ருஷ்ய ஜார்கள் இந்தியாவின் மீது படையெடுப்பதற்குச்

* வி.இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 207.

செய்த முயற்சிகளையும் குறிப்பிடுகிறார். பிறகு இவை எப்படி இருந்த போதிலும் ''இந்தியா மீது படையெடுத்து இந்தியர்களை விடுதலை செய்கின்ற அல்லது தீபகற்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு பதிலாக ருஷ்ய ஆட்சியை ஏற்படுத்து கின்ற நோக்கம் ஜாரிஸ்ட் ருஷ்யாவுக்கு இல்லை'' என்று முடிவு செய்கிறார். ஆனால் சோவியத் நோக்கம் ''முற்றி லும் வேறுவிதமானது''* என்று அவர் எழுதுகிறார். ''உலகப் புரட்சித் திட்டம் இந்தியாவுக்குக் கையாளப்படுகின்ற பொழுது பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி என்னும் தீவிரமான இந்திய ஸ்தாபனத்தின் ஆட்சி என்ற பெயரில் மறைமுகமான ருஷ்ய ஆட்சியை ஏற்படுத்துவதையே துல்லியமாகக் குறித்தது''** என்று எழுதினார்.

லியோ பாஸ்வோல்ஸ்கி என்பவர் 1922ம் வருடத் திலேயே இக்கருத்தைக் கூறியிருக்கிறார் என்பது சுவாரசிய மானதே. ''ஜார் ஆட்சியிலிருந்து வேறு அர்த்தத்தில் சோவி யத் ருஷ்யா—அதன் தன்மை காரணமாக—தணிக்க முடியாத ஆக்கிரமிப்பு வெறி கொண்டிருக்கிறது.'' ஏனென்றால் சோவியத் ஆட்சி ''உலகப் புரட்சியைப் பற்றி'', ஆசியா வுக்கு அதை விரிவுபடுத்துவது மற்றும் ''இந்தியாவில் புரட்சி கர நெருப்பு ஏதேனுமிருந்தால் அதைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்ட ஆயுதப் படையெடுப்பைப் பற்றிக்'' கனவு காண்கிறது*** என்று அவர் எழுதினார். சோவியத் ருஷ்யாவின் மத்திய ஆசியப் பிரதேசங்களில் ஆஸ்திரியா, ஜெர்மனி, துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த யுத்தக் கைதி கள் இருந்தது ஆப்கானிஸ்தான் மூலமாகத் துருக்கிய-ஜெர் மானிய இராணுவம் இந்தியா மீது படையெடுக்கக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தியது என்ற பழைய வாதத்தை உபயோ கிக்கிறார் சட்டார் சிங் சம்ரா (இவர் இந்தியாவில் பிறந்து அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்). ''ஜெர்மானிய சூழ்ச்சி களை'' சோவியத் ருஷ்யா ஊக்குவித்ததாகவும் இவை ''இந்தியாவின் வாயிற்கதவு வரை ஆபத்தைக் கொண்டு

* David N. Druhe, *Soviet Russia and Indian Communism. 1917—1947*, New York, 1959, p. 12.

** Ibid.

*** Leo Pasvolsky, *Russia in the Far East*, New York, 1922, pp. 6, 71, 101.

வந்ததாகவும்''* எழுதுகிறார். சோவியத் ருஷ்யாவில் பிரிட்டன் தலையிட்டதை நியாயப்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற அளவுக்குப் போகிறார். போல்ஷிவிக்குகள் துருக்கிய-ஜெர்மானிய படையெடுப்பில் பங்கெடுத்தது மட்டுமல்லாமல் ''முதலில் தீவிரமாகவும் பிறகு நிதானமாகவும் இந்தியாவில் கம்யூனிசத்தைப் பரப்புவதற்கும்''** முயற்சிகளைச் செய்த போல்ஷிவிக்குகளுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கை எனக் கூறுகிறார். துருக்கிய-ஜெர்மானியத் திட்டங்களை சோவியத் அரசாங்கம் ''ஆதரித்தது'' என்ற தன்னுடைய வாதத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்கு அவர் சோவியத் துருக்கிஸ்தானில் பிரிட்டிஷ் தலையீட்டில் சம்பந்தப்பட்டிருந்த சில நபர்களின் நினைவுக்குறிப்புகளை ஆதாரமாகக் காட்டுகிறார். காஷ்காரில் பிரிட்டிஷ் கான்ஸல் பிரதிநிதியாக இருந்த பி.எஃப். எதெர்ட்டன்***, தாஷ்கன்டில் பிரிட்டனின் இராணுவ-இராஜிய மிஷன் என்று சொல்லப்பட்டதின் தலைவராக இருந்த லெப்டினென்ட்-கர்னல் எஃப்.எம். பெய்லி****, மேஜர்-ஜெனரல் வி. மால்லிசன்***** ஆகியோருடைய நூல்கள் அவரால் குறிப்பிடப்படுகின்றன. கடைசியாகச் சொல்லப்பட்டவருடைய தலைமையில்தான் பிரிட்டிஷ் துருப்புகள் 1918 ஆகஸ்டில் டிரான்ஸ் காஸ்பியப் பிரதேசத்தை ஆக்கிரமிப்புச் செய்தன. இத்தகைய நபர்களுடைய புத்தகங்களிலிருக்கும் தகவல்களை உபயோகித்தாலும் சம்ராவால் எத்தகைய ''சான்றும்'' காட்ட முடியவில்லை. ''ஆப்கானிஸ்தான் மூலமாக இந்தியா மீது படையெடுப்பதற்கு துருக்கிய-ஜெர்மானிய இராணுவம் தயாரிக்கப்படலாம்''****** என்று மேற்கூறியவர்கள் தெரிவித்த கருத்தை மட்டுமே ஆதாரம் காட்டுகிறார். சோவியத் ருஷ்யாவில் துருக்கிய-ஜெர்மானிய இராணுவம் இல்லை என்பது எல்லோரும் அறிந்ததே. யுத்தக் கைதிகள் சிலர் நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும்

* C. S. Samra, *Indian and Anglo-Soviet Relations (1917—1947)*, Bombay, 1959, pp. 23-25.

** Ibid., pp. 26, 158.

*** P. F. Etherton, *In the Heart of Asia*, London, 1925.

**** F. Bailey, *Mission to Tashkent*, London, 1945.

***** W. Malleson, "The British Military Mission to Turkestan, 1918—1920", *Journal of the Central Asian Society*, Vol. IX, Part II.

****** C. S. Samra, *op. cit.*, p. 24.

சிதறியிருந்தனர். 1918க்குப் பிறகு சோவியத் அரசாங்கம் அவர்களை முறையாக அவ்வப்போது நாட்டிலிருந்து வெளியே அனுப்பிக் கொண்டிருந்தது.

''இந்தியாவைப் பற்றி சோவியத் யூனியன் பின்பற்றிய கொள்கை ஜாரிச ஏகாதிபத்தியக் கொள்கையின் தொடர்ச்சியா, இல்லையா என்ற சிக்கலான கேள்விக்கு பதிலைக் கண்டுபிடிப்பது என்னுடைய நோக்கம்'' என்று சம்ரா புத்தகத்தின் தொடக்கத்தில் எழுதியிருக்கிறார். எனினும் அவர் இக்கேள்விக்கு நேரடியாக பதில் கூறவில்லை. அவர் Times பத்திரிகையின் சோவியத் எதிர்ப்புக் கதைகளை—அவரே பொய் என்று ஒப்புக்கொள்பவற்றைக்கூட — மற்றும் சோவியத் ருஷ்யாவுக்குள் தலையிட்ட பிரிட்டிஷ் ஜெனரல்கள், ஒற்றர்கள் எழுதிய நினைவுக் குறிப்புகளில் இருந்த விவரங்களை உண்மை என்று அறிவிக்கிறார்; ட்ருயின் கருத்தை வாசகர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சம்ரா விரும்புகிறார். ட்ருயின் வாதங்கள் இன்னும் விரிந்த முறையில் இருந்தாலும் இதைக் காட்டிலும் நமபக் கூடியவை என்று ஒருக்காலும் கூற முடியாது. அவற்றில் பொய்கள், ஒரு தலைச் சார்பானவை என்று நன்றாகத் தெரிந்தவற்றை விமர்சனமில்லாமல் ஏற்றுக்கொள்ளுதல், அவற்றிலிருந்து தவறான முடிவுகளைப் பெறுதல் ஆகியவற்றைப் பார்க்கிறோம். அவர் சோவியத் ருஷ்யாவின் ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு எம்.என்.ராயின் ''எல்லைப் பகுதிகளிலும் இந்தியாவிலும் இராணுவ நடவடிக்கைத் திட்டத்தையே'' முக்கியமான ஆதாரமாகக் காட்டுகிறார். ''ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோவும் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் 1920ம் வருடத்தின் இலையுதிர் காலத்தின் தொடக்கத்தில் இத்திட்டத்தை அங்கீகரித்தன'', லெனினும் அங்கீகரித்தார். ''ராயின் திட்டம் உலகப் புரட்சி நலன்களுக்கு உகந்ததென்று''* அவர் கருதியதாக ட்ரு எழுதுகிறார். இது உண்மைக்கு மாறானது. கிழக்கு நாடுகளைச் சேர்ந்த முதல் கம்யூனிஸ்டுகளை—சில சோவியத் அதிகாரிகளைக் கூட—பாதித்த ''இடதுவாதம்'' என்ற இளம் பருவ நோயின் அறிகுறிகள் பல அந்தத் திட்டத்தில் சிறப்பாகக் காணப்பட்டன. அவர்களிடம் இந்த நோய் இருப்பதை முதலில் கண்டு

* David N. Druhe, *op. cit.*, p. 31.

பிடித்தவர் லெனின். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு நெடுங்காலத்துக்கு முன்பே லெனின் அதை எதிர்த்துப் போராடினார், காங்கிரசின் போதும் அதற்குப் பிறகும் அப்போராட்டத்தை தொடர்ந்தார்.

லெனினுடைய தேசிய, காலனிப் பிரச்சினைகளைப் பற்றி பூர்வாங்க நகல் ஆய்வுரைகள் மீது பூர்வாங்க விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது துருக்கிஸ்தானைச் சேர்ந்த டி. ரிஸ்கூலவ், என். ஹோஜாயெவ் மற்றும் சிலர் சேனை ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவை விடுவிப்பதற்குப் படையெடுக்கின்ற பிரச்சினையை எழுப்பினார்கள். ''இந்தியாவை முஸ்லிம் பாட்டாளி வர்க்கம் சோவியத் ருஷ்யாவின் உதவியுடன் விடுதலை செய்ய வேண்டும். எப்படியிருந்தாலும் அது லண்டன் புரட்சிக்கு முன்னதாக நடைபெற வேண்டும்''* என்று அவர்கள் 1920 ஜூன் 12இல் லெனினுக்கு எழுதிய கடிதத்தில் கோரினார்கள்.

இந்தியா மட்டுமின்றி, ருஷ்யாவுக்கு அருகிலுள்ள எல்லாக் காலனி மற்றும் சார்பு நாடுகளுக்கும் இந்த ''ஆசிகளைத்'' தருவதை எ.அ.பிரியொபிரஷேன்ஸ்கியும் கூறினார். கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிக்க வேண்டும் என்று லெனின் கூறியதை அவர் மறுத்தார்: ''...முன்னணியிலுள்ள தேசிய குழுக்களுடன் பொருளாதார ரீதியில் உடன்பாடு இயலாதென்றால், அவற்றை வன்முறையினால் ஒடுக்குவதும் பலவந்தமாகச் சேர்த்துக் கொள்வதும் தவிர்க்க முடியாததாகும்...''** என்று அவர் கூறினார்.

கிழக்கு நாடுகளில் இராணுவத்தை உபயோகித்து சோஷலிஸ்ட் புரட்சியைக் ''கொண்டு வருகின்ற'' எல்லாத் திட்டங்களையும் முயற்சிகளையும் லெனின் உறுதியாக மறுத்தார். பிரியொபிரஷேன்ஸ்கியின் கூற்றை அவர் மிகவும் வன்மையாக நிராகரித்தார்: ''...அது மிகவும் அதிகமாகப் போய்விடுகிறது. 'வன்முறையினால் ஒடுக்குவது' 'தவிர்க்க முடியாதது' என்று சொல்வது தவறாகும், அதை நிரூபிக்க

---

* மா.-லெ.ஆ.க.ம.க.ஆ.கா, தொகுப்பு 489, பட்டியல் 1, பத்திரம் 4, தாள் 5.

** வப்ரோசி இஸ்தோரியி க.பெ.எஸ். எஸ்., 1958, இதழ் 2, பக்கம் 16.

முடியாது. அது அடிப்படையிலேயே தவறு''* என்று அவர் கூறினார். எட்டாவது கட்சிக் காங்கிரசில் பேசுகின்ற பொழுது ''கம்யூனிசத்தை பலப்பிரயோகத்தால் திணிக்க முடியாது''** என்று லெனின் வற்புறுத்தினார். அக்காலத்தில் இந்தியாவில் மட்டுமல்லாமல், சீனா, துருக்கி, இரானிலும் புரட்சியைத் தூண்டுவதற்கு செஞ்சேனை அந்த நாடுகள் மீது படையெடுக்க வேண்டும் என்று ஆசிய நாடுகளைச் சேர்ந்த இடதுசாரி மனப்பாங்குள்ள கம்யூனிஸ்டுகள் பல முறை வற்புறுத்தினார்கள். எனினும் லெனின் அத்தகைய பிரேரணைகளை வன்மையாக நிராகரித்தார்.

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு உதவி செய்வது கம்யூனிஸ்டுகளின் இன்றியமையாத கடமை என்னும் லெனின் கருத்தைக் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் அங்கீகரித்தது.

''எல்லைப் பகுதிகளிலும் இந்தியாவிலும் இராணுவ நடவடிக்கைத் திட்டம்'' என்னும் இடது குறுங்குழுவாத ஆவணத்தை ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் பொலிட்பீரோவோ மக்கள் கமிசார்களின் கவுன்சிலோ அல்லது லெனினோ ஆதரித்திருக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. அப்படியானால் டேவிட் ட்ரு எந்த ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வாதிடுகிறார்? எம்.என். ராய் எழுதிய நினைவுக் குறிப்புகள்தான் அவர் காட்டுகின்ற ஒரே ஆதாரம். ஆனால் இந்தியப் புரட்சி பற்றிய தன்னுடைய இராணுவத் திட்டத்தை லெனின் ஆதரிக்க வில்லை என்று ராய் அதே நூலில் குறிப்பிட்டிருக்கிறார்***; அடுத்தபடியாக, இப்புத்தகம் முற்றிலும் நம்பத்தக்கது என்று கருத முடியாது. அதில் பல தவறுகள் (வேண்டுமென்றோ அல்லது அப்படியில்லாமலோ) இருக்கின்றன. அதிலுள்ள தகவல்களை கவனமாக சரிபார்ப்பது அவசியம். இதை தாஷ்கன்டில் பிரகடனம் செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய

---

* V. I. Lenin, "Notes to Preliminary Draft Theses on the National and the Colonial Questions", *Collected Works*, Vol. 31, 1974, p. 555.

** *வி.இ. லெனின்,* தேர்வு நூல்கள், *தொகுதி 9, 1982, பக்கம் 210.*

*** *M. N. Roy's Memoirs*, p. 417.

பிரச்சினையிலும் இன்னும் சிலவற்றிலும் நாம் ஏற்கெனவே பார்த்தோம்.

இப்பிரச்சினையிலும் சரிபார்க்க வேண்டும். எம். என். ராய் எழுதிய மற்றொரு முக்கியமான ஆவணத்தை எடுத்துக்கொள்வோம். இது சம்பவம் நடைபெற்று 35வருடங்களுக்குப் பிறகு எழுதப்பட்டதல்ல, அப்பொழுதே எழுதப் பட்டதாகும். தற்காலிக அகில இந்தியப் புரட்சிக் கமிட்டியின் பணியைப் பற்றி கம்யூனிஸ்ட் அகிலம் அனுப்பிய வேலை அறிக்கையில் இராணுவ நடவடிக்கையைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதப்படவில்லை; ராயின் இராணுவ திட்டத்தை மக்கள் கமிசார்களின் கவுன்சில் அங்கீகரித்திருக்குமானால் இது சாத்தியமல்ல. ஏனென்றால் இந்த அறிக்கையில் இந்தியப் புரட்சிக்காரர்களின் செய்முறை நடவடிக்கைகளைப் பற்றிய நுணுக்கமான விவரங்களும் அவற்றின் பின்னணியும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாரிப்பதிலும் அமைப்பதிலும் இராணுவ நடவடிக்கை தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்கின்ற எம். என். ராயின் இடதுவாதக் கருத்துக்களை போல்ஷிவிக்குகளின் மீது சுமத்துவதன் மூலம் ட்ரு தன்னுடைய வாதத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்கு முயற்சிக்கிறார். இரான், சின்த்ஸான் மற்றும் குறிப்பாக ஆப்கானிஸ்தானின் மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கின்ற சோவியத் கொள்கையை இந்தியாவின் மீது படையெடுக்கின்ற நோக்கத்துடன் செய்யப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளாக அவர் கருதுகிறார். அப்படியானால் சீனா, துருக்கி ஆகிய நாடுகளின் மக்களினங்களுடன் நட்பையும் ஒத்துழைப்பையும் பின்பற்றிய சோவியத் கொள்கையும் அம்மாதிரியானதே, ராயின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே சோவியத் அரசாங்கம் 1917இல் ருஷ்யா மற்றும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் முஸ்லிம்கள் அனைவருக்கும் என்ற வேண்டுகோளை வெளியிட்டது என்று ஏன் ட்ரு எழுதவில்லை என்பது நமக்கு வியப்பைத் தருகிறது.

ட்ரு ஒரு ''திடுக்கிடவைக்கும்'' கதையைத் தன்னுடைய முக்கியமான ஆதாரமாக முன்வைக்கிறார். 1920 அக்டோபர் முதல் தேதியன்று 54 வண்டிகளைக் கொண்ட இரண்டு ரயில் வண்டித் தொடர்கள் தாஷ்கன்டுக்கு வந்தன; அவற்றில்

ஆயுதங்கள், வெடிமருந்து, தளவாடங்கள், பிரிக்கப் பட்ட விமான உறுப்புகள், தங்கம் மற்றும் பவுண்டு நோட்டு கள் இருந்தன. ஒரு ரயில் வண்டியில் இராணுவ அதிகாரி களும் மற்றொரு ரயில் வண்டியில் ராயும்—இவர்தான் ஆப் கானிஸ்தானிற்கு சென்ற தூதுக்குழுவின் தலைவராயிருந் தார்—இருந்தனர் என்று அவர் எழுதியிருக்கிறார்.* இக் கதையை ஓவர்ஸ்ட்ரீட் மற்றும் வின்ட்மில்லரும் எழுதியிருக் கிறார்கள்.** அவர்கள் கூடுதலாக எழுதியிருப்பது ''போல் ஷிவிக்குகளைப் பொறுத்தமட்டில் இந்தியா பிரிட்டனுக்கு எதிரான ஆயுதமாக மட்டும் இருக்கவில்லை, அது புரட்சியை ஏற்றுமதி செய்வதற்குக் கவர்ச்சிகரமான இலக்காகவும் இருந்தது''*** என்பதே. தாஷ்கன்டுக்கு வந்தவுடன் ராய் இந் தியா மீது படையெடுப்பதற்கு ''செஞ்சேனையின் முதல் சர்வதேசப் பிரிவை அமைத்தார்''**** என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். உண்மையில் நடைபெற்றது என்ன?

தாஷ்கன்டிற்கு வந்த ஆயுதங்களும் போர்த் தளவாடங் களும் பெரும்பாலும் ஆப்கானிஸ்தானிற்கானவை. ஆப்கா னிஸ்தானின் அமானுல்லா கான் அரசாங்கம் சோவியத் அர சாங்கத்திடம் ஆயுத உதவி கேட்டு எழுதிய கடிதத்தை முகம் மது வாலி கான் என்ற தூதர் மாஸ்கோவுக்குக் கொண்டு வந்தார். 1919 நவம்பர் 27ந் தேதியன்று லெனின் எழுதிய பதிலில் ''இரண்டு மக்களினங்களுக்கும் மிக அதிகமான நன்மை விளைகின்ற முறையில் நல்ல அண்டை நாட்டு உறவு களை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல் உலகத்திலேயே மிகவும் கொள்ளைக்கார ஏகாதிபத்திய அரசாங்கமாகிய கிரேட் பிரிட்டனை எதிர்த்து ஆப்கானிஸ்தானுடன் கூட்டுப் போராட்டத்தை ஊக்குவிப்பதற்கும்'' பேச்சுவார்த்தை களை நடத்தி வர்த்தக மற்றும் இதர நட்புறவு ஒப்பந் தங்களைச் செய்யும்படி காபூலில் உள்ள சோவியத் பிரதி நிதிகளுக்கு ஆணையிட்டிருப்பதாக எழுதினார். மேலும் முகம்மது வாலி கானுடன் நடத்திய உரையாடல்களில் சோவியத் அரசாங்கத்திடம் ஆயுத உதவி பெறுவதற்கு ஆப் கானிஸ்தான் விரும்புகிறது என அறிந்தபடியால் ''ஆப்கன்

* D. N. Druhe, *op. cit.*, p. 32.

** G. D. Overstreet, M. Windmiller, *Communism in India*, p. 35.

*** Ibid.

**** Ibid.

மக்களுக்கு மிகவும் விரிவான அளவில் உதவி செய்வதற்கு'' சோவியத் அரசாங்கம் தயாராக இருக்கிறது''* என்று தெரிவித்தார். அந்த ஆயுதங்களுடன் சில இராணுவ அதிகாரிகள் காபூலுக்குச் செல்லும் வழியில் தாஷ்கன்டுக்கு வந்தார்கள். அக்குழுவுக்கு ராய் தலைமை தாங்கவில்லை. அதில் அவருக்கு எவ்விதமான பொறுப்புமில்லை. ராய் அந்த ரயில் வண்டியில் தாஷ்கன்ட் வரை பிரயாணியாகச் சென்றார்.

பிரிட்டனுடன் போர் புரிந்து ஆப்கானிஸ்தான் பெற்ற சுதந்திரத்தை சோவியத் அரசாங்கம் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் கொள்கையை இடையறாது பின்பற்றி முதலாவதாக அங்கீகரித்ததுடன் அதற்குத் தன்னாலியன்ற பொருளாயத உதவியையும் அளித்தது. இரண்டு நாடுகளும் வாழ்வதற்குத் தம்முடைய உரிமையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி காத்து நின்று கொண்டிருந்ததால் அவற்றின் பரஸ்பர நன்மைக்கு அது உதவியாக இருந்தது. பிரிட்டன் சோவியத் ருஷ்யாவின் உள்நாட்டு எதிரிகளான வெண்படையினர் மற்றும் பஸ்மாச் கொள்ளைக்காரர்களை ஆதரித்ததுடன் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக அறிவிக்கப்படாத யுத்தத்தையும் நடத்திக் கொண்டிருந்தது. ''மத்திய ஆசியாவில் சில நகரங்களில் எதிர்ப்புரட்சிக் கலகங்கள் வெடித்துள்ளன என்ற செய்தி நேற்றுக் கிடைத்தது. இதில் இந்தியாவில் வலுப்பெற்று நிற்கும் பிரிட்டிஷாரும் உடந்தை என்பது கண்கூடு''** என்று லெனின் 1918 ஜூலையில் கூறினார். பிரிட்டனுடைய இராணுவத்துக்கு எதிராக ஆப்கானிஸ்தானும் சோவியத் ருஷ்யாவும் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுத்திருந்தால் அது நியாயமானதே. அதற்கும் இந்தியா மீது படையெடுப்பதற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை.

பிரிட்டிஷ் நிர்ப்பந்தத்தின் காரணமாக சோவியத் இராணுவக் குழுவினர் காபூலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தாஷ்கன்டிலேயே தங்கி விட்டனர். எனவே அக்

---

* அ.என். ஹேய்ஃபிட்ஸ், சோவியத் ருஷ்யாவும் கிழக்கே உள்ள அண்டை நாடுகளும் 1918—1920, மாஸ்கோ, 1964, பக்கங்கள் 286—287 (ருஷ்ய மொழியில்).

** வி.இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 8, 1981, பக்கம் 255.

குழுவைச் சேர்ந்த அதிகாரிகளில் சிலர் இந்திய இராணுவப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள். ''ருஷ்யாவின் ஆப்கானிஸ்தானுக்கான குழுவைச் சேர்ந்த ஒருவர் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் (ஒரு குறிப்பிட்ட) பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்''* என்ற வாசகம் உத்தரவுகளில் அடிக்கடி காணப்பட்டது. அவர்கள் கொண்டு வந்த தளவாடங்களில் சில இராணுவப் பள்ளியில் மாணவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு உபயோகிக்கப்பட்டன.

ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டியின் பேரவைக் கூட்டம் இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு ''ஆயுதங்களையும் தங்கத்தையும்'' அளித்து உதவி செய்ய வேண்டுமென்று முடிவு செய்தது. அதன் அடிப்படையில் தான் இராணுவப் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்; அப்பள்ளிக்கு நிதி, இராணுவ மற்றும் தொழில்நுட்ப உதவி கொடுக்கப்பட்டது.

சோவியத் ருஷ்யா இந்தியா மீது படையெடுத்துப் பிடிக்க விரும்பியது என்ற வாதத்தை நிரூபிப்பதற்கு ட்ருவும் மற்ற ஆசிரியர்களும் தக்க சான்றுகள் எதையும் காட்டவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையில் நட்புறவுக்காக 1921 பிப்ரவரியில் சோவியத்-ஆப்கானிஸ்தான் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ராயின் இராணுவம் இந்தியா மீது படையெடுப்பதற்கு அது ஒரு படி, ஆப்கானிஸ்தானில் சில நகரங்களில் ஏற்படுத்தப்பட்ட சோவியத் கான்ஸல் அலுவலகங்கள் ''பிரிட்டிஷ் இந்தியாவுக்கு எதிரான பிரச்சார கேந்திரங்கள்''** என்று ட்ரு எழுதுகிறார். முதலாவதாக, 1920இலோ அல்லது 1921இலோ ''ராயின் இராணுவம்'' அல்லது ''ராயின் படைப்பிரிவு'' என்று எதுவுமில்லை. ஏனென்றால் பல சோவியத் நகரங்களில் சிதறியிருந்த சச்சரவுக் குழுக்களாகப் பிரிந்திருந்த நூறு அல்லது இருநூறு இந்தியக் குடியேறிகள் ஒரு இராணுவப் படையாக இருக்க முடியாது. இரண்டாவதாக, இந்தியாவுக்கு எதிராக சோவியத் ருஷ்யா பிரச்சாரம் செய்ததை ட்ரு எந்த ஆவணத்தில் கண்டுபிடித்

* சோ.இ.ம.அ.ஆ.கா, தொகுப்பு 25025, பட்டியல் 2, பத்திரம் 2, தாள்கள் 2, 3, 4.

** D. N. Druhe, *op. cit.*, p. 38.

தார்? இந்தியாவை ஒடுக்கிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோவியத் ருஷ்யா முடிவில்லாமல் பிரச்சாரம் செய்தது உண்மையே. ஆனால் இந்தியாவும் பிரிட்டனும் ஒன்றே என்று சொல்ல முடியுமா?

இந்தியப் புரட்சிக்காரர்கள் தாஷ்கன்டிலும் துருக்கிஸ்தானின் இதர நகரங்களிலும் செய்த எல்லா வேலைகளுமே இந்தியா மீது சோவியத் படையெடுப்புக்குத் தயாராவதை நோக்கமாகக் கொண்டிருந்தன என்று ட்ரு கூறுகிறார். எல்லா இந்தியக் குடியேறிகளுமே சோவியத் ஆட்சியின் ஆயுதம், ''இந்தியா மீது படையெடுக்கின்ற பொழுது அது இந்தியாவின் உண்மையான 'விடுதலையாகத்' தோன்ற வேண்டும், ருஷ்யா பிடித்துக் கொண்டதாக இருக்கக் கூடாது என்றால் அதற்குத் தீவிரமான இந்திய கம்யூனிஸ்டுகளும் நல்ல படைவீரர்களும் போதிய அளவில் வேண்டும் என்று அந்த அரசாங்கம் விரும்பியது''* என்று ட்ரு கூறுகிறார். முஜாகிர்கள் தாஷ்கன்டுக்கு வந்ததையும், அவர்களில் 15 நபர்கள் பிரச்சாரப் பள்ளியில் கல்வி கற்றதையும் கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்லப்பட்ட ஒன்றைப் பிரகடனம் செய்ததையும் இராணுவப் பயிற்சிப் பள்ளியை அமைத்து அதில் 20 முதல் 40 இந்தியர்களுக்கு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குப் பயிற்சி கொடுத்ததையும் வட இரானை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்து ஓடிவந்த சில இந்தியப் படைவீரர்கள் செஞ்சேனையில் சேர்ந்ததையும் அவர் இதே நோக்கத்துடன்தான் பார்க்கிறார். மேலே சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தும் உண்மையில் இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தின் பேரெழுச்சியைக் குறித்தன. உதாரணமாக, இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் சுரண்டலாளர்களுக்கு எதிரான உறுதியான போராட்டத்திற்கு மேன்மேலும் செயல்முனைப்பான வழிகளைத் தேடிய புரட்சிகர மனநிலையை உடைய இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு இவை சான்று பகர்ந்தன. சோவியத் அரசாங்கம் இந்தியப் புரட்சிக்காரர்களுக்கும் இரான், துருக்கி, கொரியா மற்றும் சீனாவைச் சேர்ந்த புரட்சிக்காரர்களுக்கும் கொடுத்த பொருளாயத, பிரச்சார உதவி மற்றும் இராணுவப் பயிற்சி சர்வதேச ஏகாதிபத்தி

---

* Ibid., p. 33.

யம் என்னும் பொது எதிரிக்கு எதிரான பொதுப் போராட்டத்தில் கீழை நாட்டு மக்களினங்களுடன் கூட்டணியை அமைப்பது என்ற சோவியத் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும். அப்பொதுப் போராட்டம் செய்முறையில் நிறைவேறியது எல்லோருக்கும் தெரிந்ததே. சோவியத் ருஷ்யா மீது படையெடுத்தவர்கள், பஸ்மாச் கொள்ளைக்காரர்கள் மற்றும் வெண்படையினரை எதிர்த்து நடைபெற்ற சண்டைகளில் சீனா, கொரியா, இரான், துருக்கி மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் முழு அளவுக்குப் பங்கெடுத்ததில் அது வெளியாயிற்று. ட்ரு, சம்ரா, பாந்த்யோபாத்யாயா மற்றும் இதரர்கள் எத்தகைய அவதூறுகளை எழுதிய போதிலும் இந்தியாவையோ அல்லது வேறு எந்தக் கிழக்கு நாட்டையோ பிடிப்பதற்கும் அதற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

மத்திய ஆசியாவிலிருந்து பஸ்மாச் கொள்ளைக்காரர்களையும் ஆக்கிரமிப்புப் படைகளையும் வெளியேற்றுவதற்கு போல்ஷிவிக்குகள் நடத்திய போராட்டத்தை இந்தியாவைப் பிடிப்பதற்குச் செய்த தயாரிப்புகளின் முக்கியமான பகுதி என்று ட்ரு, சம்ரா ஆகிய இருவரும் தவறாகக் கருதுகிறார்கள். துருக்கிஸ்தான் போர்முனையின் தளபதியாக இருந்த ஜி.யா. சகோல்னிக்கவ் பாமீர் மலைக்கு ஒரு படைப்பிரிவை அனுப்புகின்ற உத்தரவை 1920 அக்டோபர் 10ந் தேதியன்று வெளியிட்டதாகக் கூறி சோவியத் ருஷ்யா இந்தியாவை ஆக்கிரமிப்பதற்குத் திட்டமிட்டிருந்தது என்பதற்கு அந்த ஆவணத்தை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். அந்த உத்தரவிலிருந்து* பின்வரும் பகுதியை சம்ரா மேற்கோள் காட்டுகிறார்: ‘‘பாமீர் படைப்பிரிவைச் சேர்ந்த தோழர்களே, உங்களிடம் முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நேச நாடுகளான ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியாவின் எல்லையிலிருக்கும் பாமீர் மலையிலுள்ள காவல்நிலையங்களிலிருந்து நம் எல்லைப் பகுதிகளைக் காவல் செய்வதற்கு சோவியத் குடியரசு உங்களை அனுப்புகிறது. பாமீர் பீடபூமி புரட்சிகர ருஷ்யாவை ஒரு சில ஆங்கிலேயர்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்ற

* பாமீர் மலைக்குப் புறப்படுகின்ற படைப்பிரிவுக்கு முன் ஜி.யா. சகோல்னிக்கவ் நிகழ்த்திய சொற்பொழிவையே சம்ரா உத்தரவு என்று குறிப்பிடுகிறார்.

முப்பது கோடி மக்களைச் கொண்ட இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. இப்பீடபூமியில் நீங்கள் விடுதலை இராணுவத்தின் செங்கொடியை ஏற்ற வேண்டும். ஆங்கில ஆதிக்கக்காரர்களை எதிர்த்துப் போராடுகின்ற இந்திய மக்கள் நேச உதவி கிடைக்கின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை விரைவில் அறிவார்கள்.''* சோவியத் படைப்பிரிவை பாமீர் மலைக்கு அனுப்பியது இயற்கையான, நியாயமான நடவடிக்கையே; ஏனென்றால் எல்லைகளைக் காவல் செய்யத்தான் வேண்டும்; அதிலும் அங்கே ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருந்தது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகம் செய்த இனக்குழு மக்கள் வசித்த இந்தியாவின் வடக்கெல்லைக்கு செஞ்சேனை சென்றது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உத்வேகமளித்ததும் அதைக் கண்டு பிரிட்டன் கலக்கமடைந்ததும் இயற்கையே. சோவியத் ஆட்சியதிகாரம் இதைச் செய்வதும் இயற்கையே. சகோல்னிக்கவ் துல்லியமாக இதைப் பற்றியேதான் பேசினார். இந்திய மக்களுக்கு உதவி செய்வதற்கு சோவியத் ருஷ்யா தயாராக இருக்கிறது என்று அவர் நிகழ்த்திய சொற்பொழிவை மறுபடியும் படித்தால் எல்லாமே இந்தியர்களின் விருப்பத்தையும் முயற்சிகளையும் பொறுத்திருக்கிறது என்பது புரியும். இந்தியாவைப் பிடிப்பதற்கு இராணுவத்தை அனுப்புகின்ற நோக்கத்தை அது வெளியிடவில்லை.

''லண்டனுக்கும் பாரிசுக்கும் செல்கின்ற பாதை பீகிங், கல்கத்தா வழியாகச் செல்கிறது''** என்று லெனின் கூறியதாக ட்ரு எழுதுகிறார். அவர் எங்கே எப்பொழுது இப்படிக் கூறினார் என்பதற்கு ட்ரு ஆதாரம் காட்டவில்லை. லெனின் ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை. அப்படிப் பேசியவர் திரோத்ஸ்கியே. அவர் ஐரோப்பாவில் புரட்சியை அருகில் கொண்டுவருவதற்கு ஒரு குதிரைப்படைப் பிரிவை (30,000—40,000 வீரர்களைக் கொண்டது) அமைத்து இந்தியா மீது படையெடுக்க வேண்டும் என்ற திட்டத்தை 1919 ஆகஸ்ட் 5இல் ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டியிடம் சமர்ப்பித்தார். அத்திட்டத்துக்கு ஆத

---

* Chattar Singh Samra, *op. cit.*, pp. 52—53; D. N. Druhe, *op. cit.*, p. 36.

** D. N. Druhe, *op. cit.*

ரவாக ''பாரிசுக்கும் லண்டனுக்கும் செல்கின்ற பாதை ஆப் கானிஸ்தான், பஞ்சாப் மற்றும் வங்காளத்தின் நகரங்களின் வழியாகச் செல்கிறது''* என்று திரோத்ஸ்கி எழுதினார். மத்திய கமிட்டி லெனினுடைய சுறுசுறுப்பான பங்குடன் இந்தத் துர்ச்சாகசத் திட்டத்தை நிராகரித்தது.

சோவியத் ருஷ்யாவில் இந்தியப் புரட்சிக்காரர்கள் அர சியல் கல்வி பெற்று இந்தியாவுக்குத் திரும்பியதைப் பொறுத் தமட்டில், அது உண்மையில் நடந்தது. அது இந்தியாவைப் பிடிப்பதற்கு செஞ்சேனை திட்டமிட்டதற்கு ஆதாரமல்ல. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் சோவியத் ருஷ்யாவைப் பற்றிய உண்மையை இந்திய மக்களுக்குத் தெரிவிக்கவும் அதன் மூலம் அவர்களிடம் புரட்சிகர உணர்வை ஏற்படுத்தி கம்யூனிச இயக்க வளர்ச்சிக்கும் தேசிய விடுதலை இயக் கத்தைப் புரட்சிகரமாக்குவதற்கும் பாடுபடுவதற்கு விரும் பினார்கள். உண்மையில் அதற்காகத்தானே அவர்கள் சோவி யத் ருஷ்யாவுக்கு வந்தார்கள்.

இந்தியக் குடியேறிகளுக்கும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மற்ற புரட்சிக்காரர்களுக்கும் இராணுவப் பயிற்சி உள்பட எல்லாவிதமான உதவிகளையும் செய்ததன் மூலம் சோவி யத் அரசாங்கம் ஆசியாவைச் சேர்ந்த மக்களினங்கள் சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி அமைப்பதற்கு—ஆகவே அவை சீக்கிரத்தில் தேசிய விடுதலை அடைவதற்கு—உதவி செய்தது. மேலும் சோவியத் ருஷ்யா மீது படையெடுப்ப தற்கு அருகிலிருந்த ஆசிய நாடுகளை உபயோகித்து வந்த ஏகாதிபத்தியத்தின் இராணுவங்களிடமிருந்து அது தன் னைத் தற்காத்துக் கொண்டது. ட்ரு மற்றும் அவரது கருத்தை ஆதரிக்கின்ற ஆசிரியர்களின் வாதங்கள் ஆதார மற்றவை, வெறும் சோவியத் எதிர்ப்புக் கட்டுக்கதைகளே.

### மேற்கு நாடுகளில் வசித்த இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் மாஸ்கோவுக்கு வருதல்

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் தம்முடைய திட்டங் களுக்கேற்ப அகில இந்திய புரட்சிகரக் காங்கிரசைக் கூட்டுகின்ற முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஆனால் தலை

---

**The Trotsky Papers 1917—1919*, London, Paris, 1964, p. 624.

வர்களின் இடது குறுங்குழுவாத நிலை அதற்கு தடை செய்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியிலிருந்து இந்திய தேசிய காங்கிரஸ் நடைமுறையில் விலக்கி வைக்கப்பட்டது. சில வருடங்களாக ஐரோப்பாவில் இருக்கின்ற தேசியப் புரட்சிக்காரர்களுடன் ஒன்றுபட்ட நடவடிக்கை முடியும் என்பதற்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது.

1920 அக்டோபர் அல்லது நவம்பரில் ராய் குழுவினர் அவர்களுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினார்கள். விரேந்திரநாத் சட்டோபாத்யாயா பூர்வாங்க விவாதங்களுக்காக நவம்பர் மாதக் கடைசியில் மாஸ்கோவுக்கு வந்தார். அபனி முக்கர்ஜியும் தாஷ்கன்டிலிருந்து வந்தார். மாநாட்டை 1921ம் வருடத்தின் கோடை காலத்தில் நடத்துவதென்று அவர்கள் அந்த சந்திப்பில் முடிவு செய்திருக்க வேண்டும். எனினும் தாஷ்கன்டில் இரண்டு குழுக்களுக்குமிடையில் தகராறு தீவிரமடைந்தபடியால் இரண்டு குழுக்களின் தலைவர்களும் 1921 ஜனவரியிலேயே மாஸ்கோவுக்கு வந்து விட்டார்கள். எம்.என்.ராயும் அவருடைய மனைவி எவலின் டிரென்ட் ராயும் ஒரு குழுவின் தலைவர்கள்; அடுத்த குழுவுக்குத் திருமலாச்சார்யாவும் அப்துர் ராப் பார்க்கும் தலைவர்கள்.

கம்யூனிஸ்ட் அகிலம் சச்சரவு செய்து கொண்டிருந்த குழுக்களுக்கு இடையில் சமரசத்தை ஏற்படுத்தப் பாடுபட்டது. அதில் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கையில் மேற்கு ஐரோப்பாவிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் பிரதிநிதிகளையும் மாஸ்கோவுக்கு வருமாறு அழைத்தது. புரட்சிக்காரர்களின் மாநாட்டை நடத்துவதில் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்வது அதன் நோக்கம். கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட்குழு 1921 ஏப்ரல் 5ந் தேதியன்று அவர்களுக்கு அழைப்பை அனுப்புவதென்று முடிவு செய்தது. இந்தியப் புரட்சிக்காரர்கள் ஏப்ரல் மாதக் கடைசியில் அல்லது மே மாத ஆரம்பத்தில் மாஸ்கோவுக்கு வந்தார்கள்.

விரேந்திரநாத் சட்டோபாத்யாயா, லுஹானி, பாண்டுரங் காங்கோஜெ, புபேந்திரநாத் தத்தா, நளினி குப்தா, அப்துல் ஹாசன் மற்றும் அந்த சமயத்தில் சட்டோபாத்யாயாவின் மனைவியாக இருந்த ஆக்னெஸ் ஸ்மெட்லி என்னும் அமெரிக்கப் பெண்ணையும் சேர்த்து ஏழு நபர்கள்

அக்குழுவில் இருந்தார்கள். ஆக்னெஸ் ஸ்மெட்லி அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் இந்தியக் குடியேறிகளுடன் சேர்ந்து ஆறு வருட காலம் வேலை செய்திருக்கிறார்.* வந்தவர்களில் அநேகமாக எல்லோருமே பெர்லினில் அமைக்கப்பட்டிருந்த இந்திய தேசியக் கமிட்டியின் உறுப்பினர்களாக அல்லது ஊழியர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர் மார்க்சிய அனுதாபிகளாக இருந்தார்கள்; சிலர் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய பழைய சித்தாந்த,செயல்முறைக் கருத்துக்கள் தோல்வியடைந்த பிறகு, இந்தியாவில் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்திருக்கும் சூழ்நிலையில், அக்டோபர் புரட்சியின் தாக்கம் மென்மேலும் அதிகரிக்கின்ற சூழலில் அவர்கள் மார்க்சியத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய பயணம் இன்னும் முடியவில்லை. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேருவதற்கு விரும்புவதாக அறிவித்த அவர்கள், லெனின் சொற்களில் ''தங்களுடைய தப்பெண்ணங்களையும் பிற்போக்குக் கற்பனைகளையும் தங்களுடைய பலவீனங்களையும் தவறுகளையும்''** கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குள் கொண்டுவந்தார்கள். அவர்கள் அப்பொழுது சிற்சில மார்க்சியக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டிருந்தாலும் விஞ்ஞான சோஷலிசத்துக்கு இடைவழியில்தான் நின்று கொண்டிருந்தார்கள்.

இக்குழுவில் மார்க்சியத்தை ஏற்றுக்கொள்வதற்கு மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் நெருங்கி வந்தவர்கள் என்று சட்டோபாத்யாயா, லுஹானி மற்றும் காங்கோஜெயைக் குறிப்பிடலாம். அவர்கள் தங்களுடைய அரசியல்

---

* 1921 ஆகஸ்ட் 5ல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட்குழுவுக்கு (*The Small Bureau of the Comintern*,pp. 1—8) எழுதிய கடிதத்தில் ஆக்னெஸ் ஸ்மெட்லி, தான் ஜெர்மனியில் இந்தியப் புரட்சிக் கமிட்டியில் சேர்ந்ததாயும் **''சர்வதேச அளவில் இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் முதல் ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கும் நம்பிக்கையோடு அதனுடன் சேர்ந்து ருஷ்யாவிற்கு வந்ததாயும்''** (அழுத்தம் என்னுடையது—ஆ-ர்) தெரிவித்தார். ''இந்தியப் புரட்சி வீராங்கனை என்ற வகையில், இந்தியாவிற்குத் திரும்பி அங்கு வாழ்நாள் முழுவதையும் கழிக்க விரும்புபவர்களில் ஒருத்தி என்ற வகையில் நான் இதைத் தெரிவிக்கிறேன்.''

** V. I. Lenin, "The Discussion on Self-Determination Summed up", *Collected Works*, Vol. 22, 1964, p. 356.

கருத்துக்களை **இந்தியாவும் உலகப் புரட்சியும்** என்னும் தலைப்பில் 14 பக்க அளவில் ஆய்வுரையை எழுதி அதை லெனினுக்கும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டிக்கும் 1921 ஆகஸ்ட் மாதத்தின் தொடக்கத்தில் அனுப்பினார்கள். மற்ற தேசியப் புரட்சிக்காரர்களைப் போலவே இவர்களும் உலகப் புரட்சிக்கு இந்தியாவின் முக்கியத்துவத்தை மிகவும் மிகைப்படுத்தி ''ஆசிய மற்றும் ஆப்பிரிக்கக் கண்டங்களின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் இந்தியா உயர்ந்து நிற்கிறது'' என்று எழுதினார்கள். அதே சமயத்தில் இந்தியாவின் சமூக, பொருளாதார நிலைமையைப் பற்றி ''இடது'' கம்யூனிஸ்டுகளுடைய மதிப்பீடு விஞ்ஞான ரீதியாக இல்லை (ப.1) என்று சரியாக எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் இந்தியப் பொருளாதாரத்தின் பல அடுக்கு அமைப்பு அதை ஆராய்வதைப் பிரத்யேகமாகவும் கடினமாகவும் செய்கிறது என்று சரியான முறையில் வலியுறுத்தினார்கள். ''நம் கால இந்தியாவில் நிலப்பிரபுத்துவம், சிறு தொழில்களின் மத்திய கால கில்டு அமைப்பு மற்றும் நவீன பெரிய அளவுத் தொழில்துறை விசித்திரமான கலவையாக அடுத்தடுத்துக் காணப்படுகின்றன'' (ப. 2) என்று அவர்கள் எழுதினார்கள்.

அவர்கள் வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும் பற்றிய மார்க்சின் தத்துவத்தை ஏற்றுக்கொண்டார்கள். ''எல்லா சமூகங்களையும் போல இந்திய சமூகமும் சுரண்டுகின்ற வர்க்கங்களுக்கும் சுரண்டப்படுகின்ற வர்க்கங்களுக்கும் இடையில் இடைக்கோடாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.'' எனினும் இந்திய வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே சாதி மற்றும் மதப் பிரிவினைகள் என்ற செங்குத்தான கோடுகள் இவற்றில் குறுக்கிட்டுப் பிரிந்து சமூகத்தில் இன்னும் அதிகமான பகைமைகளை ஏற்படுத்திவருகின்றன (ப. 4). ''இந்தியாவில் பரம்பரையாகத் தனிநபர் விவசாயத்தில் ஈடுபடுகின்ற மாபெரும் குட்டி முதலாளித்துவ விவசாயிகள் இருக்கிறார்கள்'' (ப. 2) என்று ஆய்வுரை கூறியது. தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்த மட்டில் அது சரிவர அமைப்பு ரீதியாக இல்லை; அதன் போராட்டம் கூலி உயர்வு, வேலை நேரத்தைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு அப்பால் போகவில்லை. இந்தியப் பாட்டாளி வர்க்கம் வர்க்க உணர்வு பெற்றிருப்பதாகச் சிறிதும் சொல்ல முடியாது, சாதி அமைப்பு மற்றும் மதப்பூசல்களின்

விளைவாகிய பின்தங்கிய நிலைமை, அறியாமை, பழமை மோகம் ஆகியவற்றை அது தூக்கியெறிவது மிகவும் கடினம். கீழ் நிலையிலுள்ள தொழிலாளர்கள் முற்றிலும் கல்லாதவர்கள், அவர்கள் மத்தியில் புத்தகங்களின் மூலம் பிரச்சாரம் செய்ய முடியாது (ப. 3) என்று சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க சுயநிர்ணயத்துக்குத் பெருந்தடையாக இருப்பது இந்திய சமூகத்தின் மீது பிரிட்டிஷ் முதலாளி வர்க்க ஆதிக்கமே என்று ஆய்வுரை குறிப்பிட்டது சரியே. ''எந்த நாட்டில் அரசியல் சுதந்திரம் இல்லையோ, அந்த நாட்டின் சுரண்டப்படுகின்ற வர்க்கம் வர்க்கப் போராட்டம் இருப்பதையும் அதன் தன்மையையும் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலுவதில்லை'' (ப. 7). ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நாட்டிலிருந்து நீங்கிய பிறகுதான் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் அணிகளில் இந்தியப் பாட்டாளி வர்க்கம் தனக்குரிய இடத்தைப் பெற முடியும்'' (ப. 8) என்ற கருத்துடன் ஆசிரியர்கள் ஆய்வுரையை முடித்துக் கொண்டார்கள்.

1921 ஆகஸ்ட் 4ந் தேதியன்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் இந்திய கமிஷனுக்குச் சமர்ப்பித்த மற்றொரு ஆவணத்தில் சட்டோபாத்யாயாவும் லுஹானியும் அதே விஷயத்தை விரிவாக விளக்கினார்கள்: ''இந்தியச் சூழ்நிலை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இச்சுமையை அகற்றுங்கள், (பாட்டாளி வர்க்கத்தின்) வர்க்க உணர்வு தெளிவும் கூர்மையும் அடையும்.''

எனினும் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விரட்டப்படுகின்ற வரை இந்தியப் பாட்டாளி வர்க்கம் ஒன்றும் செய்யாமல் காத்திருக்க வேண்டும், அதற்குப் பின்னரே அது தன் வர்க்க சுயநிர்ணயத்துக்குப் போராட வேண்டும் என்று ஆவணம் கூறவில்லை. ''இந்தியாவிலும் மற்ற கிழக்கு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்திடம் புரட்சிகரமான வர்க்க உணர்வைத் தூண்டுவதற்கு, அதன் முன்னணிப்படை அரசியல் விடுதலையில் முக்கியமான காரணியாக இருப்பதுடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் தயாராவதற்கு'' கம்யூனிஸ்ட் அகிலம் ''தீவிரமான பிரச்சார மற்றும் அமைப்பு வேலைக்கு'' ஏற்பாடு செய்ய வேண்டும்

(ப. 12) என்று ஆய்வுரையில் கூறப்பட்டிருந்தது. பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்ற முறையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதைப் பற்றிய பிரச்சினையை ஆசிரியர்கள் இப்படி எழுப்பினார்கள். இப்பிரச்சினை அவர்களுடைய ஆய்வுரையில் விளக்கப்படவில்லை, ஆனால் ஆவணத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

சட்டோபாத்யாயாவும் லுஹானியும் ராய் உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தம்முடைய வன்மையான, உறுதியான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். ஏனென்றால் அதில் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ''பெயரளவுக்கு மட்டுமே கம்யூனிஸ்டுகள்'', ''தம்மை எது கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்கிறது என்பதைப் பற்றித் தெளிவான கருத்து எதுவும் அவர்களுக்கு இல்லை'', ''ஐரோப்பாவில் ஒரு கட்சியை அமைத்து அதை இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் மேல் திணிப்பது கட்சியை இயற்கைக்கு மாறான முறையில் அமைப்பதாகும்'' என்று கூறினார்கள். இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வு கொண்ட பகுதி சொந்த முயற்சியில் கட்சியை அமைப்பதே சரியான முறை என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் ''இந்தியப் பாட்டாளி வர்க்கத்தில் வர்க்க உணர்வு கொண்ட பகுதி என்பது இல்லை'', ஆகவே இப்பொழுது ''இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதைப் பற்றிப் பேசுவது அவசரப்படுவதாகும்''. கம்யூனிஸ்ட் அகிலம் செய்யக்கூடிய ஒரு பிரத்யேகமான கடமை இந்தியாவில் பிரச்சாரத்துக்கும் ஸ்தாபன ரீதியான கம்யூனிஸ்ட் வேலைக்கும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி ''எதிர்கால இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடிப்படைகளைத் தயாரிப்பதே'' என்று அவர்கள் கருதினார்கள். நெடுங்கால நோக்கில் ''இத்தகைய அமைப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக இயற்கையாகவே மாறும்''. தொழிலாளி வர்க்கத்திடம் சோஷலிஸ்ட் சித்தாந்தத்தை வெளியிலிருந்து புகுத்த வேண்டும், பல காரணங்களினால் பாட்டாளி வர்க்கம் சோஷலிஸ்ட் உணர்வைத் தானாகவே உருவாக்கிக் கொள்ள முடியாது என்கின்ற மார்க்சிய வாதத்தை ஆய்வுரை மற்றும் ஆவணத்தின் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். இதிலிருந்து இரண்டு முடிவுகள் கிட்டலாம்: முதலாவதாக, ஒப்பீட்டளவில் குறைவான எண்ணிக்கையைக் கொண்டிருக்கின்ற கம்யூனிஸ்ட் அறிவுஜீவிகளைக் கொண்டுதான்

கட்சியை அமைக்க முடியும்; இரண்டாவதாக, அது பின்னர் தொழிலாளி வர்க்க இயக்கத்தை சோஷலிசத்துடன் இணைத்து படிப்படியாக ஒரு மெய்யான பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்குவதில் முக்கியமான சக்தியாக விளங்க வேண்டும். இந்த இரண்டு முடிவுகளையும் அவர்கள் நிராகரித்தார்கள். ராய் மிகவும் அவசரப்பட்டுவிட்டார், மிகவும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட கம்யூனிஸ்டுகளின் குழுவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று அறிவிப்பது தவறு என்று அவர்கள் சரியாகவே விமர்சனம் செய்தார்கள்; எனினும் கட்சியை அமைப்பதற்கு அவசியமான ஸ்தாபன மற்றும் அரசியல் தயார்ப்புகளைக் கால வரையின்றி ஒத்திவைத்ததன் மூலம் அவர்கள் இன்னொரு கடைக்கோடி நிலைக்குச் சென்றனர்.

''கிழக்கு நாடுகளை அரசியல் ரீதியாக விடுவிப்பதன் அடிப்படையில் கிழக்கு நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயக மற்றும் தேசியப் புரட்சிகர சக்திகளுடன் ஒத்துழைக்கின்ற'' கருத்தை ஆய்வுரை ஆதரித்தது. தேசிய முதலாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்து விடும் என்று அஞ்சி அதனுடன் ஒத்துழைப்பதை ஆட்சேபிக்கின்ற ''இடது'' கம்யூனிஸ்டுகளை ஆசிரியர்கள் வன்மையாக விமர்சித்தார்கள். ''இந்தக் கறாரான கம்யூனிஸ்டுகள் உலக நிலைமையின் யதார்த்தத்திலிருந்து பரிதாபகரமாகவும் முட்டாள்தனமாகவும் விலகி நிற்பதாக'' (ப. 13) ஆய்வுரை கூறியது.

எனினும் இந்த ஆய்வுரை கம்யூனிஸ்டுகளின் ஸ்தாபன மற்றும் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாத்து வலுப்படுத்த வேண்டும் என்று கோரவில்லை. ஏனென்றால் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை அடைவது புற நிலையில் சோஷலிஸ்ட் புரட்சிக்குச் சமம் என்று அதன் ஆசிரியர்கள் கருதினார்கள். ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தூக்கியெறியப்படுவதன் விளைவாக இந்திய முதலாளி வர்க்கம் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டத் தொடங்கும் என்ற பிரச்சினைக்கு இடமில்லை'' (ப.13) என்று எழுதினார்கள். அவர்கள் இந்தக் கருத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்காக சுற்றி வளைத்து வாதம் புரிந்தார்கள்; இதன் விளைவாக பின்வரும் முடிவு செய்யப்பட்டது: ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழிக்கப்படுகின்ற பொழுது உலக முதலாளித்துவம் நொறுங்கிவிடும்.'' அதற்குப் பிறகு ''உலக

முழுவதிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தடுக்க முடியாத முன்னேற்றத்துக்கு முன்.... சொற்ப எண்ணிக்கையிலிருக்கும் இந்திய முதலாளி வர்க்கம் ஒன்றும் செய்ய முடியாது'' (பக்கங்கள் 13, 14).

உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் கிழக்கு நாடுகளின் தீர்மானகரமான பாத்திரத்தைப் பற்றிய வாதம் ஆசியாவின் முதல் கம்யூனிஸ்டுகளிடம் மிகப் பரவலாக இருந்தது. அந்த வாதம் இந்த ஆவணத்திலும் அழுத்தமாக இருந்தது. உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் இந்தியாவின் பாத்திரத்தை மிகைப்படுத்திய தேசியவாதக் கருத்துக்களை அது வலியுறுத்தியது.

மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன் வந்த இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்களின் தத்துவத்தில் ''உலகப் புரட்சியின் கேந்திரம்'' என்ற முறையில் சோவியத் ருஷ்யாவின் பாத்திரத்தை அங்கீகரிப்பதும் கிழக்கு நாடுகளின் விடுதலைக்கு அது மிகவும் அவசியமென்பதால் அதைப் பாதுகாத்து பலப்படுத்த வேண்டும் என்ற தெளிவு ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது.

வளர்ச்சியடைந்த ஐரோப்பா, அமெரிக்காவின் பாட்டாளி வர்க்கம் ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களிலுள்ள தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்றுசேர முடியாது என்று சட்டோபாத்யாயாவும் அவருடைய இரு தோழர்களும் ஆய்வுரையில் நிரூபிப்பதற்கு முயற்சி செய்தார்கள். ''உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாடு என்ற கற்பனை மீது பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் செயல்தந்திரத்தை அமைப்பது வீண்கற்பனைகளில் ஈடுபடுவதாகும்'' (ப.12) என்று அவர்கள் எழுதினார்கள். ஏகாதிபத்தியம் அந்த நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினருக்கு காலனி நாடுகளைச் சுரண்டிக் கிடைக்கின்ற உபரி மதிப்பில் ஒரு பகுதியைக் கொடுத்து அவர்களைத் தன்னுடைய சுரண்டலில் கூட்டாளிகளாக மாற்றிவிடுகிறது என்ற கருத்தை அவர்கள் ஆதரித்தார்கள்.

பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் மிகவும் கேவலமானது, இந்திய மக்களுக்கு விரோதமான சக்தி என்று அவர்கள் கருதினார்கள். ''பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்துடன் ஒருமைப்பாட்டு உணர்ச்சி கொள்வது சாத்தியம்—அது நடைபெற்றிருக்கிறது; ஆனால் இங்

கிலாந்தின் ஆசிய, ஆப்பிரிக்கக் காலனிகளின் நலிந்த பாட்டாளி வர்க்கத்துடன் அதற்கு ஒருமைப்பாட்டு உணர்ச்சி கிடையாது. இந்தியா, மற்ற சார்பு அரசுகளில் உள்ள தொழிலாளர்களின் விஷயத்தில் பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தை சுரண்டும் வர்க்கமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்மாற்றுகிறது''(ப.11,12).இந்தப் பிரச்சினையில் சட்டோபாத்யாயாவும் அவருடைய இரு தோழர்களும் மற்ற இந்திய தேசியப் புரட்சிக்காரர்களிடமிருந்து சிறிதும் வேறுபட்டிருக்கவில்லை. தொழிலாளி வர்க்கத்தின் மேற்பகுதி, அதன் கட்சி, தொழிற் சங்க மற்றும் சமூக, ஜனநாயக அதிகார வர்க்கம் பூர்ஷ்வாத் தன்மைக்கு மாறுகின்ற போக்கைப் பற்றி வி.இ.லெனின் எழுதியிருந்தார். இவர்கள் அக்கருத்தைத் தனி முதலாக்கி ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் மொத்தத் தொழிலாளி வர்க்கத்துக்கும் அதைப் பயன்படுத்தினார்கள். அது தவறு.

சட்டோபாத்யாயாவும் அவருடைய தோழர்களும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஸ்தாபனக் கோட்பாடுகளை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்த தங்களுடைய குழு ஒரே சீரானதாக இல்லாவிட்டாலும் அதன் சுதந்திரத்தையும் சுய அதிகாரத்தையும் வலியுறுத்தினார்கள். எம். என். ராய் குழுவுடன் இணைவதை நிராகரித்தார்கள்.

சட்டோபாத்யாயா குழுவினரின் கருத்துக்கள் நமக்குக் கணிசமான அக்கறையைத் தருகின்றன. ஏனென்றால் அவை மார்க்சியத்தை நோக்கி வந்து கொண்டிருந்த இந்திய தேசியப் புரட்சிக்காரர்களுக்குக் குறியடையாளமாக இருக்கின்றன.

லெனின் ஆய்வுரையின் ஆசிரியர்களுக்குப் பின்வருமாறு பதில் எழுதினார்: ''உங்கள் ஆய்வுரையை அதிகமான அக்கறையுடன் படித்தேன். ஆனால் புதிய ஆய்வுரை ஏன்? நான் அது பற்றி விரைவிலேயே உங்களோடு பேசுவேன்.''* ஆனால் லெனின் இக்குழுவினரைச் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படவில்லை. அப்படி அவர்கள் சந்தித்

---

* ''லெனினும் இந்தியப் புரட்சிக்காரர்களும்'' என்ற தலைப்பில் ஆர். யுனித்ஸ்காயா எழுதிய கட்டுரையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது, **ஆசியாவும் ஆப்பிரிக்காவும் இன்று** 1966, இதழ் 4, பக்கம் 26 (ருஷ்ய மொழியில்).

திருந்தாலும் அந்த உரையாடலைப் பற்றிய விவரங்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் லெனின் அந்த ஆய்வுரையை எப்படி விமர்சித்திருப்பார் என்பதை நாம் சுலபமாகக் கற்பனை செய்ய முடியும். சட்டோபாத்யாயா வும் அவருடைய தோழர்களும் வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை முழு மையாக ஒத்துக்கொள்ளவில்லை. அது குறுகிய தேசிய எல் லைகளுக்கு, அல்லது மிகவும் அதிகமாகப் பார்த்தால்,ஒரே மாதிரியான சமூக, மற்றும் அரசியல் நிலைமைகளின் கீழ் உள்ள நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று அவர் கள் கருதினார்கள். சர்வதேச ரீதியில் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டை, ஆகவே ''உலகத் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட எல்லா மக்களினங்களும் ஒன்றுசேருங்கள்!'' என்ற மார்க்சிய-லெனினிய கோஷத்தை அவர்கள் நிரா கரித்தார்கள். வர்க்கப் போராட்டத்தைக் குறுகிய அளவில் புரிந்து கொண்டதிலும் அவர்கள் முரணில்லாமல் இருக்க வில்லை. தேசிய விடுதலை இந்திய மக்களுக்கு மிகவும் அதிகமான முன்னுரிமையைக் கொண்டிருக்கிறது என்று சரியாகக் கருதிய போதிலும் சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான உந்து சக்திகளில் ஒன்றாக இருந்த உழைக்கும் வர்க்கத்தினரின் உடனடியான நலன்களை அவர்கள் முற்றி லும் புறக்கணித்தார்கள்.

சட்டோபாத்யாயா, காங்கோஜெ மற்றும் லுஹானி இந்த நலன்களை கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை, அத னால் இந்த விஷயத்தில் புறநிலையில் விடுதலை இயக்கத்தின் முதலாளித்துவ தேசிய அணியை முழுமையாக ஆதரித்தார் கள். இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் எந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டுவதற்கு லெனின் மிகவும் பாடுபட்டார். ''ஆனால் புதிய ஆய்வுரை ஏன்?'' என்று லெனின் அவர்களிடம் வினவிய பொழுது கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் ஆய் வுரையைப் பின்பற்ற வேண்டும் என்று மறைமுகமாகக் கூறி னார்.

ஒரு மாதத்துக்குப் பிறகு லெனின் இதே கருத்தை மிக வும் தெளிவாக வலியுறுத்தினார்; இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய சக்தியாக இருந்த விவசாயிகளு டைய நலன்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய

அவசியத்தை வலியுறுத்தினார். இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் நோக்கங்களையும் சாராம்சத்தையும் விளக்கி புபேந்திரநாத் தத்தா அனுப்பிய புதிய ஆய்வுரையை ஆகஸ்ட் 23ந் தேதியன்று பெற்றுக்கொண்ட லெனின் அவருக்கு 26ந் தேதியன்று பின்வரும் பதிலை எழுதினார்: ''அன்புமிக்க தோழர் தத்தா, உங்களுடைய ஆய்வுரையை நான் படித்தேன். சமூக வர்க்கங்களைப் பற்றி நாம் விவாதம் செய்யக் கூடாது. காலனிப் பிரச்சினையைப் பற்றி என்னுடைய ஆய்வுரையை நாம் பின்பற்ற வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்தியாவில் விவசாயிகள் சங்கங்கள் இருந்தால் அவை பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரியுங்கள்.''*

வெளிநாட்டு எதிரி இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துகின்ற வரை அதற்கு எதிரான அரசியல் புரட்சிக்குப் பல்வேறு வர்க்கங்களும் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும் என்று தத்தா தன்னுடைய ஆய்வுரையில் எழுதியிருந்தார்.** ஆய்வுரையின் அளவுக்கு மீறிய தேசியவாதப் பொருள் லெனினுக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தோன்றுகிறது. பல்வேறு வர்க்கங்களும் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொழுது கூட விவசாயிகளுக்குத் தனியான நலன்கள் இருக்கின்றன, புரட்சிக்காரர்கள்—குறிப்பாகக் கம்யூனிஸ்டுகளாக விரும்புபவர்கள்—அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை லெனின் தன்னுடைய பதிலின் மூலம் கோடிட்டுக் காட்டினார்.

லெனினுடைய கருத்துக்கள் தத்தாவின் கண்களைத் திறந்து விடுதலைப் போராட்டத்தின் உண்மையான அடிப்படையைப் பார்க்கும்படி செய்தன, அதன் வழிமுறைகளைப் பற்றி அவருடைய கருத்துக்களை மாற்றிக் கொள்ளும்படி செய்தன.

இந்தியாவின் விடுதலை இயக்கத்தின் மற்றும் அதன் தலைமையான சக்தியான தேசிய முதலாளி வர்க்கத்தின் தேசியத் தன்மையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தயங்குவதற்காக ராய் மற்றும் ''இடது'' கம்யூனிஸ்டுகளை லெனின் விமர்சித்த அளவுக்கு மார்க்சியத்தை நோக்கி வந்து

---

* V. I. Lenin, "To Bhupendranath Datta", *Collected Works*, Vol. 45, 1981, p. 270.

** இந்த ஆய்வுரையின் சுருக்கம் *Documents of the History of the Communist Party of India* (Vol. I, p. 255) என்ற நூலில் பார்க்க.

கொண்டிருந்த தேசியப் புரட்சிக்காரர்களின் வர்க்கப் பார்வையின் முரண்பாடுகளையும் குறைகளையும் விமர்சித்தார். வி.இ.லெனின் மகேந்திர பிரதாப், முகம்மது பர்க்கத்துல்லா, திருமலாச்சார்யா மற்றும் இதர இந்தியர்களைச் சந்தித்த பொழுது, ''இந்தியாவுக்குத் திரும்பிச் சென்று வர்க்கப் போராட்டத்தை போதியுங்கள், இந்தியாவின் சுதந்திரத்தை அடைவதற்குரிய பாதை அருகே வந்து விடும்''* என்று கூறியதாக புபேந்திரநாத் தத்தா எழுதியிருக்கிறார்.

சட்டோபாத்யாயாவும் அவருடைய தோழர்களும் எழுதிய ஆவணங்களில் தேசியவாத வரையறைகளும் குட்டி முதலாளி வர்க்க கடைக்கோடி நிலைகளும் இடம் பெற்றிருந்தன. முதலாவதாக, அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்தி, மொத்த உலக முதலாளித்துவ அமைப்பின் வடிவமாக அதை சித்தரித்தார்கள்; ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளைப் பார்க்கவில்லை; ஆகவே விடுதலைப் போராட்டத்தின் செயல்முறையைத் தயாரிக்கின்ற பொழுது அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. இரண்டாவதாக, ஏகாதிபத்தியம் இருப்பதற்குக் காலனிகள், குறிப்பாக இந்தியாவே காரணம் என்று கூறி அவற்றின் பாத்திரத்தை மிகைப்படுத்தினார்கள். மூன்றாவதாக, அவர்கள் மேலே தரப்பட்ட கருத்தைக் கொண்டிருந்தபடியால் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் இந்தியாவின் பாத்திரத்தைப் பற்றியும் இயற்கையாகவே மிகையான கருத்தை கொண்டிருந்தார்கள். கடைசியாக, அவர்கள் தேசிய முதலாளி வர்க்கத்தின் பொருளாதார மற்றும் அரசியல் வாய்ப்புவளங்களைக் குறைத்து மதிப்பிட்டு அந்த வர்க்கம் ஆட்சிக்கு வருகின்ற சாத்தியத்தை மறுத்தார்கள். ஆகவே தேசிய விடுதலைப் புரட்சியையும் சோஷலிஸ்ட் புரட்சியையும் சமமாகவே கருதினார்கள்.

சட்டோபாத்யாயா மற்றும் அவருடைய தோழர்கள் தயாரித்த ஆய்வுரையை அப்துர் ராப் பார்க் ஏற்றுக்கொண்டவரே. எனினும் 1921 ஜூலை 29ந் தேதியன்று அவர் சமர்ப்பித்த கொள்கை அறிக்கையில் நமக்கு முன்னரே அறி

---

* B. N. Datta, *Dialectics of Land-Economics of India*, Calcutta, 1952, pp. III, IV.

முகமான தேசியப் புரட்சிகரக் கருத்துக்களை வெளியிட்டார். அவர் இந்தியப் புரட்சிச் சங்கத்தின் சோஷலிஸ்ட் போக்குகளைப் பற்றி எழுதிய போதிலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தகுதிகளை மறுத்தார். ''இந்தியாவின் உண்மையான பாட்டாளி வர்க்கம் தீண்டத்தகாதவர்களே, பறையர்களே'' என்று எழுதிய பொழுது அவர் மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டினார். ''வீடு, வாசலில்லாத 53 மில்லியன் மக்கள். அவர்களிடம் சாதி இல்லை, மதம் இல்லை, வரலாறு இல்லை, மரபு இல்லை. அவர்கள் ஒரு வர்க்கம். அவர்களிடம் வர்க்க உணர்ச்சி ஏற்படுகின்ற பொழுது இந்தியாவில் சமூக அநீதிகளுக்கும் எல்லா வர்க்கங்களுக்கும் எதிராக பயங்கரமான ஆயுதமாக இருப்பார்கள். சமூகப் புரட்சியின் மூலம் அவர்களுக்கு எல்லாமே கிடைக்கும், தம்முடைய துன்பங்களைத் தவிர வேறு எதையும் இழக்க மாட்டார்கள்'' என்று எழுதினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அவர் எதிர்த்தார்; இந்தியாவில் அன்றைக்கிருந்த நிலைமைகளில் கம்யூனிஸ்டுகள் செயல்படுவதைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாது என்று வலியுறுத்தினார். கிழக்கு நாடுகளில் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கூடக் கிடையாது, ''கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படுபவர்களில் 99 சதவிகிதத்தினர் தம் இதயங்களில் தேசியவாதிகளே, எஞ்சிய ஒரு சதவிகிதத்தில் பெரும்பான்மையினர் போலிகள் மற்றும் துர்ச்சாகசக்காரர்கள்'' என்பதை அவர் கூறினார்.

அப்துர் ராப் பார்க் 1921 மே 8ந் தேதி மற்றொரு அறிக்கையில் முதலாளி வர்க்கம் என்ற சொல்லின் பொதுவான அர்த்தத்தில் இந்தியாவில் ஒன்றும் இல்லை, அங்கேயுள்ள முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்துடன் ஒத்துழைக்கிறது என்று வலியுறுத்தினார். உழைக்கும் மக்களின் நலன்களுக்காக சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதை அவர் எதிர்த்தார். ''நம்முடைய செயல்திட்டம் ஆட்சி புரிகின்ற வர்க்கங்களின் அல்லது நிலவுடைமை வர்க்கத்தின் அதிருப்தியைத் தூண்டக் கூடாது''* என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின்

---

* *Indian Commission to the Small Bureau of the Comintern, June 26, 1921.*

உட்குழுவுக்கு 1921 ஜூன் 26ந் தேதியன்று எழுதிய கடிதத்தில் தெரிவித்தார்.

இப்பிரச்சினைகளைப் பற்றி ராயின் அணுகுமுறை அப்படியேதான் இருந்தது. அவர் தன்னுடைய இடது குறுங்குழுவாதக் கருத்துக்களில் பிடிவாதமாக இருந்தார்; கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் கிழக்கு நாடுகளைப் பற்றிய பிரச்சினை குறித்துத் தன்னுடைய புதிய ஆய்வுரையை விவாதித்து நிறைவேற்ற வேண்டும் என்று கூட வலியுறுத்தினார். தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி இரண்டாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட லெனினுடைய ஆய்வுரையை நிராகரிப்பது, குறைந்த பட்சம் ஏற்கெனவே முதலாளித்துவ நாடுகளாகி விட்டதாக அவரால் கருதப்பட்ட இந்தியா, சீனா முதலிய கிழக்கு நாடுகளை அதிலிருந்து நீக்குவது அவருடைய புதிய ஆய்வுரையின் அந்தரங்க நோக்கமாகும். இந்தியா, சீனா முதலிய நாடுகளுக்கு சோஷலிச நோக்கத்தை முன்வைத்த அவருடைய இடதுசாரிப் புரட்சிகரக் கருதுகோள் பொருத்தமானது என்று எடுத்துக்காட்டுவதற்குப் பாடுபட்டார். கம்யூனிஸ்ட் அகிலம் கிழக்கு நாடுகள் அனைத்தையும் ''ஒரே தன்மை கொண்டவையாக, ஒவ்வொன்றும் ஒரே மாதிரியான பிரச்சினைகளைக் கொண்டிருப்பதாகக்'' கருதுகிறது என்று அவர் குறை கூறினார். ஆனால் அதே சமயத்தில் அந்த நாடுகளின் நிலப்பிரபுத்துவ, காலனிப் பொது தன்மையையும் அவற்றின் தலைமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு இலட்சியத்தையும் அவர் அங்கீகரிப்பதற்குத் தவறினார். அவை ''தமது பொருளாதார, தொழில்துறை மற்றும் சமூக நிலைமைகளில் (ஒன்றுக்கொன்று) அதிகமாக வேறுபடுகின்றன'', ஆகவே அவை ''தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் வெவ்வேறாக இருக்கின்றன''* என்று வலியுறுத்தினார்.

இந்த வாதம் அரசியல் ரீதியில் நேர்மையற்றது, சாராம்சத்தில் தவறானது. ஏனென்றால் ராய் குற்றஞ் சாட்டியதைப் போல லெனினோ அல்லது கம்யூனிஸ்ட் அகிலமோ ஆசிய நாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை என்று ஒருபோதும் கருதவில்லை. வி.இ. லெனின் ''எல்லா நாடுகளின் கம்யூனிஸ்டுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வ

* **தூரக் கிழக்கு மக்களினங்கள்**, இர்குத்ஸ்க், 1921, இதழ் 3, பக்கம் 340 (ருஷ்ய மொழியில்).

தேசப் போர்த்தந்திரத்தின் ஒற்றுமைக்குத் தேவைப்படுவது வகை வேறுபாட்டை நீக்குவதோ, தேசிய வேறுபாடுகளை ஒழிப்பதோ அல்ல (தற்பொழுது இது ஒரு பகற்கனவே ஆகும்), கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்... தேசிய வேறுபாடுகளுக்கும் தேசிய அரசு வேறுபாடுகளுக் கும் ஏற்ப சிற்சில விவரங்களில் பிழையின்றி உருமாற்றப்பட்டுச் சரிவரப் பொருத்தமாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்''* என்று கூறினார். ராயின் வாதம் தவறானது; ஏனென்றால் அவர் ஒருதலைச் சார்பாக வாதாடினார். கிழக்கு நாடுகளுக்கு இடையில் புறநிலையில் இருக்கின்ற பொதுத் தன்மைகளைப் புறக்கணித்துவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறுபாடுகளை மிகைப்படுத்திக் கூறினார்.

எம்.என்.ராய் இந்த வாதத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. இரானிலும் துருக்கியிலும் கம்யூனிஸ்டுகளின் இடதுவாதம் மற்றும் சுயவிருப்பவாதத்தின் விளைவாக சில வேதனையான சம்பவங்கள் நடைபெற்றி ருந்தன. அகிலத்தின் மீது இச்சம்பவங்களின் தாக்கத்தைக் குறைப்பதற்காகவும் மேற்கூறிய ஆய்வுரை ராய்க்கு தேவைப்பட்டது. இச்சம்பவங்கள் இந்தியாவுக்குச் சிறிதும் பொருத்தமற்றவை, ஏனென்றால் இரானையும் துருக்கியை யும் காட்டிலும் இந்தியா மிகவும் அதிகமான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறது என்று எடுத்துக்காட்டுவதற்கு அவர் விரும்பினார். ஆனால் அந்தச் சம்பவங்கள் மிகவும் கவலை தருபவையாக இருந்தன. இரானின் முதல் கம்யூனிஸ்டுகளின் இடது குறுங்குழுவாதச் செயல்முறையின் நேரடியான விளைவாக கிலான் புரட் சிக்கு ஆபத்தேற்பட்டிருந்தது. துருக்கியின் முதல் கம்யூ னிஸ்டுகள் எத்தகைய தயாரிப்பும் இல்லாமல் துருக்கியில் முழு அளவில் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளைத் தொடங்கி யதன் விளைவாக 1921 ஜனவரியில் முஸ்தபா சுபி மற்றும் 15 நபர்கள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

இத்தகைய பேரிழப்புகள் கிழக்கு நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களின் உண்மையான புரட்சிகர சக்தி

---

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, 1981, பக்கம் 303.

களுடன் ஒத்துழைக்க வேண்டும், ''புரட்சிகர இயக்கத்தை அழிக்கக் கூடிய''* இடதுவாத வழிமுறைகளையும் நடவடிக்கைகளை யும் தவிர்ப்பது அவசியம் என்னும் லெனினின் கருத்து சரியானது என்று நிரூபித்தன. ''இடதுசாரி'' புரட்சிக்காரர் கள், மிகவும் புரட்சிகரமான தூண்டுதல்களின் அடிப்படை யில் புரட்சியையே கொன்றதற்கு கிலான் சம்பவங்கள் மிகச் சிறப்பான உதாரணமாகும்.

இந்தியப் புரட்சிகர சக்திகளை ஒன்றுபடுத்துவதில் இடது குறுங்குழுவாதக் கொள்கைகள் குறுக்கிடக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதை மாஸ்கோவில் இந்தியப் புரட் சிக்காரர்கள் சமூகத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் நிரூபித்தன. லெனின் ராயின் இடதுவாத நிலையைக் கண்டனம் செய்து கம்யூனிஸ்டுகள் தேசியப் புரட்சிக்காரர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரினார். இந்தியப் புரட்சிக்காரர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகளின் சாராம் சத்தை லெனின் நன்கு அறிந்திருந்தார். எம்.என். ராயின் நிலையை அவர் நெடுங்காலமாகவே அறிவார்; பெர்லின் குழுவைச் சேர்ந்த இந்தியர்களின் அரசியல் கருத்துக்கள டங்கிய ஆய்வுரைகள் அவருக்குத் தற்பொழுது கிடைத்தி ருந்தன. முடிவில், 1921 பிப்ரவரி 14ந் தேதியன்று அப்துர் ராப் பார்க்கைச் சந்தித்து இந்திய விடுதலைப் பிரச்சினை களைப் பற்றி அவருடன் உரையாடினார். இந்தியப் புரட்சிச் சங்கத்தின் தலைவர் ராயின் நிலையை விமர்சனம் செய்து அவருடைய நடவடிக்கைகளைப் பற்றிப் புகார் செய்தார். அப்துர் ராப் பார்க் இந்த உரையாடலைப் பற்றித் தன்னிடம் பின்வருமாறு கூறியதாக புபேந்திரநாத் தத்தா தன் புத்தகங்களில் ஒன்றில் எழுதியிருக்கிறார்: ''இந்தியா வின் தேசியவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும்.''**

எனினும் ராய் தன்னுடைய இடதுவாதக் கருத்துக்களில் உறுதியாக நின்றார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது

---

* '' 'இடதுவாத' வழிகாட்டுதலை நீங்கள் பின்பற்றி னால் புரட்சிகர இயக்கத்தை நீங்கள் அழித்துவிடுவீர்கள்'' என்று லெனின் கூறினார் (கம்முனிஸ்ட், 1969, இதழ் 14, ப. 37இல் தரப்பட்டிருக்கின்ற மேற்கோள்).

** ஆசிய நாடுகளின் வரலாறு பற்றிய பிரச்சினைகள், லெனின் கிராத், 1970, பக்கம் 75 (ருஷ்ய மொழியில்).

காங்கிரசின் கிழக்கு நாடுகளைப் பற்றிய கமிஷனுக்குச் சமர்ப்பித்த ஆய்வுரையில் காலனி நாடுகளுக்கு மத்தியில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் இருப்பதை நிரூபிப்பதற்கு முனைந்தார்; அவை ''ஐரோப்பாவுக்கு அப்பால் வளர்ச்சியடைந்த அரசுகள்'' என்றும் அங்கே உழைக்கும் மக்கள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள், ஏனென்றால் ''அங்கே நிலப்பிரபுத்துவம் ஏற்கெனவே ஒழிக்கப்பட்டுவிட்டது''* என்றும் கூறினார்.

''இந்தியாவைப் போன்ற கிழக்கு நாட்டில் வேகமாக வளர்ச்சியடைகின்ற பாட்டாளி வர்க்கம்—நிலமில்லாத விவசாயிகளையும் சேர்த்து—என்னும் ஒரே வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் புரட்சியை அமைக்க வேண்டும்'' என்று ராய் எழுதினார். ஏழை விவசாயிகள் தான் மற்ற நாடுகளில் புரட்சிகரமான ஒரே வர்க்கம். பொதுவாக அந்நிய ஆதிக்கத்தை தேசிய விடுதலை இயக்கத்தினால் அகற்ற முடியாது, ஏனென்றால் ''முதலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படுகின்ற இயக்கம், முதலாளித்துவப் பொருளாதார சித்தாந்தத்தினால் ஊட்டி வளர்க்கப்படுகின்ற இயக்கம் பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்க முடியாது; ஏனென்றால் அது அவர்களுடைய நம்பிக்கையைப் பெற முடியாது, அவர்களுடைய துன்பகரமான வாழ்க்கையிலிருந்து தப்புவதற்கு ஒரு பாதையைக் காட்டுவதும் இல்லை'' என்று ராய் எழுதினார். சீனாவும் இந்தியாவும் மட்டுமல்ல, பொருளாதார ரீதியில் பின்தங்கிய கிழக்கு நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்கள் ஒரே சமயத்தில் அந்நிய ஏகாதிபத்தியம் மற்றும் சுதேசி முதலாளித்துவம், அதாவது ''உள்நாட்டின் நிலக்கிழார்களையும் வர்த்தகர்களையும்'' எதிர்த்து இரண்டு முனைகளில் போராட வேண்டுமென்று அவர் அறைகூவினார்.**

''வளர்ச்சியடைந்த'' கிழக்கு நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சியே உடனடிக் கடமை என்று ராய் தன்னுடைய ஆய்வுரையில் திட்டவட்டமாக ஒருபோதும் சொல்லவில்லை என்ற போதிலும் அதன் மொத்தக் கருத்தும் வாசகரை அந்த முடிவுக்குத்தான் கொண்டு வந்தது.

---

* தூரக் கிழக்கு மக்களினங்கள், இர்குத்ஸ்க், 1921, இதழ் 3, பக்கங்கள் 339—340.

** அதே சஞ்சிகை, பக்கங்கள் 341—342.

ஆகவே ராயின் ஆய்வுரை கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் தேசிய, காலனிப் பிரச்சினை களைப் பற்றிய தீர்மானங்களின் முக்கிய அம்சமாகிய ஏகாதி பத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி என்ற கருத்தை முற்றி லும் நிராகரித்தது. மூன்றாவது காங்கிரசின் கிழக்கு நாடு களின் கமிஷன் ராயின் ஆய்வுரையை நிராகரித்தது. தேசிய மற்றும் காலனிப் பிரச்சினைகளைப் பற்றி இரண்டாவது காங்கிரசின் எல்லாத் தீர்மானங்களும் இன்றும் செல்லத் தக்கவை என்று வலியுறுத்தும் வகையில் புதிய தீர்மானம் அவசியமில்லை என்று முடிவு செய்தது.

இந்தியாவின் தேசிய மற்றும் சமூகக் கடமைகளின் முன் னுரிமையைப் பற்றி மூன்றாவது காங்கிரசுக்கு முன்பும் காங் கிரசின் போதும் அதன் பிறகும் இந்தியப் புரட்சிக்காரர் களின் மூன்று குழுக்களுக்கும் இடையில் தீவிரமான விவா தங்கள் நடைபெற்றன. அவர்கள் அனைவரும் ஒரே இடத் தில் கூடவில்லை என்ற போதிலும் அவர்கள் தம்முடைய அரசியல் கருத்துக்களைக் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உட் குழுவுக்கும் மூன்றாவது காங்கிரசின் கிழக்கு நாடுகளின் கமி ஷனுக்கும் திட்டவட்டமான முறையில் எழுதிக் கொடுத் திருந்த படியால் அவர்களுக்கிடையில் அதிகமான வேற்று மைகள் இருப்பது தெளிவாயிற்று. அரசியல் மற்றும் தனிப் பட்ட காரணங்களினால் தீவிரமான வேற்றுமைகள் ஏற் பட்டிருக்கின்றன, எனவே இவர்கள் அனைவரும் பங்கெ டுக்கின்ற மாநாட்டைக் கூட்ட இயலாது என்று கம்யூனிஸ்ட் அகிலத்தின் இந்தியக் கமிஷன் முடிவு செய்தது இயற்கையே.

இந்தியக் குடியேறிகள் மத்தியிலிருந்த புரட்சிகர, ஏகாதி பத்திய எதிர்ப்பு சக்திகளைக் கம்யூனிஸ்ட் அகிலம் திரட்டத் தவறியதற்கு எம்.என்.ராய் மற்றும் அவருடைய குழு வினரின் இடது குறுங்குழுவாதப் பிடிவாதமே முக்கிய கார ணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பெர்லின் குழுவின் நிலையும் விட்டுக்கொடுக்காதபடி இருந்தது. அது தாஷ் கன்டில் பிரகடனம் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியை யும் அதில் ராய் குழு வகித்த தலைமையான பாத்திரத் தையும் அங்கீகரிக்கவில்லை. பெர்லின் குழு அதே பாத்தி ரத்தை வகிப்பதற்கு விரும்பியிருக்க வேண்டும், கம்யூனிஸ்ட் அகிலம் தன்னை ஒரு தனி அமைப்பாக அங்கீகரிக்க வேண் டும் என்று அது கோரியது. எனினும் கம்யூனிஸ்ட் அகிலத்

தின் உட்குழு நியமித்த இந்திய கமிஷன் ''எங்களை ஒரு அமைப்பு என்றில்லாமல் தனி நபர்களாகவே கருத உத்தேசிக்கின்றபடியால் அதன் அதிகாரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது...'' என்று அவர்கள் கம்யூனிஸ்ட் அகிலத்துக்கு அனுப்பிய கூட்டுக் கடிதத்தில் தெரிவித்தார்கள்.

இந்தியப் புரட்சிக்காரர்கள் மாஸ்கோவில் தங்கியிருந்த பொழுது அவர்கள் மத்தியில் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகித்தன. ஏனென்றால் லெனினும் கம்யூனிஸ்ட் அகிலமும் அவற்றில் அக்கறை எடுத்துக்கொண்டார்கள். லெனினுடைய கருத்துக்கள் இந்திய தேசியப் புரட்சிக்காரர்கள் விடுதலைப் போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கெடுப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவியதுடன் அவர்களில் பலரை உழைக்கும் வர்க்கங்களின் நலன்களுக்குப் போராடச் செய்தன. மார்க்சியத்தை நோக்கி வந்து கொண்டிருந்த தேசியப் புரட்சிக்காரர்களில் சிலர் தங்கள் தத்துவப் பயணத்தைத் துரிதப்படுத்தினார்கள்.

எம்.என்.ராய் தலைமையிலிருந்த முதல் இந்திய கம்யூனிஸ்டுகள் கூட 1921 கடைசியில் மற்றும் 1922 ஆரம்பத்தில் சில முக்கியமான பிரச்சினைகளைப் பற்றித் தம்முடைய கருத்துக்களை மறு ஆய்வு செய்து கொண்டனர். மூன்றாவது அகிலத்துக்கு ராய் சமர்ப்பித்த ஆய்வுரை அவருடைய குறுங்குழுவாதத் தத்துவங்களை வளர்த்துக் கூறிய போதிலும் சிற்சில ஆக்கபூர்வமான அம்சங்களையும் கொண்டிருந்தது.

எம்.என்.ராய் 1922 பிப்ரவரியில் கிழக்கு நாடுகளின் யதார்த்தங்களைப் புரிந்து கொள்கின்ற திசையில் முன்னேறினார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றிச் சொற்பொழிவாற்றிய பொழுது, பெருந்திரளான உழைக்கும் மக்கள் முதலாளித்துவ தேசிய இயக்கத்தில் பங்கெடுக்கவில்லை, பங்கெடுக்க முடியாது என்ற தமது பழைய கருத்தைக் கைவிட்டிருந்தார். ''ஒத்துழையாமை இயக்கத்தின் குறைபாடுகள் எப்படி இருந்தாலும் சில மாதங்களுக்குள் அது நாடு முழுவதிலும் பரவிவிட்டது''* என்று மேலும்

* *Present Political Situation in India (Report of M. N. Roy to the Executive Committee of the Communist International)*, அ. பு. ப.

எழுதினார். எனினும் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை உருவாக்குவது அவசியம் என்னும் முடிவுக்கு அவர் இன்னும் வரவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கு அப்பால் சென்று மக்களின் பொருளாதார மேம்பாட்டை செயல்திட்டமாகக் கொண்டிருக்கின்ற ''மத்தியப்படுத்தப்பட்ட, வலிமையான, போராடும் கட்சியாக புரட்சிகர மக்களை அமைப்பதற்கு இது தான் தருணம்''* என்று அவர் எழுதினார். இக்கட்சி தேசிய காங்கிரசிலிருந்து தனியானதாக இருக்கும் என்று அவர் கருதியிருக்க வேண்டும்; ஏனென்றால் அவர் காங்கிரசைப் பற்றி அதிகமான அதிருப்தியுடன் எழுதியிருக்கிறார்: காங்கிரஸ் ''நிரந்தரமான அரசியல் ஸ்தாபனம் அல்ல, அது எந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் பிரதிபலிக்கவில்லை''.**

கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதைப் பொறுத்தமட்டில் அதை தாஷ்கன்டில் அமைப்பதற்கு முயற்சி செய்து பெரிய இடர்ப்பாடுகளைச் சந்தித்த பிறகு, பெர்லின் குழுவின் பலமான எதிர்ப்புக்குப் பிறகுதான் இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் ''லெனின் எச்சரிக்கையாகக் கூறிய சொற்களைச்''*** செவிமடுத்தார்கள் என்று ராய் பிற்காலத்தில் கூறினார். அவர்கள் எதிர்கால கம்யூனிஸ்டுகளை மார்க்சிய முறையில் பயிற்றுவிப்பதில் தம்முடைய கவனத்தைத் திருப்பினார்கள், உடனடியாக கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதென்ற கருத்தைக் கைவிட்டார்கள், இந்தியாவில் அதை அமைப்பதற்குப் படிப்படியான, முழுமையான தயாரிப்புகளில் ஈடுபட்டார்கள்.

---

ம.அ.ஆ.கா., தொகுப்பு 5402, பட்டியல் 1, பத்திரம் 489, தாள் 5.

* அதே பத்திரம், தாள் 4.

** அதே பத்திரம், தாள் 5.

*** இந்தியாவில் கட்சிப் பணி பற்றிய செய்தியும் ஸ்தாபன அமைப்புத் திட்டமும், பகுதி 1, செப்டெம்பர் 1925 (ருஷ்ய மொழியில்).

# முடிவுரைக்கு பதிலாக

நூற்றுக்கணக்கான இந்திய தேசியப் புரட்சிக்காரர்களும் போராடும் ஆசியாவைச் சேர்ந்த ஏராளமான நபர்களும் சோவியத் ருஷ்யாவுக்கு வந்தது, குறிப்பாக அவர்கள் மத்தியிலிருந்து கம்யூனிஸ்ட் சக்திகள் உருவானது ஒடுக்கப்பட்ட கிழக்கு நாடுகள் மீது மாபெரும் அக்டோபர் புரட்சியின் புரட்சிகரமான தாக்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியா மற்றும் ஆசிய நாடுகளின் மக்களினங்கள் அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் தேசிய சுதந்திரத்தை ஆதரித்தும் நடத்திய போராட்டத்துக்கு அக்டோபர் புரட்சி சோவியத் அரசு என்ற வடிவத்தில் ஒரு உண்மையான நண்பனையும் வலிமையான கூட்டாளியையும் கொடுத்தது. 1917ம் வருட அக்டோபர் புரட்சிக்குப் பிறகு இந்தியாவின் (இந்தியாவினுடைய பாதை மட்டுமல்ல) புரட்சிப் பாதை சோவியத் நாட்டின் வழியாகச் செல்லத் தொடங்கியது என்பது உண்மையே. ஏகாதிபத்திய ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடிய கிழக்கு நாடுகளின் விடுதலை வீரர்கள், சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வெவ்வேறு ரகங்களைச் சேர்ந்தவர்கள்—தேசியப் புரட்சிக்காரர்கள், புரட்சிகர ஜனநாயகவாதிகள், அவர்களில் மார்க்சியத்தை நோக்கி வந்து கொண்டிருந்தவர்கள், ஏற்கெனவே தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று அறிவித்தவர்கள்—சந்திக்கின்ற இடமாக சோவியத் நாடு இருந்தது.

இந்தியா மற்றும் இதர ஆசிய நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் சோவியத் ருஷ்யாவில் தங்கியது, தங்கள் நாடுகளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்கு அவர்களுடைய புரட்சிகர நடவடிக்கைகள், சோவியத் ஆட்சியிடமிருந்தும் போல்ஷிவிக் கட்சியிடமிருந்தும் அவர்கள் பெற்ற உதவிகள் ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கப்

புரட்சிக்கும் இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் இடையில் போராட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உருவாகிக் கொண்டிருந்த கூட்டணிக்குத் தெளிவான எடுத்துக்காட்டுகளாகும். அது சம்பிரதாயமான ஒப்பந்தங்கள் அல்லது உடன்பாடுகள் இல்லாத போராடுகின்ற கூட்டணி; ஆனால் அது நடைமுறைக் கூட்டணி. இந்திய மக்கள் உள்பட பல ஒடுக்கப்பட்டிருக்கின்ற மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அது மாபெரும் பங்காற்றியது.

சோவியத் ருஷ்யா கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அனைத்துப் புரட்சிக்காரர்களுக்கும், குறிப்பாக அங்கே வசித்த இந்தியப் புரட்சிக்காரர்களுக்கு உண்மையான புரட்சிப் பள்ளியாக, மார்க்சிய-லெனினியப் பள்ளியாக இருந்தது. இதில் வி.இ. லெனினும் கம்யூனிஸ்ட் அகிலமும் பல சோவியத் கம்யூனிஸ்டுகளும் சோவியத் எதார்த்தமும் ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர்.

லெனின் இந்தியா மீது கவனம் செலுத்திய அளவுக்கு வேறு எந்தக் கிழக்கு நாட்டின் மீதும் கவனம் செலுத்தவில்லை என்று ஓரளவுக்குக் கூறலாம். இந்தியப் புரட்சிக்காரர்களைப் போல் இதர ஆசிய நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் லெனினைப் பல தடவை சந்தித்து உரையாடவில்லை. லெனின் இந்தியாவைப் பற்றி விசேஷமான அக்கறை காட்டினார். அவர் 1921 நவம்பர் 14ந் தேதியன்று சோவியத் கட்சி ஊழியர்களுக்கு எழுதிய குறிப்பில் ''...இந்தியத் தோழர்களின் நூல்களை அதிகமாக வெளியிடுங்கள். இந்தியாவையும் அதன் புரட்சிகர இயக்கத்தையும் பற்றி அதிகமான விவரங்களைச் சேகரிக்கும்படி அது அவர்களை ஊக்குவிக்கும்''* என்று எழுதினார்.

இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்கள் லெனின் மற்றும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைவர்கள், கம்யூனிஸ்டுகள் மற்றும் சோவியத் மக்களுடன் கலந்து பழகியதானது குட்டி முதலாளி வர்க்க புரட்சிகர தேசியவாதத்திலிருந்து மார்க்சியத்துக்கு இவர்கள் மாறியதில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. இந்தியாவின் தேசியப் புரட்சிக்காரர்கள் பலர்

---

* V. I. Lenin, "To N. I. Bukharin", *Collected Works*, Vol. 45, 1981, p. 376.

சோவியத் ருஷ்யாவிலிருக்கும் பொழுது கம்யூனிஸ்டுகளாக மாறினார்கள்; இன்னும் பலர் சோவியத் ருஷ்யாவை விட்டு வந்த பிறகு கம்யூனிஸ்டுகளானார்கள். உதாரணமாக, விரேந்திரநாத் சட்டோபாத்யாயா (1880—1937) 1921இல் மாஸ்கோவிலிருந்து சென்ற பிறகு கம்யூனிஸ்டாக மாறி சில வருடங்களுக்குப் பிறகு சோவியத் யூனியனுக்கு நிரந்தரமாகத் தங்குவதற்கு வந்தார். வேறு சிலர் தம்மைக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டு சோவியத் ருஷ்யாவுக்கு வந்தார்களென்றாலும் அங்கே வசித்த காலத்தில் தான் முழுமையான கம்யூனிஸ்டுகளாக வளர்ச்சியடைந்தார்கள். சிலர் மார்க்சியத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவர்கள்; ஆனால் சோவியத் ருஷ்யாவில் வசித்ததன் விளைவாக அவர்கள் இடதுசாரித் திசையில் கணிசமாக வளர்ச்சியடைந்தார்கள். வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தையும் அங்கீகரித்தல், விடுதலைப் போராட்டத்தில் உழைக்கும் மக்களின் தீர்மானகரமான பாத்திரத்தை அங்கீகரித்தல், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் போதுகூட பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் ஆதரவாக சமூக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு அவர்களுடைய கண்ணோட்டம் விரிவடைந்தது.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம்—சோவியத் ருஷ்யாவுக்குப் பக்கத்திலிருந்த கிழக்கு நாடுகளிலிருந்ததைப் போல—மூன்று தனிவகையான கூறுகளைக் கொண்டிருந்தது. முதலாவதாக, அது இன்னும் காலனி, முதலாளித்துவத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டத்திலிருந்த நாடுகளில் தோன்றியது, தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தினால் ஏற்படக் கூடிய வெகுஜன அடிப்படை அதற்கு இன்னும் ஏற்படவில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் குட்டி முதலாளி வர்க்க அணிகளிலிருந்து வந்த தேசியப் புரட்சிகர அறிவுஜீவிகள் முக்கியமான பாத்திரத்தை வகித்தார்கள். தனிநபர் பயங்கரவாதத்தையும் சதி முறைகளையும் பின்பற்றுவதில் பயனில்லை என்பதை உணர்ந்த தேசியப் புரட்சிக்காரர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு தன்மையைக் கொண்ட மார்க்சியத்தால் கவரப்பட்டு அதை நோக்கி வந்தார்கள்.

கிழக்கு நாடுகளில் அன்றிருந்த பிரத்யேகமான வரலாற்றுச் சூழலில் தேசியப் புரட்சிகர மற்றும் புரட்சிகர ஜன நாயக அறிவுஜீவிகள் மத்தியிலிருந்து முதல் கம்யூனிஸ்டுகள் தோன்றி கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்கிய முதல் கம்யூனிஸ்ட் குழுக்களை அமைத்தது முற்றிலும் இயற்கையே. இதற்குப் பிந்திய கட்டத்தில்தான் தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு வந்தது. இதுவும் இயற்கையானதே. ஏனென்றால் பாட்டாளி வர்க்கம் தானாக சோஷலிஸ்ட் சித்தாந்தத்துக்கு வருவதில்லை, வெளியிலிருந்து தான் அந்த சித்தாந்தம் அதற்குக் கொடுக்கப்படுகிறது. இந்தியாவில் மட்டுமல்ல, பாட்டாளி வர்க்கம் இன்னும் உருவாகி கொண்டிருந்த, இன்னும் பலவீனமாக இருந்த, சோஷலிசத்துக்குப் போராடுகின்ற அளவுக்கு வளர்ச்சியடையாத எல்லா நாடுகளுக்கும் இதுவே நடைமுறை. கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கு தேசிய அடிப்படையே இருக்கவில்லையென்றும், ஆசியப் பாட்டாளிகளால் இந்த இயக்கத்திற்கு இன்னமும் தயாராயிருந்திருக்க முடியாது, அவர்கள் தயாராகவும் இல்லை என்றும் ஏதோ மாஸ்கோவும் கம்யூனிஸ்ட் அகிலமும்தான் இதை செயற்கையாகப் புகுத்தியதாயும் பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் கூறுவது முழுவதும் எவ்வளவு பொய்யானது, விஞ்ஞான அடிப்படையற்றது என்பது மேற்கூறியதிலிருந்து தெளிவாகிறது. திட்டவட்டமான வரலாறு இதற்கு நேர் மாறானவற்றைக் காட்டுகிறது. காலனிகளாக இருந்த கிழக்கு நாடுகள் எல்லாவற்றிலும் பாட்டாளி வர்க்கம் வளர்ச்சியடைந்து ''தனக்கேயான வர்க்கம்'' என்ற நிலையை அடைவதற்கு முன்பே கம்யூனிஸ்ட் இயக்கங்கள் தோன்றி விட்டன. எனவே அக்டோபர் புரட்சிக்குப் பின் கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம், அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பின் பயனாய், தொழிலாளி வர்க்கத்தின் உயர் வளர்ச்சியடைந்த போராட்டத்தின் (இது அப்போது நடைபெறவேயில்லை) அடிப்படையில் அல்ல, தேசிய விடுதலை இயக்கத்தின் பலத்த எழுச்சியின் அடிப்படையில்தான் தோன்றியது. அது வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளி வர்க்க இயக்கம் என்ற வடிவத்தில் தனக்கு அவசியமான அடிப்படையைப் பிற்காலத்தில் பெற்றது.

இந்தியா மற்றும் இதர கிழக்கு நாடுகளின் முதல் கம்யூ

னிஸ்டுகள் குட்டி முதலாளி வர்க்கத்திலிருந்து வந்தபடியால் அவர்களிடம் புரட்சிகர தேசியவாதத்தின் சில எச்சங்கள் நெடுங்காலம் வரையிலும் இருந்தன. இவை அவர்களுடைய சித்தாந்தப் பரிணாமத்தில் ''இடதுவாதம்'' என்ற இளம் பருவ நோய் மற்றும் சில திரிபுகளுடன் தொடர்புடையவையாயிருந்தன.

இரண்டாவதாக, இந்தியா மற்றும் சோவியத் ருஷ்யாவுக்குப் பக்கத்திலிருக்கும் கிழக்கு நாடுகளில் ஒரே சமயத்தில் தோன்றிய இரண்டு போக்குகள் (ஒன்று வெளிநாட்டிலும் அடுத்தது உள்நாட்டிலும் தோன்றியது) ஒன்றிணைந்த தன் விளைவாகக் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றியது. இப்போக்குகள் பல ஆண்டுகளாக வெற்றிகரமாக ஒன்றையொன்று நெருங்கி வந்து இறுதியில் ஒன்றிணைந்து, தத்தம் நாடுகளின் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிகளை உருவாக்கின.

கிழக்கு நாடுகளிலிருந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்தவர்கள் 1918—1921ம் வருடங்களில் தேசிய கம்யூனிஸ்ட் குழுக்களை அமைத்தார்கள். பலர் ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியில் உறுப்பினரானார்கள். இந்தியாவிலிருந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த புரட்சிக்காரர்கள் 1920 அக்டோபர் மாதத்தில் தாஷ்கன்டில் ஒரு கம்யூனிஸ்ட் குழுவை அமைத்து அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று அறிவித்தார்கள். சோவியத் ருஷ்யாவிலிருந்த கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்ட் குழுக்களும் ஆசிய நாடுகளிலிருந்த புரட்சிகர சக்திகளும் பரஸ்பரத் தொடர்புகளை நன்கு அமைத்துக் கொண்டிருந்தன. இந்திய கம்யூனிஸ்டுகளின் தாஷ்கன்ட்-மாஸ்கோ குழு இந்தியாவில் கம்யூனிச இயக்கம் (எஸ்.ஏ. டாங்கே, முஜப்பர் அகமது போன்றோர் இதன் ஆரம்பகர்த்தாக்கள்) தோன்றி வளர பெரிதும் உதவியது. ஆசிய நாடுகளில் (இந்தியா, சீனா, இரான், துருக்கி, கொரியா) அநேகமாக ஒரே சமயத்தில் ஏற்பட்ட தேசிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் உருவாக்கத்தில் சோவியத் ருஷ்யாவிலிருந்த கிழக்கு நாடுகளின் புரட்சிக்காரர்களிடம் தோன்றிய கம்யூனிஸ்ட் இயக்கம் முக்கியமான பகுதியாக இருந்தது.

மூன்றாவதாக, இந்தியா, சீனா, இரான், துருக்கி, கொரியா ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அடிப்படையை ஏற்படுத்துவதில் சோவியத் கம்யூனிஸ்டுகள் முழு உதவி

யளித்தார்கள், உண்மையான சர்வதேசியவாதிகள் என்ற முறையில் அவர்கள் சோவியத் ருஷ்யாவில் வசித்த கிழக்கு நாட்டு மக்களிடம் புரட்சிகரப் பிரச்சாரத்தையும் அமைப்பு வேலையையும் செய்தார்கள். அது இந்தியர்கள் உள்பட ஆயிரக்கணக்கான கிழக்கு நாட்டு மக்கள் மீது அக்டோபர் புரட்சியின் புறநிலையான தாக்கத்தை அதிகரிப்பதற்கு மிகவும் உதவியது. போல்ஷிவிக்குகள் சோஷலிசம், காலனி எதிர்ப்புக் கருத்துக்களைப் பரப்பியதன் மூலம் ஆசியாவின் புரட்சிகர சக்திகள் ஒன்று சேர்ந்து கம்யூனிஸ்ட் குழுக்களாக வளர்ச்சியடைவதற்கு உதவி செய்தார்கள்.

ருஷ்யாவிலிருந்த அந்நிய நாட்டினர் மத்தியில் ருஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டி செய்த பிரச்சாரம் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் கம்யூனிஸ்ட் அகிலத்தையும் அமைப்பதில் முக்கியமான அம்சமாக இருந்தது என்று லெனின் கட்சியின் எட்டாவது காங்கிரசில் கூறினார்.

ருஷ்யாவுக்கு அருகிலிருக்கும் நாடுகளைப் போலவே இந்தியாவிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்ப கட்டங்களில் இடது குறுங்குழுவாதக் கருத்துக்களும் செயல்முறைகளும் அதிகமாக இருந்தன. இது அக்கால கட்டத்தின் குறியடையாளமாகும். எம்.என்.ராய் அதன் மிகவும் விடாப்பிடியான பிரச்சாரகராக இருந்தார்.

இந்தியா பின்தங்கிய நாடாக இருந்தாலும் முதலாளித்துவ நாடு, அது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை அல்ல, சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்ற வேண்டும் என்று ராயும் அவருடைய குழுவினரும் கருதினார்கள். சோஷலிஸ்ட் புரட்சியினால் மட்டுமே உழைக்கும் மக்களின் சமூக விடுதலையின் அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்; அதனுடன் கூட விடுதலை வரும் என்று அவர்கள் வாதிட்டார்கள். எனவே ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' என்ற கோரிக்கை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வரையறுக்கப்பட்ட நோக்கங்களைத்தான் வெளியிடுகிறது, அது இந்தியாவின் பாட்டாளி வர்க்கம் அக்கறை கொள்ள முடியாத கலப்பற்ற முதலாளி வர்க்க கோஷம் என்று அவர்கள் கருதினார்கள். ''...'இடது' கம்யூனிஸ்டுகள் சக்திகளின் ஒப்புநிலை பற்றிய பிரச்சினையின் உட்பொருளைப் புரிந்து கொண்டதற்கான அடையாளத்தையே

காணோம்''* என்று லெனின் கூறிய பொழுது இத்தகைய தவறைப் பற்றியே பேசியிருக்க வேண்டும்.

ராய், அவருடைய குழுவினர் மற்றும் இரான், துருக்கி, சீனா ஆகிய நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் தங்கள் நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வின் அளவை மிகைப்படுத்துவதை அவர்களுடைய பேச்சுக்கள் எடுத்துக்காட்டின; ஆனால் பாட்டாளி வர்க்கத்திற்கு சோஷலிசப் புரட்சியின் மீதிருந்த நாட்டத்தை அவர்கள் நம்பவில்லை—நம்பியிருக்கவும் முடியாது—என்பதை அவர்களுடைய செயல்கள் எடுத்துக்காட்டின. புரட்சியை ஆரம்பிப்பதற்கும் வளர்ப்பதற்கும் இராணுவக் காரணியே தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாகக் கருதி அதன் மீதே எல்லா நம்பிக்கைகளையும் வைத்தார்கள். ராயும் அவர் குழுவினரும் இந்தியாவில் சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய நிலைமைகளைத் தயாரிப்பதற்குத் தகுந்த சக்தியாக இனக்குழு வாழ்க்கை முறையைக் கொண்ட எல்லைப்புற மக்களைக் கொண்ட கூலிப்படையை உபயோகிக்க முடியும் என்று கூடக் கருதினார்கள்.

புரட்சியில் இராணுவக் காரணியின் தீர்மானகரமான பாத்திரத்தைப் பற்றிய கருத்துக்கள் கிழக்கு நாடுகளிலிருந்த பாட்டாளி வர்க்கம், அதன் வர்க்க இயக்கத்தின் மெய்யான பலவீனத்திலிருந்து மட்டும் தோன்றி விடவில்லை. அக்காலத்தில் மாபெரும் சம்பவங்கள் இராணுவ ரீதியில் நடைபெற்றன. இவை இந்தியா மற்றும் ஆசிய நாடுகளின் முதல் மார்க்சியவாதிகளின் மீது வன்மையான தாக்கத்தைச் செலுத்தின. ஆசியாவைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டின் பிரத்யேகமான நிலைமைகளும் இக்கருத்துக்களை வலுப்படுத்தின. இவை முதல் இந்திய கம்யூனிஸ்டுகளின் உணர்வில் எளிதாக உட்புகுந்தன, ஏனெனில் இவை தேசியப் புரட்சியாளர்களுடைய செயல்தந்திரத்தின் முக்கியமான பகுதியாக இருந்தன.

இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த ''இடது'' கம்யூனிஸ்டுகள் பெருந்திரளான மக்கள் மத்தியில் அமைப்பு மற்றும் பிரச்சார வேலை செய்வதைக் குறைத்து மதிப்பிட்டதுடன் கம்யூனிசச் செயல்திட்டத்தின் மாபெரும் சக்தி

* வி.இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 8, 1981, பக்கம் 136.

யைப் பற்றி வெகுளித்தனமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அச்செயல்திட்டத்தை அறிவித்தவுடன் கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று நம்பினார்கள். மேலும் இந்திய கம்யூனிஸ்டுகள் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை அடைவதில் தங்களுடைய நாட்டின், அதன் புரட்சிகரப் போராட்டத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்திக் கூறி தங்களுடைய தேசியவாத வரையறைகளை எடுத்துக் காட்டினார்கள்.

இந்தியாவிலிருந்து வெளியேறிவந்த முதல் கம்யூனிஸ்டுகளுடைய கண்ணோட்டம் குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகர தேசியவாதத்திலிருந்து மார்க்சியத்துக்கு மாறுகின்ற வடிவமாக இருந்தது என்று கருத முடியும். அக்காலத்திய இந்தியாவின் (மற்ற கிழக்கு நாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை) பின்தங்கிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டால் அது இயற்கையானதே; 19ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் இதே மாதிரியான நிலைமை இருந்தது. ''அக்காலத்தில் நிலவிய கருத்துக்கள் உண்மையில் மாறும் தன்மையைக் கொண்ட, கலப்பு மற்றும் கதம்பம், குட்டி முதலாளி வர்க்க சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்க சோஷலிசத்துக்கும் இடைப்பட்டவை''* என்று லெனின் ஜெர்மனியைப் பற்றி எழுதினார். அதனால் தான் அவர் அக்கருத்துக்களை மதியூகமாகவும் சாதுரியமாகவும் யாருடைய பெயரையும் குறிப்பிடாமல், தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி யாரையும் தன்னுடைய கருத்துக்கு வளைக்காமல், தத்துவ முதிர்ச்சியின்மையினால் ''இடது'' கம்யூனிஸ்டுகள் இன்னும் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களை அவர்கள் மீது திணிக்காமல் நயமாக விமர்சனம் செய்தார். லெனினுடைய விமர்சனம் இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் தமது ''இடதுவாதத் தவறுகளையும்'' இந்த ''வளர்ச்சி நோய்களையும்''** அகற்றுவதற்கும் மார்க்சிய நிலைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

---

* V. I. Lenin, Petty-Bourgeois and Proletarian Socialism", *Collected Works*, Vol. 9, 1965, p. 438.

** லெனின் தொகுப்பு, தொகுதி XXXVII, மாஸ்கோ, 1970, பக்கம் 224 (ருஷ்ய மொழியில்).

முதல் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் ''இடதுவாதம்'' மட்டுமன்றி, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட குட்டி முதலாளி வர்க்க தேசியவாதத்திலிருந்து மார்க்சியத்துக்கு மாறுகின்ற இதர சித்தாந்தப் போக்குகளும் இந்தியச் சமூகத்தின் பின் தங்கிய நிலைமை என்ற பொதுக் காரணத்திலிருந்து தோன்றின. சோஷலிஸ்ட் கோட்பாடுகளின் முதிர்ச்சியின் அளவு முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி மட்டத்தையும் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான எதிர்ப்பையும் பொறுத்திருக்கிறது என்று எங்கெல்ஸ் சுட்டிக்காட்டினார். ''முதலாளித்துவ உற்பத்தியின் கொச்சையான நிலைமைகளுக்கும் வர்க்க உறவுகளின் கொச்சையான நிலைமைகளுக்கும் கொச்சையான தத்துவங்கள் பொருந்துகின்றன''* என்று அவர் எழுதினார். பொருளாதார உறவுகளின் பின்தங்கிய நிலைமை புரட்சிக்காரர்கள் மார்க்சியவாதிகளாகப் பரிணமிப்பதைத் தடுக்கிறது, அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் சாதாரணமாக மார்க்சியத்தை முழுவதும் கிரகிப்பதில்லை, முதலாளித்துவ ஜனநாயக உலகக் கண்ணோட்ட மரபுகளுடன் தீர்மானகரமான முறையில் முறித்துக் கொள்ள அவர்களால் இயலாமற்போகிறது என்று லெனின் கூறினார்.**

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளுக்கு இதே நிலைதான் ஏற்பட்டது. அவர்கள் குட்டி முதலாளி வர்க்க தேசியப் புரட்சிக் கருத்துக்களைப் பல வருடங்களாகப் பின்பற்றியிருந்தார்கள். அந்த சித்தாந்தத்தை முழுமையாக அகற்றுவது சிக்கலான விஷயம். அதில் ஏராளமான கஷ்டங்கள் இருந்தன. ஆசியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் தங்கள் நாடுகளில் ருஷ்யாவின் புரட்சியை அப்படியே காப்பியடித்துப் பின்பற்றி சுதந்திரத்துடன் சமூக விடுதலையையும் சாதிப்பதற்கு விரும்பினார்கள். அவர்களுடைய ''இடதுவாதத்துக்கு'' இப்பொறுமையின்மை—அக்காலத்திய நிலைமைகளில் அது இயற்கைதான்—மற்றொரு காரணமாகும். ஒரு சோஷலிஸ்ட் புரட்சிதான் மக்களினங்களுக்கு உண்மையான

---

* F. Engels, "Socialism: Utopian and Scientific", K. Marx and F. Engels, *Selected Works* in three volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1976, p. 119.

** V. I. Lenin, "Differences in the European Labour Movement", *Collected Works*, Vol. 16, 1963, p. 348.

யைப் பற்றி வெகுளித்தனமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அச்செயல்திட்டத்தை அறிவித்தவுடன் கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று நம்பினார்கள். மேலும் இந்திய கம்யூனிஸ்டுகள் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை அடைவதில் தங்களுடைய நாட்டின், அதன் புரட்சிகரப் போராட்டத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்திக் கூறி தங்களுடைய தேசியவாத வரையறைகளை எடுத்துக் காட்டினார்கள்.

இந்தியாவிலிருந்து வெளியேறிவந்த முதல் கம்யூனிஸ்டுகளுடைய கண்ணோட்டம் குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகர தேசியவாதத்திலிருந்து மார்க்சியத்துக்கு மாறுகின்ற வடிவமாக இருந்தது என்று கருத முடியும். அக்காலத்திய இந்தியாவின் (மற்ற கிழக்கு நாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை) பின்தங்கிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டால் அது இயற்கையானதே; 19ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் இதே மாதிரியான நிலைமை இருந்தது. ''அக்காலத்தில் நிலவிய கருத்துக்கள் உண்மையில் மாறும் தன்மையைக் கொண்ட, கலப்பு மற்றும் கதம்பம், குட்டி முதலாளி வர்க்க சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்க சோஷலிசத்துக்கும் இடைப்பட்டவை''* என்று லெனின் ஜெர்மனியைப் பற்றி எழுதினார். அதனால் தான் அவர் அக்கருத்துக்களை மதியூகமாகவும் சாதுரியமாகவும் யாருடைய பெயரையும் குறிப்பிடாமல், தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி யாரையும் தன்னுடைய கருத்துக்கு வளைக்காமல், தத்துவ முதிர்ச்சியின்மையினால் ''இடது'' கம்யூனிஸ்டுகள் இன்னும் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களை அவர்கள் மீது திணிக்காமல் நயமாக விமர்சனம் செய்தார். லெனினுடைய விமர்சனம் இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் தமது ''இடதுவாதத் தவறுகளையும்'' இந்த ''வளர்ச்சி நோய்களையும்''** அகற்றுவதற்கும் மார்க்சிய நிலைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

---

* V. I. Lenin, Petty-Bourgeois and Proletarian Socialism", *Collected Works*, Vol. 9, 1965, p. 438.

** லெனின் தொகுப்பு, தொகுதி XXXVII, மாஸ்கோ, 1970, பக்கம் 224 (ருஷ்ய மொழியில்).

முதல் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் ''இடதுவாதம்'' மட்டுமன்றி, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட குட்டி முதலாளி வர்க்க தேசியவாதத்திலிருந்து மார்க்சியத்துக்கு மாறுகின்ற இதர சித்தாந்தப் போக்குகளும் இந்தியச் சமூகத்தின் பின் தங்கிய நிலைமை என்ற பொதுக் காரணத்திலிருந்து தோன் றின. சோஷலிஸ்ட் கோட்பாடுகளின் முதிர்ச்சியின் அளவு முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி மட்டத்தை யும் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான எதிர்ப்பையும் பொறுத்திருக்கிறது என்று எங்கெல்ஸ் சுட்டிக்காட்டினார். ''முதலாளித்துவ உற்பத்தி யின் கொச்சையான நிலைமைகளுக்கும் வர்க்க உறவு களின் கொச்சையான நிலைமைகளுக்கும் கொச்சையான தத்துவங்கள் பொருந்துகின்றன''* என்று அவர் எழுதினார். பொருளாதார உறவுகளின் பின்தங்கிய நிலைமை புரட்சிக் காரர்கள் மார்க்சியவாதிகளாகப் பரிணமிப்பதைத் தடுக் கிறது, அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் சாதாரண மாக மார்க்சியத்தை முழுவதும் கிரகிப்பதில்லை, முத லாளித்துவ ஜனநாயக உலகக் கண்ணோட்ட மரபுகளுடன் தீர் மானகரமான முறையில் முறித்துக் கொள்ள அவர்களால் இயலாமற்போகிறது என்று லெனின் கூறினார்.**

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டுகளுக்கு இதே நிலை தான் ஏற்பட்டது. அவர்கள் குட்டி முதலாளி வர்க்க தேசியப் புரட்சிக் கருத்துக்களைப் பல வருடங்களாகப் பின்பற்றியிருந்தார்கள். அந்த சித்தாந்தத்தை முழுமையாக அகற்றுவது சிக்கலான விஷயம். அதில் ஏராளமான கஷ்டங் கள் இருந்தன. ஆசியாவின் முதல் கம்யூனிஸ்டுகள் தங்கள் நாடு களில் ருஷ்யாவின் புரட்சியை அப்படியே காப்பியடித்துப் பின்பற்றி சுதந்திரத்துடன் சமூக விடுதலையையும் சாதிப்ப தற்கு விரும்பினார்கள். அவர்களுடைய ''இடதுவாதத் துக்கு'' இப்பொறுமையின்மை—அக்காலத்திய நிலைமை களில் அது இயற்கைதான்—மற்றொரு காரணமாகும். ஒரு சோஷலிஸ்ட் புரட்சிதான் மக்களினங்களுக்கு உண்மையான

* F. Engels, "Socialism: Utopian and Scientific", K. Marx and F. Engels, *Selected Works* in three volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1976, p. 119.

** V. I. Lenin, "Differences in the European Labour Movement", *Collected Works*, Vol. 16, 1963, p. 348.

விடுதலையைத் தரும் என்பது ருஷ்ய அனுபவத்தின் மூலம் தெளிவாகிவிட்ட பிறகு அரைகுறையான முயற்சி செய்வது மன்னிக்க முடியாத குற்றம் என்று அவர்கள் கருதினார்கள்.

கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளின் இடது வாதத் தவறுகளின் சாராம்சத்தை லெனினைப் போல தெட்டத்தெளிவாக கம்யூனிஸ்ட் அகிலத்தில் வேறு எவரும் பார்க்கவில்லை, அங்கே ஆரம்ப நிலையிலிருந்த கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு இத்தவறுகள் எவ்வளவு ஆபத்தானவை என் பதையும் லெனினைப் போல தெட்டத்தெளிவாக வேறு எவரும் உணரவில்லை.

ராய் மற்றும் ஆசியாவின் முதல் கம்யூனிஸ்டுகளுடைய இடதுவாதக் கருத்துக்களின் விளைவாக ஆசியாவில் தொழி லாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகளிடம் அரசியலை போதித்து முதலாளி வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க் கத்தை வேறுபடுத்துகின்ற நிகழ்வுப் போக்கைத் துரிதப்படுத்து வதற்குப் பதிலாகப் பெருந்திரளான மக்களுக்கு ஆணை யிடுகின்ற முறை ஏற்படும், அவர்களால் இன்னும் ஆதரிக்க முடியாத கோஷங்களை ஆதரிக்கும்படி, நிறைவேற்ற முடி யாத கடமைகளை நிறைவேற்றும்படி இராணுவ முறை களின் மூலம் நிர்ப்பந்திக்கப்படும் என்பதற்காக லெனின் அவற்றை விமர்சனம் செய்தார்.

''இடதுவாதம்'' என்ற இளம்பருவ நோயின் விளைவாக இந்தியா மற்றும் கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் பெருந்திரளான மக்களிடமிருந்து முற்றிலும் விலகி நிற் கின்ற ஆபத்து ஏற்பட்டது; அப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் குழுக்கள் உதிரியான, வலிமை யற்ற கோஷ்டிகளாக மாறுகின்ற அபாயம் ஏற்பட்டது. தாஷ்கன்டிலும் மாஸ்கோவிலும் இந்தியப் புரட்சிக்காரர்கள் மத்தியில் ஏற்பட்ட சச்சரவுகள் அந்த அபாயம் எவ்வளவு உண்மை என்பதை எடுத்துக்காட்டின. கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகளின் தன்னிச்சையான இடதுசாரி புரட் சிகரக் கருதுகோள்களை லெனின் முழுமையான, முறைப் படியான விமர்சனத்துக்கு உட்படுத்தினார், அவை கம்யூ னிஸ்ட் இயக்கத்துக்கு மட்டும் ஆபத்தேற்படுத்தவில்லை, காலனி மற்றும் சார்பு நாடுகளின் தேசிய விடுதலை இயக் கத்துக்கும் ஆபத்தேற்படுத்தக் கூடியவை என்பதை மிகுந்த கவனத்துடனும் இடைவிடாமலும் எடுத்துக்காட்டினார்.சர்வ

தேச நிலைமை மற்றும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் அடிப் படைக் கடமைகள் குறித்து கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு என்னும் உரையின் திருத்தப்படாத நகலில் ''காலனிகள் மற்றும் சார்பு நாடுகளில் புரட்சிகர இயக் கம். இடதுவாத தவறுகள்''* என்று லெனின் குறித்திருந் தார்.

கம்யூனிஸ்டுகளின் உலக படை ''இன்னும் மோசமான பயிற்சியையும் மோசமான அமைப்பையுமே கொண்டிருக் கிறது'' என்று லெனின் 1921 ஆகஸ்டில் எழுதினார். ''மிகக் கவனமான, கறாரான சோதனைக்கு நம்மை உட்படுத்திக் கொண்டு, நம்முடைய சொந்த இயக்கத்தின் அனுபவத்தைப் பகுத்தாராய்ந்து'' நாம் இந்தப் படையைத் ''திறமை யுடன் பயிற்றுவிக்க வேண்டும், அதைச் செவ்வனே அமைக்க வேண்டும்...''** என்று அவர் கூறினார். ஜெர் மானியக் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதிய கடிதத்தில் லெனின் இதைச் சொல்லியிருந்தாலும் மற்றெந்த நாடுகளையும் காட்டிலும் மோசமான அமைப்பையும் பயிற்சியையும் கொண்டிருந்த கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டு களுக்கு இவை நன்கு பொருந்தும். கிழக்கு நாடுகளின், குறிப் பாக இந்தியாவின் இளம் கம்யூனிஸ்டுகளைப் பயிற்று விப்பதில் லெனின் வியக்கத்தக்க அளவுக்குப் பங்கெடுத்தார்.

கிழக்கு நாடுகளின் முதல் கம்யூனிஸ்டுகள் சோவியத் ருஷ்யாவில் தங்கியிருந்த பொழுது லெனின் எழுதிய நூல் களைப் படிப்பதற்கு மட்டுமல்லாமல் அவருடன் பேசுவதற் கும் கடிதம் எழுதுவதற்கும் வாய்ப்புகளைப் பெற்றனர். அதன் மூலம் தங்களுடைய செயல்திட்டங்களையும் நட வடிக்கைகளையும் புரட்சிகரமான தன்னிச்சைவாதம் என்ற மணலில் அல்ல, ஆசிய மக்களினங்களின் வாழ்க்கையைப் பற்றிய விஞ்ஞான அறிவு மற்றும் சமூக நிகழ்வுப் போக்கு களைப் பற்றிய மார்க்சிய ஞானம் என்னும் கற்பாறையின் மீது எப்படி அமைப்பது என்பதைக் கற்றுக்கொண்டார்கள்.

லெனினுடைய விமர்சனங்களின் விளைவாக இந்தியா

---

* லெனின் தொகுப்பு, தொகுதி XXXVII, பக்கம் 226 (ருஷ்ய மொழியில்).

** V. I. Lenin, "A Letter to the German Communists", *Collected Works*, Vol. 32, 1965, p. 520.

வில் அப்பொழுது தோன்றிக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் ''இடதுவாத'' நோயை குணப்படுத்திக் கொள்ளத் தொடங்கியது. அதற்குப்பிறகுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி—அது 1925 வரையிலும் உண்மையில் அமைக்கப்பட வில்லை—நிதானமாக நடந்து பெருந்திரளான மக்களின் ஆதரவைப் பெறத் தொடங்கியது. பொதுவாக, இந்தியப் புரட்சிக்காரர்களுக்கும் குறிப்பாக, கம்யூனிஸ்டுகளுக்கும் அக்டோபர் புரட்சி மற்றும் லெனினுடைய நடவடிக்கை களின் முக்கியத்துவத்தைப் பற்றி எஸ்.ஜி. சர்தேசாய் மிகப் பொருத்தமான முறையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். ''உண்மையாக, நேர்மையாக வரலாற்றை எழுத வேண்டு மெனில், உண்மையை திரித்து மறைக்காமல் இதை வெளிப் படுத்துவதுதான் வரலாற்றின் லட்சியமெனில் அக்காலகட் டத்தில் எமது இதயங்களிலும் அறிவிலும் தெளிவேற்படுத் தியதற்காக இந்தியர்களாகிய நாங்கள் லெனினுக்கும் ருஷ்யப் புரட்சிக்கும் சோவியத் யூனியனுக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.''*

சோவியத் ருஷ்யாவில் இந்தியப் புரட்சிக்காரர்கள் தங்கி யிருந்ததன் தொடர்பாக மற்றொரு முக்கியமான அம்சத்தை யும் குறிப்பிட வேண்டும். சோவியத் மக்கள் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் அரசு உறுப்புகளுடன் அவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கமான தொடர்பு ஏகாதிபத் திய ஒடுக்குமுறையிலிருந்து உலகத்தை விடுவிக்க வேண்டும் என்னும் பொது இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட நட்புறவை வளர்த்தது. சோவியத் அரசாங்கமும் மக்களும் இந்தியர்களை மனப்பூர்வமாக வரவேற்று பொருளாயத உதவியும் தார்மிக ஆதரவும் கொடுத்தார்கள்,கல்வி நிலையங் களிலும் விசேஷப் பயிற்சி வகுப்புகளிலும் படிப்பதற்கும் உதவியளித்தார்கள்; இந்தியப் புரட்சிக்காரர்கள் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பயில்வதற்கு உதவி செய்தார் கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து தாய்நாட்டை விடுவிப்ப தற்கு இந்தியர்களின் கடினமான போராட்டத்தில் சோவியத் மக்கள் மனப்பூர்வமான அக்கறை காட்டினார்கள்.

மறு பக்கத்தில், தொழிலாளர்கள் மற்றும் விவசாயி

---

* S. G. Sardesai, *India and the Russian Revolution*, New Delhi, 1967, p. 73.

களின் அரசின் உண்மையான நிலைமைகளைப் பற்றி நேரடி யான அனுபவத்தைப் பெற்ற இந்தியர்கள் சோவியத் ஆட்சிக்குத் தங்களுடைய செயலுரமிக்க ஆதரவைக் கொடுத்தார்கள்; அதன் மூலம் அக்டோபர் புரட்சியின் சாரத்தையும் இந்தியாவின் விடுதலைக்கு அதன் முக்கியத்துவத்தையும் தாங்கள் புரிந்து கொண்டிருப்பதை எடுத்துக்காட்டினார்கள்.

1920 மே மாதத்தில் என்செலி நகரத்தில் பாதுகாப்புடன் இருந்த வெண்படையினர் மற்றும் பிரிட்டிஷ் படைப் பிரிவுகளை செஞ்சேனை துருக்கிஸ்தானில் சேர்க்கப்பட்ட பாரசீகப் படைகளின் உதவியுடன் தாக்கிய பொழுது பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்த பல இந்தியர்கள் செஞ்சேனைக்கு எதிராகச் சண்டையிட மறுத்தார்கள். நூற்றுக் கணக்கான இந்திய வீரர்கள் பிரிட்டிஷ் இராணுவத்தை விட்டு ஓடிவந்து செஞ்சேனையில் சேர்ந்தார்கள். அவர்களைக் கொண்டு விசேஷமான இந்திய ''கம்யூனிஸ்ட் படையை'' அமைப்பதற்கு இரானிய கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டார்கள், அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடியைக் கற்பித்தார்கள்.

சோவியத் குடியரசிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களில் சிலரும் சீனா, கொரியா, இரான், துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் பஸ்மாச் கொள்ளைக்காரர்கள், வெண்படையினர் மற்றும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து செஞ்சேனையுடன் சேர்ந்து போரிட்டார்கள்.

சோவியத் ருஷ்யாவைப் பற்றி ஏகாதிபத்தியம் பரப்பிய பொய்களை இந்தியப் புரட்சிக்காரர்கள் மறுத்து அதன் விடுதலைப் பாத்திரத்தைப் பற்றிய உண்மையை விளக்கினார்கள், ருஷ்ய மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளையும் சாதகங்களையும் பிரச்சாரம் செய்தார்கள். அதன் மூலம் சோவியத் அரசின் தார்மிக மற்றும் அரசியல் செல்வாக்கை பலப்படுத்துவதற்கு உதவி செய்தார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் உறுப்பினராக இருந்த இந்தியர் எஸ்.சக்லத்வாலா 1925 ஜூலை 9ந் தேதியன்று காமன்ஸ் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவை இங்கே நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமானது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ன செய்திருக்கிறது, ருஷ்யாவில் அக்டோபர் புரட்சி என்ன சாதித்திருக்கிறது என்று அவர் ஒப்பிட்டுக் காட்டினார்: ''...ருஷ்யாவைச்

சேர்ந்த போல்ஷிவிக் நண்பர்கள் ருஷ்ய விவசாயிகளுக்கு—இவர்கள் இந்திய விவசாயிகளை பெரிதும் ஒத்தவர்கள்—ஐந்து வருடங்களில் அரசியல் உரிமைகளை வழங்கிவிட்டார்கள். ருஷ்யாவில் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றனர்: முகம்மதியர்கள், யூதர்கள், கிரேக்கத் திருச்சபையினர் மற்றும் பல ரகத்தினர். போல்ஷிவிக்குகள் அவர்களுக்கு ஐந்து வருடங்களில் கல்வி கற்பித்துவிட்டார்கள்; நீங்கள் 150 வருடங்களாக இந்திய விவசாயிகளை இரக்கமின்றியும் குரூரமாகவும் நடத்திவருவதைப் போலவே ஜாராட்சியும் ருஷ்ய விவசாயிகளை நடத்தியது. ருஷ்யாவில் கம்யூனிஸ்ட் புரட்சி நடைபெற்ற ஐந்து வருடங்களுக்குள் ருஷ்ய விவசாயிகளில் 65 சதவிகிதத்தினர் கல்வியறிவு பெற்றுவிட்டார்கள். உங்கள் பத்திரிகைகள் இரத்தத்தை உறையவைக்கின்ற கட்டுரைகளை எழுதிய போதிலும் ருஷ்யர்களுடைய சாதனை சிறப்பானதே என்று பிரிட்டனைச் சேர்ந்த அரை டஜன் ஆண்களும பெண்களும் இங்கே நற்சான்றிதழ் வழங்கினார்கள்... மக்களுக்கு அரசியல் உரிமைகள், கல்வி, விஞ்ஞான ஆய்வுச்சாலைகள், விஞ்ஞான நிலையங்கள், ஆரோக்கிய விடுதிகள், தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு மற்றும் ஈட்டுப்படிகளை எப்படித் தருவது என்பதை பிரிட்டிஷ்காரர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அங்கே இவை நிறைவேறிவிட்டன. இதை ஆராய்வதற்கு இந்தியர்களைக் கொண்ட தூதுக் குழுவை ருஷ்யாவுக்கு அனுப்ப வேண்டும் என்று இச்சபையை நான் கேட்டுக் கொள்கிறேன்.''*

இரு மக்களினங்களுக்கு இடையிலும் பல வருடங்களாக வளர்ச்சியடைந்த நட்பு சோவியத் யூனியன், இந்தியக் குடியரசு என்னும் இரண்டு நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை உருவாக்கியிருக்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில் சோவியத்-இந்திய நட்புறவு உறுதிபெற்று நாடுகளுக்கு மத்தியில் சமாதானத்தை வலுப்படுத்துவதில் முக்கியமான பங்காற்றியிருக்கிறது.

---

* *The Parliamentary Debates. Official Report. House of Commons,* Vol. 186, July 9, 1925, p. 725.

## பெயர்க் குறிப்பு


அகமது, குலாம் [Ahmad, Ghulam] —*118, 119.*

அகமது, முஜப்பர் [Ahmad, Muzaffar] —*23, 57, 59, 75, 83, 85, 91, 125, 130, 195, 205, 206, 211, 230, 271.*

அகமது, ரபீக் [Ahmad, Rafiq]— *75, 83, 85, 91, 92, 100, 109, 120, 199, 205, 216, 230.*

அகமது, ஹபீப் [Ahmad, Habib]—*216.*

அக்பர் கான் முகம்மது [Akbar Khan Muhammad]—*85, 91, 92, 216.*

அக்பர் ஜான் [Akbarjan]—*108, 109.*

அக்பர் ஷா [Akbar Shah]—*196, 216.*

அதிகாரி, ஜி. [Adhikari, G.]—*148, 149, 206.*

அமானுல்லா கான் [Amanullah Khan]—*80, 232, 241.*

அலி, முகம்மது [Ali, Mohammed]—*39, 42, 52, 53, 55, 56, 57, 71, 81, 125, 127, 194, 195, 198, 215.*

அலிகான், மஸூத் [Alikhan, Masood]—*123.*

அலி ஷா, மஸூத் [Ali Shah, Masood]—*92.*

அஸீஸ், அப்துல் [Aziz, Abdul]—*108.*

ஆச்சாரியா, பிரதிவாதி (திருமலாச்சார்யா) [Acharya, Prativadi]—*6, 16, 37, 59, 60, 83, 110, 116—117, 130, 171, 173, 190, 194, 195, 200, 201, 209, 248, 258.*

இகோரவா, எம்.என்.—*186.*

இயோவானவிச், அடானாஸ் [Iovanovic, Atanas]— *118.*

இஸ்மாயில், முகம்மது [Ismail, Mohammad]—*107.*

உலியனோவ்ஸ்கி, ரோ. அ.— *12, 226.*

உன்னிகிருஷ்ணன், பி. [Unnikrishnan, P.]—*116, 118.*

உஸ்மானி, ஷௌகத் [Usmani, Shaukat]—*81—84, 92, 99, 100, 103, 109, 120, 123—124, 128, 199, 205, 222,*

எங்கெல்ஸ், பி. [Engels, F.] — *123, 221, 275.*

எதெர்ட்டன், பி.எஃப். [Etherton, P. F.]—*236*.
எனிக்கேயெவ்—*108*.
ஓவர்ஸ்ட்ரீட், ஜி. [Overstreet, G.]—*162, 208, 241*.
ஃபரூக், அமீன் [Farukh, Amin]—*60, 61, 65, 110*.
ஃபிட்டிங்ஹாப், ரோஸா—*194, 195*.
ஃபிரலோவ், ஜி.என்.—*227*.
ஃபிராட்கின்—*86, 107*.
ஃப்ரூன்ஸே, எம்.வி.—*59*.
கரஹான், எல்.எம்.—*89*.
கல்ச்சாக், அ.வி.—*42, 80*.
காங்கோஜெ [Khankhoje]—*16, 248, 249, 256*.
காந்தி, மகாத்மா [Gandhi, Mahatma]—*69, 169, 183—184, 232*.
காய்ரி, சத்தார் [Khairy, Sattar]—*76—77*.
காய்ரி, ஜப்பார் [Khairy, Jabbar]—*76—78*.
கிசெலேவ், என்.அ.—*227*.
கிரனேடேர், அ.—*228*.
கில், தலீப் சிங் [Gill, Dalip Singh]—*37*.
குத்தூஸவ், இ.—*108*.
குப்தா, எம். [Gupta, M.]—*105*.
குப்தா, என். [Gupta, N.]—*215, 248*.
குப்தா, சிவ பிரசாத் [Gupta, Shiva Prasad]—*181, 196*.
குரூகெர், ஹோர்ஸ்ட் [Krüger, Horst]—*20*.
கூய்பிஷெவ், வி.வி.—*59*.
கையூம், அப்துல் [Qwayum, Abdul]—*119—123*.
கொமரோவ், ஏ. என்.—*21*.
கோசரோகின்—*76*.
கொப்பே, வி.வி.—*228*.
கோஷ், ஔ. [Ghosh, Au.]—*17*.
கௌசிக், தேவேந்திரா [Kaushik, Devendra]—*23, 59, 97, 100*.
சகோல்னிக்கவ், ஜி.யா.—*245, 246*.
சக்லத்வாலா, எஸ். [Saklatvala, S.]—*279*.
சட்டோபாத்யாயா, கௌதம் [Chattopadhyaya, Gautam]—*25, 27, 157*.
சட்டோபாத்யாயா, விரேந்திரநாத் [Chattopadhyaya, Virendranath]—*16, 19, 20, 116, 248—249, 251, 252, 254—256, 258, 269*.

சபாரவ், ஜி.இ.—*173, 178, 179.*
சம்ரா, சட்டார் சிங் [Samra, Chattar Singh]—*235, 236, 237, 245, 246.*
சர்தேசாய், எஸ்.ஜி. [Sardesai, S. G.]—*112, 148, 151, 278.*
சிங், பகவான் [Singh, Bhagwan]—*15, 16.*
சிச்சேரின், ஜி.வி.—*103, 177, 180.*
சுபி, முஸ்தபா [Subhi, Mustafa]—*43, 261.*
சுரித்ஸ், யா.ஸி.—*39, 40, 59, 117.*
டாங்கே, எஸ்.ஏ.—*271.*
டிரென்ட் ராய், எவலின் [Trent-Roy, Evelyn]—*130, 134, 190, 194, 248.*
டிவெல், அ. [Tivel, A.]—*61.*
டூராண்டு, ஜி.எம். [Durand, G. M.]—*67.*
ட்ரு, டி. [Druhe, D].—*234—237, 239, 240, 243—246.*
தத்தா, புபேந்திரநாத் [Datta, Bhupendranath]—*16, 159, 248, 257, 258, 262.*
தரக்கானவ், அ.எம்.—*227, 229, 230, 231.*
தாஸ், தாரகநாத் [Das, Taraknath]—*16.*
தாஸ், பாரத் [Das, Bharat]—*29.*
திமித்ரியெவ், ஜி.எல்.—*53.*
திரொயனோவ்ஸ்கி, கி.—*19, 117.*
திரோத்ஸ்கி, எல்.டி.—*246—247.*
திலகர் [Tilak]—*17.*
தெவ்யாத்கினா, டி.எஃப்.—*186.*
தெனீக்கின், அ.இ.—*42, 107.*
தொம்பாஸவ்—*108.*
நசீர் [Nazir]—*69, 108.*
நரிமானவ், என்.என்.—*44.*
நாயக், இ.அ. [Naik, I. A.]—*161.*
நிஜாமுத்தீன் [Nismuddin]—*216.*
நிஸார், முகம்மது [Nisar, Mohammad]—*118, 123.*
நெப்போலியன் [Napoleon I]—*234.*
நேரு, ஜவகர்லால் [Nehru, Jawaharlal]—*232.*
பர்க்கத்துல்லா, முகம்மது [Barakatullah, Mohammad]—*15—18, 26, 36, 37, 39, 43—52, 58, 71, 76, 128, 258.*

பவ்லோவிச், எம்.பி.—*19, 106, 134, 157.*
பஸில், காதிர் [Fazil, Qadir]—*60, 61, 108.*
பாந்த்யோபாத்யாயா, ஜி. [Bandyopadhyaya, G.]—*87, 232, 234, 245.*
பாபஹாத்ஜாயெவ், என்.அ.—*17.*
பார்க், அப்துர் ராப் [Barq, Abdur Rabb]—*6, 16, 26, 37, 59, 60, 61—63, 67, 70, 73, 83, 103, 116, 117, 128, 129, 172, 173, 177, 178, 179, 186, 200, 201, 202, 248, 258, 259, 262.*
பானர்ஜி, ஷிப்நாத் [Banerjee, Sibnath]—*87—88.*
பாஸ்வோல்ஸ்கி, எல். [Pasvolsky, L.]—*235.*
பிரதாப், மகேந்திர [Pratap, Mahendra]—*6, 16, 17,34—38, 59, 97, 117, 258.*
பிராவின், என்.எஸ்.—*52.*
பிரியொபிரஷேன்ஸ்கி, எ.அ.—*238.*
பெய்லி, எஃப். [Bailey, F.]—*236.*
பெரெல்மான், வி.—*110.*
பெர்க்குத் [Berkuth]—*99, 100.*
பெலிங், ஜி.—*208.*
பைஸி [Faizi]—*52.*
மசானி, எம்.ஆர். [Masani, M. R.]—*29, 31.*
மன்சுர், எஃப். [Mansur, F.]—*216.*
மஜீது, அப்துல் [Majid, Abdul]—*39, 52, 53, 58, 71, 117, 125, 216.*
மஜீது, இப்ரகீம் [Majid, Ibrahim]—*39.*
மாரிங், ஜி. [Maring]—*143, 144, 152, 157.*
மார்க்ஸ், கா. [Marx, K.]—*68, 114, 123, 203, 214, 221, 250, 256, 275.*
மால்லிசன், டபிள்யு. [Malleson, W.]—*236.*
மான்டேகு, ஏ.எஸ். [Montagu, E. S.]—*29.*
மித்ரோகின், எல்.வி.—*23, 30, 47, 119.*
முகம்மது ஷாபிக் [Mohammed Shafiq]—*39, 42, 43, 52, 53, 55, 58, 61, 71, 125, 127, 130, 171, 194, 195, 198, 215.*
முக்கர்ஜி, அபனி [Mukherji, Abani]—*115, 116, 130, 134,*

*171, 178, 179, 181, 183—186, 194, 195, 196, 201, 209, 229, 248.*
மெல்னிக்கவ், அ.எம்.—*186.*
யுனித்ஸ்காயா, ஆர்.—*255.*
யோஃபே, அ.அ.—*76.*
ரப்போபோர்ட், ஷார்ல் [Rappoport, Charles]—*19.*
ராய், எம்.என். [Roy, M. N.]—*89, 92, 99, 104, 110—115, 124, 128, 130—152, 155, 157—203, 207, 208—210, 214—219, 221—225, 229, 239—246, 248, 252, 255, 257, 259—266, 273, 276.*
ராய், ராபர்ட் அலென் (ராய், எம். என். பார்க்க).
ராய்க்கோவ், அ.வி.—*16, 22, 30.*
ராஸ்கோல்னிக்கவ், எஃப். எஃப்.—*125, 126, 127.*
ரிஸ்கூலவ், டி.—*238.*
ருட்கர்ஸ், எஸ்.யூ.—*207.*
ரேய்ஸ்னர், இ.எம்.—*117.*
ரேஸ்னிக்கவ், அ.பி.—*154.*
ரோஸ்மெர், அ. [Rosmer, A.]—*188.*
ரெளலட் [Rowlatt]—*30.*
லுஹானி [Luhani]—*248, 249, 251, 252, 256.*
லெவ்கியேவ்ஸ்கி—*120.*
லெனின், வி.இ.—*9, 11, 20, 23, 27, 34—37, 39, 47, 56, 60, 68, 78, 83, 108, 111, 112, 117, 130—135, 137—145, 148, 149—154, 156—157, 163—164, 180, 183, 187, 188, 193—194, 196, 203, 209, 213, 222, 225, 233, 234, 237—239, 241, 242, 246, 247, 249, 250, 256—258, 260—262, 268, 272—278.*
வாலி கான், முகம்மது [Wali Khan, Mohammad]—*241.*
வில்சன், டி. டபிள்யு. [Wilson, T. W.]—*47, 234.*
விண்ட்மில்லர், எம். [Windmiller, M.]—*162, 208, 241.*
வைன்காப் [Wijnkoop]—*143.*
ஜக்காரியா ரஹ்மத் அலி [Zaharia Rahmat Ali]—*204, 205.*
ஷுல்மன், எம்.—*53, 55, 70, 71, 102, 106, 125, 172, 194, 199.*

ஷ்கோல்னிக்—*89.*
ஸாஃபார் இமாம் [Zafar Imam]—*29.*
ஸ்கிலியான்ஸ்கி, ஏ.எம்.—*222, 229.*
ஸ்கோரிக்கவ்—*93.*
ஸ்மெட்லி, ஆக்னெஸ் [Smedley, Agnes]—*248—249.*
ஸ்வெர்த்லோவ், யா.மீ.—*79.*
ஹர் தயாள்—*15, 16.*
ஹேய்ஃபிட்ஸ், அ.என்.—*36, 242.*
ஹேய்த்காக்ஸ், ஜி.பி. [Haithcox, J. P.]—*162.*
ஹோஜாயெவ், என்.—*238.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
*41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098*

ஷோ-ரூம்
*136, அண்ணாசாலை, சென்னை—600002*

கிளைகள்
*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001*
*3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001*

விற்பனை நிலையங்கள்
*3-22-75-D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்—627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001*